

மன்னார்

# சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி





## சிறப்பு மலர்



நாற்பதாண்டு நிறைவு விழா வெளியீடு

1959—1999

M. SITHY VINAYAGAR HINDU COLLEGE
KNOWLEDGE IS POWER

KNOWLEDGE IS POWER

[illegible] HINDU COLLEGE
KNOWLEDGE IS POWER

# மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி

# நாற்பதாண்டு நிறைவுச் சிறப்பு மலர்

**1959 - 1999**

உ
சிவமயம்



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

- திருமந்திரம்




கல்லூரிக் கொடி




கல்லூரிச் சின்னம்

# கல்லூரிக் கீதம்

வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே
சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி
வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே

வேத நாயகன் விளங்கும் இப்பதி
மேவும் காவலன் விநாயகன் அருள்
நாளும் ஓங்கியே நலம் பெறும் கலைக் கூடமாம்
எங்கள் கல்லூரி வாழ்க

ஆயகலைகள் அறிவியல் ஒளி
தூய வாழ்வினை துலங்கிடச் செய்வோம்
ஏய உணர்வின் ஏற்றங்கள் பேணி
தாயின் சேயென தரணி ஆளுவோம்

அன்பிலும் பண்பிலும் உயர் நிலை பெறுவோம்
அறநெறி பயின்று சமநிலை அடைவோம்
கண்ணியம் கடமை கட்டுப்பாடென
எண்ணிய வாழ்வை இலங்கிடச் செய்வோம்

கல்விச் செல்வம் கடல் போன்றதுவே
கற்றுத் தெளிந்து புகழ்பேறடைவோம்
சொல்லித் தந்த ஆசான் குருவை
எல்லையில்லா அன்பால் பணிவோம்

முத்தமிழ் ஆங்கிலம் மூன்றாம் மொழியுடன்
தத்துவ விஞ்ஞானம் சமயமும் கற்று
வித்தகராகி விளங்கிடத் துணைதரும்
சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி

வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

- மகாகவி பாரதியார் -

# மலர்க் குழு

*தலைவர்,*
திரு. ஏ. ஐ. தயானந்தராஜா
*அதிபர்*

*மலராசிரியர்*
திரு. எஸ். யு. சந்திரகுமாரன்
*கணக்காளர், கச்சேரி*

*உறுப்பினர்கள்*

திரு. ச. சண்முகலிங்கம்
*அதிபர், கனிஷ்ட கல்லூரி*

திரு. எஸ். மதியாபரணம்
*நிறைவேற்றுப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம்*

திருமதி. பு. தனேஸ்வரன்
*பிரதி அதிபர், சிரேஷ்ட கல்லூரி*

திரு. செ. விஜயன்
*பிரதி அதிபர், கனிஷ்ட கல்லூரி*

திரு. எஸ். எஸ். இராமகிருஷ்ணன்
*நிறைவேற்றுப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை*

# பதிப்புரை

எமது கல்லூரியின் நாற்பதாண்டு நிறைவு நாள் தொடர்பாக இம் மலரினை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

எடுத்த காரியம் யாவும் சித்தி அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் நாம் வணங்கும் சித்தி விநாயகரின் சிறப்பையும் சைவச் சூழலையும் தன்னகத்தே கொண்டுள்ள எமது கல்லூரியினை ஸ்தாபிகத் தேவையான காணியைக் கொடுத்துதவிய தீர்க்க தரிசனம் கொண்ட சைவப் பெருந்தகை, வள்ளல் குமரையா முத்துக்குமாரு அவர்களை இத் தருணத்தில் நன்றியுணர்வுடன் நினைவு கூருகின்றோம்.

சைவத்தையும் தமிழையும் எமது சிறார்களுக்கு வழங்கும் நோக்கில் அமைக்கப்பட்ட எமது கல்லூரி கடந்து வந்துள்ள நாற்பதாண்டுகளில் பல சாதனைகளைப் படைத்து மேலும் புதிய சாதனைகளைப் படைக்கும் உத்வேகத்துடன் உள்ள இவ் வேளையில் கல்லூரித் தாயின் நினைவுகளும், நிறைவுகளும், சோதனைகளும் காலத்தால் அழிந்து போகாதிருக்க இப்பதிப்பினை வெளி யிடுவதுடன் மட்டுமன்றி பயன்தரு வகையில் மண்வாசனை கலந்து சைவத்தை மணம் பரப்பும் மலராக மலர வேண்டும் என்ற பெரு விருப்புடன் மலர் உங்கள் கைகளில் தவழ வருகின்றது.

கல்லூரியின் கடந்த கால நிகழ்வுகளும் தகவல்களும் இயன்றளவுக்குச் சேகரிக்கப்பட்டுத் தரப்படுகின்ற போதிலும், நிறைவு பெற்றதாகக் கருத முடியாது என்றே எண்ணுகின்றோம். அவ்விதம் சிறப்பு நிகழ்வுகள் ஏதாவது தவற விடப்பட்டிருப்பின் பெருமனத்துடன் மன்னிப்பதுடன் அந்நிகழ்வுகளின் விபரத்தைத் தந்துதவுமாறு பணிவன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

மலர்க் குழு

# பொருளடக்கம்

விநாயகர் வணக்கம் .................... 3

கல்லூரிக் கொடியும் சின்னமும் படம் .................... 5

கல்லூரிக்கீதம் .................... 7

தமிழ் மொழி வாழ்த்து .................... 8

மலர்க்குழு .................... 9

பதிப்புரை .................... 10

பொருளடக்கம் .................... 11

வாழ்த்துரைகள்

நல்லையாதீனக் குருமகா சந்நிதானம் .................... 15

இராமகிருஷ்ணமிஷன் சுவாமிகள் .................... 16

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி .................... 17

வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் .................... 18

வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி இரா. புலேந்திரன் .................... 19

வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் அ. அடைக்கலநாதன் .................... 20

யாழ் மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா .................... 21

கல்வி பண்பாட்டலுவல்கள் செயலாளர் சு. டிவகலாலா .................... 22

மன்னார் அரசாங்க அதிபர் ச. மரியதாசன் குரூஸ் .................... 23

மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி .................... 24

மேலதிக அரசாங்க அதிபர் வே. விஸ்வலிங்கம் .................... 25

வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ. சி. அப்துல்ஹக் .................... 26

முன்னாள் கல்விப் பணிப்பாளர் செல்வி P. ஆறுமுகம் .................... 27

முன்னாள் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் .................... 28

உதவி மாவட்டச் செயலாளர் இ. வரதீஸ்வரன் .................... 29

மன்னார் சித்தி விநாயகர் ஆலயக் குரு சபா. மனோகரக் குருக்கள் .................... 30

இந்து மாமன்றத் தலைவர் வி. கயிலாயபிள்ளை ........................................ 31

பழைய மாணவன் வை. இளலிங்கம் ........................................ 31

திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச்சபைத் தலைவர் ஆர். நமசிவாயம் .................... 32

சித்தி விநாயகர் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் ........................................ 33

மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கத் தலைவர் செ. சி. இராமகிருஷ்ணன் .................... 34

கௌரியம்பாள் வித்தியாலய அதிபர் க. இரத்தினபூபாலன் .................................... 35

முன்னாள் அதிபர் வி. அரியநாயகம் ........................................ 36

முன்னாள் அதிபர் N. ஜெயபாலசிங்கம் J.P ........................................ 37

பழைய மாணவன் க. சுதாகர் ........................................ 39

கனிஷ்ட கல்லூரி அதிபர் ச. சண்முகலிங்கம் ........................................ 40

உயர்தர மாணவர் மன்றப் பொறுப்பாசிரியர் இ. ஜெயமனோகர் .................................... 41

கத்தோலிக்க மாணவர் மன்றப் பொறுப்பாசிரியர் எல். ஜி. பிறேம்குமாரன் .................... 42

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் சு. பிருந்தாவனநாதன் ................................ 43

பழைய மாணவர் சங்கச் செயலாளர் ந. சரச்சந்திரன் .................................... 44

திருக்கேதீஸ்வரப் பதிகம் ........................................ 45

அதிபர், ஏ. ஐ. தயானந்தராசா- படம் ........................................ 47

பிரதி அதிபர், கனிஷ்ட கல்லூரி அதிபர், கனிஷ்ட பிரதி அதிபர் படம் .................................... 48

ஆசிரியர் குழு- படம் ........................................ 49

கல்விசாரா உத்தியோகத்தரும், கௌரியம்பாள் ஆசிரியர்களும் - படம் .................................... 50

ஆசிரியர் அட்டவணை ........................................ 51

ஆசான் புகழ் வாழ்க ........................................ 52

அதிபரின் சிந்தனையிலிருந்து ........................................ 53

மாணவர்கள் 11- 13...................... - படம் ........................................ 63

மாணவர்கள் 6- 10 .................. - படம் ........................................ 64

மாணவர்கள் 1 - 5 .......................... - படம் ........................................ 65

உயர்தர மாணவர் ஒன்றியம் ............ - படம் ........................................ 66

ஆரம்ப கால நினைவுகள் ........................................ 67
- சைவப் புலவர் சு. செல்லத்துரை

ஆரம்ப கால அதிபர் ச. வீரசிங்கம் - பரிசளிப்பு விழா 1963 - படம் .................... 69
கல்லூரியின் முதலாவது சாரணர் அணி 1961 - சிரேஷ்ட மாணவரும் ஆசிரியர்களும் 1967 .................... 70
வணிகக் கண்காட்சி - உ.த மாணவர் ஒன்று கூடல் - படம் .................... 71
இல்ல விளையாட்டுப் போட்டி 1999 - மகளிர் விடுதி அடிக்கல் நாட்டல் - படம் .................... 72
வடக்கு - கிழக்கு செயலாளர் வருகை - க. பொ. த. உயர்தர கணித விஞ்ஞானப் பிரிவு ஆரம்பம் - படம்73
நூல் நிலைய அடிக்கல் நாட்டல் - வடக்கு கிழக்கு பிரதம செயலாளர் வருகை - படம் .................... 74
திருக்கேதீஸ்வர ஆலயமும் மாந்தைத் துறைமுகமும் .................... 75
- அமரர் சேர். கந்தையா வைத்தியநாதன்
நித்திலமாகவே ஒளிர்வாய் .................... 80
- கலைப்பித்தன்
உதைப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட அணிகள் 1999 - படம் .................... 81
மென்பந்து , எல்லே அணிகள் 1999 - படம் .................... 82
பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் - படம் .................... 83
பழைய மாணவர் சங்க நிர்வாகிகள் - படம் .................... 84
மன்னார் மாவட்டத்தின் மட் பரம்பலும் பயிர்ச் செய்கையும் .................... 85
- த. விக்கினேஸ்வரன்
இலங்கையில் இந்து சமயக் கல்வி வளர்ச்சி .................... 87
- க. அருணாசலம்
எமது கல்லூரியின் முக்கிய நிகழ்வுகள் .................... 91
திருக்கேதீஸ்வரமும் நாவலர் அவர்களும் .................... 92
- பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
வாழிய நீ பல்லாண்டு .................... 94
- வாசுகி மதியாபரணம்
சாதனையாளன் சரண்ராஜ் .................... 95
செல்லும் வழி இருட்டு .................... 96
- ந. திலீபன்
வள்ளுவன் வழியில் எமது கல்லூரி .................... 97
- க. கீதா
சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன் .................... 99
- பண்டிதர் செ. பூபாலபிள்ளை
வன்னியும் வன்னியரும் .................... 101
- சி. எஸ். நவரத்தினம்
கவிமாலை .................... 106
- ஆறுமுகம் ஆனந்தராசா
2000 ஆம் ஆண்டளவில் .................... 107
- சிவப்பிரகாசம் சிவகரன்
ஐயாவும் அப்பாவும் .................... 109
- சைவப் புலவர் சு. செல்லத்துரை
நான் கூண்டில்....... கிளியானால் .................... 111
- மா. சரண்ராஜ்
எனது பொழுது போக்கு .................... 111
- அ. வைதேகி

கல்வி தரும் ஒழுக்கம் ........ 112

- பா. ரகுநாதன்

இதிகாசங்களும் அவை கூறும் சமய மரபுகளும் ........ 113

- செ. றெக்ஸ் அருள்நேசன்

நாவலர் பெருமான் காட்டிய சைவ சமய வாழ்வுமுறை ........ 115

- குமாரசாமி சோமசுந்தரம்

இந்து மாமன்றத்தின் குருகுலப்பணி ........ 118

- எம். ஆர். ராஜ்மோகன்

சாரணியம் - படம் ........ 121

பாண்டு இசைக் குழுவினர் - படம் ........ 122

எமது கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகம் சென்றோர் - படம் (1994 - 1997) ........ 123

1998 இல் பல்கலைக்கழகம் சென்றோர் - படம் ........ 124

மழலைகள் பயிலகம் - கலார்ப்பனா - படம் ........ 125

மாதா பிதா குரு தெய்வ வழிபாடு - தசை நார்ப் பயிற்சி - படம் ........ 126

1997ல் சாரணர் இயக்கச் சின்னம் சூட்டு விழா படம் ........ 127

26. 06. 96 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட மாணவர் விடுதி படம் ........ 127

1994ல் நடைபெற்ற ஒளிவிழா படம் ........ 128

Welcome Song படம் ........ 128

சிறுவர் நாடகச் சிந்தனைகள் ........ 129

- க. இ. கமலநாதன்

ஆறுமுகநாவலரும் சைவப் பணிகளும் ........ 131

- கலா சிவகுமாரவேலு

இலங்கையிற் சைவமும் அதன் தொன்மையும் ........ 134

- செ. சி. இராமகிருஷ்ணன்

நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும் ........ 145

- த. பிரதீபா

ஈழத்தமிழரின் நாட்டியத் தனித்துவங்கள் ........ 146

- து. ராமதாஸ்

புதிய கல்விச் சீர்திருத்தம் ........ 149

- ம. லியோன் றெவ்வல்

1999 மாவட்ட மட்டத் தமிழ்த் திறன் - பரிசில் பெறுவோர் பட்டியல் ........ 153

1999 மாவட்ட மட்ட மெய் வல்லுநர் - பரிசில் பேறுவோர் பட்டியல் ........ 154

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசிற் பெறுபேறுகள் - வரைபடம் ........ 155

40 ஆண்டுகளில் கல்லூரியின் மாணவர் தொகை வரை படம் ........ 155

க. பொ. த சா. தரப் பரீட்சைப் பெறுபேறுகள் 1993 - 1998 ........ 156

க. பொ.த உ. தரப் பரீட்சை சிறந்த பெறுபேறுகள் 1993 / 1998 ........ 157

ஆரம்ப காலம் முதல் இன்றுவரை கற்பித்த ஆசிரியர்கள் (பட்டியல்) ........ 158

விளம்பரதாரர் வாழ்த்துக்கள் ........ 159

நன்றி ........ 172

உ
சிவமயம்
குருபாதம்

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதினம் இரண்டாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய

# அருளாசி



மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி அதன் நாற்பதாவது ஆண்டு நிறைவு அடைந்ததையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். பெருமையும் வரலாறும் படைக்கின்ற மன்னார்ப் பிரதேசத்தில் விக்கினங்களைக்களையும் விநாயகர் பெயரினால் பாடசாலை அமைத்து 40 வருடங்கள் கல்விச் சேவை ஆற்றிப் பெருமை படைத்துள்ளது. பிறவி எடுத்த ஒவ்வொரு மனிதனும் அறிவுள்ளவனாக வாழ வேண்டும் என்பது தர்மம். அந்த அறிவைக் கண்களாகப் போற்றியவர் வள்ளுவர்.

''கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திண்டு
புண்ணுடையார் கல்லாதவர்.

அவ் அறிவுக் கண்ணைத் திறந்து வைப்பது பாடசாலைகள். இளமையிற் கற்க வேண்டிய அனைத்தையும் ஒரு மாணவன் கற்றுக் கொண்டால் வாழ்க்கை உறுதியாக இருக்கும். கட்டடம் உறுதியாகத் தலை நிமிர்ந்து நிற்பதற்கு அத்திவாரம் உறுதியாக இருக்க வேண்டும். அதுபோல் கல்வி எனும் அத்திவாரம் உறுதியாக இருக்கும் போது மனித வாழ்க்கையும் உறுதியாக அமையும். இவ் உறுதித் தளத்தை அமைத்துக் கொடுக்கும் அதிபர், ஆசிரியர், பெற்றோர்கள் போற்றுதற்குரியவர்கள். பாடசாலையை ஸ்தாபித்து நீண்ட வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் கல்விச் சமூகத்திற்கும், அதிபர்கள், ஆசிரியர்கட்கும் இறைவன் ஆசி கிடைக்க இப் பாடசாலை பல வளர்ச்சியைக் கண்டு பிரதேசத்திற்கும் கல்விச் சமூகத்திற்கும் பணியாற்றி பல்லாண்டு காலம் வாழ இறைவன் ஆசீர்வதிப்பாராக.

வாழ்க பாடசாலை! வளர்க அபிவிருத்திச் சபையினது பணிகள் !!
என்றும் வேண்டும் இன்ப அன்பு!!!

## இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர்

## சுவாமி ஆத்மகனாநந்தா அவர்கள்

## வழங்கிய

# ஆசிச் செய்தி



கல்வியின் சிறப்பைக் குறித்தும், மனித மேம்பாட்டிற்கு அதன் அவசியத்தைக் குறித்தும் பல பெரியோர்கள் பல கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். 'சமுதாயத் தீமைகள் அனைத்தையும் களைவதற்கான ஒரே மருந்து கல்வியே' எனக் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுத்துகிறார் சுவாமி விவேகானந்தர். ஆனால் அவர் கூறும் கல்வியில் ஆன்மீகப் பயிற்சியும் அடங்கும். படித்த காட்டு மிராண்டியை உருவாக்குவது கல்வியின் நோக்கமன்று. அன்பும், தியாக உணர்வும், நல்லொழுக்கமும் கொண்டவர்களை உருவாக்குவதே கல்வியின் நோக்கம். இத்தகைய கல்வி இன்று மிகவும் அவசியமானதும், அவசரமானதும்கூட என்பதில் ஐயமில்லை.

மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் நாற்பதாவது ஆண்டு விழா சிறப்பாக நடந்தேற இறைவனது திருவருளைப் பிராத்திக்கின்றோம். இவ்விழாவை முன்னின்று நடத்தும் பாடசாலை அபிவிருத்தி சபையினருக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

### சிவத்தமிழ்ச் செல்வி, கலாநிதி
## தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
### வழங்கிய
## வாழ்த்துரை



கடந்த சில ஆண்டுகளாகப் பாடசாலை அபிவிருத்திச் சபையினால் அவ்வக் கல்லூரிகளின் பணிகள் மேலும் ஓங்கி நிற்பதை அவதானிக்க முடிகிறது. இந்த வகையில் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபையை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இலங்கையின் மேற்குப் பகுதியில் திருக்கேதீஸ்வரம் என்ற ஸ்தலத்தை மையமாகக் கொண்டு விளங்குவது இம் மாவட்டமாகும். நெருக்கடியின் மத்தியிலேயும் போர்காலச் சூழலிலேயும் மன்னார் மாவட்ட சமய,சமூகப் பணிகள் ஓரளவு ஓங்கி நிற்பதை நாம் மகிழ்ச்சியுடன் காண முடிகிறது. மதக் காழ்ப்புணர்ச்சி இன்றி அமைதியாக அனைவரும் தத்தம் கடமைகளை நிறைவேற்றிவருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வருகிற மே மாதம் நடைபெற இருக்கும் நாற்பதாவது ஆண்டு நிறைவை பாடசாலை அபிவிருத்திச் சபையினர் சிறப்பாகக் கொண்டாட இருப்பது வரவேற்கத்தக்கது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்பு இக்கல்லூரிக்குச் சென்று உரையாற்றிய அனுபவத்தை நான் மகிழ்ச்சியோடு நினைவு கூருகிறேன். அதுவுமன்றி இன்றும் வாழ்த்துச் செய்தியை அனுப்பவேண்டிய வாய்ப்பு எனக்குத் தரப்பட்டுள்ளது மிகவும் மகிழ்ச்சிதருகிறது. எனவே, மன்னார் இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபையினரின் சீரிய பணியை வாழ்த்தி அமைகின்றேன்.

### வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்
### த. சித்தார்த்தன் அவர்கள்
### வழங்கிய

## வாழ்த்துச் செய்தி



மன்னார்த்தீவில் அமைந்துள்ள சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியானது தனது நாற்பதாவது ஆண்டு விழாவைச் சிறப்பிக்குமுகமாக மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இக் கல்லூரியானது படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று மன்னார் மாவட்டத்தில் அனைத்திலும் முதன்மை வகிப்பதையிட்டு இக் கல்லூரியின் வளர்ச்சிக்குத் துணையாக இருக்கும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் யாவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்துக் கல்லூரி மென்மேலும் வளர்ச்சி அடைந்து பல நற்பிரஜைகளை உருவாக்கி இம் மாவட்டத்திற்குச் சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

வாழ்க இந்துக் கல்லூரி!
வளர்க அதன் பணிகள்!!

### வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்
## திருமதி. இரா. புலேந்திரன் அவர்கள்
### வழங்கிய
### வாழ்த்துச் செய்தி

# சிந்தித்தாற் சிறப்புண்டு



மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி 40 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில், இப்பாடசாலையிற் கல்வி கற்கும் மாணவரும், கற்றுத் தெளிவுபெற்ற முன்னோரும் இன்று பெருமையோடு வாழும், வாழ முயற்சி செய்யும் மாணவச் செல்வங்ளும், இச்செல்வங்களை வழிநடத்தும் அதிபர் உட்பட ஆசிரிய மேதாவிகளும் ஒரேயொரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள்.

" என் அருந் தமிழ் நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங்கலை ஞானத்தால்
பராக்கிரமத்தால் அன்பால்
உன்னத இமயமலைபோல்
ஓங்கிடும் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயப்பக் கேட்டிடல் எந்நாளோ?"

என்று பாரதி தாசன் கூறிவைத்த அறிவுமொழி விருத்தியை எந்நாளும் போற்றும் வண்ணம் நீங்கள் வாழ்ந்து காட்ட வேண்டும். சித்திவிநாயகர் கல்லூரிச் செல்வங்களை மன்னார் மட்டுமல்ல இவ்வையகம் முழுவதும் வாழ்த்திப் பாட வேண்டும்.

மனிதன் மனிதனாகவே வாழ்வதற்கும், மனித நேய விழுமியங்களை நெறிப்படுத்துவதற்கும் அதிபரின் செயலூக்கத்தில் விழிப்படைந்துள்ள ஆசிரிய மணிகளின் கண்களான மாணவச் செல்வங்கள் செல்லும் இடமெல்லாம் சிறப்படைய வேண்டும். இத் தெய்வீகப் பணியில் தம்மை அர்ப்பணித்துச் செயற்படும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் மனம் திறந்து வாழ்த்துகின்றேன்.

என் இதய நாதமாக இச்செய்தி உங்கள் இதயத்தைத் தழுவட்டும்.

## வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்
## அ. அடைக்கலநாதன் அவர்கள்
## வழங்கிய
# வாழ்த்துச் செய்தி



சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியின் 40ஆவது ஆண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்படும் சந்தர்ப்பத்தில் எனது மகிழ்ச்சியையும் மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதிற் பெருமையடைகின்றேன்.

இலங்கைத்தீவில் எம்மினத்தின் நீண்ட வரலாற்றில் தனக்கெனத் தனியானதோர் இடத்தினைப் பெற்றிருக்கும் மன்னார்ப் பிரதேசம் கல்வித்துறையில் எம் தாயகத்தில் முன்னணிவகிக்கும் பிரதேசங்களோடு எதிர்காலத்தில் போட்டியிட்டு முன்னேறக் கூடியவிதத்தில் எம்மாலியன்ற சகலத்தையும் செய்வதற்கு நாமனைவரும் முன்வரவேண்டுமென்பதே இச்சந்தர்ப்பத்தில் நான் தெரிவிக்க விரும்பும் கருத்து ஆகும்.

எம்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுக்குத் தேவைப்படும் சகல அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பதன் மூலம், கல்வி பயின்று கொண்டிருக்கும் இளம் சிறார்களின் எதிர்காலத்தை ஓர் பலமான அடிப்படையில் நாம் கட்டி எழுப்ப முடியும்.

தொடரும்போர் விரைவில் முடிந்து, சமாதானமும் சுபீட்சமும் எம் தமிழ் மண்ணில் மலர்ந்திடும் நாள் வரும்போது மன்னார் மண்ணின் மைந்தர்கள் கல்வித்துறையிற் கொடி கட்டிப்பறக்கச் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி உட்படச் சகல கல்விக் கோவில்களையும் நாம் இப்போதிருந்தே தயாராக்க வேண்டும்.

எதிர்காலத்தில் நம்பிக்கைவைத்து இன்றே செயற்படுவோம்.

### யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்
### டக்ளஸ் தேவானந்தா அவர்கள்
### வழங்கிய

# ஆசியுரை



"கற்க கசடறக் கற்பவைகற்ற பின் நிற்க அதற்குத் தக" என்ற வள்ளுவன் வாக்குக்கமைவாகக் கல்விச் செல்வத்தை இளம் தலைமுறையினரிடம் புகுத்தி அதன் வழி சமுதாயத்தைக் கொண்டு நடத்த வேண்டும். இத்தகு பேராவலுடன் மன்னார் வாழ்மக்களுக்கு வரப்பிரசாதமாய் வழங்க, சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களை முன்னனியிற் கொண்டு சைவமங்கையர் கழகம், மற்றும் மன்னார் வாழ் முன்னோடி மக்கள் அயராது முயற்சித்தனர் 1959 ஆம் ஆண்டு 160 மாணவர்களுடன் ஆரம்பமான மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி இன்று 1300 மாணவர்களையும் 40 ஆசிரியர்களையும் கொண்ட 1AB பாடசாலையாகத் தரமுயர்ந்து சாதனைகள் பல புரிந்து அரும்பெரும் கல்விச் சேவையை மன்னார் வாழ் மக்களுக்கு ஆற்றிவருகிறது, என்பதனை அறியும்போது நான் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

நாறபது ஆண்டுச் சிறப்பைக் கொண்டு இப்பாடசாலையினால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் இன்று பல துறைகளிலும் முன்னணிவகித்து நிற்பதைக் காணும் பொழுது நான் பூரிப்படைகின்றேன். கடந்த காலங்களில் ஏற்பட்ட அனைத்து அனர்த்தங்களுக்கும் சலிக்காது முகம் கொடுத்துத் தலைநிமிர்ந்து நிற்கும் இப்பாடசாலை மேலும் பல சாதனைகள் புரிந்து எம் இனத்திற்கு முன்னணி மக்களை உருவாக்கித் தரவேண்டும் என்பது எனது அவா.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு என்றும் என்னால் இயன்ற எப்பணியினையும் செய்துதர நான் சித்தமாகவுள்ளேன் எனக் கூறிக் கொள்வதுடன் எனது நல் ஆசிகளையும் நல்குகின்றேன்.

## வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலாளர் சுந்தரம் டிவகலாலா அவர்கள் வழங்கிய

# ஆசிச்செய்தி



மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி 40 ஆவது வயது பூர்த்தியடைந்ததையிட்டு அக்கல்லூரிசார் சமூகம் ஏற்ற ஒரு விழாவினை எடுக்கவிருப்பதனையும் அது சம்பந்தமாக மலர் ஒன்றினை வெளியிடுவதனையும் அறிந்து எனது மகிழ்ச்சியையும் ஆசியையும் தங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரிகள் உலக நாடுகள் யாவற்றிலும் வியாபித்து நிற்பவை. தாம் தொழிற்படும் நாட்டினதும், உலகத்தினதும் சமூக பொருளாதார ஓட்டத்திற்கேற்பத் தாம் சார்ந்த மாணாக்கர்களை வளம்படுத்தி வருகின்றன. இவ் அடிப்படையில் நோக்கும் போது வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இக் கால கட்டத்தில் இயங்குகின்ற கல்லூரிகள் ஒவ்வொன்றும் போற்றப்பட வேண்டியவை என்பதோடு தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டியவை என்பதனையும் நாம் மறந்து விடக்கூடாது.

1970 ஆம் ஆண்டு காலங்களில் நான் மன்னார் மாவட்டதில் பிரதித்திட்டமிடற் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் இக்கல்லூரியோடு தொடர்பு எனக்கு ஏற்பட்டது. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இக்கல்லூரிக்கான நிதியை முடிந்தளவு ஒதுக்குவதற்கு என்னால் ஆன உதவிகளை அக்காலத்தில் மேற்கொண்டேன். இருந்த போதும் அக்கால கட்டத்தில் இக்கல்லூரி பலரது கவனத்தில் இருந்து விலகியிருந்தது என்ற உண்மையைக் கூறத்தான் வேண்டும் . அச்சூழலில் இருந்து விடுவித்து இக்கல்லூரியின் இன்றைய வளர்ச்சி நிலைக்கு வித்திட்டவர்கள் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்கள். இன்று இக்கல்லூரி மன்னார் கல்விச் சமூகத்தின் கவனத்தைத் தன்பால் ஈர்த்துள்ள தன்மையைப் பார்க்கின்ற போது கல்விச் செயலாளர் என்ற முறையில் நான் பெருமகிழ்ச்சியடைவது தவிர்க்க முடியாதது. இக்கல்லூரி மென்மேலும் வளர்ச்சியுற எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அர்ப்பணிப்போடு செயற்படுகின்ற அதிபரையும், ஆசிரியர்களையும், பழைய மாணவர்களையும், பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களையும், இக்கல்லூரியின் நலன் விரும்பிகளையும் நன் நினைவோடு பாராட்டுகின்றேன்.

நிறைவாக, எனது எஜமான்களுக்கு ஒரு வேண்டுகோள், இக்கல்லூரியிற் கற்பதற்கு வரும் நீங்கள் கசடறக் கற்று மனித விழுமியங்களைச் சரியான முறையிற் புரிந்து அதன்படி வாழ்க்கையில் ஒழுகுங்கள்.

### மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்
### ச. மரியதாசன் குருஸ் அவர்கள்
### வழங்கிய

# வாழ்த்துச் செய்தி



மன்னார் மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில் பெரும்பங்காற்றியிருக்கும், மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி தனது நாற்பதாண்டு நிறைவினைச் சிறப்புறக் கொண்டாடும் இவ்வேளையில், எனது நல்லாசியினை வழங்குவதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வியின் மூலம் சமுதாய முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கருதிப் பெரியோர்கள் ஒருசிலராற் சிறிதாகத் தாபிக்கப்பட்டுத், தொண்டர்கள் பலரால் வளர்த்தெடுக்கப்பட்டு, இன்று பலரும் வியக்கத்தக்க வகையில் மாவட்டத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக மலர்ந்திருக்கும் மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியின் சேவையை மன்னார் மாவட்டக் கல்வி வரலாற்றிற் குறிப்பிட்டுக் காட்ட வேண்டியுளது.

இந்துக்கல்லூரி இந்து மாணவர்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அனைத்துச் சமய மாணவர்களையும் அரவணைத்துக் கல்வியூட்டும் பண்பு போற்றத்தக்கதாகும். அண்மைக்காலமாக உயர்தர வகுப்பு மாணவர் பலர், சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் தான் சிறப்பான முறையிற் கல்வி கற்பிக்கப்படுகின்றதெனக் கூறி, அங்கு செல்வதைக் காணுகின்றோம், அது ஒன்றே இப்பாடசாலையின் அனைத்துச் சிறப்புக்களையும் எடுத்துக் காட்வதொன்று எனக் குறிப்பிடுவதிற் பெருமைப்படுகின்றேன்.

வளர்ந்துவரும் இக்கலைக் கூடம் மேலும் வளர்ச்சி பெறுவதற்குப் பல்வேறு உதவிகள் தேவைப்படுகின்றன. அத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான முயற்சிகளை எடுப்பது சமுதாய வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவரதும் கடமையாகும்.

மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி ஆலவிருட்சம் போற் பெரிதாகி, எமது சமுதாய முன்னேற்றத்திற்குத் தொடர்ந்து சேவையாற்ற வேண்டுமென்று வாழ்த்துவதுடன் அதன் நாற்பதாண்டு நிறைவுவிழா பெருவிழாவாகவும், சிறப்புமலர் சிறப்புற மணங்கமழவும் எனது நல்வாழ்த்துக்கள் உரியனவாகுக.

*மாகாணக் கல்விப் பணிப்பாளர்*
*க. கந்தசாமி அவர்கள்*
*வழங்கிய*

# ஆசிச் செய்தி

மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி தனது வளர்ச்சியின் நாற்பதாவது ஆண்டுப் பூர்த்தியைக் கொண்டாடும் இந்நாள் யாவருக்கும் மகிழ்வு தரும் பெருநாளாகும்.

கல்விப் பணியாற்றித் தன்முயற்சியில் நல்லவர்களை, பயன் நிறைக்கும் வல்லவர்களை உருவாக்கிய பெருமைக்குள் தன்னை உயர்த்திக் கொண்டுள்ளமையின் வெளிப்பாடு விழா மலரின் சிறப்புக்கு வண்ணம் சேர்க்கும் என நம்புகிறேன்.

எண்ணற்ற இன்னல்கள் இடையேயும் கல்லூரி தனது இலக்கினை நோக்கிய பயணத்தில் வெற்றி கண்டுள்ளமை புலனாகின்றது. இந்நிலையிற் கல்லூரியின் வளர்ச்சிக்காய் உழைத்த மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் யாவரையும் பாராட்டுகிறேன். மேலும் தொடரும் கல்லூரியின் வளமான கல்விப் பணிக்கென் நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்
திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச்சபை மன்னார் மாவட்ட உப குழுத்தலைவர்
வே. விஸ்வலிங்கம் அவர்கள்
வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

## எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்



வரலாற்றுப் பெருமைமிக்க இம்மாவட்ட இந்துமக்களின் கல்வியின் மகத்துவத்தைத் தீர்க்க தரிசனத்துடன் உணர்ந்த பெரியோர்களும், பெற்றோர்களும் தமக்கெனத் தனியான கல்லூரியை 1959 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 14ந் தேதியில் ஆரம்பித்து வைத்தனர். ஓம்கார மந்திரத்தை விளக்கி நிற்கும் சித்திவிநாயகப் பெருமான் கோயில் கொண்ட புனித பூமியில் அமைந்த இக்கல்லூரிக்கும் அப்பெருமானின் திருநாமத்தைப் பெயராகவும் சூட்டியுள்ளனர்.

நாற்பது ஆண்டுகளாக எதிர் நீச்சலிட்ட இக்கல்லூரி தமது சோதனைகளையும் வேதனைகளையும் வளர்ச்சிப் படிகளாக்கி மாவட்டத்தின் தரமான உயர் கல்லூரிகளின் வரிசையில் தமக்கென ஒரு இடம் பிடித்துள்ளது. இக்கல்லூரியின் வளர்ச்சியில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடனும், மதி நுட்பத்துடனும் செயற்பட்டுவருவதனைச் சைவ உலகம் அவதானித்தே வருகிறது.

இராணுவ நடவடிக்கைகளால் இந்தியாவுக்கு இடம் பெயர்ந்த மாணவர்கள் தமது மண்ணுக்குத் திரும்பியதும், அம்மாணவர்களை அரவணைத்து, உற்சாகமூட்டி விசேட கல்வி வசதிகளைச் செய்ததனை இடம் பெயர்ந்த மாணவர்கள் தமது ஞாபகத்தில் நிறுத்தியுள்ளனர். இவ்வாறு யாழ் இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த யாழ் மாணவர்களின் கண்ணீரைத் துடைத்துத், தெம்பூட்டி, உற்சாகப்படுத்தி நல்ல கல்வியும் வழங்கியதையும் அம்மாணவர்கள் மறந்து விடமாட்டார்கள். காலத்தால் இக்கல்லூரி இந்து சமூகத்திற்கும் மாணவர்கட்கும் செய்த உதவிகள் என்றும் ஞாலத்தில் நீங்காத பசுமை நினைவுகளாக நிலைத்திருக்கும். மேலும் இடம் பெயர்ந்து அல்லலுறும் கௌரியம்பாள் பாடசாலைக்கும் புகலிடம் கொடுத்த கல்லூரியை சைவமக்கள் மறந்து விடமாட்டார்கள்.

இக்கல்லூரி இம்மாவட்டத்திலும், இந்நாட்டிலும் மேன்மை கொள் சைவநீதி நிலைக்க ஆற்றிவரும் தொண்டு தொடரத் திருக்கேதீஸ்வரப் பெருமான் அருள்பாலிக்க வேண்டுகின்றேன்.

*மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர்*
## *ஏ.சி. அப்துல்ஹறக் அவர்கள்*
*வழங்கிய*

# ஆசிச்செய்தி



இந்து பாரம்பரிய, பண்பாட்டு விழுமியத்தின் நிலைக்களனாய் விளங்கும் மாபெரும் கல்விக் கூடமான மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியின் நாற்பதாண்டு நிறைவினையொட்டி வெளியிடும் இந் நினைவு விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நான் அகம் மகிழ்கின்றேன்.

தரணியில் அவதரித்த இளங்குழவி தவழ்ந்து, தளர்நடை நடந்து பின் கம்பீர நடை பயில்வது போல இக்கல்லூரியும் படிப்படியாகச் சாதனைகள் பல படைத்து இன்று மன்னார் மாவட்டக் கல்வியரங்கில் தனக்கென ஓர் தனியான இடம்பெற்று விளங்கும் தன்மையை நோக்குகையில் உண்மையிலேயே கல்விப்பணிப்பாளர் என்ற வகையில் எனது ஆசியையும், பாராட்டுக்களையும் மனப்பூர்வமாக தெரிவிக்காமல் இருக்கமுடியாது.

இன்றைய புதிய கல்விச் சீர்திருத்தக் கோட்பாடுகளில் மாணவரது அறிவுசார் திறன்கள் மாத்திரமன்றி, அவர்களது உள்ளத்திற் புதைந்து கிடக்கும் உளவியக்கத் திறன்கள், பொறிமுறைத்திறன்கள் அனைத்துமே கணிப்பீடு செய்யப்பட வேண்டும் என்பது முக்கிய அம்சமாகும். இந்த வகையில் மாணவர்களது உள்ளார்ந்த கலைத் திறன்களான இயல், இசை, நாடகம் மற்றும் தலைமைத்துவம், விளையாட்டு ஆகிய அனைத்துத் துறைகளிலுமே வெற்றி என்னும் இலக்கை நோக்கி வீறுநடை போடும் இக்கல்லூரியின் பாங்கினை நான் பெரிதும் வாழ்த்துகின்றேன்.

எனவே இக்கல்லூரியின் இன்றைய நிலைக்குத் தம்மை அர்ப்பணித்த அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரது சேவைகளையும் இவ்வேளையில் பாராட்டுவதுடன் எதிர்வரும் காலங்களிலும் தம் முழுமையான பணியினை இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக வழங்கி, இக்கல்லூரி கல்வியின் கருவூலமாய், கலைகளின் தாயகமாய், பண்பினில் பரிதியாய், ஒழுக்கத்தின் உறைவிடமாய் விளங்க துணை நிற்கவும் நாடி நிற்கின்றேன்.

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளராக நான் சேவையாற்றிவரும் இவ் வேளையில் நாற்பதாண்டு நிறைவையொட்டி விழாக் கோலம் காணும் இக் கல்லூரியின் நினைவு மலருக்கு ஆசிச்செய்தி வழங்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தை நினைவு கூர்ந்து, நலம்பல பெற்று திறம்பலபடைத்து இக்கல்லூரி திகழ வேண்டும் என வாழ்த்தி என் ஆசிச்செய்தியினை நிறைவு செய்கின்றேன்.

# Message From
## PATHMASANY ARUMUGAM

*Former Director of Education, Mannar*

The Sithivinayagar Vidyalayam was a small school when I was the Director of Education at Mannar in the nineteen eighties. I am very happy to know that this school has developed into a full fleged Grade I Mahavidyalayam or College within the last ten years or more and has G. C. E. A/L classes in Arts, Commerce and Science and is the only school in Mannar which has Computer Studies too for the A.L. classes.

It gives me great pleasure to know from the Principal that the progress in studies has been outstanding and that in all other activities too it has been very good, students have obtained first places in the Manner District at the A/L Examination. Further, the student who was first at an A/L Examination won the Scholarship awarded by the People's Bank, Colombo. All these Students have brought fame and recognition to their Alma Mater. They deserve to be congratulated in a special way. They have set an example and the younger students of the school should try to reach the stardard set by them.

The school has a rich programme in extracurricular activities, the drama " Silambu Chelvi" won the first place at All-Island level. It is praise worthy, also the fact that this is the only school that teaches Baratha Natyam in Mannar is commendable.

The Principal and Staff deserve to be congratulated for being instrumental in these phenomenal achievements of the school. It shows that everyone of them is genuinely interested in the all-round, total development of the children in their charge and are rendering dedicated service. The Principal Mr. Thayanandaraja deserves a special word of praise for his ability to not only get the co-operation of the staff, but also for being able to get big donations of cash or lands and even computers from large-hearted people. He also has the whole hearted support of the public, the parents, the old boys and others.

It is evident that Lord Sithivinayagar is guiding every one at the Sithivinayagar Hindu College. May He shower His blessings and continue to guide the Principal, the Staff and the Students of this College for ever and ever.

## முன்னாள் கல்விப் பணிப்பாளர்
## இந்நாள் வடக்குக் கிழக்கு மாகாணப் பரீட்சை ஆணையாளர்
## இரா. சுந்தரலிங்கம் அவர்கள்
### வழங்கிய
# வாழ்த்துச் செய்தி

மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி 40 ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடும் வேளையில் எனது உளங்கனிந்த இனிய வார்த்தைகளால் வாழ்த்த வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு மகிழ்வெய்துகின்றேன்.

மன்னார் மாவட்டத்திற் சைவம் பேணும் தனிப்பெருங் கல்லூரியாக, கலங்கரை விளக்காக, இருள் கடிந்து ஒளியேற்றும் தீபமாக, சைவப் பண்பாட்டுப் பாரம் பரியங்களைப் பிஞ்சு மனங்களிலே நாள் தோறும் ஏற்றிப் போற்றும் கருவூலமாக இக்கல்லூரி விளங்குகின்றது.

சர்வசித்திகளையும் தந்து அருள் பாலிக்கும் சித்திவிநாயகப் பெருமானின் அருட்பார்வையில் வளர்ந்து வருகின்ற இக்கல்லூரியின் அண்மைக் காலப் பெருவளர்ச்சி கண்டு பெருமிதங் கொள்ளும் நெஞ்சங்கள் எத்தனை எத்தனை!

பல தமிழ் மாவட்டங்கள் தோறும் கல்விப் பணியாற்ற இறைவன் என்னைப் பணித்தான். அந்தப் பணியை மேற் கொள்ளும் வேளையில், சைவப் பண்பாளர்கள் வாழும் மன்னார் மாவட்டத்திலும் சேவையாற்றும் பேற்றினைப் பெற்றேன். அப்போது சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியைச் சகல வளங்களும் பெற்ற ஓர் உயர் நிலைக்கு வரவைப்பதற்கு மன்னார் வாழ்தமிழ் நெஞ்சங்கள் என்னை ஊன்று கோலாகப் பயன்படுத்தினர். அதன் பேறாக இன்று இவ்வினிய கல்லூரி பல வளங்களும் மலிந்த தன்னேரிலாக் கல்லூரியாகத் திகழ்கிறது.

குறுகிய கால இடைவெளியில் அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்விச் சமூகத்தின் சாமரை வீச்சினால் சுகந்தம் பெற்று வளர்ந்து, கல்வி கேள்விகளிலும், பரீட்சைப் பெறுபேறுகளிலும், கல்லூரிப்புறக்க கருமங்களிலும், பன்முகப்பட்ட போட்டிகளிலும் எண்ணில்லாத சாதனைகளைப் படைத்து மிடுக்குடன் வளரும் காட்சி கண்டு உள்ளம் பரவசமமடைந்து ஆர்ப்பரிக்கின்றது.

மேலும் மேலும் பன்மடங்கு வளர்ந்தோங்க என் நல்வாழ்த்துக்களை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

உதவி மாவட்ட செயலாளர், மன்னார் (முன்னாள் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர்)

# இ. வரதீஸ்வரன் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

## மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி மன்னாரப் பெருநிலப்பரப்பு மாணவர்களுக்கோர் வரப்பிரசாதம்

உலகத்திலே மனிதன் இதுவரை எத்தனையோ புதுப்புது விஷயங்களையெல்லாம் கண்டு பிடித்துள்ளான்; கண்டு பிடித்துக் கொண்டும் வருகிறான். ஆனால் மனிதன் கண்டுபிடித்த கண்டு பிடிப்புக்களிலெல்லாம் மிகவும் பெரியது எதுவெனில் ''எல்லோருக்கும் கல்வி போதிக்கக் கூடிய பள்ளிக் கூடங்களை நிறுவியது தான்".

இன்று மன்னார் மாவட்டத்திலே பல உயர்நிலைப் பாடசாலைகள் இயங்கி வந்தாலும் பல்துறைகளிலும் பல்கலைகளிலும் சாதனைகள் புரியும் வகையிலும் மாணவர்களது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலும் வளர்ச்சியடைந்து வருகின்ற பாடசாலைகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாக மன் / சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியும் விளங்குகிறது என்றால் அது மிகையல்ல.

மன்னார் பெருநிலப்பரப்பு பாடசாலைகள், அப்பிரதேசங்களில் காணப்படும் அசாதாரண சூழ்நிலைகள், ஆசிரியர் பற்றாக் குறை, ஏனைய வசதியீனங்கள் போன்ற காரணங்களினால் மாணவர்களுக்கு முழுமையான கல்வியைவளமாக வழங்க முடியாத ஒரு துர்ப்பாக்கியமான நிலையில் மாணவர்கள் நகர்ப்புற பாடசாலைகளை நோக்கி நகர வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாக இருந்தது. இவ்வேளையில் இன் முகத்துடன் இருகரம் நீட்டி வன்னி, பெருநிலப்பரப்பு மாணவர்களை வரவேற்ற பாடசாலை மன்/சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி என்பதனால் பாடசாலை நிர்வாகத்தினரை நன்றியுடன் நினைவு கூர்வது இவ்விடத்தில் மிகவும் பொருத்தமானது.

இன்று இக்கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களில் ஆண்டு 1 – ஆண்டு 5 வரை 86 மாணவர்களும் ஆண்டு 6 – ஆண்டு 9 வரை 180 மாணவர்களும் ஆண்டு 10 – ஆண்டு 13 வரை 182 மாணவர்களுமாக மொத்தம் 448 மாணவர்கள் வன்னி, பெருநிலப்பரப்பு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களெனப் பாடசாலைப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. அதாவது இக்கல்லூரியின் மொத்த மாணவர்களில் ஏறக்குறைய 1/3 பங்கினர் வன்னி, பெருநிலப்பரப்பு மாணவர்களேயாவர். எனவே பெருநிலப்பரப்பு மாணவர்களுக்கும் இக்கல்லூரி வரப்பிரசாதமாக அமைகிறது என்றால் அதன் சிறப்பைக் கூற வார்த்தைகள் தான் ஏது.

மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவது என்ற நோக்கம் மட்டுமல்லாது சமுதாய நலநோக்கோடு கூடிய சாதனைகளைச் செய்யக் கூடிய ஆர்வமும் உள்ளத்தை ஆட்கொள்ள வேண்டுமென்று வாழ்த்துகிறேன். இக்கல்லூரியின் உயர்ந்த வளர்ச்சிக்காக அயராது உழைத்து வரும் அதிபரையும் ஆசிரியர் களையும் பெற்றோர்களையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

மன்னார்த்தீவு இந்து ஆலயங்களது பிரதம குரு
கமலபூசணம் சிவஸ்ரீ சபா. மனோகரக் குருக்கள் அவர்கள்
வழங்கிய

# ஆசிச் செய்தி



இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கைத்தீவின் மூச்சுவிடும் முக்கிய உறுப்புப்போன்று விளங்கும் மன்னார்த்தீவிற் பெருமையுடன் திகழும் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியின் நாற்பது ஆண்டு நிறைவு விழாவுக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டுப் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் சிறுவனாக இருந்த காலத்திலேயே இப்பாடசாலையைப் பற்றி நன்கு அறிவேன். பாடசாலைக் கட்டிட வேலைகள் நடைபெறும் காலத்தில் எனது வீட்டில் அப்பொருட்கள் பாதுகாக்கப்பட்டுப், பாடசாலைக்குக் கொண்டு செல்லப்படுவது வழக்கம். அக்காலத்தில் எனது தந்தையாருடன் வாழ்ந்த காலம் பாடசாலையிலுள்ள ஒவ்வொரு தீராந்தியிலும், கட்டிடத்திலும் ஓடிவிளையாடியுள்ளேன். இன்று மன்னார் மாவட்டத்தில் அது கல்விச் செல்வத்தை வழங்கும் வித்தியாலயமாகத் திகழ்வதையிட்டுப் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எனது முப்பது வருட சேவையில் இப்பாடசாலையின் எல்லா நிகழ்வுகளிலும் ஆசியுரை வழங்கியுள்ளேன். என் ஆசி வீண்போகவில்லை என்பதை நினைத்துப் பெரு மகிழ்வடைகின்றேன். திரு. க. மகேசன் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை நிறைவு செய்யத் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தை நினைத்து பெரும் பூரிப்படைகின்றேன். அதே பாடசாலையில் எனது பிள்ளைகள் கல்வி பயில்வதையிட்டு இரட்டிப்பு மகிழ்ச்சி கொள்கின்றேன்.

நாற்பது ஆண்டுகளை இக்கல்லூரி தனது வளர்ச்சிப்படிகளாக்கி இம் மாவட்டத்தில் தரமான உயர் கல்லூரிகளில் ஒன்றாக இடம்பிடித்துள்ளது. இக் கல்லூரியின் வளர்ச்சியில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களின் பங்கைச் சைவ உலகம் மறக்கவே முடியாது.

இக்கல்லூரி இம்மாவட்டத்திலும் இந்நாட்டிலும், தலைசிறந்த கல்லூரியாகத் திகழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

" ஓம் சாந்தி "

## அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர்
## வி. கயிலாசபிள்ளை அவர்கள்
### வழங்கிய
# வாழ்த்துரை



சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் 40 ஆண்டு நிறைவு இந்த வருடம் பூர்த்தியடைவது குறித்து அறிவித்தல் பெற்றுள்ளேன். இந்த 40 ஆண்டு பூர்த்தியைச் சிறந்த முறையில் கொண்டாடுவதில் ஒரு பகுதியாக தாங்கள் ஓர் சிறப்பு மலர் வெளியிட விரும்புவதாக அறிகிறேன்.

சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மன்னாரிலிருக்கும் இந்துப் பிள்ளைகளுக்குரிய அரிய சேவை ஆற்றி வருவது யாவரும் அறிந்த விடயமாகும். இந்த மலர் வெளியீடு சிறந்த முறையில் நடைபெறுவதற்கும் இந்துக் கல்லூரி தொடர்ந்து இன்னும் பல ஆண்டுகள் இந்துக்களுக்கு சேவை புரிய வேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

---

## சித்திவிநாயகர் இந்துக் கல்லூரிப் பழைய மாணவன்
## வை. இளலிங்கம் அவர்கள்
**M. Com.** *F.C. M.A. F.C.C.A, C.P.A.*
### வழங்கிய
# வாழ்த்துச் செய்தி



மன்னாரில் ஒரு சைவப் பாடசாலை அமைய வேண்டும் என்ற நோக்குடன் நாற்பது வருடங்களுக்கு முன்னர் சில பெரியார்கள் எடுத்த முயற்றி இன்று கனிந்து இருப்பதை நான் சமீபத்தில் உவ்விடம் வந்திருந்தபோது நேரடியாகக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தேன். இப்பாடசாலை நிறுவப்பட்டபோது அதில் சேர்ந்த முதல் கட்ட மாணவர்களில் நானும் ஒருவன். எனவே, இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் எனக்குப் பெரு மகிழ்ச்சியாக உள்ளது. நான் எனது கல்வியை வேறு பாடசாலைகளில் தொடர்ந்து பெற்றிருந்தாலும் எனது மனதில் இப் பாடசாலையுடன் ஓர் உறவு இருப்பது போன்ற உணர்வு இருக்கத்தான் செய்கின்றது.

இக்கல்லூரி இன்று மன்னார் மாவட்டத்தில் ஒரு உயர் தரக் கல்லூரியாக வளர்ச்சியடைவதற்கு அரும்பாடுபட்ட அனைவரையும் பழைய மாணவன் என்ற வகையில் மனதாரப் பாராட்டி நிற்கின்றேன்.

40 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும், சைவத்தையும், தமிழையும் தமது இரு கண்களாகக் கருதியவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை அந்நோக்கெல்லையினை நிறைவேற்றும் பணியில் மேலும் பல வெற்றிகளைச், சாதனைகளை நிறைவேற்ற எல்லாம் வல்ல சித்தி விநாயகர் அருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

அவுஸ்திரேலியா

## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபைத் தலைவர்
## ஆர். நமசிவாயம் அவர்கள்
## வழங்கிய
# ஆசிச் செய்தி



மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி 1959 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்று நாற்பது ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. இக்கால எல்லையில் தொடர்ந்து நல்ல வளர்ச்சியடைந்துள்ளது. தற்பொழுது 1300 மாணவர்கள் வரை இக்கல்லூரியில் கல்வி கற்கின்றனர். கலை, தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வர்த்தகவியல் ஆகியன க.பொ.த. உயர்தரம் வரை கற்பிக்கப்படுகின்றன. இக்கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் கடமையாற்றுகின்றார்கள். இது போற்றுதற்கு உரியது.

1997 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் நடந்த க.பொ.த. உயர்தர வகுப்புப் பரீட்சையில் வர்த்தகவியலில் நான்கு "ஏ" புள்ளிகள் பெற்றுச் சாதனை படைத்தவர் இக்கல்லூரி மாணவனே! இவற்றையெல்லாம் அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

கணனியினைச் செயற்படுத்தும் முறையிற் பயிற்சி பெறுவது அவசியமானது என்பதனை அதிபர், ஆசிரியர்களது கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகின்றேன்.

மேலும் சைவ மாணவர்களுக்குச் சைவநெறி கற்பிக்கப்படுவதோடு, பண்ணொடு பாடுவதற்கும் பயிற்சியளிப்பது முக்கியமானதாகும். இவற்றையும் அதிபர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

இன்னும் பல நூற்றாண்டுகள் ஆல்போல் வளர்ச்சி பெற்றுச் சைவத்தையும், தமிழையும் வளர்க்க வேண்டுமென்று கேதீச்சரப் பெருமானை பிராத்திக்கின்றேன்.

"சிவ சிவ"

## மன்னார் சித்தி விநாயகர். இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் வழங்கிய

# ஆசிச் செய்தி



திரு. பொன் மகேந்திரன்



சு . பிருந்தாவனநாதன்

சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி நாற்பதாவது ஆண்டு நிறைவு விழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டுப் பெருமிதமடைகின்றோம்.

இந்து மாணவர்கள் இந்துசமயச் சூழலிற் கல்விகற்க வேண்டுமென்ற பெருவிருப்பினாற் சித்திவிநாயகர் ஆலயக் காணியிலிருந்து ஒரு பகுதியை இந்துப் பாடசாலை ஒன்று அமைப்பதற்காக வழங்கி, அவ்வாறு அமைப்பதற்கும் முன்னின்று உழைத்த முன்னைய மேற்படி ஆலயத் தர்மகர்த்தாக்களை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

வழங்கப்பட்ட தேவைக்கு அது சரியாகப் பயன்படுத்தப்பட்டு, இப்பகுதி இந்து சமூகத்தினரின் பிள்ளைகள் பயன்பெறுவதைக் கண்டு மனநிறைவடைகின்றோம். ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்திற்கமைவாக இதன் 40 ஆண்டு வரலாற்றிலே கல்வி, கலை, கலாசார, சமய, விளையாட்டுத் துறைகளிலே வெற்றிநடைபோட்டுச் சிறந்த அறுவடையினைப் பெற்று வருகின்றதையிட்டுத் திருப்தியடைகின்றோம்.

மன்னார் மாவட்டத்திலே எங்கு நல்ல கல்வி போதிக்கப்படுகின்றது என்று யாராவது கேட்டால் அது சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியிலே தான் என்று எவரும் சொல்லுமளவுக்கு இதன் பெயர் மாவட்டத்தில் மட்டுமன்றி, மகாண, தேசிய மட்டங்களிலும், ஏன் வெளிநாடுகளிலிருக்கும் நண்பர்கள் கூடக் கூறுமளவுக்கு மேலோங்கி உள்ளது. தேசிய மட்டப் பரீட்சைப் பெறுபேறுகள் இதற்குச் சான்று பகர்கின்றன.



க. ம. குலசிங்கம்

இந்நிலைக்கு இக்கல்லூரி வளருவதற்குப் பாடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பக்கபலமாகவிருந்த அனைவருக்கும் நன்றி கூறுவதோடு, இக்கல்லூரி சகல துறைகளிலும் மென்மேலும் வளர்ந்து பயன்தர வேண்டுமென்றும் வாழ்த்துகின்றோம்.

## மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கத் தலைவர்
## திரு. செ. சி. இராமகிருஷ்ணன் அவர்கள்
## வழங்கிய

# ஆசியுரை



சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாக எந்த நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டதோ, அந்த நோக்கத்தை இப்பாடசாலை எவ்வளவு தூரம் நிறைவேற்றி உள்ளது என்பதைச் சிந்திக்க வேண்டிய இவ்வேளையில் கடந்த ஒரு சில ஆண்டுகளில் இக்கல்லூரி அடைந்த அபார வளர்ச்சியை எம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது. சமய ரீதியாக கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த மக்களை மற்றவர்களுடன் சமப்படுத்த வேண்டிய நிலையில்தான் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. நாற்பது வருடகாலமாக அனுபவத்தின் மூலம் உரிய இலக்கை நாம் அடைய மேலும் அக்கறையுடன் செயற்பட வேண்டுமென்பதே உண்மையாகும்.

சித்தி விநாயகர் ஆலயத்தை அமைத்து அதற்கெனப் பல ஏக்கர் காணியையும் மனமுவந்தளித்த பெரு வள்ளல் அவர்கள் இச்சுற்றாடலில் ஒரு இந்துக் கல்லூரியும் அமைய வேண்டும் என்ற நோக்கில் கல்லூரிக்கெனவும் தேவையான நிலத்தை ஒதுக்கிக் கொடுத்தார். இப்பாடசாலை ஊடாக சைவம் தளைத்தோங்கவும், இந்து சமூகத்துக்கும், மாவட்டத்திற்கும், ஏன் நாட்டிற்கும் பல்வேறு மேதைகள் உருவாக வேண்டும் எனவும் விரும்பினார்.

மாணவர்களை இப்பாடசாலையில் வந்து சேருமாறு அறைகூவல்விட்ட காலங்களும் உண்டு. ஆனால் தற்சமயம் வகுப்பறைக் கட்டிடங்கள், தளபாட சவதிகள் போதாததால், தொடர்ந்தும் மாணவர்களை அனுமதிப்பதைக் குறைத்துக் கொள்ளுங்கள் எனக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் கூறுமளவிற்கு இப்பாடசாலை முன்னேற்றம் அடைந்திருப்பதை எம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது.

இப் பகுதியிலுள்ள ஏனைய பாடசாலைகள் பௌதீக வளர்ச்சியில் துரித அபிவிருத்தி அடைந்த நிலையிலும் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் அடிப்படை வசதிகள்கூடப் பூரணப்படுத்தப்பட முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருப்பதையும் நாம் காண்கின்றோம்.

ஆண்டு ஒன்றிலிருந்து க. பொ. த உயர் தர வகுப்புக்கள் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய சகல துகைளிலும் கல்விபயிலக்கூடிய இப்பாடசாலை ஏனைய பாடசாலைகளுடன் சரிசமமாகவும் மாவட்டத்தின் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாகவும் விளங்குவதை நாம் காணும்போது பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இப் பாடசாலை, ஸ்தாபகர்களின் நோக்கங்கள் விரைவாக அடையக்கூடிய விதத்தில் மிகவும் துரித முன்னேற்றம் அடைந்து வருகின்றது என்ற எண்ணம் எல்லோர் உள்ளத்திலும் துளிர்விட்டுள்ளது. இந்நேரத்தில் இப்பாடசாலை அதிபர் திரு. தயானந்தராஜா அவர்களின் கடுமையான உழைப்பையும், சிறந்த தலமைத்துவத்தையும், ஏனைய ஆசிரியர்களின் திறமையையும், முழுமையான ஒத்துழைப்பையும் எம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது. சிறந்த ஒரு நிர்வாகத்தின் கீழ் வெற்றிகளோடு வீறுநடை போடுகின்ற இப்பாடசாலையில் அதன் பலனை வெகுவிரைவில் அறுவடை செய்வோம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இந்து சமய வளர்ச்சிச் சங்கத்தைப் பொறுத்தமட்டில் இப்பாடசாலையின் வளர்ச்சியில் எப்பொழுதும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டிய பொறுப்புண்டு. ஒரு சில நிகழ்ச்சிகள், விழாக்களை மாத்திரம் ஒன்றிணைந்து நடத்துவதுடன் தனது கடமை முடிந்ததாகக் கருதாது, பல வழிகளிலும் உறுதுணையாக இருந்து பாடசாலையின் நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய வழிகளை பலப்படுத்த வேண்டுமென நாம் கருதுகிறோம். இதற்கான வழிகளை இன்றைய நிர்வாகம் ஏற்படுத்துகின்றது என்பதையும் கூறிவைக்க வேண்டிய நிலையில் இருக்கின்றேன். இந் நேரத்தில் முன்னைநாள் இந்து சமய வளர்ச்சிச் சங்கத் தலைவர் திரு. பாஸ்கரதாஸ் (இ. நி. சேவை உத்தியோகத்தர்) அவர்களின் பங்களிப்பையும் எம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது.

சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி சகல மாணவர்களின் கல்விக்கான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கின்ற ஒரு பூரணப்படுத்தப்பட்ட பாடசாலையாக மிளிர வேண்டும் எனவும் இப் பாடசாலை ஊடாகப் பல கல்விமான்கள் உருவாக வேண்டும் எனவும் என் மனதார வாழ்த்தி கல்லூரியின் நாற்பதாண்டு விழா சிறப்புப் பெற வேண்டும் என இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

"வாழ்க சித்தி விநாயகர்! வளர்க இந்துக் கல்லூரி!"

கௌரி அம்பாள் கனிஷ்ட வித்தியாலய அதிபர்

க. இரத்தினபூபாலன் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்"



சித்திவிநாயகப் பெருமானின் திருவீதியிற் பெருமையுடன் குடிகொண்ட இக்கல்லூரி நாற்பது ஆண்டுகளை நிறைவு செய்வதை நினைக்கையிற் சொல்லொணா ஆனந்தம் அடைகின்றேன்.

நாற்பது ஆண்டுகளாகச் சைவ உலகின் கலங்கரை விளக்காகத் திகழ்ந்து ஞான ஒளி பரப்பிய இக்கல்லூரி இரண்டாவது பரம்பரையை வரவேற்கத் தலைப்பட்டு விட்டது. மேலும் விளக்கமாகச் சொல்லின் பழைய மாணவர்களின் பிள்ளைகளே இக்கல்லூரிக்கு வர ஆரம்பித்து விட்டனர்.

கலை, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளுடன் கூடிய உயர்கல்வி வகுப்புக்களையும் உள்ளடக்கி முன்னணிப் பாடசாலைகளின் வரிசைக்கு வளர்ந்துள்ளமை சைவ மக்கள் பெற்றபேறாகும். அத்துடன் தூரத்தவர்க்குத் தூயசேவை செய்யவெனக் தூயதோர் விடுதியையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இக்கல்லூரியின் வளர்ச்சிப் படிகளிற் கல்விக்காவலர் ஜனாப். ஏ. சி. அப்துல்ஹக் அவர்கள் தந்த தெம்பை இதன் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் சிந்தையில் நிறுத்த வேண்டியவர்களாக உள்ளனர்.

இக்கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், அயலவர், நலன் விரும்பிகள் ஆகியோரது உழைப்பை, ஆர்வமிகு அர்ப்பணிப்பை, இல்லையெனா ஈகையை உய்யவென ஆற்றிய பணியைச் சைவ உலகம் என்றென்றும் மறக்காது.

கௌரி அம்பாளின் காலடியில் வளர்ந்த கௌரி அம்பாள் வித்தியாலயம் காலத்தின் பிடியில் சிக்கிப் பொலிவிழந்து தத்தளித்த வேளையிற் கல்விப்பணிப்பாளரின் அநுசரணையுடன் அபயமளித்த சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியைச் சைவ உலகம் சான்றோர் வரிசையில் நிறுத்தும்.

மானிடரையும், மன்னுயிரையும் சமமாக மதிக்கும் மனுநீதிகண்ட சோழன் வளர்த்த சைவ நீதி பரப்பும் இந்துக்கல்லூரி பலம் பெற்று பல்லாண்டு வாழ கௌரி அம்பாள் சமேதரரான திருக்கேதீஸ்வரப் பெருமானின் கடைக்கண் பார்வை கிட்டவேண்டி அவர் தாள் வணங்குகின்றேன்.

# சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி

(முன்னாள் அதிபர்)

## வி. அரியநாயகம் அவர்கள்

வழங்கிய

## வாழ்த்துரை



மன்/ சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி 40வது ஆண்டு விழாவினைக் கொண்டாடும் வேளையில் எமது நல்வாழ்த்துக்களை நல்குவதில் புழகாங்கிதம் அடைகின்றேன்.

தற்போது 1 200 மாணவர்களுடன் உயர்தர விஞ்ஞான வகுப்பு வரையும் பாடபோதனை மேற்கொள்ளப்படுவதுடன், கம்பியூட்டர் கற்கை நெறியும் அறிமுகப்படுத்தப்பட்டு பயிற்சி அளிக்கப்படுவதாகவும் அறிகிறேன். மாணவர் தங்கிப்படிக்க வசதியாக விடுதி வசதியும் ஏற்பாடாகியுள்ளது அறிந்து அகமிக மகிழ்கிறேன். மன்னார் மாவட்டம் முத்துக்குப் பேர்போன இடம். அதில் ஆணி முத்துப்போல பாடசாலை இயங்குவது கண்டு இறும்பூது எய்துகிறேன்.

01. 01. 62 தொடக்கம் 01. 07. 68 வரை கல்லூரியின் அதிபராக இருந்துள்ளேன். இக்கால கட்டம் மிகவும் கஷ்டமான ஒன்று. மன்னார் வாழ் இந்துக்கள் உப்புக்குள கிராமத்தில் செறிந்து வாழ்ந்தாலும், அடம்பன், முருங்கன், முசலி ஆகிய உப அதிபர் பிரிவுகள் தோறும் பரந்துபட்டு வாழும் இந்துக்களுக்கு தமக்கென தனித்துவமான குறிக்கோளை முன்னெடுத்துச் செல்லக் கூடிய கல்லூரியின் இன்றியமையாத தேவையை உணரத்தலைப்பட்ட காலகட்டத்தில், திருக்கேதீச்சர பரிபாலன சபைத் தலைவர் சேர். க. வைத்தியநாதன் அவர்களின் தலைமையில் இக்கல்லூரிக்கு அத்திவாரமிடப்பட்டது.

மன். சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியைப் பிரசவித்த தாய் கல்வி இலாகா எனினும், அதைச் சீராட்டிப், பாராட்டிப் பார்புகழ வளர்த்த பெருமை மன்னார் இந்துக்களையே சாரும்.

அறுபதுகளில் இந்துக்கல்லூரி மன்னாரிலுள்ள ஏற்கனவே வளர்ச்சியடைந்த கல்லூரிகளுடன் பன்முனைப்பட்ட துறைகளிலும் போட்டி போட்டுக்கொண்டு இயங்க வேண்டிய இக்கட்டான நிலையில் இருந்தது. அக்கால கட்டத்தில் யானும், உடன் கடமையாற்றிய ஆசிரியர்களும், குறிப்பாக சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களும் பசிநோக்கார், கண்துஞ்சார், கருமமே கண்ணாயினார் என்பதற்கமையக் கடமையாற்றினோம்.

ஆரம்ப கால முதற் பத்தாண்டுகள் சாதனை நிறைந்ததாக விளங்கியது. அறுபத்தி நாலாம் ஆண்டில் பங்குனித் திங்களில் ஆசிரியர், மாணவர் அடங்கிய குழு ஒன்று அகில இலங்கைச் சுற்றுலாவை மேற்கொண்டது. 'சுற்றுலா மூலம் கல்வி" என்ற கருப்பொருளின் பயன்பாடு கருதி மேற்கொள்ளப்பட்டதைக் கல்விச் சமூகம் பாராட்டியது. மாணவரிடையே சாரணீயம் தொடங்கப்பட்டதும் அறுபதுகளிலேயே. காலப்போக்கில் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் சிறப்பம்சமாக இருந்து வந்துள்ளது.

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகள், கலை விழா நிகழ்ச்சிகள், விஜயதசமி நிகழ்வுகள், பரிசளிப்பு விழாக்களுக்குக் குறைவேயில்லை. இவை யாவற்றையும் வெற்றிகரமாக நிறைவேற்றப் பெற்றாரின் பங்களிப்பு பெ. ஆ. சங்கம் மூலம் கிடைத்தமை நினைவுகூரத்தக்கது. பெ. ஆ. சங்கச் செயலாளராக அந்நாளில் இருந்த திரு. க. பத்மநாதன் அவர்கள் தோழனாய் வழிகாட்டியாய் இருந்தது இன்றும் பசுமையாக உள்ளது.

பாடசாலை நிர்வாகத்தை முதலில் யாழ்ப்பாணப் பெரும்பாகக் கல்வி அலுவலகத்தாலும், பின்னர் வவுனியாவில் உப அலுவலகம் ஏற்படுத்தப்பட்ட பின் அதனாலும், இன்னும் பிறகு மன்னாரில் கல்வி அலுவலகம் திறக்கப்பட்ட பின் அதனாலும் நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது. கல்லூரிச் சமூகத்தில் ஏற்பட்ட எழுச்சி கல்விப் பகுதியினரையும் விழிப்படையச் செய்தது. கல்லூரியைத் தன் செல்லப் பிள்ளையாக கருதி தேவைகள் யாவற்றையும் நிறைவேற்றியமை நன்றியுடன் நினைவுகூரத்தக்கது.

# Message From

## N. Jeyabalasingam J P

### Former Principal



I am thankful, to the Principal, the Staff, the SDS of Sithivinayagar Hindu College, Mannar and the Organizing Committee for the opportunity given to me to associate myself with the 40th Anniversary Celebration of the College.

Sithyvinayagar Hindu College, Mannar satisfies the long-felt need of the Hindu population of the district to educate their children with a Hindu religious and cultural back-ground. It is not an exaggeration to state that the school has developed by leaps and bounds during the past ten years in diverse fields - with the result that today it occupies a place of prestige and pride among the educational institutions of the district.

At this hour of pride and pleasure let me, as a Past Principal of the School, take you back to the year 1976, when I assumed the stewardship of the school. In 1976, it was no better than a third grade village school. It stood as a monument of neglect. There was not even a proper fence around the school. The school hall served as a convenient resting place for stray cattle at nights. There was no electricity either in the school or the quarters. Total darkness which enveloped the entire premises together with the want of a Watcher was often taken advantage of by vagabonds and licentious people. There wasn't a Parents' body or a Society of Well-wishers to whom the Principal could approach for assistance. The student strength was very poor. The Principal's quarters was in a state of disrepair, having been seldom used by my predecessors. Drinking water has to be fetched either from the Buildings Department or from the Temple and sometimes bought. Pipe-borne water supply could not be availed of due to years of neglect and disrepair of the pipes.

The ebbing state of affairs, having given rise to diffidence and pessimism in the minds of most of the Hindus in general and the rich and the well-to-do in particular, induced them to send their children to other denominational schools which had already been well-developed. The pessimists had grave doubts as to whether the little David of Sithyvinayagar could face the manifold challenges posed by the Goliaths of other developed schools. Indigent and impecunious were the sincere parents who patronized this school at that time.

In the light of the above facts, I faced an up-hill task. I had to swim against the current.

To dispel the damaging diffidence of the Hindu population and to restore confidence in their minds and win their co-operation I had to exhibit some concrete proofs of development and some rays of hope.

On the other hand, to develop the school and produce proofs of development, I was in need of their co-operation, funds and more children. This was the dilemma I faced in 1976. To win the hearts of Hindu public the school had to produce good results. To produce good results the school needed more and more of their children. This was the vicious circle the school was caught up in 1976.

With the devoted co-operation of the staff, and the sincere efforts of a few parents and well-wishers, I was able to re-organize the defunct PTA, form an Old Students body and launch a campaign of house to house visit and succeed in dispelling the doubts and diffidence from the minds of many Hindus. The joint endeavour of the combined forces began to bear fruits slowly but steadily. Year by year, the student strength increased and the GCE O/L results got better and better. The Hindu business community shook away their aloofness came down from their Olympian heights and responded satisfactorily to our demands for funds and other essential equipment and tools needed for the Home Science, Wood-work and Sports Sections of the school. With the backing of the then Saiva Valarchchi Kalagam, I got a boundary wall built right round the school, quarters renovated, and the supply of electricity installed to the school as well as to the quarters. It was during the last stage of my tenure of office, new pipe-lines were laid and the drinking water problem was solved.

Even then the flow of water was insufficicient due to the long distance between the school and the supplying water tank. As a result of the constant pressure exerted on the Education Department by the PTA and the well-wishers, the Department agreed and did pay for the drinking water we bought whenever the pipe-borne water fell short of the requirement.


Having thus laid the foundation for a grand super-structure, I gladly handed over the management of the school to the youthful administrator Mr. A. T. Thayanantharajah, who has indisputably made Sithyvinayagar the envy of many schools.

May this premier Hindu educational institution of Mannar grow from strength to strength and produce useful citizens.

# Message From Old Student

## Kadiravelu Suthakar *(Sutha)*

*B Sc(Eng) Hons, MEng, PG Dip, MASCE, MIE Aust, CPEng*
***Senior Manager, Sydney Water Corporation, Sydney, Australia***



I feel honoured for the opportunity extended to me to say a few words on the occasion of the 40th Anniversary Celebrations of my old school, Mannar Sithyvinayakar Hindu College.

It has been more than 35 years since I did my early schooling at Sithyvinayakar Hindu College. It was a very small school with a total student population of about 300 students. It is indeed a pleasure to learn that the school has grown from strength to strength, developing into an outstanding educational institution, with a student strength over 1300 students, and achievements that would be the envy of schools in a more endowed environment.

I congratulate the past and present teachers, parents, students, school development society and the well wishers for their tremendous effort under a period of trying circumstances.

To inspire and encourage the students, I wish to briefly trace my path from my early schooling days at Sithyvinayakar Hindu College to the present. Then, it was a small school and we did not have science stream nor GCE "A" Level classes.

To pursue my interest in science, I had to move to a school in Jaffna. I obtained my first degree in Engineering from the University of Ceylon. I was awarded a Dutch Government scholarship to pursue post graduate studies and I obtained a Masters degree in Engineering from the Asian Institute of Technology in Bangkok, Thailand. I spend a brief period as a Research Associate at the Institute and moved to Singapore to work for a British firm called George Wimpey International, heading their Environmental Engineering Division.

From there I joined the United Nations as a Water & Sanitation Engineer and served in indo China and the West Indies before migrating to Australia in the late 80's. In Australia I joined the Sydney Water Corporation as a Project Engineer and over the past ten years, held several positions, before being promoted to my current position of Senior Manager within the organisation. I was also provided an opportunity by Sydney Water Corporation to pursue post graduate studies at the Macquarie University in Sydney, where I obtained a Postgraduate Diploma in Management in mid 90's.

I hope every student at Sithyvinayakar Hindu College will focus their efforts on the goals that they have set for themselves and make their Alma Matter feel proud of themselves.

I feel privileged to have been associated with the 40th Anniversary celebration of my school. On this proud occasion, I wish the school and the school community success in every endeavour.

**Australia**
**10th April 1999**

## சித்தி விநாயகர் இந்துக் கல்லூரிக் கனிஷ்ட கல்லூரி அதிபர்
## திரு. ச. சண்முகலிங்கம் அவர்கள்
### வழங்கிய
# வாழ்த்துரை

மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரில், மாந்தைத் துறைமுகம் ஒரு காலத்திலே செழிப்புற்றிருந்த மன்னார் மாவட்டத்தில் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் வருகைகளின் பின்னர் சைவமும் தமிழும் நலிவுற்றமை யாவரும் அறிந்த உண்மை.

எனினும் நன்னெறி காட்டிய நாவலரின் காலத்தில் மீண்டும் புத்துயிர் பெற ஆரம்பித்தது எனலாம். இந்த வகையிலே 1959 களில் இம்மாவட்டத்திலே சைவ மாணவர்கள் தங்களது கலாசாரப் பின்னணியோடு கூடிய கல்வியினைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பாக இக்கல்லூரி அமையப்பெற்றதை அடுத்து வந்த ஆண்டுளிலே நான் உய்த்து உணர்ந்து கொண்டேன்.

என்ன புண்ணியம் செய்தேனோ, நானும் சிறுவனாக இக்கல்லூரியில் இணைந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றேன். தொடர்ந்து மாணவனாக, பழையமாணவனாக, ஆசிரியராக, பெற்றோராக, பிரதி அதிபராக இன்று கனிஷ்ட கல்லூரி அதிபராக என்னை உயர்த்திய இக்கல்லூரிக்கு என்றென்றும் தலைவணங்கிக் கல்லூரித்தாயின் பாதம் பணிகின்றேன்.

இக்கல்லூரி 1959 இல் அவதரித்துக் குழந்தையாக, தவழ்ந்து, எழுந்து நடந்து, விழுந்து, மீண்டும் எழுந்து, ஆண்டுகள் கடந்து வந்த காலங்களிலே இக்கல்லூரிக்கு எழுச்சியும் வீழ்ச்சியும் மாறி மாறிக் காணப்பட்டமை கண்கூடு.

அன்று எனக்குக் கல்வியளித்த ஆசிரியர்களையும் குறிப்பாக அதிபர். திரு. வி.அரியநாயகம் அவர்களையும் சைவப் புலவர் திரு. சு. செல்லத்துரை அவர்களையும் தன்னலமற்ற சிறந்த சேவையை நல்கிய அனைத்து ஆசிரிய பெருந்தகைகளையும் நினைத்துப் பார்க்கின்றேன். இவர்களின் நேரிய வழிகாட்டலின் மூலம் க. பொ. த. சா. தரக்கல்வியைத் தாண்டிய நான் உயர்தரக் கல்வியை மன். எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியில் தொடர்ந்தேன் என்பதையும் இங்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1989 காலப்பகுதியில் ஆசிரியத் தொழில் எனக்குக் கிடைத்த போதும் 1993 காலத்திலேயே இக்கல்லூரிக்குச் சேவை செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கப் பெற்றது. அக்காலத்தில் அதிபராக இருந்த திரு. எம். குணரத்தினம் அவர்களுடன் பொறுப்புணர்வுடன் கடமையாற்றிய எனது சக ஆசிரியர்கள் அனைவரையும் இவ்விடத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். குறிப்பாக பல சிறந்த குணவியல்புகளையுடைய ஒரு நிர்வாகியான அதிபர் திரு. ஆ. ஐ. தயானந்தராஜா அவர்களுடன் கடமையாற்றக் கிடைத்தமையை ஒரு பெரும் பேறாகவே கருதுகின்றேன். அவரது நெறிப்படுத்தல் என்னை ஒரு முழுமையான ஆசிரியனாக்கியது. இக்கல்லூரியின் வளர்ச்சியில் இவரது பங்கு அளப்பரியதுடன் திடகாத்திரமானதுமாகும். இன்று இக்கல்லூரிக்குப் பலம் பொருந்திய அபிவிருத்திச் சங்கமும், துடிப்புள்ள பழைய மாணவர் சங்கமும் பக்க பலமாக இருந்து கல்லூரி நிர்வாகத்திற்கு உதவி வருகின்றதை நினைத்து மகிழ்கிறேன்.

நாற்பது வயதைப் பூர்த்தி செய்யும் நிலையிலே இக்கல்லூரியானது கல்வியில், கலாசாரத்தில், விளையாட்டுத்துறையில் மாவட்டத்தில் தனக்கெனத் தனியிடத்தைப் பிடித்துள்ளது. தேசிய மட்டப் போட்டிகளிலே பல பரிசில்களையும் பெற்று வந்துள்ளது. வருகின்றது இவ்வாசியுரையை எழுதும் போது இவ்வாண்டு நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் மாவட்ட மட்டத்தில் அதிக முதலாம் இடங்களைப் பெற்றுள்ள செய்தியும் தேனாய் இனிக்கின்றது.

இக்கல்லூரி இன்றைய நிலைக்கு உயரப் பாடுபட்ட அனைவரையும் ஒட்டு மொத்தமாக நன்றியுணர்வுடன் பாராட்டுவதோடு மேலும் இக்கல்லூரி வானுயர வளர்ந்து எதிர் பார்க்கும் இலக்கினை அடையச் சித்திதரும் சித்திவிநாயகரின் ஆசியை வேண்டி, வாழ்த்துகின்றேன்.

*நன்றி*

## உயர்தர மாணவர் ஒன்றியப் பொறுப்பாசிரியர்
## இ. ஜெயமனோகர் அவர்கள்
## வழங்கிய
# வாழ்த்துரை



சோதனைகள் பலவற்றை வென்று, சாதனைகள் பல படைத்து நாற்பது ஆண்டுகளைக் கடந்து நிற்கும் மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றம் 1991 இல் அங்குரார்ப்பணமாகி இன்று கலை, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய துறைகளைச் சார்ந்த இருநூற்றி மூன்று மாணவச் செல்வங்களை உறுப்பினர்களாகக் கொண்டு வளர்ந்து நிற்கின்றது.

சிரேஷ்ட மாணவர்களின் சிந்தனைத் திறன்களை வளர்க்கும் பயிற்சிப் பாசறையாகவும், அறிவையும், மனப்பாங்கையும் புடம் போடும் களமாகவும் மன்றத்தின் செயற்பாடுகள் பரந்து காணப்படுகின்றன. நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம் எனப் பல்வேறு முன்னெடுப்புக்களுடன் செயற்படுகின்றது. மன்றின் மலர் வெளியீட்டுக் குழுவினர் வருடாந்தம் 'துணரி' என்ற சஞ்சிகையை உங்கள் கரங்களில் தவள விடுவதையும் நீங்கள் அறிவீர்கள். நீண்ட இடைவெளிக்குப் பின் வெளிமாவட்டக்கல்விச் சுற்றுலாவினை மேற்கொண்டது போலவே பாடசாலை மட்டக் கண்காட்சியையும் வெற்றிகரமாக நடத்தி முடித்தனர். மேலும் புலம் பெயர்ந்து இடருறும் உடன் பிறப்புக்களுக்குக் கையளிக்க உலர் உணவுச் சேகரிப்பிலும் ஈடுபட்டனர். அத்துடன் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சபை என்பனவற்றுடன் இணைந்து உலக ஆசிரியர் தினத்தினையும் வெகு சிறப்பாகக் கொண்டாடினர்.

1997 இல் 04 ஏ பெறுபேற்றைப் பெற்று மாவட்ட மட்டத்தில் சிறப்படைந்தது போல 1998 லும் மாவட்ட மட்டத்தில் 1ம், 2ம், 4ம் நிலைகளைப் பெற்று முன்னனியில் உயர்தர மாணவர்கள் திகழ்ந்தனர்.

பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்கான முன் ஆயத்தங்களை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், ஆயகலைகள் அனைத்தினையும் வழங்கும் கல்விக் கூடமாகத் தொடர்ந்தும் பல்லாண்டுகள் ஒளிர வேண்டுமென வாழ்த்தி நிற்கின்றேன். இக் கல்லூரியில் ஆரம்பக்கல்வியை ஆரம்பித்து இன்று பட்டங்கள் பெற்றுப், பயிற்சியும் பெற்று மீண்டும் இக்கல்லூரியின் ஆசிரியர்களுள் ஒருவனாகப் பணி புரியவும் நாற்பதாண்டு நிறைவு மலருக்கு மன்றப் பொறுப்பாசிரியர் என்ற வகையில் வாழ்த்துரை வழங்கவும் பேறு கிடைத்தமைக்காக இரட்டிப்பு மகிழ்வடைகின்றேன்.

" இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க "

### கிறிஸ்தவ மாணவர் ஒன்றியப் பொறுப்பாசிரியர்
### எல். ஜி. பிறேம்குமாரன் அவர்கள்
### வழங்கிய

# வாழ்த்து



கல்லூரி தனது 40ஆவது ஆண்டினைப் பூர்த்தி செய்து விழா எடுக்கும் இவ்வேளையில் சிறப்பு மலருக்குக் கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத்தின் சார்பில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ் வடைகின்றேன்.

1993 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட எமது கல்லூரிக் கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம் அதன் செயற்பாடுகளைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கின்றன. நம் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பினை நினைவு கூரும் ஒளிவிழா வருடா வருடம் மார்கழி மாதத்திற் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. ஒளிவிழாச் செய்தி மறையுரையும், கரோல் கீதங்களும், இறை வார்த்தையை அடிப்படையாகக் கொண்ட கலை நிகழ்ச்சிகளான நாட்டிய நாடகம், நடனம், பாடல் என்பனவும் இடம் பெறுகின்றன.

வாராந்த ஜெப ஆராதனை பிரதி வெள்ளிக்கிழமை தோறும் காலை 7.45 முதல் 8.15 மணிவரை ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றது. அத்துடன் மாதத்தின் முதல் வெள்ளியன்று அருகிலுள்ள புனித லூசியா ஆலயத்தில் திருப்பலிப் பூசையில் பங்குபற்றி வருவது குறிப்பிடத்தக்கது. நம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமையும் இவ் ஜெப வேளையில் இறைவனுக்கு நன்றி செலுத்தும் பாமாலையும், இறைவார்த்தையைப் பகிர்ந்து கொள்ளுதலும் இடம் பெறுகின்றன.

இது ஒரு இந்துக் கல்லூரியாக இருந்த போதிலும் எமது செயற் பாடுகளுக்கு இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் என்ற மத பேதமின்றி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் ஒரே குடும்பமாக இருந்து நிகழ்வுகளைச் சிறப்பிப்பது கல்லூரியின் மத சார்பின்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டுவதாக அமையும்.

இதனால் எமது அனைத்து நிகழ்வுகளும் தடையின்றி நிறைவேறுகின்றன. ஆண்டு இறுதியில் நடைபெறும் ஒளிவிழா நிகழ்வுகளில் அருட் தந்தையர்கள், மெதடிஸ்த திருச்சபைப் போதகர்கள் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து விழாவைச் சிறப்பிப்பது எமது ஒன்றியத்திற்குப் பெருமை சேர்க்கின்றது.

இனிவரும் காலங்களிலும் கல்லூரி எமது செயற் பாடுகளுக்கு ஊக்கம் தந்து நிகழ்வுகளைச் சிறப்பிக்க வேண்டும் என்று அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்புத் தரும் அனைவருக்கும் எமது அன்பான நன்றியைத் தெரிவிப்பதுடன் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை அனைவரோடும் இன்றும், என்றும் இருப்பதாக என்றும் வேண்டுதல் செய்கின்றேன்.

### பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்
### சு. பிருந்தாவனநாதன் அவர்கள்
### வழங்கிய

# வாழ்த்துரை



இக்கல்லூரியின் எப்பாகத்தில் நின்று பார்த்தாலும் அழகுறத் தோற்றமளிக்கும் சித்தி விநாயகர் ஆலயம் எவர் கண்ணிலும் படாமல் விடாது. எனவே முதல் வணக்கம் எங்கள் முன்கையனுக்கே.

விநாயகர் ஆலயத்தை அமைத்தவர்கள் கூடவே வித்தியாலயத்தையும் அமைக்க விஸ்தீரணமான காணியை விரும்பியளித்த கொடை வள்ளல் திரு. குமரையா முத்துக்குமாரு அவர்களையும், பொறுப்பேற்று வழிநடத்திய சைவ மங்கையர் கழகத்தினரையும், சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களையும், நிர்மாணப்பணிகளில் பங்காற்றிய கே. கே. வைத்திலிங்கம் அவர்கள் உட்பட அக்கால சித்தி விநாயகர் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர்களையும் நினைவு கூருவது பொருத்தமாகும்.

கடந்த 40 ஆண்டுகளிலே இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகவும், பெருமைக்காகவும் சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் கரம்குவித்து வணங்குகிறேன்.

ஒரு கல்லூரியின் பெருமை அதன் பௌதீக வளங்களிலல்லாது மாணவர்களது அறிவு வளர்ச்சியிலும், ஒழுக்கத்திலுமே தங்கியுள்ளது. அந்த வகையில் கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இக்கல்லூரியின் தனித்துவத்தைக் கட்டிக்காத்த மாணவர்களையும் பாராட்டி நிற்கின்றேன்.

1987ல் மாவட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்த செல்வி. ஆறுமுகம் அவர்களது பணிப்பின் பேரில் நெடுந்தீவு பெற்றெடுத்தநேர்மையாளன் நிகரில் பணியாளன் திரு. ஆ. ஐ. தயானந்தராஜா அவர்கள் இக்கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்டதன் பயனாக இக்கல்லூரி நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகப் பரிணாம வளர்ச்சியடைந்து 1993க்கு பின் துரித வளர்ச்சியுமடைந்து இவ்வுந்நத நிலைக்கு கொண்டுவந்த உயர் மதிப்புக்குரிய அதிபரை என்றென்றும் போற்றித்துதிக்கின்றேன்.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக மாணவர்களைச் சேர்ப்பது தொடக்கம் சகல விடயங்களிலும் பலர் தொண்டாற்றியுள்ளார்கள். எனினும் குறிப்பாக பல இன்னல்களையும் சகித்துக்கொண்டு தளராது நின்றுழைத்த தன்னலமிக்க தொண்டன் திரு. வே. பொ. மாணிக்கவாசகர் அவர்களுக்குச் சிரம் தாழ்த்தி மரியாதை செலுத்துகின்றேன். இவரது மாணிக்க வாசகங்கள் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உரமாகப் பயன்பட்டன என்றால் மிகை எனக் கூறமுடியாது.

சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் ஆதரவில் திருக்கேதீஸ்வர வித்தியாலத்திலிருந்து இக்கல்லூரியில் சேர்ந்த நான் இக்கல்லூரியின் பழைய மாணவன் என்பதையிட்டும், அக்காலத்தில் கடமையாற்றிய அதிபர் வி. அரியநாயகம் அவர்களையும், சைவப்புலவர் சு. செல்லத்துரை ஆசிரியர் அவர்களையும் மனக்கண்முன் கொண்டுவரும் வேளையில், ஒரு பழைய மாணவன் திரு. ச. சண்முகலிங்கம் அவர்கள் சித்திவிநாயகர் இந்து கனிஷ்ட கல்லூரிக்கு அதிபராக இருப்பதையிட்டும் பெருமையடைகின்றேன்.

அண்மைக்காலங்களிலே இக்கல்லூரியில் பல பெறுமதி மிக்க காத்திரமான பெற்றோர்களும், நலன்விரும்பிகளும் இணைந்துகொண்டனர். குறிப்பாக திரு. வே. விஸ்வலிங்கம் அவர்கள் உட்பட அபிவிருத்திச்சங்க நிர்வாக உறுப்பினர் அனைவரும் அயராது உழைத்து வருகின்றனர். அவர்களனைவரது பாதாரவிந்தங்களையும் மானசீகமாக வணங்கி, அவர்களது பணியினை வியந்து நிற்கின்றேன்.


இறுதியாக, இக்கல்லூரி சகல துறைகளிலும் வானுயர வளர்ந்து இப்பகுதி மாணவர்களுக்குப் பெரும்பயனளிக்கவேண்டுமென்றும், அதற்குக் கல்லூரியில் பயின்று பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களும், பயின்றுகொண்டிருக்கும் மாணவர்களும் என்றென்றும் துணையாக இருக்கவேண்டுமென்றும் இறைவனை வேண்டிநிற்கின்றேன்.

## பழைய மாணவர் சங்கச் செயலாளர்

### *நடராசா சரச்சந்திரன் அவர்கள்*

### *வழங்கிய*

# ஆசிச்செய்தி



இதமான கடற்காற்று இசைமீட்ட, முத்திசையும் கடல் நீர் சூழ்ந்து நிற்க, மக்களை வாழவைத்து இன்முகம் காட்டிநிற்கும் எம் மன்னார் மா நகரிலே எழுந்து நிற்கும் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி தன் வரலாற்றையும், நாற்பது வருடகால வளர்ச்சியையும் இயம்பி நிற்கின்றது.

எம் மன்னார் நகரில் உப்புக்குளம் என்ற பெயர் கொண்ட தொரு பகுதி உண்டு. அந்த இடத்தில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலயம், கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் என்ற மூத்தோர் வாக்கைப் போற்றுவதாக உருவாக்கப்பட்டது. கோயில் எவ்வளவு முக்கியமானதோ அதேபோல் கல்வியும் முக்கியமானது. இதனை உணர்ந்த மக்கள் தம் எதிர்காலச் சந்ததியினரின் நலன்கருதிச் சித்தி விநாயகர் ஆலயத்திற்கு அருக ாமையிலே நன்கொடையாகப் பெற்ற காணியொன்றிற் கல்லூரியை அமைத்தனர்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் அடியெடுத்துவைத்த இக்கல்லூரி இன்று வளர்ந்து எழில்பெற்றுத் தன் வளர்ச்சியை இயம்பி நிற்கின்றது. ஆரம்பத்திற் க.பொ.த.சா/தர வகுப்பு வரை சிறிய கட்டிடத்திற் சில ஆசிரியர்களுடன் தொடங்கிய கல்வி நிலையம் இன்று க.பொ.த. உயர்தரம் வரை வளர்ச்சி பெற்றுக் கலை, விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம் என்னுந் துறைகளிற் பயிற்றுவிக்கும் கல்விக்கூடமாக உயர்ந்து நிற்கின்றது.

கல்வித்துறையில் மட்டுமன்றி, விளையாட்டுத்துறை, கலைத்துறை ஆகியவற்றிலும் சிறப்புற்று விளங்குவது கண்டு பூரிப்பு அடையும் இந்நேரத்தில், ஆரம்ப நாட்களில் இக்கல்லூரிக்கு வித்திட்ட அந்த நல்லுள்ளங்களை நன்றியுடன் நோக்க மறக்கக்கூடாது.

கடமையே கண்ணாகக் கொண்ட அதிபர், கண்ணுக்கு ஒளியாக விளங்கும் ஆசிரியர் துணைபுரியும் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், பெரியோர்கள், பாடசாலை நலன் விரும்பிகள் இத்தனை துணை இருக்கும்போது இக்கல்லூரி சிறப்புப்பெறத் தடையுண்டோ! இன்று வெளிநாடுகளிலும், அரச திணைக்களங்களிலும், தனியார் துறைகளிலும் சிறப்புறப் பணிபுரியும் பழைய மாணவர்களின் உயர்வுகண்டு பூரித்து நிற்கும் இக்கல்லூரி தன் நாற்பதாவது ஆண்டு நிறைவில் மென்மேலும் வளர்ச்சி பெருகிட எல்லாம் வல்ல இறைவன் துணை வேண்டி ஆசி கூறுகின்றோம்.

உ
சிவமயம்

# திருக்கேதீச்சரப் பதிகம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்
பண் - நட்டராகம்

*திருச்சிற்றம்பலம்*

விருது குன்றமா மேருவி னாணரா
வாவன லெரியம்பாய்ப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே. (க)

பாடல் வீணையர் பலபல சரிதைய
ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற் கரையினி
லெழிறிகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே. (உ)

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையின
ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவ
ரகந்தொறு மிடுபிச்சைக்
குண்ண லாவதோ ரிச்சையி னுழல்பவ
ருயர்தரு மாதோட்டத்
தண்ண னண்ணுகே தீச்சர மடைபவர்க்
கருவினை யடையாவே. (ங)

பொடிகொண் மேனியர் புலிய தளரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொண் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடன் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம்
பரித்தசிந் தையராகி
முடிகள் சாய்ந்தடி பேணவல் லார்பதம்மேன்
மொய்த்தெழும் வினைபோமே. (ச)

நல்ல ராற்றவு ஞானநன் குடையர்தம்
மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
மலிகடன் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தைகே தீச்சர
மிராப்பக னினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழு
மன்பரா மடியாரே (ரு)

பேழை வார்சடைப் பெருந்திரு மகடனைப்
பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழின் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்கே
தீச்சரம் பிரியாரே. (சு)

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்
லுலகினி லுயிர் வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள் செய்கே
தீச்சர மதுதானே. (எ)

தென்னி லங்கையர் குலபதி மலைநலித்
தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட வடர்த்தவற் கருள் செய்த
தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு மடியவ ரிறைஞ்சுகே
தீச்சரத் துள்ளாரே. (அ)

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும்
புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் னடியிணை காண்கிலா
வித்தக மென்னாகும்
மாவும் பூகமுங் கதலியு நெருங்குமா
தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத்
திருத்தவெம் பெருமானே. (கூ)

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர்
புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய
வேழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட வுரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபாலாவியின் கரையிற்கே
தீச்சர மடைமின்னே. (க0)

மாடெ லாமண முரசெனக் கடலின
தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல்கே தீச்சரத்
தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொன்
னவின்றெழு பாமாலைப்
பாடலாயின பாடுமின் பக்தர்கள்
பரகதி பெறலாமே. (கக)

*திருச்சிற்றம்பலம்*

## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்
## பண் - நட்டபாடை

*திருச்சிற்றம்பலம்*

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்றிருக் கேதீச்சரத்தானே. (க)

சுடுவார்பொடி நீறுநல்ல துண்டப்பிறைக் கீளும்
கடமார் களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாயுறை கின்றான்றிருக் கேதீச்சரத் தானே. (உ)

அங்கம் மொழி யன்னாரவ ரமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ் செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்றிருக் கேதீச்சரத் தானே. (ஙு)

கரியகறைக் கண்டன்னல்ல கண்மேலொரு கண்ணான்
வரிய சிறை வண்டியாழ்செயு மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேற்
தெரியும்மறை வல்லான்றிருக் கேதீச்சரத் தானே. (ச)

அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரிற்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. (ரு)

வெய்யவினை யாயவடி யார்மேலொழித் தருளி
வையமலி கின்ற கடல் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்றிருக் கேதீச்சரத் தானே. (கூ)

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடன் மாதோட்டநன் னகரிற்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்றிருக் கேதீச்சரத் தானே. (எ)

அட்டன்னழ காகவரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவன் டாலும் பொழின் மாதோட்ட நன்னகரிற்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்னமை யாள்வான்றிருக் கேதீச் சரத்தானே. (அ)

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின் கனி தூங்கும் பொழின் மாதோட்ட நன் னகரிற்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே. (கூ)

கறையார் கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புக ழூரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ் சொல்லக் கூடாகொடு வினையே.

*திருச்சிற்றம்பலம்*

## சுந்தரர் தேவாரம் (திருநாட்டுத் தொகை)

*திருச்சிற்றம்பலம்*

ஈழநாட்டு மாதோட்டந் தென்னாட்டி ராமேச்சரஞ்
சோழ நாட்டுத் துருத்தி நெய்த்தானந் திருமலை
ஆழியூரன் நாட்டுக் கெல்லா மணியாகிய
வீழியில் லரனார்க் கிடங்கிள்ளி குடியதே.

*திருச்சிற்றம்பலம்*

## திருநாவுக்கரசர் தேவாரம்

*திருச்சிற்றம்பலம்*

பூதியணி பொன்னிறத்தர் பூண நூலர்
பொங்கரவர் சங்கரர் வெண்குழையோர் காதர்
கேதீச்சரமேவினார் கேதாரத்தார்
கெடில வடவதிகை வீரட்டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை யுய்யக் கொண்டார்
மழபாடிமேய மழுவாளனார்
வேதி குடியுள்ளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவினாரே.

*திருச்சிற்றம்பலம்*

## சேக்கிழார் பெரிய புராணம்

*திருச்சிற்றம்பலம்*

அந்நகரில் அமர்ந்தங் கண்இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச்சரத் தண்ணல் செய்யபாத
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்பரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகையுற்றார்.

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன் வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச்சரஞ் சார்ந்த
சொன்னமலர்மா லைகள்சாத்தித் தூரத்தே தொழுதெழுந்தார்.

*திருச்சிற்றம்பலம்*

# அதிபர்




திரு. ஏ. ஐ. தயானந்தராஜா. B. Com. (Hons) DiP. in. Ed.

## பிரதி அதிபர்




திருமதி P. தனேஸ்வரன்
(B.A (Hons) Dip. in. Ed

கனிஷ்ட கல்லூரி அதிபர்



திரு. ச. சண்முகலிங்கம் B. Sc (B.Ad) Dip. in. Ed

கனிஷ்ட கல்லூரிப் பிரதிஅதிபர்



திரு. எஸ். விஜயன் - ஆரம்ப பயிற்சி

# 1999ம் ஆண்டில் பாடசாலையின் ஆசிரியர் குழாம்



இருபவர்கள் இடமிருந்து வலம்:

திரு. ரி. ராமதாஸ், திரு. எஸ். சிறிதரன், திரு. கே. ஆர் கமலநாதன், திரு. ஆர். ஜெயமனோகரன், திரு. எம். இரவீந்திரன், திரு. எஸ். விஜயன் *(பிரதி அதிபர் கனிஷ்ட)* திரு. எஸ். சண்முகலிங்கம் *( கனிஷ்ட கல்லூரி அதிபர்)*, திரு. ஏ. ஐ. தயானந்தராஜா *(சிரேஷ்ட கல்லூரி அதிபர்)*, திருமதி பி. தனேஸ்வரன் *(பிரதி அதிபர் சிரேஷ்ட)* திருமதி எம். எஸ். எஸ். சொய்சா, திருமதி யூ. ஆனந்தராஜா, திருமதி. வை சண்முகநாதன், திருமதி பி. செல்வநாயகம்

முதல் வரிசையில் நிற்பவர்கள்
இடமிருந்து வலம்:

திருமதி பி. சிவபாதம், செல்வி எம். றீற்றா சுதேனி, திருமதி டி. சி. ஜி. டயஸ், திருமதி எம். ஜே. ஏ. லெம்பேட், செல்வி ஏ. பர்கானா, திருமதி எஸ். சிவபாலன், திருமதி எம். ஜே. கே. றெவல், திருமதி ஜே. ரி. ஆர். பிகிராடோ, திருமதி எம். எச். சடாச்சரலிங்கம், திருமதி எஸ். பவளநாதன், செல்வி ரி. சிந்தாத்துரை, திருமதி எஸ். பி. தேவராஜன், திருமதி. எம். சுப்பிரமணியம், செல்வி என். பாலேஸ்வரி.

இரண்டாம் வரிசையில் நிற்பவர்கள்
இடமிருந்து வலம்:

திருமதி. டி. ஆர். வலன்டீனா, செல்வி. எவ். சி. றொக்ஸி குரூஸ், திருமதி. என். பிரான்சிஸ் நொயலா, திரு. எஸ். ஜி. பிறேம்குமாரன், திரு. ஏ. சி. குணரட்ணம், திரு. ஏ. அருளானந்தன் கொடுத்தோர், திரு. எம். அருள்வதனன், திரு. எம். மகாலிங்கம், திரு. ஏ. ரஞ்சித்ராஜ். திரு.எஸ். ரமேஸ், செல்வி. எஸ். சத்தீஸ்வரி, திருமதி. ஏ. கியூ. ஜே. பெனாண்டோ, திருமதி. ஏ. எ.ஸ. எஸ் மகவுநிசா.

## கல்வி சாரா உத்தியோகத்தர்கள் உழியர்கள்



இடமிருந்து வலம் :செல்வி பி. விக்டோரியா, செல்வி. ஏ. எம். செலஸ்ரீன் கூஞ்ஞ, திருமதி ரி. சாள்ஸ் பென்லி, *(அதிபர் சிரேஷ்ட அதிபர்) ( அதிபர்கனிஷ்ட)*
திரு. எஸ். றெக்ஸ் அருள்நேசன், திரு. கே. இலக்குமார், திரு. ஜே. அருள்ரூபன் குரூஸ்.

## மன் / கௌரி அம்பாள் கனிஷ்ட வித்தியாலய அதிபர் ஆசிரியர்கள்



இடமிருந்து வலம் : திருமதி எச். ஈ. ஆர். ஈ. சோசை, திரு. ஏ. ஐ. தயானந்தராஜா *(சி. வி. இ. சி. க. அதிபர்)* திரு. கே. இரட்ணபூபாலன் *(அதிபர்)*
திரு. எஸ். சண்முகலிங்கம் *(சி. வி. இ.க. க. அதிபர்)*, செல்வி ஏ. ஜொய்ஸ் மக்டலின்.

# STAFF 1999

| | | | |
|---|---|---|---|
| 1. | Mr. A. I. Thayanantharajah | - | B.Com. (Hons) Dip. in. Ed. (Principal - Senior) |
| 2. | Mr. S. Shanmugalimgam | - | B.Sc. (B.Ad,) Dip. in . Ed. ( Principal - Junior) |
| 3. | Mrs. P. Thaneswaran | - | B.A. (Hons). Dip. in Ed. (Duputy Principal Senior) |
| 4. | Mr. S. Vijayan | - | Trained (Primary) Deputy Principal - Junior |
| 5. | Mrs. Mariyalilly Soysa | - | Trained (Home science) Sectional Head - Senior |
| 6. | Mrs. U. Anandarajah | - | Trianed (English) Sectional Head - Secondary |
| 7. | Mrs. S. Sivapalan | - | Trained (Primary) Sectioanl Head - Primary |
| 8. | Mrs. P. Sivapatham | - | Trained (Hindusium) |
| 9. | Mrs. M. J. K. Reval | - | Trained (Primary) |
| 10. | Mrs. M. J. A. Lambert | - | Trained (Primary) |
| 11. | Mr. M. Raveendran | - | B.A. (Dip. in. Edu.) |
| 12. | Mr. R. Jeyamanohar | - | B.Sc (P. F.T.) Dip . in. Edu |
| 13. | Mrs. S. Pavalanathan | - | B.Sc (Dip. in. Edu.) |
| 14. | Mrs. M. Subramaniyam | - | Trained (Maths) |
| 15. | Mrs. Y. Shanmuganathan | - | B.A (Hons.) |
| 16. | Miss N. Baleswary | - | Dip. in. Music |
| 17. | Miss S. Satheeswary | - | B.A . (Dip. in. Edu.) |
| 18. | Mrs. M. H. Sadacharalingam | - | Trained (Art) |
| 19. | Mr. S. Sritharan | - | M.Sc. (Chem.) Hons. |
| 20. | Mrs. Noyala Francis | - | B.Sc. |
| 21. | Mrs. D.R. Valanteena | - | B.A. (Hons.) |
| 22. | Mr. L. G. Premkumaran | - | Trained (Science) |
| 23. | Mr. K. R. Kamalanathan | - | Trained (Primary) |
| 24. | Miss M. Rita Sutheni | - | Trianed (Primary) |
| 25. | Mrs. P. Selvanayagam | - | Trained (Primary) |
| 26. | Mrs. J. C. G. Dias | - | Trained (Primary) |
| 27. | Mr. S. B. Thevarajan | - | Trained (English) |
| 28. | Mrs. A. S. S. Mahavuniza | - | Teacher Trainee |
| 29. | Mr. T. Ramadas | - | B.A. (Hons.) |
| 30. | Mr. A. Arulananthan Koduthor | - | B.Com. (Hons.) |
| 31. | Mrs. A. Q. J. Fernando | - | Trained (Commerce) |
| 32. | Miss. T. Sinathurai | - | Trained (Physical Edu.) |
| 33. | Mrs. C. I. Croos | - | B.Com. (Hons.) |

## PART TIME TEACHERS

| | | | |
|---|---|---|---|
| 1. | Mr. A. C. Gunaratnam | - | Trained (Wood work) |
| 2. | Mrs . M. L. A. Culas | - | B.A. (Dip. in. Ed.) |
| 3. | Mrs . J. T. R. Figarado | - | Trained (R.C.) |

## CONTRACT BASIC TEACHERS

| | | |
|---|---|---|
| Mr. A. Ranjithraj | - | English |

## VOLUNTEER TEACHERS

| | | | |
|---|---|---|---|
| 1. | Mr. M. Arulvathanan | | |
| 2. | Miss. S. Farhana | | |
| 3. | Mr. Y. Mahalingam | | |
| 4. | Miss. Roxy Florida Croos | - | B.Com. |
| 5. | Mr. S. Ramesh | | |
| 6. | Miss. J. A. Sumithra | | |

## NON ACCADAMIC STAFF

| | | | |
|---|---|---|---|
| 1. | Mr. S. Rex Arulnesan | - | Clerk |
| 2. | Mr. K. Elakumar | - | Cook |
| 3. | Miss P. Victoria | - | Cook |
| 4. | Mr. A. J. Arul Ruban Croos | - | Asst. Warden |
| 5. | Mrs. T. Charls | - | Lab Asst. |
| 6. | Miss S. A. M. S. Coonghe | - | Minor Employer |
| 7. | Miss A. M. C. Coonghe | - | Minor Employer |
| 8. | Mr. P. Nesaratnam | - | Library Development Officer |

# ஆசான் புகழ் வாழ்க!

அன்பை வளர்த்த எம் ஆசான்
பண்பையும் வளர்த்தான்
அறிவை வளர்த்த எம் ஆசான்
ஆற்றல்கள் பல அளித்தான்!

அன்னைக்கு அன்னையானான் எம் ஆசான்
அருளினை அள்ளி வழங்கினான்
பிதாவுக்கும் பிதாவானான் எம் ஆசான்
பிழைகள் யாவும் பொறுத்தருள்வான்!

சகல கலைகளையும் கற்பித்தான் எம் ஆசான்
சாந்தமாய் இன்மொழிகள் பகன்றான்
இறையருளை யாம் காண வைத்தான் எம் ஆசான்
இங்கிதமாய்ப் பழகி வந்தான்!

தம் அறிவை எமக்கீந்தான் எம் ஆசான்
தம் வாழ்வையெல்லாம் அர்ப்பணித்தான்
கல்வியைக் கண் போலக் காத்தளித்தான் எம் ஆசான்
கருணையின் வடிவ மானான்!

முன் பள்ளியிலே முயன்று கற்பித்தான் எம் ஆசான்
முளையிலே யாம் பாடசாலை சென்றடைந்தோம்
பயிரிலே பாடம் பல கற்றுத் தந்தான் எம் ஆசான்
பூவிலே உயர் வகுப்பை அடைந்தோம்!

காயிலே பல்கலைக் கழகம் சேர்த்து விட்டான் எம் ஆசான்
பழத்திலே பட்டம் பெறச் செய்தான் - இவர்
புகழைச் சொல்வதற்கோ எல்லை இல்லை
இறைவா எம் ஆசான் புகழ் வாழ்க! வாழ்க......

ஆக்கம்: ச. சுஜித்தா
தரம் - 8B

# அதிபரின் சிந்தனையிலிருந்து

ஆ. ஐ. தயானந்தராஜா
அதிபர்

மன்னார் வாழ் சைவ மக்களின் கல்வி, கலை, பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக்காக்கவென நல்லமனம் படைத்த பல பெரியோர்களின் எண்ணங்களால் 1959 ஆண்டு வைகாசித் திங்கள் 14 ஆம் நாள் உதயமாகியது எமது கல்லூரி.

நாயன்மார்களின் பாடல்பெற்று உலக, பிரசித்தியுடன் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கும் திருக்கேதீச்சரத் திருத்தலம் அமையப்பெற்ற மன்னார் மாவட்டத்திலே சைவ மக்களுக்கென ஒரு உயர் தரக் கல்லூரி அமைய வேண்டுமெனச் சிந்தித்துத் திருவானைக்கூடம் என்னும் திருப்பதியிற் சித்திவிநாயகப் பெருமானுக்கு அழகியதோர் ஆலயம் அமைத்து இவ்வாலயச் சூழலிலேயே எம்பெருமானின் பெயருடன் விளங்கவென இக்கல்லூரி அமைக்கக் காணியும் வழங்கிக் காலத்தால் அழியாத அருந்தொண்டாற்றியவர் உயர் திரு. குமரையா முத்துக்குமாரு எனும் பெருமகனாவர்.

சைவமக்களுக்கு ஒரு கல்லூரி வேண்டுமென்று அன்றே குரல் கொடுத்து மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி உருவாகக் காரணர்களாயிருந்தவர்களை இந்நேரத்தில் நன்றியுடன் நினைவு கூர வேண்டியது முக்கியமான வரலாற்றுக் கடமையாகும்.

ஆரம்பகாலம்

திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபையின் தலைவராயிருந்த சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன், உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. க. பரமநாதன், கச்சேரி ஓ. ஏ. யாயிருந்த திரு. துரையப்பா, மாவட்ட வைத்திய அதிகாரி திரு. வைத்தியலிங்கம், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. மு. சின்னத்தம்பி, பொது வேலைத் திணைக்களப் பிரதம விகிதர் இரகுநாதன், சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா கே. கே. வைத்தியலிங்கம், தொழிலதிபர் ம. கந்தசாமி, டாக்டர் க. சுப்பிரமணியம் ஆகியோரும் அவர்களைத் தொடர்ந்து பணியாற்றிய திருமதி மங்களேஸ்வரி, டாக்டர் பவளத்துரை, மாவட்ட நீதிபதி பரமகுரு, திரு.க. பத்மநாதன் ஆகியோருடன் உள்ளூர்ப் பிரமுகர்கள், திணைக்களத் தலைவர்கள் நன்றியுடன் குறிப்பிடப்பட வேண்டியவர்களாவர்.

1959 மே 14 இல் 160 மாணவர்களுடன் உருவாகிய இக்கல்லூரியைக் கொழும்பு சைவ மங்கையர் கழகம் தனது முகாமையில் பொறுப்பேற்று நடத்தியது. 1961.01.01 இல் அரசாங்கம் பொறுப்பேற்றது. ஆரம்ப கால அதிபராக உயர்ந்த கல்விமான் ச. வீரசிங்கம் அவர்கள் பணியாற்றிப் பாடசாலையை உறுதியுடன் வளர்த்தார். அவரைத் தொடர்ந்து திருமதி அன்னலட்சுமி மூர்த்தி அவர்களும் 1962.01.01 தொடக்கம் திரு.வி. அரியநாயகம் அவர்களும் அதிபர்களாகப் பணியாற்றினர். திரு. வி. அரியநாயகம் அவர்கள் அதிபராயிருந்த ஏழு ஆண்டுகள் கல்லூரியின் பொற்காலம் எனலாம். கல்லூரி சகல துறைகளிலும் உறுதியுடன் வளர்ந்து உத்தம மாணாக்கர்களை உருவாக்கிய காலம். அன்று உருவாக்கப்பட்ட மாணவர்கள் இன்று பழைய மாணவர்களாக நின்று கல்லூரியைக் கண்ணுங் கருத்துமாகக் கட்டித் காத்து வளர்த்து வருவது யாவரும் அறிந்ததே.

அக்காலத்தில் அவருடன் கடமையாற்றிய சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் அதிபர் திரு. அரியநாயகம் அவர்களின் கல்விச் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுத்து அரும்பணியாற்றியவர், சொல், செயல், சிந்தனை எல்லாம் மாணவர்களின் கல்வியே எனக் கருமமாற்றிய பண்பாளர் அவர். இவருடன் இணைந்து பணியாற்றிய திரு. நடராஜகுரு அவர்களும் கல்லூரியின் வளர்ச்சியிற் பெரும்பங்காற்றியவர். அக்காலத்திலே தான் கோயில் மடங்களில் விடுதிகளை அமைத்து மாணவர்களுக்குக் கல்வியையும் சைவத்தையும் சேர்த்து ஊட்டி வளர்த்தார்கள். இவர்களது சேவை கல்லூரி வரலாற்றிற் பொன் எழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டியது. திரு.சு.செல்லத்துரை அவர்களைப் பொறுப்பாசிரியராகக் கொண்டு உருவாக்கப்பட்ட சாரணர் இயக்கம் மன்னார் மாவட்டத்திற் பல பொதுப் பணிகளிற் சிறந்து விளங்கியதை இன்றும் அறியக் கூடியதாக இருக்கின்றது.

1961 ஆம் ஆண்டு கலைத் துறையிற் கால்பதித்த எமது கல்லூரி மாணவர்கள், சிலம்பின் செல்வி என்ற நாடகத்தை மேடையேற்றி அகில இலங்கை ரீதியில் முதற் பரிசில் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து அதிபர்களாக வந்தவர்களில் திரு. சண்முகரத்தினம், திருமதி. நல்லையா, திரு. கந்தையா, க. மகேசன் ஆகியோரும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு வித்திட்டதுடன், மன்னார் வாழ் சைவ மக்களின் கல்விப் பாரம்பரியத்தைக் கட்டிக்காத்து வளர்த்து வந்தனர். 1960 இன்

*1. பிச்சைபுக்கு ஆயினும் கற்றல் மிக இனிது*

பிற்பகுதியிலும் 1970 இன் முற்பகுதியிலும் இக்கல்லூரியின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க எழுச்சி காணப்பட்டமைக்கான சான்றுகள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

1976 இல் அதிபராகக் கடமையேற்ற திரு. என். ஜெயபாலசிங்கம் அவர்கள் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அதிக முயற்சிகளை மேற்கொண்டபோதும் மக்களிடையே எமது கல்லூரி, எமது சமூகம், எமது சமயம் என்ற விழிப்புணர்வு இன்மையால் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்ட முடியவில்லை.

மறுமலர்ச்சிக் காலம்

1987 இல் சைவம் வளர்த்த மாதோட்ட நன்னகரத்துச் சைவ மக்களுக்கு என்று உள்ள ஒரேயொரு பாடசாலை நலிவது கண்டு கவலை கொண்ட சித்தி விநாயகர் ஆலயத் தர்மகர்த்தா சபையினர், மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கத்தினர், கல்விப் பணிப்பாளராக இருந்த செல்வி.பி. ஆறுமுகம், பிரதித் திட்டமிடற் பணிப்பாளர் திரு. ரங்கராஜா, காலஞ்சென்ற உதவி உணவுக் கட்டுப் பாட்டதிகாரி திரு. நடேசபிள்ளை என்போரின் நன்முயற்சியின் காரணமாகக் கல்லூரி நிர்வாகத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. 1987 தொடக்கம் கல்லூரி புதுப்பொலிவு பெற ஆரம்பித்தது. இவ்வாண்டில் 125 மாணவர்களுடன் இயங்கிய இப்பாடசாலையின் மாணவர்தொகையை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் சைவ மக்களது வீடுகளுக்குச் செல்ல வேண்டிய நிலை உருவாகியது. இந்த எமது பணிக்கு எமது கல்விப்பணிப்பாளரும், பிரதி அதிபர் ம. குணரத்தினம் அவர்களும், பாடசாலையின் வளர்ச்சியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட எமது ஆசிரியரும், அன்றைய பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளருமான ஜனாப் எம். எச். இபுனுசுகூட் அவர்களும், பெற்றோர்களான திரு. கே. கதிர்காமநாதன், பேராளர் திரு. எஸ். சபாபதிப்பிள்ளை அவர்களும் சிரமம் பாராது கடமையாற்றியதன் விளைவாக 1988 இல் மாணவர் தொகை 400 என அதிகரித்தது.

கல்விப் பணிப்பாளர் செல்வி ப. ஆறுமுகம் அவர்கள் கல்லூரிக்குத் தேவையான ஆசிரிய வளத்தையும், பௌதீகவளத்தையும் அளித்தார். அத்துடன் மன்னார் கச்சேரியை, எனைய திணைக்களங்களை, அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோர் அவ்வப்போது தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கியதன் காரணமாகக் கல்வி நிலையில் மிகவும் பின்தங்கியிருந்த எமது மாணவர் 1987 இல் நடைபெற்ற க. பொ. த. (ச/த) பரீட்சையில் 06 விசேட சித்திகளையும் 02 திறமைச் சித்திகளையும் பெற்றுச் சித்தியெய்த முடிந்தது.

இக்காலத்தில் எமது கல்லூரியின் பிரதி அதிபராக இருந்த திரு. ம. குணரத்தினம், ஆசிரியர் ஜனப். எச். எம். இபுனுசுகூட் செல்வி கே.பிறேமலதா என்போரது தன்னிகரற்ற சேவையினால் எமது மாணவர்கள் கல்வி, பண்பாட்டுத் துறைகளிற் சிறந்து விளங்கினர். இக்காலத்தில் உருவாக்கப்பட்ட பழைய மாணவர் சங்கத்தில் துடிப்புள்ள இளைஞர்கள் பணியாற்றியமையினாற் பல தரப்பட்ட வளங்களிலும் மிகவும் குறைந்த நிலையில் இருந்த எமது கல்லூரி படிப்படியாக முன்னேற்றப் பாதையில் கால்பதிக்க ஆரம்பித்தது. உழைப்பு நல்கியவர்களுள் திரு. பெ. சிவபாலன், திரு. இ. கந்தகுமார், திரு. க. முருகானந்தன் என்போர் குறிப்பிடப்படக் கூடியவர்கள்.

1989 இல் எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் புனரமைப்புச் செய்யப்பட்டபோது அதன் செயலாளராக திரு. எஸ். பிருந்தாவனநாதன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த இறைபக்தியும், தரும சிந்தையும், வள்ளன்மையும் படைத்தவரான இவரது சேவையை எப்பொழுது எமது கல்லூரி பெறத் தொடங்கியதோ அன்றில் இருந்து பௌதீகவள விருத்தி அதிகரிக்கத் தொடங்கியது. பழைய கட்டங்களைத் திருத்தியமைத்தல், புதிய கட்டிடங்களை நிர்மாணித்தல், தளபாட உபகரண வசதிகள், காணி வளவிருத்திகள் என்பவற்றில் இவரது பங்கு மிக மிக உயர்ந்த நிலையில் இருந்து வருகின்றது. எதிர்காலத்தில் எழுதப்படும் போது இதனை ஓர் முன்னணிக் கல்லூரியாகக் கட்டியெழுப்பும் பணியிலே கல்லூரி நிர்வாகத்துடன் தோளோடு தோள்கொடுத்துழைத்த பெருமக்கள் சிலரது பெயர்களாற் சில பக்கங்கள் நிரப்பப்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும். அங்கே திரு. எஸ். பிருந்தாவனநாதன் என்ற பெயர் அதன் ஒவ்வொரு பக்கத்திலும் எழுதப்படவேண்டிய அளவுக்கு தவிர்க்க முடியாதவாறு இக்கல்லூரியின் ஒவ்வொரு பரிமாணத்திலும், ஒவ்வொரு பரிணாம வளர்ச்சிப் படியிலும் அதன் ஒவ்வொரு அணுவிலும், ஒவ்வொரு அசைவிலும் நீக்கமற நிறைந்து நிற்கும் என்பது இக்கல்லூரியின் கடந்த கால வரலாற்றைக் கவனித்து வருகின்ற அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளக் கூடிய தொரு உண்மையாகும். இக்கல்லூரியின் பிதாமகர் என்று அழைக்கப்படுமளவுக்குத் தன்னை அர்ப்பணித்த ஒருவராகத் திரு. எஸ். பிருந்தாவனநாதன் அவர்களைக் காண்கின்றேன். கல்லூரியின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் என்ற பதவிக்கும் அப்பாற்பட்டு இக்கல்லூரியின் ஒரு முழுநேர ஊழியனாக அவர் ஆற்றிவரும் பணிகளை நன்றி என்ற முன்றெழுத்துக்குள் சிறைப்படுத்திச் சிறுமைப்படுத்த நான் விரும்பவில்லை. இக்கல்லூரியின் சிறார்களை என்றும் தம் குழந்தைகளாகவே போற்றி ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி வருவதுடன்,

எமது சமூகத்தினதும் பேராளர்களினதும், கல்வித் திணைக்களத்தினதும் உயர்ந்த மதிப்பையும் பெற்றவர்.

இவரது சேவை இன்னும் பல்லாண்டு தொடர, அவருக்கு நல்ல தேக ஆரோக்கியத்தினையும், செல்வத்தையும், பூரண ஆயுளையும் வழங்க வேண்டுமென்று எல்லாம் வல்ல சித்திவிநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

எமது கல்லூரியின் கல்வி அபிவிருத்தி வரலாற்றில் அடுத்து முக்கியமாகக் குறிப்பிடக் கூடியவர், 1989 காலப் பகுதியிற் கல்விப் பணிப்பாளராக இருந்த இரா. சுந்தரலிங்கம் ஆவர். அவர்களுடைய காலத்திலேயே விஞ்ஞான ஆய்வுகூடமொன்று உருவாக அத்திவாரமிடப்பட்டது. எனினும் 1990 இல் ஏற்பட்ட இடப் பெயர்வின் காரணமாக எமது முயற்சிகள் தடைப்பட்டன. அக்காலப் பகுதியில் 580 மாணவர்களுடன் இயங்கிய எமது கல்லூரி இடம் பெயர்வின் காரணமாக 06 மாதங்கள்வரை தொடர்ந்து இயங்காமல் இருந்ததுடன், மாணவர் தொகையும் 210 ஆகக் குறைவடைந்தது. மீண்டும் 1991 இல் எமது கல்லூரியைக் கட்டியெழுப்பும் பணிகள் மிக மிக வேகமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டன. இதற்கேற்ற மன்னார் வாழ் சைவ மக்கள் மத்தியில் மீண்டும் பிரசாரம் செய்து வந்தமை, மன்னாரில் அமைந்த திருமுருகன், ஞானவைரவர் தேவஸ்தானங்களின் பங்கு எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு உரமாக அமைய வாய்ப்பளித்தது. இக்காலப்பகுதியில் திருவாளர்கள். வி. பி. மாணிக்கவாசகர், எஸ். பிருந்தாவனநாதன் ஆகியோரின் பங்களிப்பு மிகவும் காத்திரமானதாக இருந்தது. அத்துடன் கல்லூரியின் பிரதி அதிபர் திரு.ம. குணரத்தினம், ஆசிரியர்களான செல்வி. ஆர். ஜெயக்குமாரி, செல்வி. எஸ். பரமசிவம், செல்வி கே. பிறேமலதா, செல்வி ஆர். சிவகுமாரி என் போரதும், ஏனையோரதும் சேவைகள் போற்றுதற்குரியனவாகும்.

உயர்கல்வி வசதி

ஒரு மாணவன் தனது சமயச் சூழலிலே உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கைக் கருத்திற் கொண்டு 1991 ஆம் ஆண்டு க. பொ. த. உயர் தர கலை வர்த்தகப் பிரிவுகளை ஆரம்பிப்பதற்கு அப்போதைய கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களூடாக முயற்சிகள் எடுக்கப்பட்டன. அக்காலத்தில் அவர் யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டபோதும், அங்கிருந்து எமது தேவையை வடக்குக் கிழக்கு மாகாண சபைக்கு எடுத்துச் சென்று கலை வர்த்தகப் பிரிவுகளை நடத்துவதற்கான அனுமதியைப் பெற்றுத்தந்தார். 1991 ஆம் ஆண்டு உடனடியாக எமது கல்லூரியில் க. பொ. த. உயர் தர கலைப்பிரிவு செல்வி வசிதா கனகசபை என்ற மாணவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. இம்மாணவி 1993 இல் உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிப் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெற்றதுடன், வவுனியா கல்வியியற் கல்லூரிக்கும் தெரிவு செய்யப்பட்டார்.

1991 தொடக்கம் எமது கல்லூரி 1 சி பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டபோதும் மாணவர் தொகை அதிகரிப்பில் அதிக முன்னேற்றத்தைத் காண முடியவில்லை. 1992 ஆம் ஆண்டு 285 மாணவர்களையே கொண்டு இயங்கி வந்தது. இக்காலப் பகுதியில் மாணவர் தொகையை அதிகரிக்க ஒரு பாலர் பாடசாலையின் தேவை உணரப்பட்டது. இத் தேவையினை உணர்த்தி, ஆக்கபூர்வமான தொண்டாற்றியவர்களில் திரு. வி. பி. மாணிக்கவாசகர், திரு. எஸ். பிருந்தாவனநாதன், திரு. என். நாகேந்திரா ஆகியோர் மிக மிக முக்கிய மானவர்கள். அன்றைய பணியினால் உடனடியாக மழலைகள் பயிலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அவ்வழி வருடந்தோறும் சுமார் 60 மாணவர்களைத் தயார்ப்படுத்தி எமது கல்லூரியின் வகுப்பு ஒன்றில் அனுமதிக்கின்றோம்.

கல்விச் செயற்பாட்டில் எமது மாணவர்கள் சிறந்த அடைவினைப் பெற்று வருடாந்தம் மாவட்டத்தில் ஒரு உன்னத இடத்தைப் பெற்றுக் கொண்டபோதும், கலை பண்பாட்டுத்துறையில் எமது கல்லூரி 1990 க்கு முற்பட்ட காலங்களில் மிகவும் தாழ் நிலையிலேயே காணப்பட்டது. இக்காலத்திலேதான் எமது கல்லூரியின் பெற்றாரும், கலார்ப்பணா நாட்டியப் பள்ளியின் இயக்குநருமான திருமதி வசந்தி ஸ்ரீஸ்காந்தா அவர்களின் பணி எமது கல்லூரியின் கலை, பண்பாட்டுத்துறையில் மிகுந்த எழுச்சியை ஏற்படுத்தியது. பரதநாட்டிய நயத்தையும் மற்றும் பண்பாட்டு பரிணாமங்களையும் பேணிவளர்க்கும் ஒரே ஒரு கல்லூரி மன்னார் மாவட்டத்தில் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி தான் என்ற பெருமைக்கு வித்திட்டவர்கள் திரு. திருமதி. ஸ்ரீஸ்காந்தா என்றால் கலையுலகம் அதனைப் பெருமையுடன் ஏற்றுக் கொள்ளும்.

1993 இல் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்காக யாழ் பல்கலைக்கழகம் சென்றபோது பிரதி அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. எம். குணரத்தினம் அவர்கள் பதில் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது தலைமையிற் கல்லூரி அபிவிருத்திச் சங்கச் செயலாளர், திரு. வி. பி. மாணிக்கவாசகர் மற்றும் பெற்றோர்கள் பலர் கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து தமது பூரண ஒத்துழைப்பை நல்கி கல்லூரியை கட்டிக்காத்தனர்.

1993 இல் எமது கல்லூரியின் பழைய மாணவனும், 1998 இல் எமது கல்லூரியின் பிரதி அதிபரும், இன்று கனிஷ்ட கல்லூரியின் அதிபருமான திரு. எஸ். சண்முகலிங்கத்தின் வருகை எமது கல்லூரியின் வரலாற்றில் முக்கியமான நிகழ்வாகும். இவருடன் முன்னர் கற்பித்த ஆசிரியர்களுடன்

புதிதாக எமது கல்லூரியில் இணைந்து கொண்ட திருமதி. எம். எல். எஸ். சொய்சா, திருமதி. பீ. தனேஸ்வரன், திருமதி பீ. பீ. எம். வீ. லெம்பேட், திரு. எஸ். விஜயன், திரு. எல். எம். தர்மதாஸ், செல்வி எஸ். மகிழினி ஆகியோரது அதியுயர்ந்த சேவையின் காரணமாகக் கல்வித்துறை மேலும் வளர்சியடைந்து வந்தது. பௌதீக வளவிருத்தியிலும் 1993 இல் அதிபர் திரு. ம. குணரத்தினம் திரு. எஸ். சண்முகலிங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. எஸ். பிருந்தாவனநாதன், திரு. வி. பி. மாணிக்கவாசகர், பெற்றோர்கள் இணைந்து அன்றைய எமது மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் அவர்களுடன் தொடர்பு கொண்டு முயற்சித்ததன் பயனாக 60'X20' வகுப்பறைக் கட்டிடட்டம், கட்டினர். ஏற்கனவே முடிக்கப்படாதிருந்த விஞ்ஞான ஆய்வுக் கூடத்தினைக் கல்வித் திணைக்களத்தின் உதவியுடனும், யூஎன்எச்சீஆர் என்பவற்றின் உதவியுடன் 30'X20' நூலகத்தினையும் கட்டிமுடித்தனர்.

நாம் உயர் தர வகுப்புக்களை ஆரம்பித்தபோதும் 1994 வரை மாணவர்கள் அதிகரிப்பிற் பெருமளவு முன்னேற்றங்கள் ஏற்படவில்லை. 1995 ஆம் ஆண்டில் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் பதவியை ஏற்றுக் கொண்ட ஜனாப் ஏ. சீ. அப்துல் ஹக் அவர்களினது பூரணமான சேவை எமது கல்லூரியின் அபிவிருத்தி வரலாற்றில் ஒளிமயமான எதிர்காலத்தைத் தோற்றுவிக்கக் காரணமாக அமைந்தது. 1995 இன் நடுப்பகுதியில் இருந்து அவரது அயராத முயற்சியினாலும், எமது கல்லூரி அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ். பிருந்தாவனநாதன், திரு. வி. பி. மாணிக்கவாசகர், மேலதிக அரசாங்க அதிபர் திரு. வே. விஸ்வலிங்கம், பொறியியலாளர்கள் திரு. எஸ். எஸ். இராமகிருஷ்ணன், திரு. எஸ். மதியாபரணம், ஹட்டன் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு. சி. ஜெகராஜா, கணக்காளர் திரு. எஸ். யூ. சந்திரகுமாரன், கணக்காய்வாளர் திரு. எஸ். கனகசிங்கம் ஆகியோருடன் பல பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரது முயற்சியின் காரணமாக அபிவிருத்திப் பணிகள் மிகவேகமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

### ம்ாணவர் விடுதி

எமது கல்லூரியின் புகழ் மாவட்டம் முழுவதும் பல்கிப் பெருகியது. தூர இடங்களில் இருந்து வரும் பிள்ளைகள் கல்விபயில வசதியாக எமது கல்லூரிக்கென் அரச அனுமதியுடன் விடுதி ஒன்றை உருவாக்க முயன்ற வேளையில் தானே இம்முயற்சியை முன்னெடுத்துச் சென்று, அனுமதியையும் பெற்றுத் தந்து எமது மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப். ஏ. சி. அப்துல்ஹக் அவர்கள் 26.06.96 அன்று ஆண்கள் விடுதியை ஆரம்பித்தும் வைத்தார். தனியார் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது மாணவர் விடுதிக் கட்டிடத்தை எமக்குத் தற்காலிகமாக வாடகைக்குத் தந்துவிய டாக்டர் எச். பி. ஹாபி அவர்களையும் வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்கு உதவியளித்த ஜனாப். லாபீர் அவர்களையும் நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றேன்.

விடுதி ஆரம்பிக்கப்பட்டபோது நிதிநெருக்கடி பெரும் பிரச்சினையாக இருந்த வேளையில் நெருக்கடிக்கு முகம் கொடுத்து விடுதியைச் சிறப்பாக நடத்துவதற்கு உதவிய திரு. எஸ். மதியாபரணம், வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளர் திரு. எஸ். சிவநாதன், கனடாவில் வசிக்கும் திருமதி சகுந்தலா மகேந்திரராஜா, செல்வம் பிறதர்ஸ் உரிமையாளர் திரு. வி. செல்வரட்ணம் அவர்களது சேவையினால் விடுதி இன்றுவரை சிறப்பாக இயங்கி வருகின்றது.

### நம்பிக்கை மழலைகள் பயிலகம்

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்பட்டுவந்த நம்பிக்கை மழலைகள் பயிலகம் 1996 ஆம் ஆண்டில் இடம் சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இடமாற்றம் செய்யப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இம்முயற்சிக்கு மன்னார் நகரத்திலுள்ள காணி ஒன்று தெரிவு செய்யப்பட்டது. அக்காணிக்கும் கட்டிடத்தை நிர் மாணிப்பதற்கும் பெருந்தொகைப்பணம் தேவைப்பட்டது. இந்த முயற்சிக்கு அன்று பேரளவு உதவிபுரிந்து, இன்று எமது கல்லூரியின் அனைத்து வளர்ச்சிப் பரிமாணங்களிலும் தனது இடத்தைப் பதித்து வருபவர் திரு. எஸ். எஸ். இராம கிருஷ்ணன் அவர்கள் திரு. சி. ஜெகராஜா, டாக்டர் எஸ். அரசகோன், சபா. மனோகர சர்மா, சர்வோதய மாவட்ட இணைப்பாளராகக் கடமையாற்றிய திரு. வி. நடராசா, திரு. கே. குணநாதன் ஆகியோரது சேவையும் என்றும் போற்றுதற்குரியதாகும்.

எமது பெருமதிப்பிற்குரியவரும் பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் தமது மைந்தனை எமது கல்லூரியில் இணைத்து, தயங்கிய பெற்றோருக்கு முன்னுதாரணம் காட்டியவரும், அரச சார்பற்ற நிறுவனங்கள் மன்னாருக்கு வருகை தருகின்ற போதெல்லாம் எமது கல்லூரியின் பற்றாக் குறைகளையும் தேவைகளையும் சுட்டிக்காட்டிக் கல்லூரிக்குத் தேவையானவற்றைப் பெற்றுத்தருவதில் வல்லமை படைத்தவரும், மேலதிக அரசாங்க அதிபருமான திரு. வே. விஸ்வலிங்கம் அவர்களால் 10.06.96 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு 1996 ஆம் ஆண்டு விஜயதசமி அன்று கல்விப் பணிப்பாளர் ஜனாப். ஏ. சி. அப்துல்ஹக் அவர்களினால் திறப்பு விழா செய்யப்பட்டு நம்பிக்கை மழலைகள் பயிலகம் இயங்கத் தொடங்கியது.

### மாடிக் காட்டிடம்

மாடிக் கட்டிடங்களுடன் எமது கல்வி நிலையம் பொலிவுற அமைய வேண்டுமென்ற எண்ணங் கொண்டு அதற்கான நிதியையும் பெற்று, கலை அம்சங்களுடன் கட்டுவதற்கான அனுமதியையும் பெற்று கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஏ. சி. அப்துல்ஹக் அவர்கள் தந்தார். மேலும் புதுப்பொலிவுடன் கட்டிடம் அமைய அவ்வப்போது ஆலோசனைகளை வழங்கியுதவிய திரு. எஸ். எஸ். இராமகிருஷ்ணன், திரு. வி. பி. மாணிக்கவாசகர், திரு. எஸ். மதியாபரணம், கல்லூரிக் கட்டிடப் பரிசோதகர் திரு. எப். தேவநாயகம், தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. நிலோஜன், திரு. எஸ். பிருந்தாவனநாதன் அவர்களின் தொழில்நுட்ப திறனின் காரணமாக இன்று எமது கல்லூரி மிகவும் அழகான மாடிக் கட்டித்தைத் தன்னகத்தே கொண்டு சிறந்து விளங்குகின்றது.

### கணித விஞ்ஞான உயர்கல்வி

எமது கல்லூரியை கல்வித் தர ரீதியாகவும் பௌதீகவள ரீதியாகவும் உயர்த்த வேண்டுமென்ற பேரார்வம் கொண்டு எமது கல்லூரி அபிவிருத்திச் செயற்பாடுகளில் என்றும் தமது ஆதரவையும் அனுமதியையும் தந்து எம்மை மேல் நிலைப்படுத்துவதில் அயராது உழைத்து வருபவர் மாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள், விளை யாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள் ஆவார். இவர் இதுவரை காலமும் எமது கல்லூரிக்கு ஆற்றிய சேவைகளுக்கு மகுடம் வைத்தாற் போல் அமைந்தது எமது கல்லூரியை 1 ஏபி கல்லூரியாக தரம் உயர்த்தியதேயாகும். அத்தரமுயர்த்தலினூடாக 05.06.97 அன்று கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஏ. சீ.அப்துல்ஹக் அவர்களால் புதிய உயர்தர கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. கல்விப் பணிப்பாளருடன் இணைந்து என்றும் எமது அபிவிருத்திப் பணிகளுக்குத் தனது பூரண ஆதரவினையும், ஒத்துழைப்புக்களையும், சிறந்த ஆலோசனைகளையும் வழங்கி எமது கல்லூரியை மாவட்டத்தில் உயர்த்திய பெருமையில் அன்று மன்னார் மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்து இன்று மடு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருக்கும் திரு. எம். ஏ. றெவ்வல் அவர்களுக்கும் பெரும் பங்குண்டு என்றால் அது மிகையாகாது. இக்காலப் பகுதியில் விஞ்ஞான, கணித பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவென தாமாகவே முன்வந்து தொண்டரடிப்படையில் கடமையாற்ற இணைந்து கொண்ட திரு. எஸ். ஸ்ரீதரன், திரு. எம். அருள்வதனன், செல்வி யூ. வத்சலா, திரு. ஏ. தேவானந்த் அவர்களையும் நினைத்துப் பார்ப்பதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன். மேலும் இச்சந்தர்ப்பத்தில் கல்வி விருத்தி பற்றி குறிப்பிட வேண்டியது மிகவும் அவசியம் என கருதுகின்றேன்.

### உயர்கல்விச் சாதனைகள்

1994 ஆம் ஆண்டு க. பொ. த உ/தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் தோற்றிய செல்வன் கா. கணேசலிங்கம் அவர்கள் எமது கல்லூரியில் இருந்து முதன் முதலாகப் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பைப் பெற்றார்.

1995 ஆம் ஆண்டு க. பொ. த. உ/தரப் பரீட்சையில் வணிகப் பிரிவில் சித்தியெய்திய செல்வி இ. ஜெயக்குமாரி அவர்கள் மாவட்டத்திலேயே இரண்டாம் இடத்தைப் பெற்றதுடன், செல்வி வி. ஜமேலாதேவியும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற முதலாவது வணிகப் பிரிவு மாணவர்கள் என்ற பெருமையையும் பெறுகின்றனர். தொடர்ந்து 96 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் செல்வன் கனகசபாபதி கௌரீசன் 4 "ஏ" சித்திகளைப் பெற்று மன்னார் மாவட்ட வரலாற்றிலே சாதனை படைத்ததுடன், வட கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளரினால் கல்லூரி விழாவில் தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌவிக்கப்பட்டார். அவ்வருடம் தோற்றிய மாணவர்களில் கல்லூரியின் ஆரம்பகாலம் தொட்டே கல்லூரியில் பயின்றவரும், கல்லூரியின் பழைய மாணவரும், கல்லூரியின் அனைத்து நடவடிக்கைகளிலும் தம்மை இணைத்துக் கொள்பவருமாகிய திரு. கதிரமலை அவர்களின் புதல்வர்கள் ஜெயகாந்தன், துளசிகுமாரி ஆகியோருடன் லோகநாதன் மகாச்சித்ரா ஆகியோரும் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் செல்வி சிவலிங்கம் கேதீஸ்வரி பல்கலைக்கழக கல்லூரியில் டிப்ளோமா பட்டத்துக்கு பின்னர் பட்டதாரியாகும் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

1997 ஆம் ஆண்டு மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய செல்வி தர்மலிங்கம் அனுஷா அவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம் பெற்றதுடன், இராஜகோபால் சௌந்தரகலாவும் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற மேற்படி பரீட்சையில் எமது கல்லூரியைச் சேர்ந்த செல்வன் சிவப்பிரகாசம் சிவகரன், செல்விகள் ஸ்ரீஸ்கந்தா பிரதீபா, மரியதாஸ் தயாநிதி, சந்தியோகு அலன்ரீனா, செல்வன் எட்வேட் இராஜநாயகம், அன்ரன் இருதயதாஸ், செல்விகள் முருகேசு மாதவி, தர்மலிங்கம் பிரதீபா, வில்வராஜா தர்ஷினி, செல்வன் செல்லத்துரை ஜெகனேந்திரன், இராமசாமி சித்திராதேவி ஆகியோர் முறையே மாவட்ட மட்டத்தில் 1ம், 2ம், 4ம், 7ம், 9ம், 10ம், 11ம், 11ம், 12ம், 14ம் இடங்களைப் பெற்று அனுமதியைப் பெற்றுக் கொள்ள இருக்கின்றனர்.

1993 இல் ஒரு மாணவி மட்டும் தோற்றிய மேற்படி பரீட்சையில் 1999 ஆம் ஆண்டு எல்லாப் பிரிவுகளிலும் 89 மாணவர்கள் தோற்றுகின்றார்கள். இது கல்வி உலகம் எமது

கல்லூரி மேல் கொண்டிருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடாகும்.

### பொதுக் கல்விச் சாதனைகள்

க. பொ. த. (சா / தர) பரீட்சையைப் பொறுத்தவரையில் முழுமையான பெறுபேறுகள் இந்நூலின் பிற்பகுதியில் இணைக்கப்பட்டாலும் உதாரணங்கட்கான இரண்டு வருட பெறுபேறுகளை இங்கு கோடிட்டுக் காட்டுவது பொருத்த மானது என நினைக்கின்றேன். 1995 ஆம் ஆண்டில் இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் செல்வி ஸ்ரீஸ்காந்தா பிரதீபா 5 விசேட சித்திகளையும் 3 திறமைச் சித்திகளையும் பெற்று மாவட்ட மட்டத்தில்முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளதுடன் மாவட்டத்தில் முதலிடம் பெற்றவர்களுக்கென கொழும்பு மக்கள் வங்கி தலைமைச் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழாவில் பாராட்டப்பட்டதுடன், புலமைப்பரிசிலும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து 1996 இல் மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய செல்வன் ராஜா தணிகாசலம் திலீபன் 06 விசேட சித்திகளையும் 2 திறமைச் சித்திகளையும் பெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்று எமது கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர். 1993 இல் 25 மாணவர்கள் தோற்றிய மேற்படி பரீட்சையில் 1998 இல் 134 மாணவர்கள் தோற்றியுள்ளனர்.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில் மிக உரமான அத்திவாரம் இடப்பட்டுள்ளது. இந்த வகையில் எமது மாணவர்கள் மாவட்ட ரீதியில் சாதனை படைத்துள்ளார்கள். 1993 இல் செல்வன் சோமசுந்தரம் கெங்காதரன் 152 புள்ளிகளைப் பெற்று மன்னார் மாவட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றுள்ளான். அதேபோல 1997 இல் மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய செல்வன் மாணிக்கவாசகர் சரண்ராஜ் 139 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

### ஆசிரிய மணிகள்

ஒரு கல்லூரியின் உயர்வுக்கு உண்மையான உழைப் பாளிகள் ஆசிரியர்களேயாவார். எமது ஆசிரியர்களின் தியாக சேவையும், பற்றுறுதியும் எனது பாடசாலை எனது பிள்ளைகள் என்னும் ஓயாத ஆர்வமும் பிள்ளைகளின் செயற்பாட்டினூடாக தாம் திருப்தியடையும் செயல் வீரமும் எமது கல்லூரியைப் பல துறைகளிலும் மேன்மை அடையவைத்தன. எமது கல்விப் பெறுபேறுகளுக்கும் மற்றும் கலை பண்பாட்டு, விளையாட்டுச் சாதனைகளுக்கும் சிறந்த ஒழுக்கத்திற்கும் காரணமாக இருந்து கல்லூரியை வழிநடத்திச் செல்கின்ற ஆசிரியப் பெருமக்களை இவ்விடத்தில் மிகுந்த நன்றியுடன் நினைத்துப் பார்ப்பது மிகப் பொருத்தமானது என நினைக்கின்றேன்.

பிரதி அதிபராக இருந்து இன்று அதிபராகக் கனிஷ்ட கல்லூரிக்குப் பொறுப்பாக இருப்பவரும், பழைய மாணவருமான திரு. எஸ். சண்முகலிங்கம் எதற்கும் ஈடுகொடுத்து கல்லூரியின் அனைத்துத் துறைகளிலும் பங்களிப்பு செய்வதுடன், கணக்கியல் பாடத்தில் சிறந்த கற்பித்தலையும் மேற்கொண்டு, அவற்றினூடாக சாதனை படைப்பவர். கல்லூரி நிர்வாகத்தில் நல்ல ஆலோசகனாகவும் கல்லூரியை வளர்ச்சிப்படிகளில் இட்டுச் செல்வதற்கு நல்லதோர் வழிகாட்டியாகவும் நித்தம் தொழிற்படுபவர். இவரது வருகையினால் எமது கல்லூரி அடைந்து வருகின்ற நன்மைகள் அளப்பரியன. எமது கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபை எமது கல்லூரிக்கான கட்டடப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. செயற்பாடுகளுக்குச் செயலாளர் என்றால் நிதி நடவடிக்கைகளுக்கு பொருளாளர் திரு. ச. சண்முகலிங்கம். கல்லூரியின் அநேக நிதி நடவடிக்கைகளைச் சிறந்த நிதி முகாமைத்துவத்தினூடாகச் செயற்படுத்துபவர். இவர் நிதியைத் தேடுபவரேயன்றி, செலவு செய்பவர் அல்ல. எமது கல்லூரியின் அதிபர் என்ற வகையில் என்னுடைய இரு கண்களாக இருப்பவர்கள் ஒருவர் செயலாளர் சு. பிருந்தாவனநாதன், மற்றவர் பொருளாளர் ச. சண்முகலிங்கம் ஆவார். அவரது சேவை எமது கல்லூரியில் என்றும் நிலைத்து நிற்கும் என்பது திண்ணம். உயர் தர வகுப்புக்குப் பிரிவுத் தலைவராகவும், இன்று சிரேஷ்ட கல்லூரிக்கு பிரதி அதிபராகவும் கடமையாற்றிக் கொண்டிருக்கும் திருமதி பீ. தனேஸ்வரன் சிறந்த அறிவாற்றலும் நுட்பமான திறமைகளும் கொண்டவர். தனது பாடசாலை நேரத்துக்கு மேலதிகமான நேரங்களிலும் மாணவர்களின் கல்வி விருத்திக்காக ஓயாது உழைப்பவர். இதுவரை காலமும் இவர் கற்பித்த புவியியல் பாடத்தில் எந்த வருடத்திலும் 100% பெறுபேற்றை பெறத் தவறிவிடவில்லை. மன்னார் மாவட்டத்தில் மிகச்சிறந்த புவியியல் ஆசிரியர் எனப் பெயர்பெற்ற இவர்தனது திறமையினால் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் சாதனை படைத்தவர். ஒழுக்கம் தவறும் மாணவர்களுக்கு இவர் சிம்மசொப்பனம். சிறந்த நிர்வாகத் திறன்கொண்ட எமது பிரதி அதிபரின் செயற்பாடுகளினால் எமது கல்லூரி சிறந்து விளங்குகின்றது.

இடை நிலைப்பிரிவுக்குப் பகுதித் தலைவராகக் கடமையாற்றும் திருமதி எம். எல். எஸ். சொய்சா தனது பாடத்துடன் மேலதிகமாக தமிழ்ப் பாடத்தைக் கற்பித்து என்றும் க. பொ. த. சா / தர மாணவர்களின் பெறுபேறுகளில் 100% மான வெற்றியையே சாதனையாகத் தருபவர். அத்துடன் சிறந்த நிர்வாகியான இவர் எந்தப் பொறுப்பைக் கொடுத்தாலும் முகமலர்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு

கடமையாற்றும் பண்புள்ளம் கொண்டவராவார் பாடசாலைகளில் நடைபெறும் முக்கிய விழாக்களில் முக்கிய பங்கேற்றுத் திறம்பட நடாத்தி முடிக்கும் வல்லமை பொருந்திய இவரது செயற்பாட்டின் காரணமாக எமது கல்லூரி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுவருகின்றது.

ஆரம்ப பிரிவுக்கு உறுதியான தளமிட்டு, அப்பிரிவை வழிநடத்திச் செல்லும் ஆரம்பப் பிரிவு தலைவரும், இன்று கனிஷ்ட கல்லூரியின் பிரதி அதிபருமான திரு. எஸ். விஜயன் அவர்களின் வருகையினால் எமது கல்லூரியின் புலமைப்பரிசில் துறை புத்துயிர் பெற்றது. சிறந்த இரக்க சிந்தனையும், கடமையுணர்வும் கொண்ட இவரது சேவையினால் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் உயர்ந்த நன்மையை அடைந்து வருகின்றனர். மன்னார் மாவட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார் செய்யும் ஆசிரியர்களில் இவருக்கு என்று ஒரு தனியான இடம் உண்டு. இவரது சேவையினாலும் எமது கல்லூரி உயர்வடைகின்றது.

இன்று கனிஷ்ட கல்லூரிக்குப் பகுதித்தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் திருமதி. யூ. ஆனந்தராஜா கல்லூரியின் நிர்வாக நடவடிக்கைகளில் பெரிதும் பங்காற்றுபவர். கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களின் ஒழுக்கம் என்னும் விடயத்தில் கண்ணும் கருத்துமாய் இருப்பவர். ஒப்படைக்கும் பணிகளைக் கனகச்சிதமாகச் செய்து முடிக்கும் திறமைசாலி. ஆங்கில தினப் போட்டிகளில் மாணர்களைச் சிரமம் பாராது நெறிப் படுத்துவதன்மூலம் கல்லூரி கோட்ட, மாவட்ட, மாகாண மட்டத்தில் பல பரிசுகளைப் பெற்றுள்ளதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

இவர்களது ஒப்பற்ற பணியுடன் தம்முடைய தன்னலம் கருதாத அளப்பரிய சேவையினை அள்ளி வழங்கி கல்லூரியைச் சகல துறைகளிலும் வளர்த்தெடுக்கும் ஆசிரிய மாமணிகளின் கடமையுணர்வையும் நினைத்துப் பார்ப்பதில் உள்ளத்தில் உவகை பொங்குகின்றது.

ஆரம்பப் பிரிவு மழலைகளை அரவணைத்து, பாசத்துடன் கல்வி புகட்டும் ஆசிரியர்களாக திருமதி எஸ். சிவபாலன், திருமதி எம். ஜே. கே. றெவல், திருமதி டீ. சி ஜி. டயஸ், திருமதி பீ. செல்வநாயகம், செல்வி ஏ. பர்ஹானா, திருமதி மாற்றிறாசுதேனி, திருமதி எம். ஜே. ஏ. லெம்பேட், செல்வி ஏ.மகவுநிஷா திருமதி பீ. சிவபாதம் ஆகியோரின் அளப்பரிய சேவை ஆரம்பக் கல்வி விருத்திக்கு ஆதாரமானவை.

இடைநிலைப் பிரிவு ஆசிரியர்களாக இருந்து ஈடிணையற்ற சேவையை நல்கிவரும் ஆசிரிய திலகங்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பது மிகப் பொருத்தமானதாகும்.

தமிழ் மணம் கமழச் செய்யும் செல்வி எஸ். சத்தீஸ்வரி, எஸ். ரமேஸ், ஆங்கிலக் கல்வியை ஆழமாகக் கற்பிக்கும் திருமதி எஸ். பி. தேவராஜன், அறிவியல் ஆசான்கள் எல். ஜீ. பிறேமகுமாரன், என். மகாலிங்கம், கணிதத்தை கண்ணெனக் கற்பிக்கும் திருமதி எம். சுப்பிரமணியம், திருமதி. எம். ஜே. கியூ. பெர்ணாண்டோ, சமூகத்தில் மாணவர்கள் அறிந்து தெரிந்து கொள்ள வேண்டிய சமூகக் கல்வியை அள்ளி வழங்கும் அன்னை திருமதி வை. சண்முகநாதன், நாடக கலா வித்தகர் கே. ஆர். கமலநாதன், சித்திரக் கலையின் பெருமையை உணர்த்தும் திருமதி எம்.எச். சடாச்சரலிங்கம், உடற்கல்வித் தொழிற்பாட்டிற்குத் துடிப்பான செல்வி ரீ. சிந்தாத்துரை, பகுதி நேரமாயினும் பற்றுடனும், பொறுப்புடனும் சேவை யாற்றும் ஏ. சீ. குணரத்தினம், திருமதி ஜே. ரீ. ஆர். பிகிறாடோ, ஒப்பந்த அடிப்படையிலும் உயர் சேவையாற்றும் ஆங்கில ஆசிரியர் ரஞ்சித்ராஜ் இவர்களது சேவையினால் எமது கல்லூரி நிமிர்ந்து நிற்கின்றது.

உயர் நிலைப் பிரிவில் ஒப்புயர்வில்லாச் சேவையாற்றிவரும் அறிவு ஆசான்களை நினைக்கும்போது மிகவும் பெருமிதம் அடைகின்றேன். மாணவர் விடுதியையும், மாணவர் ஒழுக்கத்தையும் தன்னிரு கண்களாகப் போற்றி வழிநடாத்தும் புதுமை விரும்பி, உயர் பிரிவு பகுதித் தலைவர், அளவற்ற பாடங்கள், பாடவேலைகள், பாடசாலைப் பணிகள் எதுவாயினும் கலங்காமல் செய்யும் கண்டிப்பான ஆசான் திரு. எம். இரவீந்திரன். மன்றங்கள் என்றால் மனோகரன் என்று செல்லமாக அழைக்கும் திரு. ஆர். ஜெயமனோகர். இவர் தனது கற்பித்தல் பணியுடன் பாடசலையின் சமூகம், மற்றும் பரீட்சை சார்ந்த கடமைகளில் தலைமையேற்கும், எமது கல்லூரியின் பழைய மாணவனும் ஆவார்.

கல்லும் கசிந்துருகப் பாடும் பாட்டுக்கொரு இசை ஞானி செல்வி என். பாலேஸ்வரி. கல்லூரியின் கலைத் துறை வளர்ச்சிக்கு உரமிட்டு இன்று மாவட்டத்தில் தனக்கென ஒரு இடத்தையும், பெரும்புகழையும் தேடி பாடசாலையைக் கலைத் துறையின் உச்சிக்கு கொண்டு சென்று கலை பண்பாட்டுத் துறைகளில் கல்லூரி வானம்வரை எட்ட வழி செய்த பரதக் கலை வித்தகர் திரு. ரீ. ராமதாஸ், நாடகம் அரங்கியலை நன்றாகக் கற்பிக்கும் திருமதி டரன்ஸ்ரஞ்சன் ஆகியோருடன் அகில உலகத்தின் அரசியல் நிலையை ஆழமாக எடுத்துக்கூறும் திருமதி எம். எல். ஏ. குலாஸ், கணக்கீட்டுப் பாடத்தினை துல்லியமாகவும் இலகுவாகவும் எடுத்தியம்பும் திரு. ஏ. அருளானந்தம் ஆகியோருடன், விஞ்ஞானப் பிரிவை உருவாக்கி ஏற்றமிகு சேவை செய்துவரும் திரு. எஸ். ஸ்ரீதரன், விஞ்ஞானம், இரசாயனவியல் பாடங்களில் சிறந்த ஆசானாக இருப்பதால் இம்மாவட்டமே புகழ் பெறுகின்றது. நேர்மையின்

சின்னம், நியாயத்தின் இருப்பிடமாகக் காணப்படுபவரும், இரசாயனவியல், தூய கணித பாடங்களை தூய்மையாகக் கற்பிப்பவருமான திருமதி எஸ். பவளநாதன், கல்லூரியின் ஆசிரியர் மாணவர்களுக்கு பிரியமான நோயலா பிரான்சிஸ் எல்லாப் பாடத்தையும் எப்பொழுது யார் கேட்பினும் ஐயந்திரிபின்றிக் கற்பிக்கும் ஆசிரியை. விவசாய, விஞ்ஞானமா, விலங்கியலா, தாவரவியலா, உயிரியலா எதற்கும் என்றும் தயாராக உள்ள தன்னிகரில்லா ஆசிரியை ஆவார். எம். அருள்வதனன். அவன் அமைதியின் பிறப்பிடம். அவர் கற்பிக்கும் பிரயோக கணிதம், இணைந்த கணிதம் என்பவற்றை மாணவர்கட்குச் சந்தேகமின்றிக் கற்பிக்கும் தொண்டர். கிறிஸ்தவ பர்டத்தைக் கற்பிக்கும், சமயவழி மாணவர்களை நெறிப்படுத்தும் செல்வி எப். ஆர். எப். குரூஸ் ஆகியோரின் இணையில்லாச் சேவையினால் கல்லூரியின் கல்வித் தரம் விரைவாக வளர்ந்து வருகின்றது.

எமது மன்னார் இந்துவை இம்மாவட்டத்தில் விளையாட்டுத் துறையில் உயர்த்திய மாபெரும் பணி திரு. எஸ். றெக்ஸ் அருள் நேசனுக்கு உண்டு. அவரது வருகையின் பின்னர் எமது கல்லூரி மாணவர்கள் கோட்டம், மாவட்டம், மாகாணம் அகில இலங்கை எல்லா மட்டங்களிலும் புகழ்தேடி நீண்டதோர் வரலாற்றை உருவாக்கியவர் இவர். அத்துடன் பாடசாலையின் அனைத்துக் கடமைகளிலும் இரவு பகலாக தொண்டாற்றிவரும் இவரது சேவை எமது கல்விச் சமூகத்தின் இதயங்களில் என்றும் நிலையாக இருக்கும்.

எமது கல்லூரியின் சிறப்புக்குச் சேவைசெய்துவரும் கல்வி சாராத உத்தியோகத்தர்களினது சேவைகளும் மிகவும் போற்றுதற்குரியதாகும். இந்தவகையில் விடுதி உதவிக் காப்பாளர் திரு. ஜ. ரூபன்குரூஸ், விடுதி உதவியாளர்கள் திரு. கு. இலக்குமார், செல்வி பீ. விக்டோறியா மற்றும் கல்லூரியில் கடமையாற்றும் செல்வி ஏ. எம். ஆர். கூஞ்ஞ, செல்வி அன்கலெட் பபியானி கூஞ்ஞ, விஞ்ஞானகூட உதவியாளர் திருமதி சார்ள்ஸ் பென்லி ஆகியோரது சேவையும் போற்றுதற்குரியதாகும்.

எமது கல்லூரியின் கல்வி மற்றும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளுக்கு என்றும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து, அதற்காக புத்தகங்கள், பயிற்சிகள், உபகரணங்களை பெரியளவில் அன்பளிப்புச் செய்து வருகின்ற திரு. எஸ். எஸ். இராமகிருஷ்ணன், திரு. செ. ஜெகராஜா, திரு. ரீ.மகேசன் ஆகியோரின் சேவைகளும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எமது கல்லூரியுடன் இணைக்கப்பட்டு இயங்குகின்ற திருக்கேதீச்வரம் கௌரியம்பாள் கனிஷ்ட வித்தியாலத்தின் பிரவேசம் எமது கல்லூரியையும் ஆசிரிய மாணவர்களையும் என்றும் நல்மனதுடன் வாழ்த்தி வரவேற்று வருகின்றது. அதன் அதிபரான திரு. கே. இரத்தினபூபாலன் அவர்கள் எமக்குச் சிறந்த ஆலோசனைகளையும் மனதுக்கு இதம் தரும் கருத்துக்களையும் வழங்கி பிரச்சினையான சந்தர்பத்தில் நடுநிலை தவறாது எம்மைப் பாதுகாக்கும் அன்பர். அத்துடன் இப்பாடசாலையைச் சேர்ந்த திருமதி எச். ஈ. ஆர். ஈ. சோசை, செல்வி ஜொய்சி மெக்டலின் ஆகியோர் தமது மாணவர்களுடன் எமது மாணவர்களையும் இணைத்துச் சிறந்த சேவையாற்றும் ஆசிரியர்களாவர்.

### விளையாட்டு மைதானம்

எமது கல்லூரிக்கெனத் தனியானதொரு விளையாட்டு மைதானத்தின் தேவை மிகவும் உணரப்பட்டபோது சித்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினருடன் இத்தேவையை முன்வைத்து நீண்ட காலமாக வலியுறுத்தி வந்தவர்களில் திருவாளர்கள் வீ. பீ. மாணிக்கவாசகர், திரு. எஸ். பிருந்தாவனநாதன் மிகவும் முக்கியமானவர்கள். இவர்களது விடாமுயற்சியின் காரணமாகவே சொந்தமாக ஒரு விளையாட்டு மைதானத்தை எமது கல்லூரி பெறமுடிந்தது. இந்த நியாயமான தேவையைப் பூர்த்தி செய்யக் காரணமாக இருந்த சித்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினரான திரு. க. ம. குலசிங்கம், திரு. பொன். மகேந்திரன், திரு. எஸ். பிருந்தாவனநாதன் ஆகியோருக்கு எமது கல்லூரியின் வரலாற்றில் தனியிடமுண்டு. அத்துடன் விளையாட்டு மைதானத்தைச் செப்பனிட உதவிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுபினர் உயர் திரு. த. சித்தார்த்தன் அவர்கள் கடந்த ஆண்டு தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து ஒதுக்கிய மூன்று இலட்சம் ரூபாவைக் கொண்டு பாரிய பள்ளத்தை நிரம்பியதுடன், இப்பணிக்கும் எமது கல்லூரி அபிவிருத்திப் பணிகளுக்கும் என்றும் எமக்கு உதவிபுரியும் வன்னி மாவட்ட பாராளுமன்ற மன்னார் மாவட்டச் செயலாளர் திரு. S. டேவிட் அவர்களுக்கும் மற்றும் திருவாளர்கள் S. மதியாபரணம், எஸ்.எஸ். இராமகிருஷ்ணன், எஸ். சுந்தரலிங்கம், எஸ். மகேந்திரன், கே. மகேந்திரன், எஸ். சூரியபுத்திரன், என். நாகேந்திரா மற்றும் கல்லூரி ஆசிரியர் குழாத்திற்கும், நன்றியுடையேன். மேலும் மைதானத்தைச் சுற்றி சுற்றுமதில் அமைக்க நிதியுதவியளித்த அன்பர்கள் அனைவரதும் மறக்க முடியாத சேவைகள் கல்லூரியின் வரலாற்றுப் பதிவுகளாகும்.

### புதிய வகுப்பறைக் கட்டிடங்கள்

எமது கல்லூரியின் மாணவர் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப வகுப்பறைக் கட்டிடங்கள் போதுமானதாக இல்லாததன் காரணத்தினால், எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 140'x20' நீளமான வகுப்பறைக் கட்டிடமொன்றை நிர்மாணிக்கத் திட்டமிட்டபோது இதற்கு நிதி உதவி அளித்த கல்வித் திணைக்களம், மன்னார் சமூக நம்பிக்கை நிதியம் (C.T.F.) திரு. கே. குணநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மன்னார் மாவட்டச் செயலாளர் திரு. எஸ். குமரேஸ் மற்றும் ஆலோசனைகளையும் அளித்த பெருமக்களது சேவையில் எமது மாணவர்கள்

நெருக்கடியின்றி கல்வி கற்க வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அத்துடன் இந்த வருடம் வகுப் பறைக்களுக்கான மாடிக் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து ரூபா 7,25,000 வழங்கி உதவிய வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் திருமதி இ. புலேந்திரன், திரு.டி. சித்தார்த்தன் ஆகியோரின் அளப்பரிய சேவைகள் போற்றுதற்குரியன. திருமதி இ. புலேந்திரன் முன்னைய அரசின் பிரதிக் கல்வி அமைச்சராக இருந்தபோதே எமது கல்லூரியின் பால் ஆழ்ந்த அன்பும் பற்றுறுதியும் கொண்டு இயங்கி வந்தவர். அத்துடன் குறித்த இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் எமது கல்லூரியின் மேல் நீங்காத பற்றும், பாசமும் கொண்டு இயங்குவதால் எமது கல்லூரி மேலும் விருத்தியடையும். அத்துடன் இந்நிதியைப் பெற்று எமக்கு நல்கிய மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மரியதாசன் குரூஸ், மற்றும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. எம். கனகரத்தினம் அவர்களது சேவையும் என்றும் எமது கல்லூரியில் நிலைத்து நிற்கும்.

### கணனிக் கல்வி

மன்னார் மாவட்டப் பாடசாலைகளில் முதலில் கணனிக் கல்வியை அறிமுகப்படுத்திய பெருமை எமது கல்லூரியையே சாரும். கொழும்பு இந்து மாமன்றத்தின் தலைவர் உயர்திரு. கைலாயபிள்ளை அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டு ... ல சிரமத்தின் மத்தியில் திரு. எஸ். எஸ். இராமகிருஷ்ணன் அவர்களால் எமது கல்லூரிக்கு எடுத்துவரப்பட்ட கணனியைக் கொண்டு எமது கல்லூரியில் உயர்தர வகுப்புக்களுக்கு ஒரு கணனிப் பிரிவை ஆரம்பித்தோம். மேலும் எமது கணனிப் பிரிவுக்கு பத்துக்கு மேற்பட்ட கணனிகள் தேவையாக இருப்பதால், இவற்றைப் பெறும் நோக்கத்துடன் எமது கல்லூரியின் அன்பரும், பேராளருமான திரு. செ. ஜெகராஜா அவர்களை நாடியபோது சில வள்ளல் பெருமக்கள் மூலம் மேலும் இரண்டு கணனிகளைப் பெற்று அன்பளிப்புச் செய்ய முன்வந்துள்ளமையால் எமது கல்லூரியின் கணனிப் பிரிவு மேலும் தனது சேவையை விஸ்தரிக்கவுள்ளது. இக் கணனிகளை அன்பளிப்புச் செய்த அவர்களை கல்லூரி ஆயுள் பூராவும் வாழ்த்தி நிற்கும்.

### மகளிர் விடுதி

1. இவ்வருடத்துக்காகத் தெரிவு செய்யப்பட்ட பழைய மாணவர் சங்கமானது மிகவும் துடிப்புள்ளதும் வேகமாகத் தனது செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென நிதமும் இயங்குகின்றதுமான சங்கமாகும். இச்சங்கத்தின் செயலாளர் திரு. ந. சரச்சந்திரனும், பொருளாளர் திரு. வே. பிரபாகரனும் ஏனைய சங்க உறுப்பினர்களும் இடைவிடாது இயங்குவதன் ஊடாக எமது கல்லூரியின் 40ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பழைய மாணவர்களிடம் நிதிவசூலித்து 80'x20' நீள, அகலம் கொண்ட ஒரு மகளிர் விடுதியினைக் கட்டி முடிக்கத் திட்டமிட்டு அதன் ஆரம்பப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. இவ்விடுதிக்கான நிதி சேகரிப்பில் செயலாளர், பொருளாளர் ஆகியோருடன் சங்க உறுப்பினர்களான திரு. க. பாலசச்சந்திரன், திரு. மா. வேலாயுதம், திரு. மகேந்திரன் ஆகியோர் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர். எனவே பா. அ. சங்கம் ப. மா. சங்கம், ஆகிய இரண்டும் கல்லூரியின் வலுவான இரண்டு கைகளாக தொழிற்படுவதால் வளர்ச்சி என்னும் ஓசை பலமாகத் தொனிக்கின்றது.

### பற்சிகிச்சை நிலையம்

2. இவ்வருடத்தில் எமது கல்லூரியில் அமையப் பெற இருக்கும் புதிய பல் சிகிச்சை நிலையத்தை எமது கல்லூரியில் கட்டித்தர உதவி புரிந்து வரும் நிர்மாணத் திணைக்களப் பொறியியலாளர் திரு. ரி. புவனதயாதரன், தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. வி. பொ. மாணிக்கவாசகர் ஆகியோருரின் சேவையையும் எமது கல்லூரி அன்புடன் வரவேற்று நிற்கிறது.

### நன்கொடையாளர்கள்

எமது கல்லூரியின் அதிகரித்த மாணவர்களுக்கு ஏற்ப பௌதீக, ஆளணி வளங்களை அதிகரிக்க வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டபோது எமக்கென்று ஒரு நன்கொடையாளர் சமூகம் முன்வந்து உதவிபுரிந்து வருகின்றது. தொடர்ந்து பல்வேறு வகையில் எமக்கு உதவி புரிந்துவரும் நன்கொடையாளரை இச்சந்தர்ப்பந்தில் நினைத்துப் பார்ப்பது மிக மிக இன்றி யமையாததாகும். இவர்களில் முக்கியமாக தொண்டர் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கும் டிசைன்ஸ் உரிமையாளர் திரு. ஆர். ரங்கராஜா அவர்தம் புதல்வர்கள் ஆர். வரதராஜன், ஆர். தவராஜன், செல்வம் பிறதர்ஸ் உரிமையாளர், திரு. வி. செல்வரத்தினம், குரு. ரெக்ஸ்ரைல் உரிமையாளர், திரு. ரி. குருபரன், அயன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. திருநாவுக்கரசு அவர் மைந்தன் திரு. ரீ. மகேசன், லஷ்மன் வைன் சொப் உரிமையாளர் திருமதி பாலசந்திரன், ஸ்ரீ தானிய ஆலை உரிமையாளர் திரு. எஸ். ஸ்ரீஸ்காந்தா, டாக்டர் மு. கதிர்காமநாதன், சென். யோசப் காப்பன்ரரி வேக்ஸ் உரிமையாளர் திரு. எஸ். ஜெயசிங்கம், டாக்டர். அரசக்கோன், திரு. எஸ். சூரியபுத்திரன், சிறி பேக்கரி உரிமையாளர் திரு. எஸ். ஸ்ரீரங்கநாதன் அவர்களின் உதவியும் மகத்தானது. மேலும் கல்லூரித் தளபாட பற்றாக்குறையின் ஒரு பகுதியை பிரான்சிஸ் என்ரபிறைசஸ் உரிமையாளர் திரு. என். அல்போன்ஸ், கேட்கும் போதெல்லலாம் உதவிபுரியும் விஜயதர்சிகா தொலைத் தொடர்பு உரிமையாளர் திரு. எப். விஜயகுமார் அவர்களும் நிவர்த்தி செய்துள்ளமையை நன்றியுடன் நினைத்துப் பார்ப்பதோடு, நன்கொடையாளர்களின் உதவிகளை பெறக்காரணமாக இருந்த திரு. எஸ். பிருந்தாவனநாதன்,

திரு. வி. பி. மாணிக்கவாசகர், திரு. எஸ். எஸ். இராமகிருஷ்ணன், செ. ஜெகராஜா ஆகியோரது சேவை எனது நன்றிக்கும் போற்றுதலுக்கும் உரியனவாகும்.

## இணைப்பாட மன்றங்கள்

எமது கல்லூரியின் இணைப்பாட விதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் பல்வேறு சங்கங்கள், மன்றங்கள் எமது மாணவர்களுக்குச் சேவையாற்றி வருகின்றன. திரு. ஆர். ஜெயமனோகரை பொறுப்பாசியராகக் கொண்ட உயர்தர மாணவர் ஒன்றியம், திரு. எம். ரவீந்திரன் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றும் வணிக மாணவர் மன்றம், திரு. எஸ். விஜயன் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றும் சாரணர் சங்கம், திருமதி பி. சிவபாதம் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றும் பெண்கள் சாரணியம், திரு. எஸ். றெக்ஸ் அருள்நேசனை ஆலோசகராகக் கொண்டு இயங்கும் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம் திரு. எல். ஜீ. பிறேம்குமாரனைப் பொறுப்பாசிரியராகக் கொண்ட கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம், திருமதி டி. வலன்ரீனாவை பொறுப்பாசிரியராகக் கொண்ட கலை வட்டம், திருமதி பி. தனேஸ்வரன் அவர்களைப் பொறுப்பாசிரியராகக் கொண்ட புவியியல் மாணவர் ஒன்றியம், திரு. எஸ். சிறிதரனைப் பொறுப்பாசிரியராகக் கொண்ட விஞ்ஞான மன்றம், திருமதி யூ. ஆனந்தராஜாவை பொறுப்பாசிரியராகக் கொண்ட ஆங்கில இலக்கிய மன்றம், திரு. கே. ஆர். கமலநாதனைப் பொறுப் பாசிரியராகக் கொண்ட சமூகவியல் மன்றம் என்பன பூரணமாக இயங்கி கல்லூரியின் கல்வி மேம்பாட்டிற்கு வித்திடுகின்றன.


## நாற்பதாண்டு நிறைவு மலர்

எமது கல்லூரி கடந்துவந்த நாற்பது ஆண்டுகளை வரலாற்றுப் பதிவுகளாக எழுத்துருவில் வடிக்கவேண்டும். இக்கல்லூரிக்கு ஆரம்பமுதல் இன்றுவரை தொண்டாற்றி உயர்த்திய பெருமக்களை நினைவுகூர்ந்து எதிர்காலச் செல்வங்களுக்கு இதனை விலைமதிக்கமுடியாத பொக்கிஷமாக வழங்க வேண்டுமென்று எமது கல்லூரி அபிவிருத்திச் சங்கம் தீர்மானித்தபோது 1960 களில் ஆசிரியராக இருந்து பெருந் தொண்டாற்றிய பெருமகன் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களது ஞாபகம் எமக்கு வந்தது. இச்சமயத்தில் தெய்வச் செயலாக இவரைத் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு வரலாற்றுப் பின்னணிகளைப் பெறக்கூடிய வாய்ப்புக்களும் இந்நாற்பதாவது ஆண்டு மலர் வெளியீட்டுக்கான ஆலோசனை களையும் பெற முடிந்தமையானது ஒரு கிடைப்பதற்கரிய கொடை என நினைக்கின்றேன். தொடர்ந்து நாற்பதாவது ஆண்டு மலர் ஒன்றை வெளியிட வேண்டுமென்ற எண்ணம் உதித்தபோது எமது கல்லூரியின் பெருவளர்ச்சிக் காலத்தில் பெரும்பங்கு வகித்துவரும் துடிப்புள்ள இளைஞரும், சொல்வதைவிட செயலிலே தன்திறனை வெளிப்படுத்துபவரும், சிறந்த பண்பாளனும், பெற்றோருமாகிய திரு. எஸ். யூ. சந்திரகுமாரன் அவர்களும் காரியத்தை நடத்திமுடிக்கும் செயற்திறன் மிக்கவரும் செயல்வேகம் கொண்டவரும் பெற்றோருமாகிய திரு. எஸ். மதியாபரணம் அவர்களும் இம்மலரை வெளியிட முழுப்பொறுப்பையும் ஏற்று அதற்கு நிதிதேடி, மூலகங்களைத் தேடி பெரும் பணியாற்றி வந்தனர். நிதி யீட்டத்திலே இவர்களுடன் திரு. எஸ். எஸ். இராமகிருஷ்ணன், திரு. எஸ். சண்முகலிங்கம், திரு. செ. ஜெகராஜா ஆகியோர் இணைந்து செயற்பட்டு வந்துள்ளர்.

## நன்றி

கடந்த நாற்பதாண்டுக் காலத்தில் இப்பாடசாலையின் பல்வேறுபட்ட வளர்ச்சிப்படி நிலையிலும் ஈடில்லாத் தொண்டாற்றிய அனைத்துப் பெருமக்களது சேவையையும் எழுத்தில் வடிக்க நினைப்பது முடியாத காரியமாகும். ஆயினும் எனது அறிவுக்கும் அனுபவத்திற்கும் எட்டிய விடயங்களை இம்மலரில் நினைவு கூர்ந்துள்ளேன். இங்கு எழுதப்படாத இன்னும் பல பேரிதயங்களின் செயற்பாடுகளுக்கு என்றும் நான் தலைசாய்த்து பணிவுடன் வணக்கம் செலுத்துகின்றேன். எமது கல்லூரியின் பெற்றோர் சமூகத்தை மேலாக மதிக்கும் எமது கல்லூரி நிர்வாகம் அவர்களது சேவைகளுக்கும் மேலும் கடமையுணர்வும், கீழ்ப்பணிவும், ஒழுக்கமும் கொண்டு இக்கல்லூரியினைச் சார்ந்த அனைவரது முயற்சிகளையும் ஒன்றுசேர்த்து அவற்றை தங்களுடைய எதிர்கால ஒளிமயமான வாழ்வுக்கு பிரயோகப்படுத்தவதூடாகத் தாமும் உயர்ந்து, கல்லூரியை உயர்த்தி நிற்கும் அன்புசால் மாணவர்களுக்கும் எமது பணிவான வணக்கத்தைத் தெரிப்பதோடு, எனது எண்ணத்தில் உதித்த கல்லூரியைக் கட்டியெழுப்பும் பணியில் பல்வேறுவகையில் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் மேலே குறிப்பிட்ட பெருந்தகைகளினதும் மற்றும் பெயர் குறிப்பிடாது இலைமறைகாயாக இருந்து பெருந்தொண்டாற்றி வரும் அனைத்து அன்புள்ளங்களினதும், என்றும் எம்மைக் காத்து வழிநடாத்தி வருகின்ற சித்தி விநாயகப் பெருமானதும் பாதாரவிந்தங்களைப் பணிந்து தங்கள் அனைவரையும் நன்றியுணர்வுடன் வணங்கி நிற்கின்றேன்.

மாணவர்களும் ஆசிரியர்களும்




ஆண்டு 11 - ஆண்டு 13

ஆசிரியர்களும் மாணவர்களும்



ஆண்டு 6 - ஆண்டு - 10

ஆசிரியர்களும் மாணவர்களும்



ஆண்டு 1 - ஆண்டு - 5

# க. பொ. த. (உ/த) மாணவர் ஒன்றியம்
# நிர்வாக சபை உறுப்பினர்கள் - 1999 / 2000



இருப்பவர்கள் இடமிருந்து வலம்:

திரு. ரி. ராமதாஸ், எம். அருள்வதனன், எஸ். சிறிதரன், ஆர் ஜெயமனோகரன் (ஒன்றியப் பொறுப்பாசிரியர்), ஏ. ஐ. தயானந்தராஜா (சிரேஷ்ட கல்லூரி அதிபர்), எஸ். உதயகுமார் (ஒன்றியத் தலைவர்), எஸ். சண்முகலிங்கம் ( கனிஷ்ட கல்லூரி அதிபர்), திரு. வி. புஸ்பலதா தனேஸ்வரன், சிரேஷ்ட கல்லூரிப் பிரதி அதிபர் திருமதி. எஸ். பவளநாதன், செல்வி. என். பாலேஸ்வரி.

நிற்பவர்கள்:

செல்வன். ச. ஜேசுதாசன், சே. அ. பர்ஹாத், நா. தயானந்த், த. தர்சினி.

# ஆரம்பகால நினைவுகள்

சைவப்புலவர் சு. செல்லத்துரை
*ஆரம்பகால ஆசிரியர் 1960–1968, ஓய்வு பெற்ற ஆதிபர் தரம் I, இளவாலை.*



இன்று ஆயிரத்திருநூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுடன் உயர் தர விஞ்ஞான, வர்த்தக, கலை வகுப்புக்களுடன் மாணவர் விடுதி வசதியுடன் மன்னார் மாவட்டத்தில் முதல் தரக் கல்லூரியாகத் திகழும் மன்னார்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி தனது நாற்பது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் கல்லூரியை வாழ்த்துவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

இக்கல்லூரியின் ஆரம்பகால வளர்ச்சியில் பங்கு கொண்டவர்களில் யானும் ஒருவன் என்ற வகையில் அன்றைய பெரியவர்களின் நினைவு இன்று நனவாகி இருப்பதைக் கண்டு, வாழ்த்தும் வாய்ப்புக் கிடைத்தமையை எண்ணிச் சித்தி விநாயகப் பெருமானைத் தொழுகின்றேன்.

இக்கல்லூரியைத் தொடக்கியவர்கள், தொடர்ந்து வளத்தவர்கள், இன்றைய உயர்நிலைக்குக் காரணமானவர்கள் அனைவரையும் மனதால் நினைந்து, போற்றி வாழ்த்துகின்றேன். இவ்வேளையில் இக்கல்லூரியின் ஆரம்பகால வளர்ச்சி பற்றிய என் மனப்பதிவுகளை இங்கு தருதல் பொருத்தமெனக் கருதுகின்றேன்.

அறுபதுகளின் ஆரம்பகாலம் மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வர மறுமலர்ச்சிக் காலம், சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன் (C. C. S) அவர்களைத் தலைவராகக் கொண்டு திருக்கேதீஸ்வரம் விறுவிறு என்று வளர்ந்த காலம்; நாட்டின் நாலா திசைகளிலும், குறிப்பாகக் கொழும்பில் இருந்த சைவர்களின் கவனம் முழுவதும் மன்னாரை மையப்படுத்திய காலம். தேவாரப் பாடல் பெற்ற தலமாகிய திருக்கேதீஸ்வரத்தைத் தன்னகத்தே கொண்ட மன்னார் மாவட்டத்தில் சைவப்பிள்ளைகளின் பண்பாட்டுடன் கூடிய கல்வி வாய்ப்புக்களை வழங்க வல்ல சைவ உயர் தர பாடசாலை இல்லாத பெருங்குறை எல்லார் மனதிலும் பட்டது.

அதன் பேறாகச் சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதனைத் தலைவராகக் கொண்டு 1959 மேயில் கொழும்பு சைவ மங்கையர் கழக முகாமையில் மன்னார் நகரில் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி தோற்றம் பெற்றது.

மன்னாரிலிருந்த சைவாபிமானங் கொண்ட அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் மற்றும் பிரமுகர்கள் முதலானோரின் ஒத்துழைப்பும் ஒருங்கிணைக்கப்பட்டது. செல்வாக்குமிக்க பிரமுகர்களைக் கொண்ட நிர்வாகசபை உருவானது. அதில் A. F. C பரமநாதன், D. M. O வைத்திலிங்கம் O. A துரையப்பா, A. C. C. D சின்னத்தம்பி, C. C. இரகுநாதன், அரச ஒப்பந்தக்காரர் கே. கே. வைத்திலிங்கம் தொழிலதிபர் ம. கந்தசாமி முதலானோர் முன்னின்றுழைத்தனர். மன்னார் உப்புக்குளம் சித்தி விநாயகர் ஆலய அறங்காவலர் திரு. கு. முத்துக்குமாரு அவர்களால் வழங்கப்பட்ட காணி ஐந்து ஏக்கரில் கட்டிடம் எழுந்தது.

கல்லூரியை நிர்வகிப்பதற்கு முதுபெரும் அறிஞரும் ஆங்கிலப் பேராசானுமாகிய புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி அதிபராயிருந்த ஒய்வு பெற்ற திரு. ச. வீரசிங்கம் அவர்கள் அதிபராக நியமனம் பெற்றார்.

ஆசிரியர்களாக முதலில் பெண் ஆசிரியைகள் மட்டுமே நியமிக்கப்பட்டனர். செல்விகள் அன்னலட்சுமி, மகேஸ்வரி, தையல் நாயகி, நகுலேஸ்வரி, துரையப்பா முதலானோருடன் பாடசாலை இயங்கத் தொடங்கியது. நான் 1960. 01. 04 இல் ஆசிரியராக இணைக்கப்பட்டேன். தொடர்ந்து திருவாளர்கள் சண்முகவடிவேலு, கணேசலிங்கம், சிவசம்பு முதலான பலர் படிப்படியாக நியமனம் பெற்றனர். ஆசிரியர்களுக்கு மாதம் 75 ரூபா மட்டுமே உதவு தொகையாக வழங்கப்பட்டது. எனினும் எல்லோரும் முழுமனத்துடனும் தொண்டுள்ளத்துடனும் சேவை செய்தனர்.

செல்லையா அப்பா எனும் முதுபெருந் தொண்டர் (70 வயது) பொது வீதிக் குழாயில் காலை ஒரு மணித்தியாலம் மாலை ஒரு மணித்தியாலம் மட்டும் வரும் குடிநீரைக் குடத்தில் ஏந்திக் கொணர்ந்து தாங்கியில் நிரப்பி வைத்து மாணவரின் தாகம் தீர்க்கும் பணியைச் செய்து கல்லூரிக் காவலராயும் சேவை செய்தார்.

ஆரம்பத்தில் பாலர் வகுப்பு முதல் எஸ். எஸ். ஸி. வகுப்பு வரை 160 மாணவர் சேர்ந்து பயின்றனர். அரசாங்க உத்தியோகத்தர் முதலாகச் சைவப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை இக்கல்லூரிக்கே அனுப்பத் தொடங்கினர். படிப்படியாக மாணவர் தொகை அதிகரித்தது. 1960 மார்கழியில் எஸ். எஸ். ஸி. பொதுப் பரீட்சைக்கு முதல் முறையாகத் தோற்றியோரில் அநேகர் சிறப்புச் சித்தி பெற்றுக் கல்லூரியை எழுச்சி பெறச் செய்தனர்.

மாணவர் சீருடையாகப் பெண் பிள்ளைகள் முழுப்பாவாடையும் துண்டுத்தாவணியும், ஆண்பிள்ளைகள் நீலக்காற்சட்டையும் வெள்ளைச் சேட்டும் அணிந்தனர்.

கல்லூரிக் கொடி பொன்நிறமும் மண்நிறமும் கொண்டு பட்டொளி வீசிப் பறந்தது. "அறிவே சக்தி" எனும் இலட்சிய வாசகம் கல்விக் கண்ணைத் திறக்க வைத்தது.

நாவலர் இல்லம், பாரதி இல்லம், வள்ளுவர் இல்லம் எனும் மூன்று இல்லங்களாக மாணவர்கள் கல்வி, கலை, விளையாட்டு, தொண்டு முதலாம் துறைகளில் சாதனைகள் பல படைத்தனர்.

பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்த காலகட்டத்தில் 1961. 01. 01 இல் கல்லூரித் தரத்தில் அரசினர் பாடசாலையாகப் பதிவு பெற்றது. அதுவரை காலமும் கல்லூரியை ஒழுங்கமைத்து உறுதியுடன் நெறிப்படுத்திய தன்னேரிலா அதிபராகிய திரு. ச. வீரசிங்கம் அவர்கள் ஓய்வு பெற ஆரம்பகாலம் முதல் ஆசிரியையாயிருந்த திருமதி அன்னலட்சுமி சம்பந்தமூர்த்தி அவர்கள் பதில் அதிபரானார். இவர் தனக்கேயுரிய தனித்துவத்துடன் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கல்வி நெறியில் கல்லூரியை வழி நடத்தினார்.

அரசினர் பாடசாலையானதும் முன்னிருந்த ஆசிரியர்கள் சிலர் வேறு மாவட்டங்களுக்குச் செல்ல வேறு மாவட்டங்களிலிருந்து பல ஆசிரியர்கள் வரலாயினர். 1962. 01. 01 இல் திரு. வி. அரியநாயகம், B. A அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். 1968. 06. 30 வரை இவர் அதிபராயிருந்த காலம் கல்லூரி எல்லா மட்டங்களிலும் உறுதி பெற்றுப் பெருவளர்ச்சி கண்ட காலமாகும்.

மன்னார்க் கச்சேரியில் உயர் உத்தியோகத்தராயிருந்த திரு. நாக. பத்மநாதன் அவர்கள் என்னுடன் பெற்றார் ஆசிரியர் சங்க இணைச் செயலாளராயிருந்து, பல அபிவிருத்தித் திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்திய உறுதியான அவரது சேவை என்றும் மறக்க முடியாததாகும்.

இதே காலத்தில் மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கத்தின் உதவி, கல்லூரி வளர்ச்சிக்குப் பேருபகாரமாக அமைந்தது. சைவசமய அபிமானம்மிக்க அரச உத்தியோகத்தர்கள் அதிகமாகப் பங்கெடுத்த இச்சங்கம் சைவசமய கலாசாரம் சார்ந்த நிகழ்ச்சிகளை மன்னார் மாவட்டம் முழுவதும் பரவலாக நடத்தி வந்ததுடன் நாடகக் கலை மூலமும் அகில இலங்கை மட்டத்தில் கலைக்கழக முதற் பரிசு பெறும் அளவுக்கு புகழ் பெற்றது. சங்கத்தின் செயற்களமாக இக் கல்லூரியே அமைந்தது.

யாழ்ப்பாணம், கொழும்பு முதலாம் இடங்களில் நாடகம் நடத்தி நிதி சேர்த்துக் கல்லூரி வளர்ச்சிக்கு உதவி வந்தமையும், பல சிரமதானங்கள் மூலம் கல்லூரி அவ்வப்போது அபிவிருத்தி செய்யப்பட்டமையும், வரலாறு மறக்க முடியாத செய்திகளாகும்.

கட்டிடங்கள் பல எழுந்தன; விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டது. முட்கம்பி வேலி போடப்பட்டது, மேடை அமைக்கப்பட்டது, மின் இணைப்பு, நீரிணைப்புக்கள் செய்யப்பட்டன.

சாரணீயம், விளையாட்டு, கலை நிகழ்வுகள் முதலானவற்றில் மாவட்ட மட்டத்துக்கு அப்பாலும் சென்று வானொலியிலும் சாதனைகள் பல படைக்கப்பட்டன.

எனினும் இன்றிருக்கும் உயர்நிலை அன்று எய்தப்படவில்லை. இன்றைய உயர்நிலையை இலக்காக வைத்து ஆவலுடன், அத்திராரமிடப்பட்ட எண்ணங்கள் இன்று மலர்ந்து மணம் பரப்புவதைக் காண முடிகின்றது.

1960. 01. 04 இல் ஆசிரியராக இணைந்து கொண்ட நான் 1968 .02. 24 வரை சாரணர் ஆசிரியராகவும் சமய, கலைத்துறை ஆசிரியராகவும், பெ. ஆ. சங்க இணைச் செயலாளராகவும் பன்முகப்பணி செய்யும் வாய்ப்புப் பெற்றமையை எண்ணி மகிழ்கின்றேன்.

இன்று மிக உந்நதமான பெருமைக்குரிய விதத்தில் கல்லூரியை நிர்வகிக்கும் ஆளுமைமிக்க அதிபர், அர்ப்பணிப்புடன் சேவை செய்யும் ஆசிரியர்கள், பற்றுறுதிமிக்க பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் பெருமைக்குரிய பழைய மாணவர் சங்கத்தினர் முதலான அனைவரையும் ஆரம்பகாலப் பெரியோர்கள் சார்பில் உளம் நிறையப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

*"என்றோ முகையாகி இன்று மலராகி*
*என்றும் மணங்கமழ்ந்து நின்று பயன் தருக."*

## மன் / சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி ஆரம்ப கால அதிபர் 1959 - 1960




அமரர் ச. வீரசிங்கம்

## மன் / சித்திவிநாயகர் இந்துக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் 1963



முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட இக்கல்லூரியை உருவாக்கியவர்களுள் ஒருவராய திரு. ச. பரமநாதன் (A. F. C) உரையாற்றுகிறார்.
அந்நாள் அதிபர் திரு. வி. அரியநாயகம் அவர்களும் ஆரம்பகால அதிபர் திரு. ச. வீரசிங்கம் அவர்களும் அருகில் காணப்படுகின்றனர்.

## மன் / சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி சாரணர் அணியினர் 1961



இருப்போர் : இடமிருந்து வலம்

திரு. ச. முருகமூர்த்தி (மாவட்ட ஆணையாளர்), திரு. எஸ். பங்கிராய் ( மாவட்ட உதவி ஆணையாளர்), திரு. வி. அரியநாயகம் (அதிபர்), திரு. சு. செல்லத்துரை (சாரணர் ஆசிரியர்)

## மன் / சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் 1967 ஆம் ஆண்டு



இருப்போர் : ஆசிரியர்கள் இடமிருந்து வலம்

திரு. சங்கரப்பிள்ளை, திரு. சு. செல்லத்துரை, திரு. சிவகுமார், திரு. வி. அரியநாயகம் (அதிபர்) திரு. கரிகரன், திருமதி. தியானம் சிவகுருநாதன், செல்வி. யசோதை, திருமதி. சித்திரநாதன்.

## 1998 இல் நடைபெற்ற வணிகக் கண்காட்சியும் வணிக விழாவும் நிகழ்வில்




வணிகமன்றத் தலைவர் செல்வி R. சித்திராதேவி, பிரதம விருந்தினர் பாரியார் திருமதி A. சந்திரகுமாரன், பிரதம விருந்தினர் S. U. சந்திரகுமாரன் *(கணக்காளர் கச்சேரி மன்னார்)* கல்லூரியின் அதிபர் வணிக மாணவர் மன்றப் பொறுப்பாசிரியர், பிரதி அதிபர் ஆகியோர் காணப்படுகின்றனர்.



**1998** இல் நடைபெற்ற க. பொ. த. (உ/த) வருடாந்த ஒன்று கூடலின் போது பிரதம விருந்தினராக வருகை தந்த திரு. S. S. இராமகிருஷ்ணன் அவரது பாரியார், சிறப்பு விருந்தினர் திரு. T. மகேசன்

# 1999 வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி



1999 வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் போது பிரதம விருந்தினராக வருகை தந்த மேலதிக அரச அதிபர் தா. ப. விசுவலிங்கம் அவரது பாரியார், சிறப்பு விருந்தினராக வருகை தந்த, ஷலசன்ஸ் உரிமையாளர் திரு. சு. ரங்கராஜா, திருமதி ரங்கராஜா அவர்களை வரவேற்கும் நிகழ்வு.

# மகளிர் விடுதி அத்திவாரம் இடுதல்




1999 மே, 6ம் தேதி பழைய மாணவர் சங்கத்தினால் நிர்மாணிக்க விருக்கும் மகளிர் விடுதிக்கான அத்திவாரம் இடுதல் நிகழ்வு

வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் A. C. அப்துல் ஹக் அவர்களால் அத்திவாரக் கல் நாட்டப்படுகின்றது.

# வடக்கு கிழக்கு செயலாளர் - மங்கள விளக்கேற்றல்



11. 02. 96 அன்று வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரின் வருகையின் போது மன்னார் மாவட்டத்தில் வணிகப் பிரிவில் முதன்முதலாக 4 ஏ எடுத்து சாதனை படைத்த எமது கல்லூரி மாணவன் மு. கௌரீசன் அவர்களை பாராட்டி தங்கப் பதக்கம் அணிவித்து கௌரவிக்கும் விழாவுக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றும் நிகழ்வு. அருகில் அதிபர், பிரதி அதிபர் ஆகியோர் காணப்படுகின்றனர்.




5. 06. 97 இல் கல்லூரியில் க. பொ. த. உயர்தர கணித, விஞ்ஞான பிரிவு ஆரம்பிக்கப்பட்டபோது கல்விப்பணிப்பாளர் A. C. அப்துல்ஹக் அவர்கள் மாணவர்களின் வரவை பதிவு செய்து ஆரம்பித்து வைக்கின்றார் அருகில் கல்லூரி அதிபருடன் விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் J. E. T. டயஸ் அவர்களும் காணப்படுகின்றார்.

# நூல்நிலைய அடிக்கல் நாட்டு விழா U.N.H.C.R



1994 இல் U. N. H. C. R இன் மைக்ரோ திட்டத்தின் கீழ் கல்லூரி நூல் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டுதல் நிகழ்வு U. N. H. C. R வெளிக்களப் பிரதிநிதியுடன் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. R. கணேஸ் அவர்களும் காணப்படுகின்றார்.

# வடக்கு கிழக்கு பிரதம செயலாளர் வருகை



வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் G. கிருஸ்ணமூர்த்தி அவர்கள் கல்லூரியின் அபிவிருத்தி சம்பந்தமாக வருகை தந்தபோது வரவேற்பு வைபவம்.
பாடசாலை சங்கச் செயலாளர், கல்லூரியின் அதிபர் தலைமைச் செயலாளர் G. கிருஸ்ணமூர்த்தி கல்விப்பணிப்பாளர் A. C. அப்துல்ஹக் அவர்களும் காணப்படுகின்றனர்.

# திருக்கேதீச்சர ஆலயமும் மாந்தைத் துறைமுகமும்

சேர். கந்தையா வைத்தியநாதன்

திருக்கேதீச்சரத்து இறைவன் புகழை நாயன்மார் இருவர் பாடிப் பரவினர். அவர்களுள் ஒருவர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார். மற்றவர் ஒன்பதாம் நூற்றாண்டில் சைவம் வளர்த்த சுந்தரமூர்த்தி சுவாமிகள். கேதீச்சரத்து இறைவனைப் பாடிய அவர்கள் மாந்தையின் மாண்பையும் போற்றிப் புகழ்ந்தனர். மாந்தைத் துறைமுகத்தில் தங்கி நின்ற பெரும் கப்பல்களையும் , மாந்தைப் பட்டினத்தில் அமைந்து விளங்கிய பல அடுக்கு மாளிகைகளையும், மலர்ச் சோலைகளையும் பழத் தோட்டங்களையும், தம் தேவாரங்களில் தீட்டிக் கவின்பெறக் காட்டியுள்ளனர். பாலாவியின் முகத்துவாரத்தில் மாந்தைத் துறைமுகம் அமைந்து இருந்தது. அங்கே மலை போன்ற அலைகள் எழுந்தும் விழுந்தும் காட்சியளித்தன. களஞ்சியக் கட்டிடங்களும் பாலத்துறையும் பாலாவியின் தென்கரையில் அமைந்து விளங்கின. அவ்விடம் இன்றும் 'வங்காலை' (வங்கம் : கப்பல்; காலை : கப்பல்கள் தங்கும் நிலையம்) என்ற பெயருடன் நிலவக் காணலாம். பாலாவியின் வடகரையில் திருக்கேதீச்சர ஆலயம் அமைந்து திகழ்ந்தது. அதையடுத்து அதன் ஆட்சியாளரின் இல்லங்களும் மக்கள் வாழ்ந்த வளம் மிக்க மாளிகைகளும் காணப்பட்டன. மாளிகைத்திடல் (மாளிகைகள் நிலவிய உயர்ந்தவிடம்), பாப்பாமோட்டை (அந்தணர்க்குரிய இடங்கள், கோயிற்குளம், (கோயில் நிலத்திற்கு நீர்ப்பாய்ச்சும் குளம்) என்ற பெயர்களுடன் இன்றும் அவை இருப்பதை நாம் காணலாம்.

பண்டைக் காலத்தில் அரேபியாக் கடல் வழியாகக் கப்பற் போக்குவரத்து நடந்தது. உரோமாபுரி, கிரேக்கம், பலஸ்தீனம், மெசப்பத்தேமியா, எகிப்து போன்ற நாடுகளி லிருந்து கப்பல்கள் அரேபியக் கடலுக் கூடாகச் சென்றன. அவ்வாறு சென்ற கப்பல்களுக்குத் தென்மேல் பருவக் காற்றால் அல்லல் எதுவும் ஏற்படாமல் மாந்தைத் துறைமுகம் பாதுகாப்பளித்தது. மாந்தைத் துறைமுகம் இராமரணையின் பவளக் கற்பாறைக்கும் மன்னார்த் தீவுக்கும் தெற்கே சில கல் தொலைவில் அமைந்திருந்தது. அதனால் தென்மேல் பருவக் காற்றாற் பாதிக்கப்படாத ஒதுக்கில் மாந்தைத் துறைமுகம் இருந்தது. தென்மேல் பருவக் காற்றின் கொடுமையிலிருந்து தப்புவதற்குக் கப்பல்கள் மாந்தைத் துறைமுகத்தில் தஞ்சம் புகுந்தன என்று கூறலாம். மன்னார்த் தீவுக்கும் இலங்கைக் கரைக்கும் இடையே இருந்த பகுதி அன்று கப்பற் போக்குவரத்திற்கு ஏற்றதாக விளங்கிற்று. எதிர்ப்பக்கமாக ஒடிய நீரோட்டங்களால் இப்பகுதியில் மணற்றிடர்கள் எதுவும் ஏற்படவில்லை. தென்கிழக்கு, தென்மேற்குக் காற்றுகள் எதிர்ப்பக்கமாக நீரோட்டங்களைச் செலுத்தக் காரணமாயின. எனவே தடைகள் எதுவுமின்றி ஆழமாக அமைந்திருந்த இக்கால்வாய்க் கூடாகக் கப்பல்கள் எளிதாகச் சென்று வர முடிந்தது. ஆனால் இவ்வாறு ஆழமும் அகலமும் உடையதாய்ச் சிறப்புடன் விளங்கிய மன்னார்க் கால்வாய் சுரி நிறைந்து கப்பற்போக்கு வரத்திற்குத் தடையாய் மாறியது எங்ஙனம் ? மாந்தைத் துறைமுகம் மணற் குன்றுகள் நிறைந்தும், அலைபுரண்டோடிய பாலாவி பள்ளமாகவும், அதனையடுத்த பாகங்கள் மணற்றிடராகவும் மாறியது எவ்வாறு ?

மாத்தளைப் பகுதியின் பரந்த பள்ளத்தாக்கில் ஓடிய நீரும், மல்வத்து ஓயாவும் சேர்ந்து பாலாவி, என்ற பெயரோடு அன்று மாந்தைக் கடலில் கலந்தது. அவ்வாறு ஓடிய மல்வத்து ஓயா தன் படுக்கையை மாற்றித் தெற்குப் பக்கமாக மதவாச்சிப் பகுதிக்கூடாகப் பாய்வதாயிற்று. இக்கருத்தையே அண்மையில் இலங்கையில் விஞ்ஞான அடிப்படையில் மல்வத்து ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தைக் குறித்து ஆய்ந்த ருசியப் பேராசிரியரும் வலியுறுத்திச் சென்றார். இஃது இவ்வாறாகப் புதிதாக வெட்டப் பெற்ற "மாபெரும் குளம்" (Giant's Tank) ஒன்று பாலாவியை இரண்டாகப் பிரித்து விட்டது. அவ்வாறு பிரிந்த நீரின் ஒரு பகுதி அருவியாறு என்ற பெயரோடு இன்று மன்னார்த் தீவுக்குப் பல கல் தொலைவில் கடலில் விழுகின்றது. இவ்வாறு இரண்டாகப் பிரித்ததன் காரணமாகப் பாலாவியின் முகத்துவாரம் சேறும், சுரியும் நிறைந்ததாக மாறிற்று. மேலும் புதிதாக அமைக்கப்பட்ட புகைவண்டிப் பாதையும் கற்பாதையும் மன்னார்க் கால்வாயை முற்றாக மறைத்து விட்டன. புகைவண்டிப் பாதையாலும், கற்பாதையாலும் மன்னார்த்தீவு இலங்கையோடு இணைக்கப்பட்டபோது தலைமன்னார் இந்தியாவிற்குக் கிட்டிய துறைமுகமாயிற்று. பராக்கிரமபாகு மன்னன் காலத்திலிருந்தும் போர்த்துக்கேயர் வருகை யிலிருந்தும் தலைமன்னார் சிறந்த துறைமுகமாக அமைந்து விளங்கிற்று. மாந்தை எவ்வாறு முக்கிய துறை முகமாக விளங்கியதோ அதே போன்று தலை மன்னாரும் முக்கியம் பெற்றுத் திகழத்

தொடங்கியது. கி. மு. பதினோராம் நூற்றாண்டின் முன் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக மாதோட்டம் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. இந்தியாவிற்கும் ஈழத்திற்கும் உரிய சிறந்த துறைமுகமாகவும் அமைந்து விளங்கிற்று. அல்லாமலும் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பெற்ற பண்டங்களை மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் துறைமுகமாகவும் இருந்தது.

தமிழகத்தின் தென்கரையிலே அமைந்து மிளிர்ந்த "இராமேஸ்வரத்திற்கு" ஈடும் இணையும் உள்ளதாய் ஈழத்திலே மன்னார்க் கரையிலே திருக்கேதீஸ்வரம் அமைந்து விளங்குகின்றதன்றோ! ஆனால் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த அந்நியர் படைகளால் பலமுறை திருக்கேதீஸ்வரம் அல்லலுக்குள்ளாயிற்று. எனவே, எதிர்க் கரையில் திகழ்ந்த இராமேஸ்வரம் படையெடுப்புக்களால் பங்கப்படாமல் சிறப்புடன் விளங்கித் திருக்கேதீச்சரம் சீரழிந்து சிறப்புக் குன்றிற்று. ஈழத்துத் தமிழ் மக்களின் வாழ்வு தாழ்விற்கேற்பத் திருக்கேதீச்சரம் உயர்ந்தும் தாழ்ந்தும் வந்தது. சோழ மன்னர்கள் இலங்கையைப் பொலநறுவையில் இருந்து ஆட்சி செய்த காலத்தில் மாதோட்டம், திருக்கேதீச்சரம் ஆகிய இரண்டினதும் அந்தஸ்து உச்ச நிலையை அடைந்தது. ஆனால் அரசியலில் ஏற்பட்ட மாற்றம் அவைகளின் சிறப்பைத் திடீரெனச் சீரழியச் செய்தது. திருக்கேதீச்சரம் சிறப்புடன் இருந்த காலத்தில் இராஜராஜேஸ்வரம் என்ற பெயரோடு வழங்கப்படலாயிற்று.

யாழ்ப்பாணத்துச் சிங்கை நகரிலே அரச குடும்பத்தில் பிறந்த காரணத்தால் பராக்கிரமபாகு மன்னன் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேல் அந்தரங்கமான அனுதாபமுடையவனாயிருந்தான். இன்னும் முதலாம் சுந்தரபாண்டியன் (கி. பி. 1251 – 1280) ஆட்சிக் காலத்தில் திருக்கேதீச்சரம் அரசனின் ஆதரவைப் பெற்று பாண்டிய மன்னன் காலச் சிற்பமுறையில் புதுப்பித்துக் கட்டப்பட்டது. இன்று திருக்கேதீச்சரத்தில் காணப்பெறும் கற்சிற்பங்கள் இவ்வுண்மையை வலியுறுத்தும் சான்றுகளாம். மேலும் குடுமியா மலையிலுள்ள சடாவர்மன் வீரபாண்டியனின் கல்வெட்டு ஒன்று அவன் ஈழத்தில் ஈட்டிய வெற்றியைப் புகழ்ந்து பேசுகின்றது. ஈழத்து அரசனை வென்ற தோடல்லாமல் அவனைக் கப்பம் கட்டுமாறும் செய்தான் என்றும் தனது இரட்டை மீன் முத்திரையையும் கொடியையும் கோணமலையில் (திருக்கோணமலை) பொறித்துத் தன் நாடு திரும்பினான் என்றும் அக் கல்வெட்டு எடுத்துரைக்கின்றது. எனவே சடாவர்மன் ஆட்சிக் காலத்திலே திருக்கேதீச்சரம் அவனின் ஆதரவைப் பெற்றிருக்கலாம். இலங்கையை வென்ற சடாவர்மன் கடல் வழியாகத் திருக்கோணமலைக்குச் சென்றிராவிட்டால் திருக்கேதீச்சரம் அவனாதரவைப் பெற்றிருக்கும்.

போர்த்துக்கேயர் இலங்கையின் வடகரையில் இறங்கியபோது திருக்கேதீச்சரம் இந்துக்களின் முக்கிய வழிபாட்டு ஆலயமாகத் திகழ்ந்தது என்பது திண்ணம். "எமேர்சன் ரெனந்து" கூறுவதை இங்கு நோக்குவோம்.

"யாழ்ப்பாணத்தைப் பலவந்தமாகக் கைப்பற்றி அங்கே ஆட்சி செய்த மலபார் அரச பரம்பரை அரசுரிமையை ஒழித்து நேரடியான ஆட்சியை 1617 வரையிலும் போர்த்துக்கேயர் ஏற்படுத்தவில்லை. தமது வாணிகப் பெருக்கத்திற்குத் துணை புரிந்த வளம் மிக்க தென் மாகாணங்களிலும் பார்க்க, தங்கள் குடியேற்றத்திற்குப் பாதுகாப்பளிக்கத் தகுதியுடையதாக இருந்த யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் நீண்ட காலமாக விரும்பி வந்தனர். ஆட்சிக்குப் பணியாத அப்பகுதியில் தமது மதத்தையும் பரப்பப் பாடுபட்டனர். இப்பகுதியைக் கைப்பற்ற 1544 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் முயன்றனர். போர்த்துக்கேயர் டெக்கானில் இந்து ஆலயங்களைக் கொள்ளையடிக்கச் சென்றபோது இவ்வாறு முயன்றனர். யாழ்ப்பாணக் குடாநாட்டின் தலைவனைக் கண்டு தம் கீழ்ச் சிற்றரசனாக இருந்து கப்பங் கட்டுமாறு வற்புறுத்தினர். அதை விரும்பாத விடத்து அவன் தம்மோடு சேர்ந்து போரிடத் தயாராக வேண்டும் என்று கூறினர். அத்தலைவன் முன்னையதற்கு இணங்கி ஆண்டொன்றுக்கு 4,000 டுக்கட்ஸ்க் கப்பங் கட்ட இசைந்தான். அதே ஆண்டில் மன்னார்ப் பகுதி மக்கள் பலர் வண. பிரான்சிஸ் சேவியரின் ஆணையின் கீழ் உரோமன் கத்தோலிக்கராக மாறினர். யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன் மதமாற்றத்தை வேரறுக்க, மதம் மாறிய அறுநூறு பேர்களைக் கொன்று ஒழித்தான். ஏன்? மதம் மாறிய தனது தனயனின் தலையையே கொய்து விட்டான். இதனைக் கண்ணுற்ற இரண்டாவது மகன் தன் தந்தைக்குப் பயந்து கோவா சென்று அங்கே சரணடைந்தான்."

இவ்வாறு வரம்பு கடந்து கொடுமைகள் செய்த அரசனுக்கு உறுதியான, மெதுவான, ஆனால் கடுமையான தண்டனை அளிக்கும்படி மூன்றாம் ஜோன் இந்திய வைஸ்ரோய்க்குக் கட்டளையிட்டான். இதனால் மன்னார்ப் பகுதியிலுள்ள கிறிஸ்தவர்கள் முன்போலத் தொல்லைக்குள்ளானார்கள் என்றும் கோவாவிற்கு ஓடிச் சென்றவனின் அண்ணனுடைய அரசுரிமை பறிக்கப்பட்டது என்றும் இரு காரணங்களைக் காட்டி 1560 ஆம் ஆண்டில் இந்திய வைஸ்ரோய் 'டொன் கொன்ஸ்டான்டைன் டிபிரகன்ச (Don Constanine De Braganza) யாழ்ப்பாணக் குடா நாட்டின் மீது போர் தொடுத்தான். டி கௌடேவின் (De Couto) இந்திய வரலாற்றின் எழுபதாவது பிரிவு இதனை நன்கு விளக்கிக் கூறுகின்றது. அதன்படி கொச்சி மேற்றிராணியார் போர்த்துக்கேயப் படைகளுடன் இங்கு

வந்தார் என்றும் கடற்கரையில் பலிபீடம் ஒன்றை அமைத்து அதைப் பணிந்து வணங்கி ஏற்றுக் கொள்வோரை மன்னித்துப் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறினார் என்றும் தெரிய வருகின்றது. இவ்வாறு தொடங்கிய போர் மிகவும் கொடுமை நிறைந்ததாக இருந்தது. மத நம்பிக்கையுள்ளோர் பலர் போர்த்துக்கேயரின் பீரங்கிகளுக்கு இரையாகினர். நகரமும் கைப்பற்றப்பட்டு அரண்மனையும் அழிக்கப்பட்டது. அரசனும் பிடிபட்டான். போர்த்துக்கேயர் அரசன் தமக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்றும் ஏழாவது புவனேகபாகுவின் மருமகனும் டொன் ஜோன் தர்மபாலாவின் தந்தையுமான கிரிபண்டா கண்டியிலிருந்தும் கோட்டையிலிருந்தும் கைப்பற்றிய செல்வங்களை மறைத்து வைத்திருக்கும் இடத்தைக்கூற வேண்டும் என்றும் வற்புறுத்தினர். அவ்வாறு அவன் செய்யின் இழந்த அரசுரிமையை மீண்டும் பெறமுடியும் என்றும் அவர்கள் கூறினர். அதற்கு உடன்பட்ட மன்னன் 8,000 குருசே டோஸ் தொகையையும் மன்னார்த் தீவையும் போர்த்துக்கேயருக்குக் கொடுக்க முன் வந்தான்.

மேலும் யாழ்ப்பாண அரசன் சிங்களவர்களோடு சேர்ந்து போர்த்துக்கேயருக்கு எதிராக உதவி செய்தான் என்ற குற்றத்திற்காக 1591 ஆம் ஆண்டிலும் 1604 ஆம் ஆண்டிலும் கோவாவிலிருந்து படைகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டன. அப்போர்களில் வலிகுன்றிய அரசன் ஒவ்வொரு முறையும் பணிந்து சென்றமையால் பயமுறுத்தலின் அபாயம் குறைந்தது. அதனால் யாழ்ப்பாணப் பகுதி தமக்கு உரித்தானது என்று போர்த்துக்கேயர் கொண்டிருந்த எண்ணம் போர்களின் நிலைமைக்கு ஏற்ப சிறிது சிறிதாகப் பின்போடப்பட்டது. ஆனால் 1617 ம் ஆண்டில் 'கொன்ஸ்டன்டைன்' டி சாய் நொரோனா' (Constantine De Saay Norona) இன் அரசியற் தூதரின் கீழ்ப் படையொன்று யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டது. அப்படை அநாகரிகமான முறையில் போர் செய்து நகரைக் கைப்பற்றியது; அல்லாமலும் யாழ்ப்பாணத்து மன்னனைக் கோவாவிற்குக் கைதியாகக் கொண்டு சென்று அங்கே அவனின் தலையை வெட்டியும் விட்டது. இதனால் அவனது மருமகனான மலபார் அரச பரம்பரையைச் சேர்ந்த கடைசி இளவரசன் தன் அரசுரிமையை இழந்து பிரான்ஸிக்கன் மடத்தில் சேர்ந்தான். 'அவனது உடைமைகள் அனைத்தும் போர்த்துக்கேயருக்கு ஆயது'. என்று எமேர்சன் ரெனந்து எடுத்துக் கூறியுள்ளார்.

எமேர்சன் ரெனந்து (Emmerson Tennent) வெளிப்படையாகக் குறிப்பிடா விட்டாலும், போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில், திருக்கேதீஸ்சரம் சீரும் சிறப்பும் உள்ளதாய் திகழ்ந்தது என்பது தெளிபு. டெக்கானில் இந்து ஆலயங்களைக் கொள்ளையிடப் போர்த்துக்கேயர் முயன்றனர். அவ்வாறு முயன்று கொண்டிருந்த அவர்களுக்கு இந்தியக் கரையில் அமைந்து விளங்கிய திருச்செந்தூர் ஆலயத்தையும், கன்னியாகுமரிக் கோயிலையும் கொள்ளையிடுவதிலும் பார்க்கத் திருக் கேதீச்சரத்தைக் கொள்ளையடித்தல் மிகவும் எளிதாக இருந்தது. அவ்வாறு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியில் வெற்றியும் கண்டனர். (இராமநாதபுரம் இராசாவின் படைபலக் காரணத்தாற் போலும் இராமேஸ்வரத்தைக் கொள்ளையடிக்கப் போர்த்துக்கேயரால் இயலாமற் போயிற்று).

மேலும், மன்னார்த் தீவில் வாழ்ந்த மக்கள் போர்த்துக்கேயரால் மதமாற்றம் செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து திருக்கேதீச்சரம் கொள்ளையடிக்கப்பட்டது. அவ்வாலயத்தை இடித்து அதன் கற்களை எடுத்துச் சென்று மன்னார்த் துறைமுகத்தைப் போர்த்துக்கேயர் கட்டினர். இவ்வாறு திருக்கேதீச்சரத்தில் போர்த்துக்கேயர் செய்த கொடுமைகளைக் கண்டு யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த அரசன் சினங் கொண்டான். பழிக்குப் பழிவாங்க எண்ணினான். ஆனால் அவன் முயற்சி அடக்கி யொடுக்கப்பட்டது. யாவும் படுகொலையில் முடிந்தது. அதைத் தொடர்ந்து மேலும் நடந்த செயல்கள் அன்றைய சமய நிலையில் சீரழிவையும் ஒழுக்கத்தின் இழிவையும் காட்டுவன என்றே கூறலாம். ஆனால் இந்நிலையில் நாம் ஒன்றைத் திடமாகக் குறிப்பிடலாம். திருக்கேதீச்சரத்தின் வீழ்ச்சியோடு ஈழத் தமிழரின் ஆட்சியும் அழிந்தது. அதுவரை சுதந்திரமாக வாழ்ந்த மக்கள் தமது ஆட்சியை இழந்து அடிமைகளாயினர்.

இலங்கை வேந்தனான இராவணன் சிறந்த சிவபக்தன். அவன் கோணேஸ்வரத்து இறைவனிடம் நீங்காத அன்பு கொண்டிருந்தான். இராவணனின் மாமனான மயன் திருக்கேதீச்சரத்துக்குப் புராதன ஆலயத்தை அமைத்தான் என்பது மரபு. இவ்வாலயத்தில் எழுந்தருளியிருந்த இறைவனை இலங்கையில் போரிட்டு வாகை சூடிய இராமன் வழிபட்டுச் சென்றான் என்று கூறுவர். இலங்கையில் வெற்றிபெற்ற பின் அயோத்திக்குத் திரும்பிய அவன் வழியில் இராமேஸ்வரத்தில் ஆலயம் ஒன்றினை அமைத்தான் என்றும் சொல்வர். மேலும் மகாபாரதத்தின் கதாநாயகனான அருச்சுனன் இலங்கைக்கு வந்த போதுதான் மாதோட்டத்தை அடுத்திருந்த பகுதியை ஆட்சி செய்த நாக கன்னியான அல்லி அரசாணியை'ச் சந்தித்தான் என்றும் கூறப்படுகின்றது. மன்னார்த் தீவுக்குத் தெற்கேயுள்ள பெருநிலப் பகுதியில் பாழடைந்து காணப்படுவன அல்லிராணியின் கோட்டை என்று கூறுவர்.

மாந்தை கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து 'மகதித்தா' என்ற பெயர் உடையதாய் இருந்தது என்று புத்த இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இராமரும், அகத்தியரும், அருச்சுனனும் மாந்தைத் துறைமுகத்தில் இறங்கி இலங்கையில் புகுந்தனர் என்றால், விஜயனும் அவர்களுடைய நண்பர்களும் அவ்வாறே இங்கு வந்தனர் என்பதை நாம் ஒருவாறு ஊகித்து அறிய முடிகின்றது. இவை உண்மையானால் விஜயனோடு கூடிவந்த உபத்தீசன் என்ற பிராமணன் வழிபட்ட சிவாலயம் திருக்கேதீச்சரந்தான் என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். யாழ்ப்பாண வைபவமாலை, "விஜயன் கி. மு. ஆறாம் நூற்றாண்டில் இலங்கைக் கரையைச் சேர்ந்ததும் நெடுங்காலமாகப் பாழடைந்து கிடந்த திருக்கேதீச்சர ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டினான்" என்று எடுத்துரைக்கின்றது.

"ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளில் இலங்கையில் தமிழரின் ஆட்சி சிறப்படைந்தது. மக்கள் வளம் பெற்று வாழ்ந்தனர். எனவே நாயன்மார் காலத்தில் மாதோட்டம் சீரும் சிறப்பும் உடையதாய்த் திகழ்ந்தது" என்பது ராஜரட்ன கார என்ற சிங்கள நூலில் நின்றும் அறியக் கிடக்கின்றது.

திருக்கேதீச்சர ஆலயத்தின் புனருத்தாரண முயற்சி முதல் முதலில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களால் தொடங்கப்பட்டது. ஆனால் அன்று வாழ்ந்த சைவ மக்களின் உணர்ச்சிக் குறைவும், கிறிஸ்தவர்களுடைய பலத்த எதிர்ப்பும் நாவலருடைய முயற்சிக்கு உடனடியான பலனையளிக்கத் தடையாயின. ஆனால் நாவலரின் மறைவுக்குப் பின் பதினான்கு ஆண்டுகள் கழித்து அவருடைய கனவு நனவாகியது. அரசாங்க அதிபராக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய சேர் வில்லியம் ருவினம், சி. சி. எஸ். யாழ்ப்பாணக் கச்சேரியில் நிலங்களை 13.12.1893 இல் ஏலம் போட்டபோது நாற்பது ஏக்கர் காடடர்ந்து கிடந்த நிலத்தை யாழ்ப்பாணத்துச் சைவப் பெருமக்கள் விலைக்கு வாங்கினர். அன்று தொடக்கம் திருக்கேதீச்சர ஆலயப் புணருத்தாரண வேலைகள் தொடங்கின என்று கூறலாம். சேர் வில்லியம் ருவினம் தமது ஆட்சி அறிக்கையில் திருக்கேதீச்சரத்து ஆலயத்தின் பழைய மகிமையைக் குறிப்பிட்டுள்ளார்.

திருக்கேதீச்சரம், மகாதீர்த்தம், மாதோட்டம் அல்லது மாதோட்டை" என்ற (See Royal Asiatic Society Journal Volume No 35) தலைப்பில் 1887 ஆண்டு நவம்பர் மாதம் 7ம் நாள் திரு. W.J.S. போக் என்பவரால் படிக்கப் பெற்ற அறிக்கையிலிருந்து, புராதன ஆலயமான திருக் கேதீச்சரத்தின் நிலைமையைப் பற்றித் திட்டவட்டமான சில உண்மைகளை நாம் அறிய முடிகின்றது.

இப் பழைய நகரில் உடைந்த சில சிற்பங்களின் பகுதிகளையும், ஓடுகளையும், செங்கட்டிகளையும், மட்பாண்டங்களையும் தவிர வேறு எதுவும் நிலத்தின்மேல் இல்லை. பழைய வீதிகளின் அறிகுறிகளும், இரண்டொரு கிணறுகளும், செங்கட்டிக் கட்டிடங்கள், கோயில்கள் என்பவற்றின் அத்திபாரங்கள் என்பனவும் காணப் படுகின்றன. குன்று ஒன்றின் மத்தியில் செங்கட்டியால் அமைந்த பழைய அத்திபாரம் ஒன்று இருக்கின்றது. இவ்விடத்திலேயே முக்கிய நகரின் பெரும் பகுதி இருந்திருக்க வேண்டும். பழைய கிணற்றுக்கு அண்மையில் ஆலயத்தின் வாயில் இருந்திருக்கலாம்" என்று அவர் கூறினார்.

ஆனால் அந்தக் கூட்டத்தில் இருந்த சேர் பொன். இராமநாதன் அவர்கள் குறித்த அறிக்கையின் ஒரு பகுதிக் கருத்தை மறுத்துரைத்து விரிவான விளக்கத்தோடு இந்துசமய அடிப்படையில் அந்த இடத்தின் அமைவைத் தெளிவுபடுத்தினார். மேலும், அவர் பழைய கட்டிடங்கள் இருந்தவிடம் நகருக்குப் புறம்பானது என்றும், அவை ஆலயத்தின் உடைமைகள் என்றும் எடுத்துக் காட்டினர். அங்கு ஆலயத்தின் ஆட்சிக் குழுவினர், அடியார்கள், வேலையாட்கள் என்பவர்கள் வாழ்ந்தனர். அன்று திருக்கேதீச்சரத்துக்கு ஆலயத்தைச் சூழ்ந்து இருந்த அகழியின் அமைவு முக்கியமான தொன்றெனலாம். அங்கே இரண்டு அகழிகள் அமைந்திருந்தன. ஓர் அகழி கடல் நீரையும், மற்றது நன்நீரையும் உடையனவாய் இருந்தன. கோயிற் சொத்துக்களைப் பாதுகாக்கவே அகழிகள் அவ்வாறு அமைக்கப்பட்டிருந்தன போலும் !

பிரதான ஆலயத்தின் பாழடைந்த மூலப் பகுதி 1894ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. அவ்வாறு கண்டு அறிவதற்குக் கோயில் நிலத்தில் அமைந்திருந்த சோழர் காலக் கிணறு ஒன்றும், போர்த்துக்கேயர் காலத்திற்கு முன் வழிபடப்பட்ட சிவலிங்கம் ஒன்றும், நந்தி ஒன்றும், கணேசரின் உருவம் ஒன்றும் உதவியாயின.

ஈழத்துச் சைவப் பெருமக்களின் விருப்பத்திற்கு இணங்க, பெனாரிஸிலிருந்து மகிமை பொருந்திய சிவலிங்கம் ஒன்று கொண்டு வரப்பெற்றுத் திருக் கேதீச்சரத்து ஆலயத்தில் குடமுழுக்குச் செய்யப்பட்டது என்று இராமேஸ்வரத்திலுள்ள வரலாற்றுக் குறிப்புக்களால் அறியக் கிடக்கின்றது. அந்த மூர்த்தியே இன்றைய ஆலயத்தின் ஆதிமூலத்தில் அமைந்து திகழ்கின்றது. புராதன ஆலயம் இருந்த இடத்தில் 1903 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆம் நாள் சிறிய கோயில் ஒன்று கட்டப்பட்டது. (See the Jaffna Hindu Organ of the day for description of the ceremony)

இன்றும் அம்மையும் அப்பரும் அமர்ந்து அருள்புரியும் ஆலயம் முதலாவது உலகப் போருக்குப் பின் மன்னாரில் தங்கியிருந்த யாழ்ப்பாணத்து அரசாங்க உத்தியோகத்தர்களால் கட்டப்பெற்றது. இவ்வாறு அமைந்த ஆலயம் காலப்போக்கில் புனருத்தாரணம் எதுவுமின்றிச் சிதைந்தபோது 1952 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் புதுப்பிக்கப்பட்டுக் குடமுழுக்கு விழாவும் நடைபெற்றது. இப்பணியினை 1948 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ம் நாள் கொழும்பிலே கூடிய இந்துக்களால் நிறுவப்பெற்ற 'திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபையார்' செய்தனர். குடமுழுக்கு, விழாவின் பின் பிரதான ஆலயத்தில் பூசையும் வழிபாடும் இடையூறு எதுவுமின்றி இனிது நடந்து கொண்டிருக்க ஏனைய ஒன்பது பிரகாரங்களுக்குரிய ஆலயங்கள், இராசகோபுரம், திருமதில் என்பவற்றின் திருப்பணிகள் நடைபெற்று வந்தன. இன்றைய ஆலயத்தின் அமைப்பு பழைய மரபினைத் தழுவி, சமயத்திலும் சிற்பத்திலும் ஆற்றல் நிறைந்த தென் இந்திய சிற்ப வல்லுனர்களால் தீட்டப்பட்டது. மேலும், ஆலயத்தின் தென்கிழக்குப் பக்கத்திலுள்ள வெளி வீதியில் உற்சவ மண்டபமும் (வசந்த மண்டபம்) அதைச் சார்ந்த கட்டிடங்களும் அமைக்கப்படும். இன்னும் அடியார்கள் ஆயிரக் கணக்கில் கூடி நின்று கண்டு களிக்கக் கூடியதாகத் தேரோடும் வீதி ஒன்று வெளிப்புறச் சுவருக்கு வெளியே பெருமளவில் அமையும், அதனைச் சூழ்ந்த பகுதிகள் ஏனைய வீதிகளுக்கு ஒதுக்கப்படும். அங்கே பூந்தோட்டங்களும், அழகிய சோலைகளும், மடங்களும் சத்திரங்களும், அந்தணர், அடியார்கள், வேலையாட்கள் என்போர் இருக்கும் இல்லங்களும் அமையும். குருகுலப் பாடசாலை ஒன்றும், உயர்ந்த சமயப் படிப்புக்குக் கல்லூரி ஒன்றும், துறவிகள் தங்கி இளைப்பாறும் சாலை ஒன்றும் இடம் பெறும். குருகுலப் பாடசாலை இப்போதே ஆரம்பமாகியுள்ளது. அனாதைக் குழந்தைகள் இல்லத்தோடு இணைந்த மகளிர் நிலையம் ஒன்றும் நிறுவ ஏற்பாடாகியுள்ளது.

சார்வரி ஆண்டு ஐப்பசித் திங்கள் 15ம் நாள் (31. 10. 60) திருக்கேதீச்சரத்து வரலாற்றிலே முக்கிய புனித தினமாகும். அன்று, திருக்கேதீச்சரத்து ஆலயச் சுற்றுப் பிரகாரத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த ஆலயங்களில் மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து குடமுழுக்கு நடந்தது. புராதன மகாலிங்கம், விநாயகர், சுப்பிரமணியர், நடராசர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளுக்கு ஓம மண்டலங்களோடு கூடிய கிரியா முறைகளமைந்த மகா கும்பாபிஷேகம் அப்புனித நாளில் இனிது நிகழ்ந்தது. குடமுழுக்குச் செய்யப்பெற்ற மகாலிங்கம் மிகவும் பழமையானது. இவ்விழாவில் நூற்றுக்கணக்கான சிவநேயச் செல்வர்கள் கலந்து திருக்கேதீச்சர நாதரின் இன்னருளைப் பெற்று ஏகினர்.

சுத்தமான வெண்கலத்தாலும் தகரத்தாலும் கலந்து செய்யப் பெற்ற மணி ஒன்று இலண்டனிலுள்ள பிரபலமான வார்ப்புத் தொழிற்சாலையில் செய்யப் பெற்றுக் கப்பலில் வந்து கொண்டிருக்கின்றது. நாலடி விட்டத்தில் நுட்பமாக வார்க்கப்பட்ட அந்த மணி சிறந்த ஓசை உள்ளதாய் இருக்கும். அது ஒரு தொன் 3 அந்தர் 1 குவாட்டர் 26 இறாத்தல் நிறையுடையது. மொத்தத்தில் முழுதும் தழுவிய அதன் அளவு 50" – 50" – 50", அந்த மணிக்கு ஏற்ற உயரமும் உறுதியுமுள்ள மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்று கட்டப்படுகின்றது. அடுத்த திங்களில், திருவெம்பாவைப் பூசையின்போது ஏறக்குறைய கடல் மட்டத்திலிருந்து 75 அடி உயரத்தில் அந்த மணியோசை மன்னார்ப் பகுதியைச் சுற்றிப் பல மைல் தூரத்தில் வாழும் மக்களை விழித்தெழ வைத்துத் திருக்கேச்சரத்து இறைவனை வழிபட வைக்குமன்றோ !

பத்தாண்டுகளாகத் திருக்கேதீச்சர புனருத்தாரண சபையார் செய்து வந்துள்ள அரும்பணிகளை அவ்வாலயத்தைத் தரிசிக்கும் அடியார்கள் நேரில் கண்டு கொள்வர். திருக்கேதீச்சரத்திற்கு இறைவனைத் தரிசிக்க வரும் அடியார்கள் தங்குவதற்கான மடங்களையும், எளிதாகப் போக்குவரத்துச் செய்வதற்கான தார் இட்ட வீதிகளையும் அங்கு பார்க்கலாம். அல்லாமலும் குழாய்த் தண்ணீர் வசதியும் திருக்கேதீச்சரத்தில் செய்யப்பட்டுள்ளது. ஒழுங்கான பஸ் போக்குவரத்தும் திருக்கேதீச்சரத்தில் இருக்கின்றது. கடைகளும், தொலைபேசியோடு கூடிய அஞ்சலகம் ஒன்றும் அங்கே நிறுவப்பட்டுள்ளன. மின்சார வசதியும் உண்டு.

சைவசமயத்தின் சின்னமாகத் தமிழ்ப் பண்பாட்டின் அறிகுறியாகத் தமிழ் மொழியின் அடையாளமாகத் திருக்கேதீச்சரம் மன்னாரில் திகழ்கின்றது. அங்கே அம்மையப்பராக அமர்ந்து இன்னருள் புரியும் இறைவனை வாழ்வில் ஒரு முறையாவது தரிசித்து வழிபட வேண்டியது ஒவ்வொரு ஈழத்துச் சைவர்களதும் கடமையாகும்.

"தொண்டர் நான்தொறும் துதிசெய அருள்செய்
கேதீச்சரமதுதானே"

நன்றி : திருக்கேதீஸ்வரம் சைவ மகாநாட்டு மலர் - 1960

# நித்திலமாகவே நிதம் ஒளிர்வாய்

சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியே
சிந்தை குளிர்ந்துனை வாழ்த்துகின்றேனே.
சித்தி விநாயகர் ஆலய முன்றலில்
நித்திலமாகவே நிதமும் மிளிரும் ( எம் சித்தி விநாயகர்)

பாரா முகமாய் பலரும் மறந்தே
தீராத் துயரால் கைத்த நம் கூடம்
சோரா துழைக்கத் துணிந்தோர் பலரின்
ஒயா உழைப்பால் உயர்ந்தே ஒளிரும் (சித்தி விநாயகர்)

எம் மதமும் எமக்குச் சம்மதமாம்
மும் மதமும் இங்கு சங்கமமாம்.
நிம்மதியும் நிறைவுகளும் எய்திடவே
நிதம் பாடுபடும் (எம் சித்தி விநாயகர்)

எத்தனை கலைகள் இப்புவி மீதோ
அத்தனை கலைகளும் அமுதாயளிக்கும்
உத்தம அதிபர் உயர்தகு குருவோர்
பக்தி நிறைந்த மாணவர் சூழ (எம் சித்தி விநாயகர்)

- கலைப்பித்தன் -

## உதைப்பந்தாட்ட அணியினர் - 1999




இருப்பவர்கள் : எஸ் உதயகுமார், எஸ். றெக்ஸ் அருள் சேநன் *(பயிற்றுவிப்பாளர்)*, *(அதிபர் சிரேஷ்ட)* ஏ. ஐ. தயானந்தராஜா, *(அதிபர் கனிஷ்ட)*, எஸ். சண்முகலிங்கம், செல்வி ரி. சிந்தாத்துரை *(உடற்கல்வி ஆசிரியர்)*, வி. யூட்சன் றோச்.

நிற்பவர்கள் : எஸ். அன்ரன் றொபின், ரி. விக்னராஜா, எஸ். சந்திரகாபன், ரி. சிவபாஸ்கரன், ஆர். சுஜித்ரன், என். அன்ரனிறோச், தயானந், ஏ. ஆனந்தராஜா.

## வலைப் பந்தாட்ட அணியினர்



இருப்பவர்கள் : கே. தட்சாயினி, எஸ். றெக்ஸ் அருள் நேசன் *(பயிற்றுவிப்பாளர்)*, அதிபர் *(கனிஷ்ட கல்லூரி)*, *அதிபர் சிரேஷ்ட கல்லூரி)*, செல்வி ரி. சிந்தாத்துரை *(உடற் பயிற்சி ஆசிரியர்)*, செல்வி. பி. கோகிலா.

நிற்பவர்கள் : கே. தாட்சாயினி, பி. ஜெயமாலதி, எஸ். கஜேந்திரராணி, எம். அனந்த சுகிர்தவதி, வி. விக்கினேஸ்வரி, எம். கீதாஞ்சலி

கீழே இருப்பவர்கள் : எஸ். சசிகலா, எஸ் நிர்சாந்தினி

## மென்பந்துத் துடுப்பாட்ட அணியினர் - 1999



இருப்பவர்கள் : எஸ். இரவிச் சந்திரன்(தலைவர்), திரு. எஸ். றெக்ஸ் அருள்நேசன், *(பயிற்றுவிப்பாளர்)*, *அதிபர் (கனிஷ்ட)*, எஸ். சண்முகலிங்கம், *(அதிபர் சிரேஷ்ட)*, ஏ. ஐ. தயானந்தராஜா, செல்வி ரி. சிந்தாத்துரை, பர்காத் *(உபதலைவர்)*
நிற்பவர்கள் : ஜே. ரவணகுமார், எஸ். உதயகுமார், ஏ. ஆனந்தராஜா, பி. சசிகுமார், ஆர். சுஜித்ரன், ரி. சிவபாஸ்கரன், எஸ். வாஜீப், ஆர் நிஷாந்தன், எஸ். கெங்காதரன்.

## எல்லே அணியினர் - 1999



இருப்பவர்கள் : என். விஜயலதா, திரு. எஸ். றெக்ஸ் அருள்நேசன், *அதிபர் (சிரேஷ்ட கல்லூரி)*, *அதிபர் (கனிஷ்ட கல்லூரி)*, செல்வி, ரி. சிந்தாத்துரை *(உடற்பயிற்சி ஆசிரியர்)*, ஏ. ஜெனீற்றா.
நி. இடமிருந்து வலம் : கே. தாட்சாயினி, பமீலாசெறின், எஸ். வதனாஎலியட். எஸ். நிர்ஷாந்தினி, சுமல்டா, எஸ். சிவஜனனி, எஸ். இந்துப்பிரியதத்ஷினி, நாகபாலினி, கீதாஞ்சலி
நி. (இரண்டாம்வரிசை : சியாமளா, கல்பனா, கே. தாட்சாயினி, எஸ். சசிகலா, பி. ஜெயமாலதி, பி. கோகிலா, எம் அனந்த சுகிர்தவதி, எஸ். நித்தியரூபா, வி. விக்கினேஸ்வரி.
கீழ் இருப்பவர்கள் :எம். இவோன் சுதர்சினி, கே. சந்திரகலா,

# பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - 1999



இருப்பவர்கள் இடமிருந்து வலம்:

திருமதி. வி. ஸ்ரீஸ்காந்தா, திரு. வி. செல்வரட்ணம், திரு. எஸ். பிருந்தாவனநாதன் *(செயலாளர்)*, திரு. எஸ். கனகசிங்கம், திரு. ஏ. ஐ. தயானந்தராஜா *(தலைவர்)*, திரு. எஸ். சண்முகலிங்கம் *(பொருளாளர்)*, திரு. எஸ். எஸ். இராமகிருஷ்ண, திரு. எஸ். மதியாபரணம், திரு. எஸ். யூ. சந்திரகுமாரன், திருமதி. பி. தனேஸ்வரன்.

நிற்பவர்கள் இடமிருந்து வலம்:

திரு. வே பிரபாகரன், திரு. ஆர். ஜெயமனோகர், திரு. தி. மகேசன், திரு. ஜீ. யோகநாதன், திரு. செ. விஜயன்.

ஏனைய உறுப்பினர்கள்:

திரு. எம். ரவீந்திரன், திரு. பி. இரகுநாதன், திரு. எஸ். கணபதிப்பிள்ளை, திரு. எஸ். நசரேனு, திருமதி. எஸ். ஜெகதீஸ்வரன், திரு. வி. பி. மாணிக்கவாசகர்.

# பழைய மாணவர் சங்கம் - 1999



இருப்பவர்கள் இடமிருந்து வலம்:

திரு. ஐ. யோகநாதன், திருமதி. எம். அமிர்தலிங்கம், திரு. என். சரச்சந்திரன் *(செயலாளர்)*, திரு. எஸ். சண்முகலிங்கம் *(தலைவர்)* திரு. ஏ. ஐ. தயானந்தராஜா (போசகர்), திரு. ஏ. கதிரமலை, திரு. எஸ். பிருந்தாவனநாதன், திரு. V. பிரபாகரன் *(பொருளாளர்)*

நிற்பவர்கள் இடமிருந்து வலம்:

செல்வி ஆர் கலைவதனி, செல்வன் எஸ். சிவகரன், திரு. கே. பாலச்சந்திரன், திரு. வி. மகேந்திரன், திரு. ஆர். ஜெயமனோகர், திரு. எம். வேலாயுதம், திரு. எம். வேலுச்சாமி, செல்வி கே. புவனேஸ்வரி,

ஏனைய உறுப்பினர்:

செல்வி ஏ. சுகந்தி

# மன்னார் மாவட்டத்தின் மட்பரம்பலும் பயிர்ச் செய்கையும்

இலங்கையில் வட மாகாணத்தில் அமைந்துள்ள மன்னார் மாவட்டந் தனித்துவமான காலநிலைப் பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. குறைவறள் வலயக் காலநிலையை அனுபவிக்கும் மன்னார் மாவட்டம், தீவு, பெருநிலப்பரப்பு என இரு நிலப்பரப்புக்களை உள்ளடக் கியுள்ளது. மன்னார் தீவு இந்தியாவிற்கு அண்மையில் அமைந்துள்ளமையும், சமுத்திரத் தொடர்பும் காலநிலையில் தாக்கங்களை அனுபவிக்கக் காரணமாகின்றது. இம் மாவட்டத்தின் காலநிலை ஆனது மட்பரம்பலையும் இயற்கைத் தாவரப் பரம்பலையும் நிர்ணயித்துள்ளது. அது மட்டுமன்றி மன்னார் மாவட்டத்தின் தாய்ப் பாறையின் அமைப்பு, இடவிளக்கவியல் தன்மைகள், தாவரங்கள், காலம் போன்ற காரணிகளும் மண்ணாக்கத்தில் செல்வாக்குச் செலுத்து கின்றன. மன்னார் மாவட்டத்தின் பயிர்ச்செய்கையும், மண்வகைகளும் பற்றி நோக்குமிடத்து இரண்டுக்குமிடையில் உள்ள தொடர்பு தெளிவாக விளங்கும்.

இலங்கையின் பல்வேறுபட்ட மண்வகைகள் காணப்பட்ட போதும். மன்னார் மாவட்டத்தின் மட்பரம்பலை நோக்கின் பிரதானமான 6 வகைகளை அவதானிக்க முடியும். அவையாவன,

1. கார உவர் மண்
2. செம்மஞ்சள் லற்றசோல்
3. களி மண்
4. செங்கபில நிற மண்
5. வண்டல் மண்
6. உவர் மண்.

இம்மட் பரம்பல் ஒவ்வொன்றையும் தனித்தனியாக நோக்குமிடத்து அவை பரந்து காணப்படும் பகுதிகள், தன்மைகள், பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் என்பன பற்றி அறிய முடியும்.

### 1. கார உவர் மண் (20.6%)

பரம்பல் : மாந்தை, விடத்தல் தீவு, கடல்சார் பகுதிகள்

தன்மை : கரையும் தன்மையுள்ள உப்புக்களைக் கணிசமான அளவு கொண்டது. அதிகமாக ஆவியாகும் இடங்களில் வன்மையான உப்புக் கரைசல்கள் மேலெழுகின்றன. மேற்பரப்பில் நரை நிறமுடைய ஒரு பெருக்கை உருவாக்கும்.

பொசுபரசு அதிகம் கொண்டது. பொட்டாசியம், நைதரசன், கல்சியம், மக்னீசியம் போன்ற கனிப் பொருட்கள் குறைவாகக் காணப்படுகின்றன.

பயிர்ச்செய்கை : வரட்சியைத் தாங்கி வளரக் கூடிய பயிர்வகைகள் பயிரிடப்படுகின்றன. உதாரணம் : மாதுளை, தென்னை, பீற்றூட். கொய்யா.

### செம்மஞ்சள் லற்றசோல் (27.9%)

பரம்பல் : பாலம்பிட்டி, பண்டிவிரிச்சான், பெரியமடு, மறிச்சிக்கட்டி, இரணை இலுப்பங்குளம்.

தன்மை : பொசுபரசு மிகக் குறைவு ஏனைய சேதனப் பொருட்களும் ஓரளவு குறைவு. செம் மஞ்சள் நிறமுடைய இம்மண் சிறிதளவு நீர் பட்டாலும் பசைத்தன்மை உடையது மெல்லிய துணிக்கை உடைய மண் நீரை நன்கு உறிஞ்சி வைத்திருக்கும். இம்மண் உள்ள இடங்களில் தரைக்கீழ் நீர் நன்கு ஊற்றெடுக்கும்.

பயிர்ச்செய்கை: நீர்வளமுடைய இம்மட் பிரதேசத்தில் பயிர்ச்செய்கை நல்ல விளைச்சலைத் தரும் பயிர் செய்யப்படும் வகைகளுக்கு உதாரணம்: மிளகாய், வெங்காயம், பயறு, கௌப்பி, உழுந்து, தேசி, தோடை, மற்றும் மரக்கறிகள்.

### களிமண் (10.3%)

பரம்பல் : அடம்பன், உயிலங்குளம், முருங்கன், மாந்தை, விடத்தல்தீவு, நானாட்டான்.

தன்மை : 0.00 உமி.மீ இலும் குறைந்த விட்டமுள்ள மிகச்சிறிய கனிப்பொருள் துணிக்கைகளைக் கொண்டானது. சிக்கலான இரசாயன அமைப்புடைய திணிவாக மாறும். நைதரசன், பொட்டாசியம், கல்சியம், மக்கினிசியம், பொசுபரசு போன்ற மூலகங்களும் காணப்படுகின்றன. சேதனப் பொருட்கள் மிக அதிகமாகக் காணப்படுவதால் மிகவும் வளமுடை மண்ணாகக் காணப்படுகின்றது.

பயிர்ச்செய்கை : நெல் சிறப்பாக விளைவிக்கப்படுகிறது. பயறு, கௌப்பி, இறுங்கு, சோளம், குரக்கன், தினை, சாமை போன்ற பயிர்களும் கெக்கரி இனப் பயிர்களான சுரை, வத்தகை என்பனவும் பயிரிடப் படுகின்றன.

### செங்கபில நிற மண் (23.5%)

பரம்பல் :– பாலம்பிட்டி, மறிச்சிக்கட்டி, தட்சனா மருதமடு, சிலாவத்துறை, நானாட்டான் மற்றும் பல இடங்கள்.

*10. தானம் கொடுப்பான் தகை ஆண்மை முன் இனிது.*

தன்மை : பொட்டாசியம், கல்சியம், மக்னீசியம், போன்ற கனிப்பொருட்கள் அதிகமாகக் காணப் படுகின்றன. சேதனப் பொருட்களும், நைதரசன் பொசுபரசு போன்ற கனிப் பொருட்களும் குறைவாகக் காணப் படுகின்றன. மக்கு, பரல் என்பன பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடுகின்றது.

பயிர்ச்செய்கை:என்றும் பசுமையான கலப்புக் காடுகள் காணப்படும். இம் மண்வகையில் கூடுதலாக நெல், உப உணவுப் பொருட்களான கடலை போன்ற பயிர்கள், மிளகாய், மரக்கறிப்பயிர், அவரைப் பயிர்கள் போன்றன பயிரிடப்படுகின்றன.

வண்டல் மண் : (11.8%)

பரம்பல் : அருவியாற்றிற்கு அருகில் படிந்து காணப்படுகிறது. சிலாவத்துறை, விடத் தல்த்தீவு, பெருங்கண்டல் பகுதிகளில் சிறப்பாகக் காணப் படுகின்றன. பொதுவாக ஓடும் நீரினால் கொண்டு வந்து படிய விடப்படும் தாழ்வான சமவெளிகளில் இவ்வண்டல் மண் அதிகம் காணப்படுகின்றது.

தன்மை : மணல், மண்டி, களிமண் ஆகியவற்றைக் கொண்ட ஒரு கலவையிலிருந்த உருவானது. மிக நுண்ணிய அமைவு டையதாய் மட்டமான தகடுகளாய் படிவதால் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற மண். "இளம் படிவு" ஆதலால் அதிக கனிப் பொருட்களுடையது உக்கல் அதிகம் கொண்டது.

பயிர்ச்செய்கை:இங்கு எல்லாப் பயிரினங்களும் சிறப்பாக வளர்ந்து பயன் தரும். ஆயினும் விசேடமாக உப உணவுப் பயிர்கள், மிளகாய், மரக்கறி, புகையிலை, வெங்காயம், போன்றன செய்கை பண்ணப் படுகின்றன.

மணல் மண் : (5.9%)

பரம்பல் : மன்னார் தீவுப் பகுதியிலும் கடற்கரையை அண்டிய பகுதியிலும் சிறப்பாகக் காணப்படுகின்றது. (தலைமன்னார், தாழ்வுபாடு, பேசாலை).

தன்மை : சேதனப் பொருட்கள் மிகக் குறைவானது. பொட்டாசியம், கல்சியம், மக்னீசியம் ஓரளவுள்ளது. துணிக்கைகளில் விட்டம் 1/2 மி.மீ – 1/4 மி.மீ இடைப்பட்டது. நீர் விரைவாக வடிந்தோடும். போசனை குறைந்த மண் வகை அடிக்கடி பசளை இடவேண்டும். விரைவாகச் செப்ப மடையும்.

பயிர்ச்செய்கை:தென்னை, மரமுந்திரிகை, ஏனைய உப உணவுப் பயிர்கள்.

ஆகவே மேலே தரப்பட்ட மண்வகைகள் ஆறும் அவற்றின் தன்மைக் கேற்பவும் பயிர்ச்செய்கை நடவடிக் கைக்குட்பட்டு வருகின்றமை தெளிவாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மன்னார் மாவட்டத்தின் மொத்த பரப்பிளவில் அதிக அளவு பரப்பில் அதாவது (27.9%) 55, 776 ஹக்டெயரில் செம்மஞ்சள் லற்றசோல் ஐயும், 5.9 அதாவது 11,795 ஹக்டெயரில் மணல் மண்ணையும் கொண்டமைந்துள்ளது. இவ்வொவ்வொரு மண்வகையையும் பயிருக்கு வேண்டிய நீரையும், பொருட்களையும் தடையின்றி வழங்கும்போது பயிர்ச்செய்கைக்கு உகந்ததாக அமையும்.

எனவே மன்னார் மாவட்டத்தில் மண் வகைகளுக்கு ஏற்ற பொருத்தமான பயிர் வகைகளும், அவை செழிப்பாக நடை பெற மேலதிக நீர்ப்பாசன, தொழில் நுட்ப முறைகளையும் கையாழுமிடத்து மாவட்டத்தின் உணவுத் தேவையில் பெருமளவு பங்கினை நாமே உற்பத்தி செய்து தன்னிறைவு நிலையை அடைய முடியும்.

*ஆக்கம்* : செல்வன். த. விக்னேஸ்வரன்
*12ம் தரம் (கலை)*

## முத்தமிழ்

அவைக்களத்துச் செல்லுதற்குரிய வரம்பினமைந்த ஆங்கில மொழியினை வேந்தன் மொழி என அம்மொழிப் புலவர் விதந்து கூறுவர். அப்பரிசே யாமும் அவைக்களத்திற் செல்லுதற்குரிய வரம்பினைமைந்த தமிழினைப் பாண்டியன்றமிழ் என்போம். 'எது தமிழ்' ? என வினவுவாருக்குப் 'பாண்டியன்றமிழே தமிழ்' என்பது விடையாகும். அதுவே நிலைபேறுடையது. அறிஞர் போற்றுதற்குரியது. பொருள் வருவாயொன்றினையே கருதி மனம்போனவாறு மரபு தவறியெழுதும் மொழிவழக்கானது மழைக் காலத்திலே தோன்றி அக்காலங் கழிய மறைந்து போகின்ற சிறு பூடுகளைப்போல நிலைபேறில்லாதது. நிலைபேறுடைய உண்மை. அழகு, செம்மை என்னும் இவை தம்மையே அறிஞரது உள்ளம் என்றும் அவாவிநிற்கும். முத்தமிழுள் இயற்றமிழானது உண்மையினையும் இசைத்தமிழானது அழகினையும் நாடாகத் தமிழானது செம்மையினையும் சிறப்புற வெளிப்படுத்திக் காட்டுவன. பேருண்மையும் பேரழகும் வரம்பு கடந்த செம்மையும் இறைவனுக்குரிய குணங்களாகச் சமய நூல்களாற் கூறப்பட்டன. இவைதம்மை வெளியிட்டுரைக்கும் ஆற்றலுடைமையினாலேதான் மொழிகள் தெய்வத்தன்மையுடையவாகக் கருதப்பட்டன.

உயர்திரு விபுலானந்த அடிகளார்.

# இலங்கையில் இந்து சமயக் கல்வி வளர்ச்சியும் அதற்கு உதவிய பெரியார்களும் தாபனங்களும்

க. அருணாசலம்
*முன்னாள் அதிபர், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி,*
*செயலாளர் வட கீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கச் சம்மேளனம்*

இலங்கையில் இந்து சமயக் கல்வி வரலாறு மிகப் பழமை வாய்ந்த ஒன்றாகும். இலங்கையில் வந்து முதல் குடியேறிய ஆரியர் இந்துக்களானதால் அதன் கால எல்லை ஆரியர் வருகை தொடக்கம் இன்று வரையும் நீண்டுள்ளது. காலத்துக்குக் காலம் நடைபெற்ற தமிழ்நாட்டு படையெடுப்புக்களுடன் வந்துகுடியேறியவர்களாலும் தனிப்பட்ட முறையில் வந்த தமிழ் மக்களும் கல்வியில் கவனம் செலுத்தியதாகத் தெரிகிறது. அவர்கள் இங்கு கொண்டுவந்த கட்டிடக்கலை, ஓவியம் போன்ற கலைகள் சமய அடிப்படையிலேயே இருந்தன.

தமிழர் வடக்கே தனி இராச்சியம் அமைத்தும், கல்விக்கு உகந்த இடம் அளித்தனர். செகராசசிங்கன், பரராசசிங்கன் போன்ற அரசர் காலத்தில் எழுந்த பலதரப்பட்ட நூல்கள் இதற்கு எடுத்துக் காட்டு. தமிழர் ஆட்சி மறைவுற்று அந்நியரான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரது ஆட்சி நிலவிய காலத்தில் இந்து சமயக் கல்வி அரசியல் ஆதரவற்ற நிலையை அடைந்தது. போர்த்துக்கேயர் தமது ஆதிக்கத்தை நிலைபெறச்செய்யும் நோக்குடன் தமது சமயத்தையும் மக்கள் மீது திணிக்க முற்பட்டனர். இந்த நோக்கத்துடன் இலங்கையின் கரையோரப் பகுதிகளிலிருந்த இந்துக் கோயில்கள் அனைத்தையும் தரைமட்டமாக்கினர். ஒல்லாந்தர் காலத்தில் அவர்கள் விதித்த சட்டங்கள் இந்து சமயத்தவர்களைத் துன்புறுத்துவதாயிருந்தன. இதனால் இந்து சமயக் கல்வி வளர்ச்சியில் இக்காலத்தை இருள் சூழ்ந்த காலம் எனலாம்.

ஆங்கிலேயர் ஒல்லாந்தரிடமிருந்து ஆட்சியைப் பெற்றதும் இலங்கை மக்களின் நன்மதிப்பைப் பெற்றுத் தமது ஆட்சியை நிலைபெறச் செய்யும் எண்ணத்துடன் பௌத்த, இந்து, கத்தோலிக்க சமயத்தவர்களது பொது வழிபாடு களிற்கு எதிராக ஒல்லாந்தர் விதித்த சட்டங்களை நீக்கினர்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் இந்து சமய விரோத நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்தாலும் இந்து மக்கள் தங்கள் சமய அனுட்டானங்களையும் வழிபாட்டு முறைகளையும் கைவிடவில்லை. அக்காலத்து கிறிஸ்தவ பாதிரிமாரது ஆவணங்களை நோக்கின் சைவ உற்சவ முறைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்பது புலனாகிறது.

திருமதி வின்சிலோ 1835இல் பதிப்பித்த அறிக்கை ஒன்றில் நல்லூர் கந்தசாமி கோயில் தேர்த்திருவிழா நிகழ்ச்சி வர்ணிக்கப்பட்டுள்ளது. இன்னுமொரு அறிக்கையில் சைவர்களது விரத நாட்கள், பிரதான சமய நாட்கள் பற்றிய விபரங்கள் உண்டு. ஆனால் மக்களின் கல்வி வளர்ச்சியில் முன்னேற்றம் காணப்படவில்லை.

இக்கால இந்துக்களின் கல்வி முறையை நோக்கின் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் மூலம் ஆரம்பக் கல்வியும் குருசீட முறையில் உயர்கல்வியும் மாணவர்களுக்குப் புகட்டப்பட்டன. இப்படியான குருசீட முறையில் புகட்டிய தனிப்பட்ட கல்விமான்களுக்கே இந்து சமயக் கல்வி முற்றாக வீழ்ச்சியடையாமல் காப்பாற்றிய பெருமை சேர்கிறது.

கல்வி வரலாற்றிலே 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வேறு ஒரு மாற்றமும் காணப்பட்டது. ஆங்கிலேயரின் வருகையுடன் ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் புரட்டஸ்தாந்து மத குருமார் பெருமளவில் வந்தனர். இவர்கள் இலங்கை மக்களுக்கு கல்வி அறிவு ஊட்டுவதில் பெரும் அக்கறை காட்டினார்கள். இதற்காக கல்வி நிலையங்களையும் அமைத்தனர். இவர்களுடைய உண்மை நோக்கம் மாணவர்கள் மூலம் மக்களை மதம் மாற்றுவதே.

அமெரிக்காவிலிருந்து வந்த மிசனரிமார்களே கல்வி வளர்ச்சியிற் கூடிய ஆர்வம் காட்டினர். இவர்கள் வட்டுக்கோட்டையில் 1823இல் ஸ்தாபித்த செமினரி உயர் கல்வியிக் கழகமாக விளங்கிற்று. போதனையைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் நடாத்திச் சமஸ்கிருதம், கிரேக்கம், தத்துவம், அளவையியல், கணிதம், வானசாஸ்திரம், விஞ்ஞானம் முதலிய பாடங்களைக் கற்பித்தனர்.

வெஸ்லியன் மிசன் திருச்சபை 1814இல் இங்கு வந்து யாழ்நகர், பருத்தித்துறை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஆங்கிலக் கல்வி போதிக்கும் பாடசாலைகளைத் தாபித்தார்கள். 1816ல் வந்த சேர்ச் மிசன் வேறு இடங்களில் கல்வி நிலையங்களை அமைத்தனர். தமிழ் மக்கள் கல்வி பெறும் நோக்கத்துடன் இத்தாபனங்களில் சேர்ந்தார்கள். ஆனால் அங்கு அவர்களைக் காத்திருந்தது மத மாற்றம்.

1833க்குப் பின்னர் ஆங்கிலக் கல்வி பெற கிறிஸ்தவ கல்வி நிலையங்களை அணுகியவர்களின் தொகை பெருகிற்று. அந்த வருடம் வந்த கோல்புறுக் குழுவினர் அரசாங்க பரிபாலன முறையில் மாற்றத்தைச் சிபாரிசு செய்து கீழ்மட்ட அரச பதவிகளை இலங்கை மக்களுக்கு வழங்கினர். இவற்றைப் பெற ஆங்கில அறிவு அவசியமாயிற்று. ஆங்கிலம் படிப்பதற்கு மிசனரிமார்களின் கல்வித் தாபனங்களை நாடவேண்டி இருந்தது. அப்படியானவர்கள் எல்லாம் மத மாற்றம் அடையவேண்டி இருந்தது.

### ஆறுமுகநாவலர் :-

இந்த மத மாற்றத்திற்கு எதிராக நாவலர் கிளர்ந்தெழுந்தார். சைவமக்கள் மத்தியில் ஒரு விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தினார்.

மினசரிமார்களின் மதப் பரம்பல் வேகத்தை பெருமளவு தணித்து தமிழர் மத்தியில் சைவப் பாரம் பரியத்தை நிலைநாட்டினார். ஆறுமுகநாவலர் வெஸ்லியன் பாடசாலையில் கல்வி கற்று அங்கு சில காலம் ஆசிரியராகப் பணியாற்றியவர். ஆகவே, நாவலர் கிறிஸ்தவ சமயம் பரப்ப மிசனரிமார் உபயோகித்த முறைகளை நன்கு அறிந்தவர். அதே முறைகளை கிறிஸ்தவ சமயம் பரவுதலைத் தடுத்து சைவ மக்கள் தங்கள் பண்பாட்டின் சிறப்பை உணரவைப்பதற்கு பின்பற்றினார். கிறிஸ்தவர் போன்று சைவ சமயத்தின் பெருமையை வலியுறுத்துவதற்குப் பிரசங்க முறையை அறிமுகம் செய்தார். சமயப் பிரசங்கங்களை வண்ணை வைத்தீஸ்வரர் கோயிலில் ஆரம்பித்து மற்றைய இடங்களிலும் செய்தார். வசன நடையை மேற்கொண்டு சமய நூல்களை எழுதித் தங்கள் சமயத்து உண்மை நூல் கருத்துக்களை சைவ மக்கள் எளிதில் விளங்கச் செய்தார்.

அவர் செய்த பெரிய தொண்டு கல்வித்தொண்டே. கல்விக் கொள்கை வகுத்து மாணவர்க்காகிய பால பாடங்கள் போன்ற நூல்களை இயற்றி ஒரு மாதிரிப் பாடசாலையையும் ஆரம்பித்தார். அவர் 1852ஆம் ஆண்டிலே தாபித்த வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை அக்காலத்தில் ஒரு மாதிரிப் பாடசாலையாக அமைந்தது. அது இன்றும் இயங்குகிறது.

இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையும் தனியக் கற்பித்துவந்த காலத்தில் சமய நூல்களை இன்றியமையாதனவாக்கிப் பண்பாட்டுப் பேணலுக்கு நாவலர் வழியமைத்தார். நாவலர் கல்வியில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தினார் என்றால் மிகையாகாது.

ஆங்கிலக்கல்வி கற்பதற்குச் சைவச் சூழலில் பாடசாலைகளை அமைக்கவேண்டிய அவசியத்தை அக்காலத்துப் பெரியார்க்கு உணர்த்துவதற்காகத் தானே ஆங்கிலம் மூலம் கல்வி கற்பிக்கும் ஒரு பாடசாலையை வண்ணார் பண்ணையில் நிறுவினார்.

### சைவ பரிபாலன சபை

நாவலர் தாபித்த ஆங்கிலப் பாடசாலை சில வருடங்களின் பின் மூடவேண்டியதாயிற்று. நாவலரின் மறுமலர்ச்சி இயக்கத்தினால் உந்தப்பட்ட சில பெரியார்கள் 1888இல் வண்ணார் பண்ணையில் சைவ பரிபாலனசபையை அமைத்தனர். இச்சபையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று ஆங்கிலக் கல்லூரி ஒன்று அமைப்பதாகும். இக்கல்லூரியை அமைப்பதில் பல இன்னல்களை அவர்கள் எதிர் நோக்கவேண்டி இருந்ததெனினும் அவர்கள் முயற்சி தோல்வியடையவில்லை. அச்சபையை அமைத்தவர்களில் ஒருவரான அப்புக்காத்து சி. நாகலிங்கம் ஏற்கனவே ஒரு பாடசாலையை நடாத்திவந்தார். இந்தப் பாடசாலையை வண்ணார்பண்ணைக்கு மாற்றி அதன் மாணவர்களை முதல் மாணவராகக்கொண்டு 1890ம் ஆண்டு இந்து உயர் தரப் பாடசாலையை நிறுவினார். சைவ பரிபாலன சபையினர் இப்பாடசாலையை நிறுவுவதில் கூட்டாக இயங்கினாலும், அவர்களுள் முன்னின்று உழைத்தவர் நாகலிங்கம் அவர்களே. அவரே கல்லூரியின் முதல் முகாமை யாளராகவும், நியமிக்கப்பட்டார்.

அவருக்குப் பக்கபலமாக இருந்தவர் பசுபதிச் செட்டியார். கல்லூரி ஆரம்பித்து ஒரு வருட காலத்தில் நெவின்ஸ் செல்லத்துரை அதிபராக நியமிக்கப்பட்டார். அவர் கிறிஸ்தவராயிருந்தாலும் சைவப் பண்பாட்டுக்கு மாறானவரல்லர். அக்காலத்துச் சிறந்த கல்விமான்களில் ஒருவர். வட மாகாணத்தின் கல்வியை உயரிய நிலைஅடைய உதவிய வட மாகாண ஆசிரிய சங்கத்தின் முதல் தலைவராக நீண்டகாலமாகப் பணியாற்றியவர். ஆகவே அக்காலத்துக் கல்வியின் நுணுக்கங்களை எல்லாம் அறிந்திருந்தார். முகாமையாளர் நாகலிங்கமும் அதிபர்

நெவின்ஸ் செல்லத்துரையும் இணைந்து செயலாற்றி இக்கல்லூரிக்குப் பலமான அத்திவாரம் இட்டனர். அதன் காரணமாகவே இன்று பௌத்தருக்கு ஆனந்தாக் கல்லூரி முதன்மை பெற்று விளங்குவது போல் இந்துக்களுக்கு யாழ் இந்துக் கல்லூரி முன்னணியில் உள்ளது.

### தனிநபர் நிறுவிய இந்துப் பாடசாலைகள்

யாழ் இந்து உயர் தரப் பாடசாலையை நிறுவிய சைவ பரிபாலன சபையினர் வட மாகாணத்தில் மற்றைய இடங்களிலும் சைவச் சூழலில் ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவத் தங்களது பத்திரிகையாகிய இந்து சாதனம் மூலம் ஆங்காங்குள்ள பெரியார்க்கு ஊக்கம் அளித்தனர். இதற்காக ஒரு இயக்கமே ஆரம்பித்தார்கள் எனலாம். இதனாலேயே அந்தக் காலப் பகுதியில் யாழ் குடா நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் பல தனி நபர்களால் ஆங்கிலப் பாடசாலைகள் ஆரம்பமாகின. சுழிபுரத்தில் 1876ல் கனகரத்தின முதலியார் ஆரம்பித்த பாடசாலை சிலவருடங்களில் ஆங்கிலப் பாடசாலையாக மாறிற்று. 1892ல் வெளிவந்த இந்து சாதனத்தின் ஒரு இதழ் சுழிபுரத்தில் கனகரத்தின முதலியார் நடாத்தும் ஆங்கிலப் பாடசாலை அரசு உதவிக்கு அங்கீகாரம் பெற்றுள்ளது என்று அறிவித்தது. அரசின் அங்கீகாரத்தைப் பெற்ற முதல் இந்துப் பாடசாலை இதுவே. இதுதான் இன்றைய விக்ரோறியாக் கல்லூரி. இன்னும் பல்வேறு பகுதிகளில் விளங்கும் பெரியார்கள் கூட்டாக இயங்கிப் பாடசாலைகளை அமைத்தனர். 1894ம் ஆண்டு விஜயதசமி தினத்தன்று கந்தரோடையில் கந்தையா உபாத்தியாயர் ஸ்கந்தவரோதயக் கல்லூரியையும் அளவெட்டியில் அருணாசலம் எனும் பெரியார் அருணோதயக் கல்லூரியையும் வட்டுக் கோட்டையில் அம்பலவாண நாவலர் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியையும் ஒரே நாளில் ஆரம்பித்தது இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. மகாஜனாக் கல்லூரி 1910ல் பாவலர் துரையப்பாபிள்ளையால் தெல்லிப்பளையில் ஆரம் பிக்கப்பட்டது. இதே போல் மற்றைய இடங்களில் புலோலியில், கரவெட்டியில், சாவகச்சேரியில், மானிப்பாயில், உரும்பராயில், காரைநகரில், புத்தூரில் இன்னும் வேறு இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் இன்று சிறந்த கல்லூரிகளாக விளங்குகின்றன.

### இராமநாதன்

இந்துக் கல்வி சிறப்புற தொண்டாற்றியவர்களில் சேர் பொன்னம்பலம் இராமநாதன் முக்கிய இடம் பெறுகிறார். சட்ட சபையில் கிறிஸ்த்தவ பாடசாலைகளில் இந்து மாணவர்க்கு கிறிஸ்தவம் கட்டாயமாகக் கற்பிப்பதற்கு எதிராகக் குரல் கொடுத்தவர் அவரே.

1890களில் எழுந்த பௌத்த கல்வி மறுமலர்ச்சி இயக்கத்துக்கு ஆதரவு கொடுத்து கொழும்பில் பௌத்த, இந்து பாடசாலை அமைப்பதற்கும் முற்பட்டனர். இந்த முயற்சி கைகூடவில்லை.

தன்னுடைய செலவிலேயே இரண்டு பெரிய கல்விக் கழகங்களை ஆரம்பித்தார். அவற்றில் ஒன்றுதான் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி. மற்றையது சைவப் பெண்கள் கல்விக்கென மருதனா மடத்தில் கட்டப்பட்ட இராமநாதன் கல்லூரியாகும்.

### சைவ வித்தியா விருத்திச் சங்கம்

1890–1920 ஆண்டுகளில் தாபித்த இந்துக் கல்வி நிலையங்கள் மக்கள் தொகை பெருகி வரும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குப் போதியனவாக இல்லை. பெரிய இந்துக் கல்லூரிகளிலுள்ள விடுதிகளுக்குக் கிராமங்களில் இருப் பவர்கள் தங்கள் பிள்ளைகளை அனுப்ப அவர்களிடத்தில் பணவசதியும் இருக்கவில்லை. ஆகவே கிராமங்கள் தோறும் ஆங்கில பாடசாலைகள் அமைக்கவேண்டியிருந்தது. சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர் வைத்தியலிங்கம் துரைசாமி முதலிய தலைவர்கள் இதனையிட்டு சிந்தனை செய்து செயலாற்ற 1923ம் ஆண்டில் சைவ விருத்தியா விருத்திச் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார்கள். இச்சங்கத்திலே வட கீழ் மாகாணங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சைவப் பெரியார்கள் இடம் பெற்றனர். இவர்கள் முயற்சியால் வடமாகாணத்தில் பல பாகங்களிலும் ஆங்கிலப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. இந்தப் பாடசாலை நிறுவியதில் கூடிய பங்களிப்பைச் செய்தவர், சங்கத்தின் நீண்டகாலச் செயலாளரும், சட்டசபை அங்கத்தவராய் இருந்த வருமான இந்து போட் இராசரத்தினம் அவர்களே. அந்நேரம் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமே அரசாங்க உதவி கிடைத்து வந்தது. எனவே காலத்துக்குக் காலம் சைவப் பெருங்குடி மக்களின் நன்கொடைகள், ஆசிரியர்களது காணிக்கைகள் போன்ற வற்றின் துணையுடன் நிலம் வாங்கி பாடசாலைகள், கட்டிடங்கள் ஏற்படுத்தி, ஆசிரியர் நியமனங்கள் செய்து புதிய பாடசாலைகளை மூலைமுடுக்குகள் எல்லாம் ஆரம்பித்தார். இவரின் சேவையின் பயனாக அரசினர் பாடசாலைகளைப் பொறுப்பேற்கும் பொழுது சைவ வித்தியா விருத்திச் சங்கம் 182 பாடசாலைகளைக் கையளித்தது. இச்சங்கம் ஒரு ஆசிரிய கலாசாலையையும் நிறுவித் தங்கள் பாடசாலைகளில் சேவை செய்வதற்கு ஆசிரியர்க்குப் பயிற்சி கொடுத்தனர்.

இராமகிருஷ்ண சங்கம்

இராமகிருஷ்ண சங்கத்தின் சேவையின் பெரும் பலனைப் பெற்றது கிழக்கு மாகாணமே. அங்கு பல பாடசாலைகள் இயங்கி வந்தாலும் 20ம் நூற்றாண்டு ஆரம்பம் வரையில் அவைகள் எல்லாம் கிறிஸ்தவர்களாலேயே நடாத்தப்பட்டன. இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் பண்டிதர் பூபாலபிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை போன்ற கல்விமான்கள் தனிப்பட்ட முறையில் பாடங்கள் சொல்லிக் கொடுத்து இந்து சமய உயர் கல்விக்கு ஊக்கம் அளித்தனர்.

இந்த நூற்றாண்டு ஆரம்பம் தொடக்கம் சில தனி நபர்களும் சில இந்துப் பாடசாலைகளை நிறுவினர். இவர்களுள் குறிப்பிடத்தக்க சேவை செய்தவர் முதலியார் கா. வ. மார்க்கண்டனாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள் முதலியார் மார்க்கண்டன் நிறுவிய பாடசாலைகளுள் காரைதீவு, மண்டூர், ஆரைப்பற்றை, ஆனைப்பந்தி பாடசாலைகளும் அடங்கும் என்பர். கல்லடி உப்போடையில் கல்விக்காக ஒரு கட்டிடமும் அவர் அமைத்தார்.

கிழக்கு மாகாணத்தில் சுவாமி விபுலானந்தர் இராமகிருஷ்ண சங்கம் மூலம் தனது கல்விச் சேவையை ஆரம்பித்ததும் மார்க்கண்டன் தனது பாடசாலைகளை அவரிடம் உவந்து அளித்ததுடன், அவருக்கு வேண்டிய வேறு உதவிகளும் செய்தார்.

சுவாமி விபுலானந்தர் நூலாசிரியராகவும், உரை ஆசிரியராகவும், அண்ணாமலை, இலங்கைப் பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகவுமிருந்து செய்த கல்விப் பணிகள் அனைத்தும் தமிழ் கூறும் நல்லுகம் நன்கு அறியும். கிழக்கு மாகாணத்தில் இவர் புகழ்சாற்றி நிற்பன இவர் அமைத்த திருகோணமலை இந்துக் கல்லூரியும் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயமுமே.

கொழும்பில் இந்து சமயக் கல்லூரி :-

கொழும்பிலே இந்து சமயச் சூழலில் மாணவர்க்குக் கல்வி புகட்ட வேண்டுமென்று முதல் உணர்ந்தவர்கள் கொழும்பு விவேகானந்தா சபையினரே. வட கொழும்பில் 1926ஆம் ஆண்டு விவேகானந்த வித்தியாலயம் இவர்களால் நிறுவப்பட்டது.

1930ஆம் ஆண்டு கொழும்பு சைவமங்கையர் கழகம் கொழும்பிலுள்ள சைவப் பெண்கள் தங்கள் சமயச் சூழலில் கல்வி பெற சைவ மகளிர் கல்லூரியைத் தாபித்தனர்.

மற்றையவர் 1950ம் ஆண்டு மட்டும் அப்பொழுது கொழும்பில் காணப்படும் பொதுப் பாடசாலைகளில் கல்வி கற்றனர். 1943ல் கன்னங்கரா அறிக்கையைத் தொடர்ந்து கல்வியில் ஏற்பட்ட மாற்றங்கள் தமிழர்களைச் சிந்திக்கச் செய்தன. முக்கியமாக தேசிய மொழிகள் மூலம் கல்வி கற்றல் தேசிய பாடசாலைகளின் தமிழ்ப் பிரிவுக்கு தமிழ் மாணவரை ஒதுக்கின. இப்பிரிவுகளுக்கு தமிழ் மாணவர்கள் அனுமதி பெறுதல் இலகுவான காரியமாக இருக்கவில்லை. இந்த நிலையை அறிந்த கொழும்பு சைவப் பெரியார் சிலர் ஒன்று சேர்ந்து கொழும்பு இந்து வித்தியா விருத்திச் சங்கத்தை அமைத்தனர். இந்தச் சங்கத்தின் தலைவர் அக்கால நீதியரசராய் சேவையாற்றிய திரு. சி. நாகலிங்கம் அவர்கள். மற்றைய உத்தியோகத்தர் சேர் கந்தையா வயித்தியநாதன், மூதவை உறுப்பினர் பெரிசுந்தரம், திரு. எஸ். மகாதேவன், மு. சச்சிதானந்தன் ஆவர்.

இவர்களும் இச்சங்கத்தின் ஏனைய அங்கத்தவர்களும் கொழும்பில் செல்வாக்கு உடையவர்களாக இருந்ததினாலும், ஒன்று சேர்ந்து இயங்கியதாலும், தன்னலமற்ற சேவையாளராக இருந்ததினாலும், வேண்டிய நிலம், பணம் ஆகியவற்றைப் பெற்று பம்பலப்பிட்டியில் பிரதம பாடசாலையையும் நிறுவினர். இரு பாடசாலைகளும் விரைவில் வளர்ச்சியடைந்து கொழும்பிலுள்ள மற்றைய பெரிய பாடசாலைகளின் தரத்துக்கு உயர்ந்தன.

இரத்மலானையில் அமைந்த கல்லூரி 1958, 1983 நிகழ்வுகளினால் பாதிக்கப்பட்டதினால் இதன் வளர்ச்சி தடைப்பட்டது. ஆனால் பம்பலப்பிட்டியில் பிள்ளையார் பாடசாலை என்ற பெயரில் நிறுவின கல்விக் கழகம் இன்று இந்துக் கல்லூரி கொழும்பு என்ற பெயரில் தேசியக் கல்லூரியாக பூரண கல்லூரியாக வளர்ச்சி பெற்று தலைநகரில் தலை நிமிர்ந்து நிற்கிறது.

1960ஆம் ஆண்டு உதவி பெறும் பாடசாலைகளை அரசு ஏற்கும் பொழுது இந்து மக்கள் தங்கள் சமயச் சூழலில் கல்வி கற்றுத் தங்கள் பண்பாட்டைப் பேணக்கூடியவகையில் இந்துப் பாடசாலைகள் அமைத்துச் சேவை செய்த பெரியோர்களுக்கும், தாபனங்களுக்கும் இந்து மக்கள் என்றென்றும் கடப்பாடுடையவர்களாக இருக்கவேண்டும்.

*உதவிய நூல்கள் :*

இலங்கையின் சைவக் கல்வியின் எழுச்சி
வ. ஆறுமுகம், திரு. க. அருமைநாயகத்தின் கட்டுரைகள்
இந்து சாதனம், கொழும்பு இந்துக் கல்லூரிச் சஞ்சிகைகள்.

நன்றி : இந்து மாமன்ற மலர்

# எமது கல்லூரியின் முக்கிய நிகழ்வுகள்

1959.05.14 இல் சைவ மக்களுக்கென ஒரு பாடசாலை,

பராமரிப்பு கொழும்பு சைவ மங்கையர் கழகம் க. பொ. த (சா/த) வரையிலான பாடசாலை

| | |
|---|---|
| 1961 ல் | கல்லூரி அரசினால் சுவீகரிப்பு |
| 1969 ல் | அதிபர் விடுதி அமைக்கப்பட்டது. |
| 1970 ல் | இரண்டாவது "ட" வடிவமான கட்டிடம் அமைக்கப்பட்டது. |
| 1978 ல் | கல்லூரியைச் சுற்றி மதில் அமைக்கப்பட்டது. |
| 1987 ல் | கல்லூரி வரலாற்றில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் அதியுயர் பெறுபேறாக 6டீ, 2சி பெறப்பட்டது. |
| 1989 ல் | மிகக் குறைவாக இருந்த மாணவர் தொகை 550 ஆக அதிகரித்தது. துடிப்பு மிகுந்த பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழய மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டது. |
| 1991 ல் | க. பொ. த. உயர் தர கலை, வர்த்தக வகுப்புக்களுக்கான அனுமதி பெறப்பட்டது. |
| 1992 ல் | பாண்ட் இசைக் குழு ஆரம்பிக்கப்பட்டது. நூலகத்திற்கென ரூபா 150,000, பெறுமதியான புத்தகங்கள் கொள்வனவு. நீர் விநியோக வசதிகள் ஏற்படுத்தப்பட்டது. |
| 1993 ல் | முதலாவது மாணவி எமது கல்லூரியில் இருந்து க. பொ. த (உ/த) பரீட்சைக்குத் தோற்றிப் பல்கலைக்கழக அனுமதித் தகுதி பெற்றது. நூலகம் நிறுவப்பட்டது. |
| 1994 ல் | விஞ்ஞான கூட அறை நிறுவப்பட்டது. ஆரம்பப் பிரிவிற்கு '60 X 40' கட்டிடம் கட்டப்பட்டது. |
| 1995 ல் | மாணவர் தொகை 735 ஆக அதிகரிக்கப்பட்டது. முதலாவது மாணவன் கலைத் துறையில் இருந்து பல்கலைக் கழகத்திற்கு அனுமதி. |
| 1996 ல் | புதிய இரண்டு மாடிக் கட்டடத்திற்கான முதல் கட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டது. மன்னார் மாவட்ட வரலாற்றில் முதல் முறையாக க. பொ. த (உ/த) வணிகப் பிரிவில் 4ஏ சித்தி கிடைக்கப் பெற்றது.<br>க. பொ. த. (சா./த.) பரீட்சையில் மாவட்டத்தில் சிறந்த பெறுபேறு. அரச அனுமதியுடன் விடுதி. மாணவர் தொகை 970 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| 1997 ல் | மாகாணக் கல்விச் செயலாளர் வருகை. க. பொ. த. உயர் தர விஞ்ஞான, கணித, பிரிவுகள் ஆரம்பம். ஆண்கள் விடுதிக்கெனக் காணி பெறப்பட்டது. மாணவர் தொகை 1,100 ஆக அதிகரித்தது.<br>க. பொ. த. (சா./த.) உயர் தர பரீட்சைகளில் மாவட்டத்தில் சிறந்த பெறுபேறுகள் பெறப்பட்டது. |
| 1998 ல் | கல்லூரி விஸ்தரிப்பிற்கெனவும், பெண்கள் விடுதி அமைப்பதற்கெனவும் மன்னார் சித்தி விநாயகர் ஆலயத்தினால் காணி அன்பளிப்பு. கணனித் துறை ஆரம்பம். 1,300 ஆக மாணவர் தொகை அதிகரிப்பு. க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் 1, 2, 4, 9, 10, 11, 12, 14, 15 இடங்களைப் பெற்றுக் கொண்டு சாதனை படைத்தமை. |
| 1999 ல் | புதிய விளையாட்டு மைதானம் அமைத்தல். புதிய வகுப்பறைக் கட்டிடம் 140 ச. அடி, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், சி. ரி. எவ். ஆகியவற்றினால் நிர்மாணித்தல். மாணவர் தொகை 1,400 ஆக அதிகரிப்பு. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 65' x 25' மூன்று மாடிக் கட்டிடம் அமைக்க அனுமதி.<br>சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளரினால் பல் சிகிச்சை நிலயம் அமைக்க அனுமதி கல்வித் திணைக்களத்தினால் விஞ்ஞான கூடம் அமைக்க அனுமதி. பெண்கள் விடுதி அமைத்தல். 1996-1999 வரை 2,00,000 ரூபா பெறுமதியான தளபாடங்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. |

13. ஆக்கம் அழியினும் அல்லவை கூறாத ஊக்கம் இனிது.

# திருக்கேதீச்சரமும் நாவலர் அவர்களும்

- பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை -

*"கருதநின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே"*

திருக்கேதீச்சரம் திருக்கோணமலைக்கு வெகு வெகு காலத்தால் முந்தியது. திருக்கேதீச்சரப் பழைமை சரித்திரத்துக்கோ அகழ்வாராய்ச்சிகளுக்கோ எட்டாதது. புராணேதிகாசங்களால் ஒருவாறு ஊகிக்கற்பாலது.

ஒரு கற்பத்திலே மேரு மலையின் மூன்று சிகரங்கள் தென் கடலில் வீசப்பட்டன. அவற்றுள் ஒரு சிகரம், இந்திரன் ஆணையால் தேவதபதியான விசுவகன்மாவால் இலங்காபுரியாக அமைக்கப்பட்டது.

மற்றொரு சிகரம் திருக்கேதீச்சரம். அச்சிகரத்தைக் கொண்டு விசுவகன்மாவின் மூத்த புதல்வனான மகாதுவட்டா, ஒரு சிறு நகரஞ் செய்து அதன் மத்தியில் ஒரு சிவஸ்தலத்தையும் அமைத்தான். நகரம் அவன் பெயரால் மகாதுவட்டாபுரம் எனப்பட்டது. அதுவே மாதோட்டம் என மருவிற்று. மத்தியில் அமைத்த சிவஸ்தலம் சிகரத்தின் பெயராகிய திருக்கேதீச்சரம் என வழங்குகின்றது.

மாதோட்டத்தோடு கூடிய திருக்கேசச்சரம் வேறு: இலங்கை வேறு. இரண்டும் ஒரு காலத்தில் உண்டானவை.

மூன்றாஞ் சிகரம் கந்த மாதனம். இது இராமர் அணைகட்டிய போது நிலப்பரப்பாக அமைக்கப்பட்டது.

கால அடைவில் கந்த மாதனம் இராமேசுவரத்தோடும் மாதோட்டத்தோடு கூடிய திருக்கேதீச்சரம் இலங்கையோடும் இணைந்து விட்டன.

மற்றொரு கற்பத்தில் இமாசல கைலாசத்தின் மூன்று சிகரங்கள் தக்ஷிண பூமியில் வீசப்பட்டன. அவற்றுள் ஒன்று திருக்கோணமலை; அது இலங்கையில் வீழ்ந்தது.

மற்றவை திருக்காளத்தியும், திருசிராப்பள்ளியுமாம்.

மூன்று தக்ஷிண கைலாசங்கள்

திருக்கோணமலையைக் கைலாசம் என்று வழங்குவது போல, மேரு சிகரமாகிய திருக்கேதீச்சரத்தை அவ்வாறு வழங்குவதில்லை.

மகா துவட்டாவுக்கு இருவர் தம்பியர். ஒருவர் மது: மற்றையர் மயன். மயன் புதல்வி மந்தோதரி. நித்திய கன்னிகைகள் வரிசையைச் சேர்ந்த உத்தமி மந்தோதரி இராவணன் மனைவி. இராவணன் மணக்கும்போது அவள் வயிற்றிற் சிவகர்ப்பமாயிருந்து இலங்கையிற் பிறந்தவர் சீதை. இவ்வரலாறு இடைப்பிறவரலாயினும் இங்கே அறியத் தக்கது.*

வெகு காலத்துக்கு முன்னமே திருக்கேதீச்சரத் தலம் மண் மழை பெய்து மணல் மூடிப் பின் காடாய் விட்டது என்று கர்ண பரம்பரைக் கதையுண்டு.

சமய குரவர்களாகிய நாயன்மார் காலத்திலும் திருக்கேதீச்சரம் காடாகவேயிருக்கலாம். தேவாரப் பாடல்களிற் காணப்படும் திருக்கேதீச்சுவரம் அவர்கள் அக்காட்சியிற் காட்சியளித்ததாகலாம் எனக் கருதலாம்.

'கருத நின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே' என்ற ஞானசம்பந்தப் பிள்ளையார் வாக்கில் 'கருத நின்ற கேதீச்சரம் கருத்தகத்தே கண்ட மறைந்த கேதீச்சரம் என்னலாம்.

திருக்கேதீச்சரம் சம்பந்தப் பிள்ளையாராலும் சுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடப்பட்ட பெருமை வாய்ந்தது. திருக்கேதீச்சரம் என்னும் நாமம் திருநாவுக்கரசர் திருநாவால் உச்சரிக்கப்பட்டது. மந்திர சக்தி வாய்ந்தது. இவ்வாற்றால் தனக்குத் தானே இணையாய தனிச் சிறப்பு வாய்ந்த புனிதத் தலம் திருக்கேதீச்சரம்.

புனிதம் மிக்க தைவிக சிவதலங்கள் வழிபடும் பக்குவர்களருகிய காலத்தில் மறைவதும், பக்குவர் சிலரின் தவ விசேடத்தினால் ஒரு பாகமோ முழுவதுமோ வெளிப்படுவதும் இயற்கை என்று அறிந்தோர் கூறக் கேட்டதுண்டு.

இனியவை நாற்பது ⇒

எத்தனையோ நூற்றாண்டுகள் கழித்து, சென்ற நூற்றாண்டு மத்தியில் ஒரே ஒரு ஆறுமுகநாவலர் இருதயத்தில் திருக்கேதீச்சர எண்ணம் கருக்கொண்டது. "யாழ்ப்பாணச் சமய நிலை" என்ற துண்டுப் புத்தகத்தில் இறுதிப் பந்தி:

"சைவ சமயிகளே! தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோணமலைக்குச் சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றிருக்கின்றது; மற்றொன்றாகிய திருக்கேச்சரத்துக்கு திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சரம் வட மாகாணத்தின் கண்ணுள் மன்னாருக்கு அதி சமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்திலுள்ளது. இத் திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே!, புதிது புதிதாக இவ் விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகா ஸ்தலத்தைச் சிறிதும் நினையாத தென்னையோ! இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்து விடும்! இதை நீங்கள் எல்லீருஞ் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட் கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வார்."

எனக் கூறிச் சைவர்களை ஊக்கப்படுத்துகின்றார் நாவலர் பெருமான்.

திருக்கேச்சர நிலம் அரசாங்கச் சொத்தாய் வடமாகாண அதிபதியின் அதிகாரத்தில் இருந்தது. நாவலரின் இளமைக் காலத்தில் 'டைக்கும்' மத்திய காலத்தில் 'றசலும்' மாகாண அதிபதிகளாயிருந்து நாவலருக்கு உறுதுணை புரிந்தவர்கள். அவர்கள் காலத்தில் திருக்கேதீச்சர எண்ணம் கருக்கொண்டிருக்குமாயின், நாவலர் பெருமானே விதிப்படி சிவாலயம் எடுத்துப் பூசைக் கிரமம் முதலியன பற்றிப் பத்ததியுஞ் செய்து வைத்திருப்பார்.

றசலைத் தயாநிதி என்கின்றார் நாவலர். றசலுக்குப் பின் வந்தவர் துவைனம், திருக்கேதீச்சர நிலத்தை துவைனம் மூலம் நாவலர் பெற விரும்பவில்லை. காரணம் துவைனத்தின் உத்தியோக நடை முறையில் நாவலருக்கு அருவருப்பு உண்டாயிருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம்.

பெரியோர்கள் நீதி நெறிக்குப் புறம்பானவர்களிடம் எதையும் பெற விரும்புவதில்லை. இதற்கு எத்தனையோ உதாரணங்கள் உள. நீதிக்குப் புறம்பானவர்களின் உதவி, எடுத்த கருமத்தை மாசுபடுத்தும் என்பதைப் பெரியோர்கள் நன்கு அறிவார்கள்.

நாவலரின் அந்திய காலத்தில் துவைனத்தின் அநீதி மிகப் பிரகாசமாகியது. மழையின்றிய பஞ்ச காலத்திலும், பேதி நோய்க் காலத்திலும், ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய அரசாங்க உதவிகளை துவைனமும் , கீழுள்ளவர்களும் அப்படியே உறிஞ்சி விட்டார்கள்.

*சமயம் சமயம் !*

*இது நல்ல சமயம் !*

*வெகு சனத் துரோகம் !*

என்ற துண்டுப் புத்தகங்கள் துவைனத்தின் மீது நாவலர் கொடுத்த வச்சிர குலிசங்கள்.

'யாழ்ப்பாணத்துக் கச்சேரி அநீதி, பொய், கோள் முதலிய புத்தகங்கள் படிப்பிக்கிற கலீசு (College) அதற்குத் தலைவர் (Principal) துவைனந் துரை; உபாத்தியாயர்கள்' பாவந் தோன்றிய நாளையிற்றோன்றிய பாதகன்' ஆகிய முதலியார் முதலிய சில உத்தியோகத்தர்கள்; அவைகள் படிப்பிக்கிற தாலுகாப் பள்ளிக் கூடங்கள் (Taluk Schools) சில தலைமைக்காரங்களுடைய தானங்கள்.

*(இது நல்ல சமயம் – 5 ஆம் பக்கம்)*

ஏழைகளுக்கிரங்கி இவ்வாறெழுதிய நாவலர் பெருமானின் தைரியம் பற்றி என்ன நினைக்கலாம். மேற் காட்டிய மூன்று கட்டுரைகளும் நாவலர் பிரபந்தத்தில் உள்ளவை. யாவரும் படித்து நாவலர் யார் எத்தகையினர்! எனபதை ஊன்றி உணரக் கடவர்கள்.

நாவலர், குடியேற்ற நாட்டு மந்திரி பரியந்தம், துவைனத்தின் ஊழல்களை எடுத்துக்காட்டி வாதித்தார். துவைனம் தம்மீது ஏற்றும் குற்றங்களைப் பரிகரியாத வழி உத்தியோக இழப்பு ஒன்றோ உடற்றண்டமும் பெறும் நிலை நேர்ந்தது. துவைனம் செய்வதறியாது திகைத்தார்.

இந்நிலையில் நாவலர் பெருமானுக்கு அழைப்பு வந்து விட்டது. நாவலர் மறைந்தார் என்ற வார்த்தை கேட்ட அக்கணமே, துவைனத்திற்கு விழிப்புணர்ச்சி உண்டாகியது. கச்சேரிக்கு விடுதலை அளித்து; கச்சேரி உத்தியோகத்தர் அனைவரையும் நாவலர் பெருமானின் இறுதிச் சடங்கில் பங்கு பற்றச் செய்தார். அடுத்த சில ஆண்டுகளுக்குள் திருக்கேதீச்சர நிலத்தை அந்நிய மதத்தர் கைப்டாமல் வெகு திறமையாகச் சைவர்களுக்கே ஆக்கி வைத்தார் துவைனம். நாவலர் பெருமான் துவைனத்தைக் கேளாமலே காரியம் நிறை வேறியது.

நாவலர் பெருமானின் தவ சக்தி இருந்தவாறு!

*(நன்றி : சிவதொண்டன் சிறப்பு மலர் - 1965)*

*14. நட்டார்க்குப் புறன்கூறான் வாழ்தல் நனி இனிது.*

# வாழிய நீ பல்லாண்டு

செந்தமிழன்னை உந்தனுக்கு மகுடம் சூட்ட
வெண்கமல வாணியவள் வாழ்த்துப்பாட
ஐந்துகரன் அருகிலிருந்து அருட்கதிரே வீச
ஊற்றெடுக்கும் கல்வியொலி அகிலம் போற்ற
சுந்தரத் தமிழ்அணங்கு கவிமாலை சாற்ற
மாணவத் தாரகைகள் தீபம் ஏற்ற
முந்தையுறு வளம்மேவி ஈர் இருபதாம்
சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி நீவாழி.

****

சந்தணத் தமிழ்சுரந்து இசைகள் மேவ
பண்புறு நும்பாலர் மங்களங்கள் பாட
வந்து நிதம் ஆசிரியர் பல்கலைகள் புகட்ட
வளர்ந்தோங்கும் கல்வியது திக்குமேஎட்ட
வந்திணைந்த அதிபரவர் திலகமே ஆக
வாஞ்சையுடன் அவர்பணிகள் புகழே பேச
சிந்தை நிறை உளங்களும் அனைவரும் போற்ற
சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி நீவாழி.

****

இந்துமதம் ஆதியமர் திருக்கேதீஸ்வரத்தின்
கேதீஸ்வரன், கௌரி அருளுமே பொழிய
வந்த மதம் அத்தனையும் உந்தனைப் போற்ற
நானிலமும் உற்றிங்கே அசந்துமே நிற்க
தந்தநம் மண்ணாள் புகழ் மாண்புமே கொண்டு
உருவாகும் வித்தகர்உனை மறவாதென்றும்
எந்த மதமென்றெண்ணா எழிலது காட்டும்
சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி நீவாழி.

****

வாழிவாழி நீவாழி மாண்புறவே நீ வாழி
வாழிவாழி நீவாழி வான்புகழ நீ வாழி
வாழிவாழி நீவாழி மன்னார் மகிமையுற வாழி
வாழிவாழி நீவாழி பல்லாண்டுறவே நீ வாழி.

வாசுகி மதியாபரணம்
ஆண்டு – 13
வர்த்தகப் பிரிவு

# சாதனையாளன் சரண்ராஜ்
# எமது மாணவன் சரண்ராஜின் சாதனைகள்



தமிழ் மொழித் தினம் (பேச்சு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1996 | மாகாண மட்டம் | 1ம் இடம் | – | தேசிய மட்டம் | 1ம் இடம் |
| 1997 | மாகாண மட்டம் | 1ம் இடம் | – | தேசிய மட்டம் | 2ம் இடம் |
| 1998 | மாகாண மட்டம் | 1ம் இடம் | – | தேசிய மட்டம் | 3ம் இடம் |

ஆங்கில மொழி தினம் (கவிதை)

| | | |
|---|---|---|
| 1996 | மாவட்ட மட்டம் | 1ம் இடம் |
| 1997 | மாவட்ட மட்டம் | 1ம் இடம் |
| 1998 | கோட்ட மட்டம் | 1ம் இடம் |
| 1998 | மாவட்ட மட்டம் | 1ம் இடம் |

ஆங்கில மொழித் தினம் (சொல்வதெழுதல்)

| | | |
|---|---|---|
| 1998 | கோட்ட மட்டம் | 1ம் இடம் |
| 1998 | மாவட்ட மட்டம் | 2ம் இடம் |

கொழும்பு விவேகானந்த சபையினால் நடாத்தப்படும் சைவ சமயப் பரீட்சை

| | | |
|---|---|---|
| 1995 | தேசிய மட்டம் | 1ம் இடம் |

சுவாமி விவேகானந்தர் நாவன்மைப் போட்டி (பேச்சு)

| | | |
|---|---|---|
| 1999 | மாவட்ட மட்டம் | 1ம் இடம் |
| 1999 | தேசிய மட்டம் | 2ம் இடம் |

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நாவன்மைப் போட்டி (பேச்சு)

| | | |
|---|---|---|
| 1999 | மாவட்ட மட்டம் | 1ம் இடம் |
| 1999 | தேசிய மட்டம் | 2ம் இடம் |

சிறந்த மாணவர்களைத் தெரிவு செய்யும் போட்டி

| | | |
|---|---|---|
| 1998 | மாவட்டமட்டம் | 1ம் இடம் |

கூட்டுறவுத் தினம் நாவன்மைப் போட்டி (பேச்சு)

| | | |
|---|---|---|
| 1999 | மாகாண மட்டம் | 1ம் இடம் (தேசிய மட்டத் தெரிவு) |

இந்து சமய வளர்ச்சிச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகள்

| | | | |
|---|---|---|---|
| 1997 | மாவட்ட மட்டம் (சமய அறிவுப் போட்டி) | – | 1ம் இடம் |
| 1997 | மாவட்ட மட்டம் (பேச்சுப் போட்டி) | – | 1ம் இடம் |

5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

| | | | |
|---|---|---|---|
| 1997 | மாவட்ட மட்டம் | – | 2ம் இடம் |

*15. குழவி பிணியின்றி வாழ்தல் இனிது.*

# செல்லும் வழி இருட்டு

வீடு விட்டு புறப்பட்டோம்
வீதி வழி நடந்தோம்
காடு வயல் கடந்து
பாதி வழி வந்தோம்
மேடுபள்ளம் பாராது
மீதி வழி செல்ல
ஓடுகின்றோம் ஓடுகின்றோம்
ஒதுங்கிடத்தான் இடம் இல்லை

வான் பறவை இரைகிறது
வட்ட மிட்டுப் பறக்கிறது
நாம் பிறந்த பூமிதன்னில்
நம்மை விட்டுத் துரத்துதையோ
ஏன் என்று கேட்க
ஏதையா நமக்குப் பலம்
கண் இமைக்கும் நேரந்தான்
மண் அசைந்து அதிர்ந்ததையா.

பூமி எங்கும் புகை மண்டலம்
புழுதி மழை பொழிகின்றது
மேனி எல்லாம் நடுநடுங்க
கூனிக் குறுகி நிற்கின்றது
கரம் கூப்பி கையசைத்து
சரம் ஏற்று வந்தவர்கள்
சாடுகின்றார்கள் எங்கு செல்வோம்?
செல்லும் வழி இருட்டு.

ஆக்கம்: ந. தீலிபன்
தரம் - 5

# வள்ளுவன் வழியில் எமது கல்லூரி

"அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மை யொ யடைந்துசால் பூன்றிய தூண்"

உலகம் போற்றும் உயர்ந்த படித்திறத்தின் உத்தமரான திருவள்ளுவப் பெருந்தகை எம் வையத்திற்கென அருளியது திருக்குறள் என்னும் நூலாகும். இப்பெருமைமிக்க நூலிலே சான்றாண்மையின் உயர்ந்த படித்திறத்தை மிகவும் சிறந்த முறையில் வள்ளுவப் பெருந்தகை இவ் வையகத்திற்கு வடித்துவைத்துள்ளார். இவர் அருளிய நூலிலே மக்கள் பால் அன்பு காட்டுதல், இழிவினைக்கண்டு அஞ்சுதல், உலகத்தவரோடு ஒட்டி ஒழுகி உபகாரியாய் வாழ்தல், அனைத்து ஜீவராசிகளிடமும் மிகுந்த இரக்கம் காட்டுதல், உண்மை பேசுதல் ஆகிய தித்திக்கும் பஞ்ச சிறப்பு அம்சங்களும் உலகின் உயர்ந்தோரான சான்றோரின் நல் வீட்டினை தாங்கி நிற்கும் தூண்களெனக் கூறியுள்ளார். இவ்வாறு வள்ளுவர் கூறிய நற்பண்புகள் பொன் எழுத்துக்களாற் பொறிக்கப்பட்டுப் பூஜிக்கப்பட வேண்டியவை.

இவ்வாறாகப் பூஜிக்கப்படவேண்டிய நற்பண்புகளைக் கொண்டு சிறப்பாக உயர்ந்து மிளிர்ந்துவருவதும், எமது மன்னாரின் மணி விளக்காய் தேசம் எங்கும் அறிவொளி பரப்பி, புத்திஜீவிகளை உருவாக்கிவருவதும் கலைகளின் கூடமாக விளங்கி நாற்பதாவது ஆண்டு நிறைவில் தனது கால்களைப் பதித்துள்ளதுமாகிய கல்வி நிலையம் மன் / சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி ஆகும்.

இக் கல்லூரி வள்ளுவர் காட்டிய அன்பு, நாண், ஒப்பரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய சிறந்த குணங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றது. சிரித்த முகமும், சிறந்த சிந்தனை ஆற்றலும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்பச் சிறப்பாக நடந்து கொள்ளும் மனோபக்குவமும், சிறப்புமிகு உயர்ந்த பண்புகளும் உடைய ஒருவர் எம் கல்லூரியின் பெரும் மதிப்பிற்குரிய அதிபர் ஆவர்.

எம்மைப் பண்போடும், ஒழுக்கத்தோடும் வளர்த்துவரும் ஆசான்கள் அன்பிற்கு இலக்கணமாய், அறிவிற்கு சரஸ்வதியாய் விளங்கிக், கல்லூரி வளர்ச்சியிலும், எழுச்சியிலும் தம்மை முழுமையாக அர்ப்பணிக்கும் ஆற்றல் கொண்டவர்களாக உள்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்னும் முதுமொழிக்கு அமைய ஒரு சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் சிறப்புமிகு ஒரு சீரிய கட்டுக்கோப்புடைய நிருவாகத்தின் கீழ் சிறந்த முறையில் சேவையாற்றிவரும் சிரோன்மணிகளே எம் இனிய ஆசான்கள்.

பாடசாலையும், அதன் வளர்ச்சியுமே தம் வாழ்க்கை என நினைக்கும் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலையின் முத்துக்களாய்த் திகழும் மாணவர்கள் அனைவரும் சேர்ந்து அன்பு நிறைந்த குடும்பமாக ஒரு சிறந்த சமூகமாக வாழ்ந்து வருகின்றோம். இவ்வாறான உயர்ந்த பண்பு சான்றாண்மையில் வள்ளுவர் கூறிய "அன்பு" என்னும் பண்பிற்கு அடிக்கல் எனக் கூறினால் அது மிகையாகாது.

எம் கல்லூரியின் சக மாணவர்கள் ஒழுக்கத்தின் உறைவிடமாய், ஒற்றுமையின் உயர் விளக்காய், அன்பும் அறனும் கொண்டு வாழ்பவர். அடுத்து வள்ளுவன் வழியில் எம் கல்லூரியினைப் பார்க்கும் பொழுது "நாணம்" என்னும் சொல்லிற்கு வள்ளுவர் பொருள் கூறும் பொழுதினிலே பிறர் செய்கின்ற பழிகளைத் தம்பழியென நினைத்து வெட்கித் தலைகுனிந்து பழிக்கு அஞ்சுதல்தான் என இயம்பி உள்ளார். இவ்வாறான நாணம் என்னும் சிறப்பு மிகு பண்பும் எம் கல்லூரிக்குப் பொருத்தமான சிறப்புக்களில் ஒன்றுதான். எம்கல்லூரியானது தமக்குப் புகழ் வருமாயின் தம்

ஆக்கம் : செல்வி. க. கீதா
*13ம் ஆண்டு கலைப்பிரிவு (1999)*

*16. பத்துக் கொடுத்தும் பதி இருந்து வாழ்வு இனிது.*

உயிரினைக் கொடுத்தாவது அப்புகழை தன்பால் ஈர்த்துக்கொள்ளும். மாறாக, பழிவரும் என நினைத்தால் இவ் உலகமே தனதாக்கிக் கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தாலும் எத்திய காரியத்தினையும் தம் சிந்தையில் கூட நினைக்காது. பழியினைக் கண்டு அஞ்சி நடுநடுங்கும் மனோபக்குவம் உடையதே எமது கல்லூரி என்றால் அது உண்மைக்கு மாறானது அன்று.

எமது கல்லூரி சூழவுள்ள மக்கள், அருகில் அருள்பாலிக்கும் விநாயகர், அம்பாள் ஏனைய சகோதர பாடசாலைகள், கழகங்கள், நிறுவனங்கள், அபிவிருத்திச் சங்கங்கள், திணைக்களங்கள் முதலியவற்றுடன் ஒரு இனிய சமரச உறவினைக் கொண்டு மிளிர்கின்றது. சாதி, மத பேதமின்றி அனைத்து சமூங்களையும் ஆதரிப்பதும் எமது கல்லூரியே!

கல்வியுடன் கலைகளையும், விளையாட்டினையும் கருத்தாக எமக்களித்து, இனிதான முத்தமிழ் வித்தைகளையும் எமக்கு ஊட்டி வருகின்றது.

"இரக்கம்" எனும் சொல்லிற்கு இலக்கணத்தை வடிவமைத்து உயிர்களிடத்தும், எளியவரிடத்தும் அன்பினை நல்கும் எமது கல்லூரி.

எம் தமிழ் மண்ணின் புகழ் தரணியில் வீசவேண்டும். தமிழ் மணம் பரவவேண்டும். தரணியிலே மாணவர் தரம் உயரவேண்டும். அடிமைத்தனம் அழிய வேண்டும். தித்திக்கும் கல்விதனைத் தேசம் எங்கும் பெற வேண்டும். நாட்டின் நாளைய தலைவர்களாக மாணவர் சமூகம் மாறவேண்டும். ஒற்றுமைக் கொடிதனை உயரப் பறக்கவிட வேண்டும். மொழிப்பிரச்சினை ஒழிய வேண்டும். சுதந்திரக் காற்றினை சுதந்திரமாகச் சுவாசிக்க வேண்டும். மக்கள் எல்லோரும் சுபீட்சமாக வாழ வேண்டும் என்ற சீரிய நோக்கோடு எம்மை வழிநடத்திவரும் கல்லூரி நூற்றாண்டு விழா கண்டு நித்திலத்தில் என்றும் நிலைத்து இருந்து சிறந்த மாணவ சமூகத்தை உருவாக்கிச் சிறப்புறத் திகழவேண்டும். எம் கல்லூரி வாழ்க வளர்கவென்று வாழ்த்துவோம்.

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு மாணவர்களாகிய நாம் என்றும் தோளொடு தோள் நிற்போம் என்று கூறுவதோடு, எமது கல்லூரி பல் சிறப்பும் பெற்றுப் பல ஆண்டு காலம் புகழுடன் விளங்க வேண்டுமென வாழ்த்துகிறேன். வணங்குகிறேன். வாயாரப் போற்றுகின்றேன்.

*"நன்றி"*

## *சமயக் கல்வியின் எதிர்காலம்*

*கல்வி எதற்கு ? என்ற வினாவிற்குக் காலாகாலங்களில் வெவ்வேறு விடைகள் கிடைத்து வருகின்றன. அறிவை வளர்த்தற்குக் கல்வி என்பாரும், சமூக பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தவே கல்வி என்பாரும், பிள்ளைகளின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதற்குக் கல்வி என்பாரும் ஆங்காங்கு இருந்து வருகின்றனர். இவ்விடைகளுள் நான்காவது விடையே மிகமிகப் பொருத்தமான விடையென்று இன்றைய அறிஞர்களிடையே ஓர் அபிப்பிராயம் நிலவி வருகின்றது. குறித்த ஒளிமயம் என்பதென்னை ? என்று விசாரிக்கின்றபோது, பிள்ளைகள் அறியாமை வசப்பட்டு உழலாமல், வாழ்க்கைக் குறைபாடுகளால் நலியாமல், சீர்திருத்தமான நல்வாழ்வு வாழும் நிலையே குறித்த ஒளிமயம் என்பார் பலர். இந்துக்களாகிய நமது பாரம்பரியப் பண்பாட்டு விளக்கத்திலே பார்க்கின்ற போது இந்த ஒளிமயம் இன்னும் இன்னும் நுணுகி நுழைந்து பொருள் கொள்ளப்பட வேண்டியதாகின்றது.*

இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா, B. A.

இலங்கை இந்துக்களை ஒன்று கூட்டிய ஒப்பற்ற மாபெருந் தலைவர்

# சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன்

- பண்டிதர் செ. பூபாலபிள்ளை -

இந்துக்களின் நாகரிகம் திருக்கோயில்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்ததொன்று. இந்த உண்மையினை அண்மையில் வாழ்ந்து மறைந்த சைவப்பெரியார் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் உள்ளவாறு காட்சி மூலம் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

இவர் மாகாண அதிபராகவும், மந்திரியாகவும் உயர்தரப் பதவிகள் பலவற்றை இலங்கை அரசினரிடம் ஏற்று நடு நின்று கோணாத நீதி செலுத்தியுள்ளார். இவர் 'சிவமணி' என்னும் பட்டம் பெற்றுத் தேவாரப் பாடல் பெற்ற திருக்கேதீச்சரத்தை உறைவிடமாகக் கொண்டு அருமையான திருப்பணிகள் புரிந்தார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் கனவிற் கண்ட திருக்கேதீச்சரக் கோயில் திருமடம், திருக்குளங்களை நனவிற் காட்டி மாண்புற அமைக்க உதவினார். ஆங்கு ஆண்டு தோறுந் திருவிழா எடுத்து அகமிக மகிழ்ந்தார். தீவினை அணுகாது திறம்பட வாழ்ந்தார்.

மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரமென்னுந் திவ்விய திருப்பதியை இரவும் பகலும் இடையறாது சிந்தித்து வணங்கித் துக்கம் நீங்கிச் சிவனடியாராக வாழ்ந்து அகில இலங்கை இந்துமா மன்றப் பத்தாவது ஆண்டு விழாவைத் தலைமை தாங்கி அழகுற நடத்திய பின்பு நல்லூரானைத் தரிசித்துத் தமது ஆப்த நண்பர் ஞானசம்பந்தனுடன் திருக்கேதீச்சரக் கொட்டிலில் அமர்ந்து திருக் கேதீச்சரத்தானுடன் இரண்டறக் கலந்தார்.

*அட்டன் அழகாக அரைதன்மேல் அரவார்த்து*
*மட்டுண்டு வண்டாடும் பொழில் மா தோட்டநன் நகரில்*
*பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்*
*சிட்டன் நமையாள்வான் திருக்கேதீச்சரத்தானே.*

இத்தேவாரப் பதிகப்படி திருக்கேதீச்சரத்தான் இவரை ஆட்கொண்டருளினார்.

## இலங்கை இந்துக்களை ஒன்று கூட்டியமை

இலங்கைவாழ் இந்துக்கள் தமக்கென ஒரு மாமன்றமில்லாதுந் தலைவரில்லாதுங் கட்டற்ற மாடுங் கயிறற்ற பம்பரமும் போலத் தாம் தாம் விரும்பியவாறு ஒழுகி இடர்பல உற்றனர். பிறமதத்தவருடைய எள்ளி நகையாடல்களுக்கு இலக்காயினர். சைவ பரிபாலன சபை, சைவவித்தியா விருத்திச் சங்கம், விவேகானந்த சபை, இந்து வாலிபர் சங்கம், இந்து இளைஞர் சங்கம், அருள்நெறித் திருக்கூட்டம், இந்து சமய விருத்திச் சங்கம், கதிர்காமத் தொண்டர் சபை, சைவமங்கையர் கழகம் முதலிய பல சபைகள் இருந்தும் இவை அகில இந்துக்களையுந் தம்முள் அடக்கி ஈழவராகும் இந்துக்கள் யாவருக்கும் ஒரு முகமாகப் பணிபுரியும் ஆற்றலைப் பெறவில்லை. இந்தச் சங்கடத்தால் இந்துமதப் பிரச்சினைகளை அரசினருடன் அன்பாக வாதாடித் தீர்க்க முடியவுமில்லை. இந்தக் குறைபாட்டைச் சிவனடியாராக வாழ்ந்த சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் உள்ளவாறு உணர்ந்தார்கள். உணர்ந்த இவர்கள் கொழும்பு மாநகரத்து வாழ்ந்த இவர் நண்பர்களாகும் இந்துப் பெருமக்களுக்கு எடுத்துக் கூறினார்கள். இதனைக் கேட்ட அவர்களும் திருக் கேதீச்சரத்தான் திருவருளால் உள்ளவாறு உணர்ந்தனர். இவர்கள் இந்த உணர்ச்சியால் அனைத்து இலங்கையிலும் இந்து மதப் பண்பாட்டைப் பாதுகாக்கவும், அதனை இந்து சமூகத்தில் நிலைநாட்டவும், ஈழத்துள்ள சகல இந்துச் சங்கங்களையும் இணைத்து ஓர் அகில இலங்கை இந்துமா மன்றம் அமைக்க வேண்டும் என ஒருமனதாகத் தீர்மானித்தனர். இத் தீர்மானத்தை இலங்கையில் அமைந்துள்ள சகல இந்துமதச் சங்கங்களுக்கும் அறிவித்து அவற்றின் பிரதிநிதிகளைக் கொழும்புக்கு வரவழைத்தனர். வரவழைக்கப்பட்ட எல்லோரும் கொழும்பு மாநகரத்துள்ள பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஒன்றுகூடி 1955 ஆம் ஆண்டு தை மாதம் அகில இலங்கை இந்துமா மன்றத்தை அமைத்தனர். இதன் தலைவராக உயிர் நீங்கும் வரையும் இடையறாது தொடர்ந்து பத்துவருட காலம் சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களையே அகில இலங்கை இந்து மாமன்றத்தார் தெரிவு செய்து அமர்த்தினர்.

கல்வி, செல்வங்களிடை உதித்தவரும், உலகியலிலும் அரசியலிலும் நல்லனுபவம் வாய்ந்தவரும் ஆக இருந்தனர். அன்பினாலும் இன்சொல்லினாலும், தாழ்ச்சியினாலும் சாந்தமாக யாவரையும் அணைத்துக் கருமம் முடிக்குந் தனி ஆற்றல் இவருக்குண்டு. பிரச்சினைகளை, விட்டுக் கொடுத்து அனைவரையுஞ் சமாதானமாக அணைத்துக்

கருமம் முடிக்கும் ஒரு கரும வீரர் இவர். சைவசித்தாந்த மகாநாட்டை இவர் இலங்கையிற் சீருற நடத்தியதை முகமுகமாகக் கண்ணுற்றோர் இவரது நிருவாகத் திறனை நன்கறிவர். சிவானந்தக் குருகுலத்தைத் திருக்கேதீச்சரத்து அமைத்து சிவப்பிராமணர்களுக்கு வேத ஆகம சாஸ்திர அறிவினையும், அர்ச்சக முறைப் பயிற்சியினையும் மூன்றரை வருட காலத்துப் பயிற்றுவித்துச் சிவநெறி காத்தோம்பிய இந்தச் சிவதொண்டர் உதவியினை யார்தான் மறக்க முடியும்? மத்திய இலங்கையில் அனுராதபுரத்துள்ள கதிரேசன் கோயிலை அரசினருடன் வாதாடி இந்து சாத்திர விதிக்கமையப் படம் எழுதி அமைப்பித்துக் குடமுழுக்கு மாட்டுவித்த சைவக் குலமகனார் இவர். பாணந்துறை கந்தசுவாமி கோயிலைக் கட்டுவித்துக் குடமுழுக்காட்டி இந்துமா மன்றத்துக்குப் பெரும்புகழ் ஈட்டித் தருமுன்பு அந்தோ ! இவர் பரகதி அடைந்து விட்டாரே ! என் செய்குவம் யாம் ? திருக்கோணேசுவர ஆலயப் பரிபாலன முறைகளை ஆராய்ந்து முடிக்க வேண்டிய ஐவருள் ஒருவராகிய இவர் அஃது நிறைவேறுமுன்பு இகவாழ்வை நீத்தனரே !

இலங்கைப் பாடசாலைகளில் உள்ள பொதுத் தராதரப்பத்திர உயர்தர வகுப்பு இந்து சமயமாணவருக்கு இந்துசமயப் பாடத்திட்டத்தை இந்துமாமன்ற சார்பில் அமைப்பித்து உதவிய இவர், பெரும் பிரிவை உயர்தர இந்து மாணவரும் பெற்றோரும் எண்ணி எண்ணி அவலக் கவலை அடைகின்றனரே !

பெரும்பான்மை இந்து மாணவர் கற்கும் பாடசாலைகளுக்கு இந்து சமயத்தைச் சேர்ந்த அதிபர் நியமிக்க வேண்டுமென வித்தியா பகுதியாருடன் வாதாடி வழக்குரைத்த இவர் பேரிழவால் இந்து அதிபர் இருந்த இடத்துக்குக்கூட வித்தியாபகுதியார் கிறித்துவ அதிபரை அச்சமின்றி இப்பொழுது மாற்றி அனுப்புகின்றனரே ! இந்த அநீதியை இலங்கை இந்துக்கள் யாருடன் சொல்லி அழுவது?

மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளராகும் இந்துக்கள் வழிபடும் ஆலயங்களுக்குச் சங்கமக் குருக்களை திருக்கேதீச்சரத்துப் பயிற்றி அர்ச்சகராகத் தருவதாக உறுதி கூறிய அகில இலங்கை இந்துமா மன்றத் தலைவர் ஐயோ ! அது செயற்படு முன்பு மீளா நித்திரைக் காளானாரே. ஈழநாட்டுக் குடிபதிகளிடத்திலே அரசினர் சமய ஒற்றுமைக் கனாக்காண முயலுகின்ற இந்த நல்ல தருணத்திலே அரசியல் ஞானத்திற் சிறந்த எழுபது வயது நிரம்பிய இந்துப் பெரியார் எம்மை விட்டுப் பிரியலாமா ? என்செய்வது ? இதுவிதியின் சதி.

### மட்டக்களப்பிற் பற்றுள்ள சிவமணி

மட்டக்களப்பு வாழ் இந்துப் பெருமக்களைப் பண்டொரு நாள் ஒன்று கூட்டி இந்துமா மன்றச் செயலாளருடன் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையை அடைந்து அகில இலங்கை இந்துமாமன்ற நோக்கங்களை அன்பாகப் பேசி மட்டக்களப்பாரை இந்து மாமன்றத்தாருடன் இணைத்தருளிய இவர் எங்கே ? மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை அன்றைய மாணவ, மாணவியர் மகிழ்வுறுமாறு இவருடன் கலந்துரையாடி விருந்துண்டு இவர்கள் நடத்திய ஆடல்பாடல்களைக் கண்டுங்கேட்டும் அகமிக மகிழ்ந்த சிவனடியார் சிவமணி ஐயா, வைத்தியநாதரை அவர்கள் எப்படி மறப்பது ? இனி அவர்களை எங்கே தேடிக் காண்பது? விதியே நீ சதி செய்து விட்டாய்.

"எனது தமிழ் பொறுக்குத்தமிழ், உங்களைப் போல ஒழுகு தமிழ் பேச எனக்கு வராது. மட்டக்களப்பு வளர்ச்சிக்குரிய நல்லுற்பாதம் இரண்டு எனது மனதிலேபடுகிறது. ஒன்று யாழ்ப்பாணத்தார் இந்த நாட்டுப் பெரும்பான்மை மக்களாகிய சிங்களவருடன் ஒரு மேசையில் இருந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கோப்பி குடிக்க முடியாத நிலையில் இன்று இருக்கிறோம். நீங்கள் அப்படி இல்லை. அவர்களுடன் அன்பாகக் கலந்து உறவாக இருக்கிறீர்கள். மற்றது கண்ணகியும் அல்லியும் போன்ற இந்த வீரரமணிகள் நடனத்தை இங்கு கண் முன்னே கண்ட கிழவனாகிய எனக்கும் வீரம் பிறக்கிறது. பெண்களுக்கு எந்த நாடு முதன்மை கொடுக்கிறதோ அந்த நாடு முன்னேறும். இது சரித்திரங் கண்ட உண்மை." என்று நயம்படத் திறன் ஆய்ந்து சோதிடங் கூறிய பெரியார் பெரும் பிரிவால் ஏற்பட்ட துயரத்தை மட்டக்களப்பு மக்கள் எங்ஙனம் பொறுப்பது !

தமது தள்ளாப் பராயத்து மட்டக்களப்பு சித்தாண்டிக் கந்தசுவாமி கோயிலில் இருந்து தூய வெண்ணிற வேட்டி சால்வை மாத்திரந் தரித்துத் திருநீறு பூசியபடி யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சிவதொண்டனில் இருந்து எழுந்தருளிவந்து திருவடியுடன் செங்கலடிக்கு நடந்து பல கல்தூரம் வந்தார், நமது வைத்தியநாதன். செங்கலடிச் சிவதொண்டன் நிலையத்தில் சாதாரண பாமர மக்களுடன் ஒன்றுகூடி பந்தியில் இருந்து விழாவின்போது உணவருந்திச் சிறுமையாற் பெருமை தேடிய சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதனை மட்டக்களப்புச் சைவ நன்மக்கள் எப்படி மறப்பது ?

இலங்கை இந்து மன்றங்களை ஒன்றுகூட்டி இணைத்தார் வைத்தியநாதன். இவர்களைத் தென்னிந்தியச் சிவநெறிச் செல்வருடன் சேர்த்தார் சேர். வைத்தியநாதன். ஈழவரிடையே யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், மலைநாட்டுத்தமிழர் என்ற வேற்றுமைக்கு இடமின்றி இந்து மதத்தை மையமாகக் கொண்டு ஒருமைப் பாட்டுக்கு வழி வகுத்தார் நமது விரிந்த மனப்பான்மையுள்ள சேர் கந்தையா வைத்தியநாதன். கதிர்காம மடங்களை அப்புறப்படுத்த வேண்டாம் என்று கர்ச்சித்தார், சிவமணி.

இத்தகைய பெரியார் நம்மனைவர் மனத்துடனுங் கலந்து கொண்டார். அன்னார் வகுத்துவைத்த வழியை இந்துக்களாகிய நாமெல்லாம் பின்பற்றி ஒழுகுவதல்லாது. இத்தருணம் வேறு யாது செய்யவல்லோம் ? அவர் முயன்று அமைத்துக் காத்து வளர்த்த அகில இலங்கை இந்து மாமன்றம் வாழ்க ! வைத்தியநாதன் திருத்தொண்டு ஊழிதோறும் நிலைபெற்று உயர்வுறுக !

*"கந்தையா, வைத்திய நாதரையாங் காண்பரிதால்*
*எந்தை திருக்கேதீச் சரத்தான் – இணையடியை*
*நந்தா விளக்கெனவே நண்ணினார் இன்புற்றார்*
*அந்தரித்தோம் இந்துமதத் தார்"*

*நன் றி : இந்து மாமன்ற மலர் 1966*

# வன்னியும் வன்னியரும்

- சி. எஸ். நவரத்தினம் -

## நில நூல் (Geography)

யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கும் நுவரகலாவிய (அனுராதபுர) மாவட்டத்திற்கும் இடையே அமைந்த இலங்கையின் வடபகுதிக்கு வன்னி என்ற பெயர் அளிக்கப்பட்டது. வன்னி என்ற பெயரைப் பெறுவதன் முன்னர் அப்பகுதி அடங்காப்பற்று என்ற பெயரால் அழைக்கப் பெற்றது என்று தெரிய வருகின்றது. இவ்வன்னி நாடு கிழக்கே திருகோணமலையையும், மேற்கே மன்னார்ப் பகுதியையும் எல்லையாகத், தென்னமரவடி, முள்ளியவளை, கருநாவல்பற்று, பனங்காமம், பெருங்காலிப்பற்று முதலியனவற்றையும் செட்டிகுளத்தின் ஒரு பகுதியையும் குதிரைமலையை உள்ளடக்கிய முசலிப்பற்றையும் தன்னகத்தே கொண்டு பரந்து கிடந்தது. இவ்வன்னி நாடு ஏறத்தாழ 3000 சதுர மைல்களை கொண்டதாய் அமைந்திருந்தது.

இவ்விடங்களின் கரையோரப்பகுதிகள் பதிவாயும் உட்செல்லச் செல்ல நிலம் உயர்ந்தும் உள்ளது. குருந்தூர் மலை, குன்பகன்னன்மலை, ஓதியமலை போன்ற இடங்களிற் காணப்படும் கற்பாறைகளைப் போலவே முல்லைத் தீவுப் பகுதியிலும் கற்பாறைகள் காணப்படுகின்றன. கரையோரப்பகுதிகள் மணல் செறிந்த உவர்த்தரையாக இருப்பினும் உள்நாட்டில் பலவகையான வளம் நிறைந்த மண் இருக்கிறது. ஏறக்குறையப் பதினாறு சதுர மைல் பரப்பிற் செழிப்புள்ள கருமண்ணைக் கொண்டு துணுக்காய் அமைந்துள்ளது. மன்னார்ப் பகுதியில் துணுக்காய்க்குத் தெற்கேயுள்ள வவுனிக்குளப்பகுதி மன்னார், யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும் பார்க்கச் சிறந்த மண்வளமுடையதாய் இருக்கின்றது. ஆண்டு முழுவதும் பயிர்ச்செய்கைக்கு வேண்டிய மழையைத் தரக் கூடிய மலைப்பகுதிகள் இங்கில்லை எனினும் நிலத்திடை தோன்றியோடும் தெள்ளிய ஊற்றுக்கள் முள்ளியவளை, தனியூற்று, குமாரபுரம் முதலிய இடங்களில் இருக்கின்றன.

மேலும் மாரியிற் கரைபுரண்டோடிக் கோடையில் வற்றி விடும் காட்டாறுகள் இங்கு உள. ஆனால் இங்கிருக்கும் ஏராளமான குளங்கள் இப்பகுதியைச் செழிப்படையச் செய்வதோடு எல்லாக் காலங்களிலும் பயிர்ச் செய்கை நடைபெறவும் வாய்ப்பளிக்கின்றன. இன்னும் சிறந்த முறையில் திட்டமிட்டு அமைக்கப்பெற்ற நீர்ப்பாசன வசதிகள் தென்பகுதி மலைகளினின்றும் இப்பகுதிக்கு நீரை அளித்து வந்தன. இந்நீர்ப்பாசன திட்டங்களில் முக்கியமான மல்வத்து ஓயா, பதவியா திட்டங்கள் இன்னும் பெரும் பயன் அளிப்பனவாக இருக்கின்றன.

கிறிஸ்து காலத்திற்கு முன்பாகவே பூதக்குளம் (கட்டுக்கரை), வவுனிக்குளம், பாவற்குளம், என்பன வன்னி நாட்டில் இருந்தன. பெரிய களம், மாமடு, ஒலுமடு, கனகராயன்குளம், பண்டாரக்குளம் என்பவை கிறிஸ்து காலத்துத் தொடக்கத்தில் இருந்தவை எனலாம்.

பூதக்குளத்தின் (Giant's Tank) கட்டுக்கரை அமைப்பு வரலாறு இலங்கை அரசர்கள் காலவரலாற்றில் மறைந்து கிடக்கின்றது. இக்குளம் இயக்கர்களாற் கட்டப்பட்டது என்பது மரபு. பார்க்கர் (Parker) என்பார் இக்குளம் கிறிஸ்து காலத்துக்கு முற்பட்டது என்று எடுத்துரைக்கின்றார். இக்குளம் 15 மைல் நீளமுள்ள வரப்போடு 6400 ஏக்கர் நிலப்பரப்பினை உடையதாய் விளங்குகின்றது. அருவியாற்றுக்குக் குறுக்கே 90 அடி அகலத்திற் கல்லணை ஒன்று கட்டப்பெற்று ஆழமான வாய்க்கால் வழியாக நீர் இக்குளத்திற்கு கொண்டு வரப்பட்டது. 1739 இல் தேசாதிபதியாக இருந்த வான் இம்கொவ் (Van Imhoff) இக்குளத்தைச் சீர்படுத்த முற்பட்டார். ஆனால் அது மிகவும் கடினமானதொன்றாக இருந்தமையால் அவர் தமது முயற்சியை இடையிலே கைவிட்டார் 1897 ஆம் ஆண்டிற் பகிரங்க வேலைப்பகுதி இக்குளவரப்புக்களிலிருந்த உடைப்புக்களைச் சீர் செய்ததுடன் முன்பிருந்த கால்வாயையும் சரி செய்து அமைத்தது. இன்று இக்குளம் உலகத்தில் அமைக்கப் பெற்ற, பெரிய செயற்கை குளங்களில் நான்காவதாக அமைந்து விளங்குகின்றது. இக்குளத்திலிருந்து பாலாவிக்குத் தண்ணீர் பாயும்படி செய்யப்பட்டிருக்கிறது.

கிறிஸ்து காலத்திற்கு முற்பட்ட குளங்களில் வவுனிக்குளமும் ஒன்றாகும். இது துட்டகைமுனுவின் காலத்திலேயே இருந்திருக்கின்றது. இதனை எல்லாளமன்னன் அமைத்தான் என்று பார்க்கர் என்பார் கூறுவார். பாலியாற்றுப்படுக்கையின் குறுக்கே நீண்ட அணை ஒன்றினைக் கட்டி உருவாக்கப் பெற்ற இக்குளம் முன்னாளில் 'பிலிவாபி' என்று அழைக்கப்பட்டது.

பாவற்குளமும் கிறிஸ்து காலத்திற்கு முற்பட்ட குளங்களில் ஒன்றாகும். இதுவும் வவுனிக் குளத்தோடு கால அளவில் ஒத்திருக்கின்றது. இலங்கையிலுள்ள மற்றெந்த குளத்திற்கும் இல்லாத கண்மாய்கள் (Valve Pits) ஐந்து இக்குளத்தில் காணப்படுகின்றன. ஒத்த சிங்களப் பெயர்கள்

இல்லாத குளங்களில் இதுவும் ஒன்றாகும். இதனைக் கொண்டு தமிழர்கள் மிகப்பழங்காலந் தொட்டே இப்பகுதிகளில் சிறப்புடன் வாழ்ந்து வந்தார்களென்பதை நாம் நன்கு அறிய முடிகின்றது. நிலைத்து வாழ்ந்த தமிழினத்தின் உதவி இல்லாமல் எல்லாள மன்னன் இங்கு நாற்பத்து நான்கு ஆண்டுகள் சிறந்த ஆட்சியைத் தன்னிலும் வேறுபட்ட இனத்திடையே நிலைபெறச் செய்திருக்க முடியாது. "தென் இந்தியாவில் நின்றும் மக்கள் தொடர்பாக மகாதித்த துறைமுகத்தின் (மாதோட்ட) வழியாக வந்து குடியேறியதன் பயனாய் அப்பகுதி முற்றிலும் தமிழ்நாடாக மாறியது. இன்று தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் கீழ்மாகாணங்களிலும் சிங்கள ஊர்ப்பெயர்கள் பல மறைந்தும் சிதைந்தும் இருக்க மன்னார்ப் பகுதிகளில் அப்படியில்லாதிருத்தல் குறிப்பிடத்தக்க தொன்றாகும். இப்பகுதியில் யாவும் தூய தமிழ்ப் பெயர்களாக இருக்கின்றன" என்று காலஞ் சென்ற எச். டபுள்யூ. கொட்ரிங்டன் (H.W. Codrington) என்பவர் எழுதிப் போந்தார்.

விஜயன் இலங்கைக்கு வரும் முன்பு கி.மு. ஆறாம் நூற்றாண்டில் மகோதரன் என்பவன் நாகதீபத்தை ஆண்டு வந்தான். அவனின் மருமகனான குலோதரன் இராமேஸ்வரத்திற்கு அண்மையில் இருந்த கண்டமடானத்தை அரசு செய்தான். இவ்வரலாற்றை மகாவம்சம் எடுத்துரைக்கின்றது. இதனிலிருந்து தென் இந்தியாவிற்கும் வட இலங்கைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பை நோக்கும் பொழுது தெற்காசியாவிலேயே கடல் வாணிபத்துறையிற் சிறந்து விளங்கிய தென் இந்தியத் தமிழர்கள் அணித்தாய் இருந்த இலங்கையில் மாதோட்டம், குதிரைமலை போன்ற இடங்களில் வாணிப நிலையங்களை நிறுவி இருக்கலாம் என்பது தெரியவருகின்றது. அன்று இத்துறைமுகப் பட்டினங்கள் வளம் நிறைந்து திகழ்ந்தன. அங்கே ஆயிரக்கணக்காக மக்கள் நெருங்கி வாழ்ந்தனர். எனவே அங்கே வாழ்ந்த மக்களின் உணவு நெருக்கடியைப் போக்கப் பெரிய குளங்களையும், நீர்ப்பாசன வசதிகளையும் தங்கள் நாட்டில் அமைத்தது போல இங்கும் அமைத்திருக்கலாமன்றோ! இன்னும் தங்கள் ஆத்மீக தேவைக்காகத் திருக்கேதீச்சரத்தில் சிவாலயம் ஒன்றினையும் அமைத்தனர் போலும். இலங்கையின் வடக்கு, வடமேற்குப் பகுதிகளில் தென் இந்தியாவிற்கு எதிரில் பழைய பல குளங்கள் காணப்படுவதைக் கொண்டு இவ்வுண்மையை மேலும் வலியுறுத்த முடிகின்றது.

மேலும் பந்துகாபயன் ஆட்சிக்காலத்தில் அனுராதபுரத்தில் பொறியியல் வல்லுனரான ஜோடியன் என்ற பிராமணன் ஒருவன் இருந்தான் என்று மகாவம்சம் கூறுகின்றது. "முன்பு தமிழர்கள் கையாண்ட வரன்முறைப்படியே இன்றும் குளத்திலுள்ள நீர் விகாரை நிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும்" என்றும் மிகிந்தலையிலுள்ள 2 ஆம் இலக்கக் கல்வெட்டொன்று எடுத்துரைக்கின்றது. எனவே இலங்கையில் முதன் முதலில் குவித்த தமிழர்களே குளங்களை வெட்டினர் என்பது தெளிவாகின்றது. இன்னும், இரும்பின் உபயோகத்தை இலங்கையில் புகுத்தியவர்களும் தமிழர்களே! ஏனெனில் பெரிய நீர்ப்பாசனத்திட்டங்களை நிறுவ இரும்பு இன்றியமையாததாகும்.

## வன்னியைப் பற்றிய புதைபொருள் ஆராய்ச்சி:

பாழடைந்த குளங்களும், சிதைந்த குளவரப்புக்களும் நிறைந்த நிலப்பரப்பே வன்னியாகும். அழிந்த தாதுகோபங்களும், சிதைந்த சைவாலயங்களும் அங்கே அருகருகே இருக்கக் காணலாம். ஒரு புறத்தில் ஆற்றங்கரையில் விநாயகப் பெருமான் பீடத்தில் அமர்ந்திருப்பார். இன்னொரு புறத்தில் காட்டினுள் தனது அடியார்க்கு மோனமாக நடுவழியை நினைவூட்டிக் கொண்டிருக்கும் புத்தர் சிலையினைக் காணலாம். இச்சூழலில் இடையிடையே வன்னியர் இல்லங்களின் சிதைவுகள் அவர்களின் ஆயிரவாண்டுச் சுதந்திர வாழ்க்கையைக் கூறி நிற்கும் அழிந்த குளங்களும், சிதைந்த கால்வாய்களும் ஆங்காங்கே காணப்படுவதால் வன்னியின் மேற்குப் பாகமான மன்னார்ப் பகுதியில் மக்கள் பெருந்தொகையாக நெருங்கி வாழ்ந்தனர் என்பது தெளிவாகின்றது. பழைமையான அணைக்கட்டுகளில் கல்லாற்றிலுள்ள குறிஞ்சாக்குளத்தேக்கமும், பேராற்றிலுள்ள இன்னொரு தேக்கமும் குறிப்பிடத்தக்கவையாகும்.

வரலாற்றுப் புகழ்பெற்ற மாதோட்டத் துறைமுகமும், புகழ்பெற்ற திருக்கேதீச்சர ஆலயமும் இப்பகுதியிலேயே உள்ளன. இப்பழைய துறைமுகத்தின் வரலாறு, ஈழநாட்டு வரலாற்றுக்கு முற்பட்டதாகும். போர்த்துக்கேயர் தங்களது மத வெறியைத் தீர்த்துக் கொள்ள இத்திருக்கோயிலை அழித்தனர். அல்லாமலும் அவர்கள் யாழ்ப்பாணத்துப் போரில் தோல்வியுற்றபின் தமிழர்களின் தாக்குதலை தடுக்கும் வகையில் மன்னார் குடாக்கடலைக் கண்காணிக்க வசதியாக நான்முகக் கோட்டை ஒன்றினையும் கட்டினர். இக்கோட்டை பின்னர் ஒல்லாந்தர்களால் திருப்பிக் கட்டப்பெற்றது.

மன்னார்க் குடாவில் மாதோட்டத்திற்கு ஒரு சில கல் தெற்கே அரிப்பு என்னும் கிராமம் முத்துக்குளிக்கும் இடங்களைப் பார்த்த வண்ணம் அமைந்துள்ளது. அரிப்பு என்றால் சலித்தல் என்று தமிழில் பொருள்படும். கடலில் இருந்து முத்து எடுத்து இங்கே அரிக்கப்பட்டதனால் இவ்விடம் இப்பெயரைப் பெற்றது போலும்! இவ்விடம் முத்துக்குளித்தலோடு தொடர்புள்ளதாக இருப்பதுடன் இன்னொரு முக்கியமும் உள்ளதாக இருக்கின்றது. அதாவது ரொபாட் நொக்ஸ் என்பவன் கொட்டியாரில் (Kottiyar) இழந்த தன் உரிமையை இங்கே மீண்டு பெற்றான் என்று கூறப்படுகின்றது. இச்சிற்றூருக்கு ஒரு கல் தெற்கே டச்சுக்காரரின் சிதைந்த கோட்டை ஒன்று இருக்கின்றது. இன்னும் முத்துக்குளித்தலை மேற்பார்வை செய்வதற்கென இலங்கையின் முதல் ஆங்கில தேசாதிபதியாக இருந்த பிரடெரிக் நோர்த் அமைத்த கட்டிடத்தின் அழிந்த பகுதிகளும் இவ்விடத்திலிருந்து ஒரு கல் தொலைவில் இருக்கின்றன.

விடத்தல் தீவிற்கும் இலுப்பைக் கடவைக்கும் இடையிலுள்ள கொம்புதூக்கியில் சில கற்றூண்கள் காணப்படுகின்றன. அவை அங்கே ஒரு ஆலயம் அமைந்திருந்தது என்பதை வலியுறுத்துகின்றன. இதற்குச் சிறிது வடக்கே வெள்ளாங்குளத்திற்கு அருகே யானையை வாகனமாகக் கொண்ட ஐயனார் கோவில் ஒன்று காணப்படுகிறது. "கோகில சந்தேசா" வில் கூறப்பட்ட கோவில் இதுவாக இருக்கலாம்.

கட்டிடங்களின் சிதைந்த பகுதிகள் சின்னச் செட்டிகுளம், செட்டிகுளம், பாலம்பிட்டி, வெனாயன் குளம் முதலிய இடங்களிற் காணப்படுகின்றன. செட்டிகுளத்திலேயே வன்னித்தலைவர்கள் வாழ்ந்தனர். திரு.ஜே. பீ. லூயிஸ் என்பார் பழைய தமிழ்க் கையெழுத்துக் குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு எழுதிய நூலில் கி.பி. 247 இல் மதுரையிலிருந்து பல பரவர்களுடன் வந்த வீரவராயன் செட்டி என்ற பெயருடைய வாணிகன் ஒருவன் மரக்கலம் உடைந்து மன்னாரின் மேற்குக் க்ரையை வந்தடைந்தான் என்றும், பின் அவன் தன்னைச் சேர்ந்தாருடன் வந்து செட்டிகுளத்திற் குடியேறி அங்கே 'வவ்வாலை, என்ற பெயரையுடைய கேணி ஒன்றையும், சந்திரசேகருக்குக் கோவில் ஒன்றையும் கி. பி. 289 இல் அமைத்தான் என்றும் குறிப்பிட்டுள்ளார். அப்பகுதியில் இன்று வாழும் முஸ்லீம்கள் தாங்கள் முதல் முதல் இலங்கைக்கு வந்த அரேபிய வணிகர்களின் வழித்தோன்றல்கள் என்று கூறிக் கொள்கின்றனர்.

போர்த்துக்கேயரின் வழித்தோன்றியவர்களைப் பறங்கிச் செட்டிக்குளத்தில் அவர்களின் நிறத்தைக் கொண்டு அறிய முடிகின்றது. ஆனால் நிறத்தால் வேறுபட்டாலும் அவர்கள் அப்பகுதிக்குரிய ஆடைகளை அணிகின்றனர்.

புகழ்பெற்ற யாத்திரைத்தலங்களில் மடுவும் ஒன்றாகும். இன்று மடுக்கோவிலில் இருக்கும் சிலை மாந்தையில் முன்பு இருந்ததாகக் கூறுவர். டச்சுக்காரர்கள் மாந்தையைக் கைப்பற்றியபோது கத்தோலிக்கர் பலர் மாதாவின் சிலையை எடுத்துச் சென்று. கண்டி இராச்சியத்தின் எல்லையில் இருந்த மருத மடுவில் வைத்தனர் என்றும், அவ்விடத்தே முன்பு ஒருசுங்க வாடி வீடு, அரசனுடைய நாட்டிற்குள் கொண்டு செல்லப்படும் பொருட்களனைத்திற்கும் வரி அறவிட்டு வந்தது என்றும் பரம்பரை வழக்காகக் கத்தோலிக்கரிடையே கூறப்பட்டு வருவதை நாம் அறிவோம். மேலும் வெகு விரைவாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிய கத்தோலிக்கர்களும் வன்னி நாட்டிற் குடியேறினர். இவ்வாறு அங்கே குடியேறிய அனைவரும் நம் அன்னை புனித ஜபமாலை மாதாவின் பாதுகாப்பில் வாழ்ந்தனர். சிறிது காலத்தின் பின் ஆண்டு விழா ஒன்றினை 1870 – ஆம் ஆண்டு யூலாய் மாதம் 2 ஆம் நாள் கொண்டாடினர். (அனுராதபுரத்திற்கும், மாந்தோட்டத்திற்கும், யாழ்ப்பாணத்திற்கும் அமைந்திருந்த பழைய பாதைகளின் அடையாளங்களை இன்றும் நாம் கிழக்கு மூலைதெற்கிற் காணலாம். பழைய பாலம் ஒன்றும் ஒலுக்குளத்தில் காணப்படுகின்றது.)

வன்னி நாட்டின் பிரதானிகளின் சிறப்பான தலைநகரில் பனங்காமமும் ஒன்றாகும். இங்கு பௌத்த சின்னங்கள் எதுவும் காணப்படவில்லை. எனவே இப்பகுதியில் பண்டுதொட்டு இந்துக்களே வாழ்ந்து வந்தனர் என்பது தெளிவாகின்றது.

வவுனிக்குளத்தின் வடமேற்குப் பகுதியில் இருக்கும் காட்டில் அழிந்து சிதைந்த கட்டிட அடையாளங்கள் சில தென்படுகின்றன. எனவே அது ஓர் அழிந்துபட்ட நகராக இருக்கலாம். அழிந்து சிதைந்து போன பொருள்களின் இடையே, இந்துக்கள் வழிபட்டு வந்த சிவ விஷ்ணு ஆலயங்கள் திரு. ஜே. பீ. லூயிஸ் என்பவரால் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டன.

மேலும் 1885 ஆம் ஆண்டில் முல்லைத்தீவில் தென்னந்தோட்டத் தொழிலாளி ஒருவரால் சுட்டமண் கொட்டுக்களால் கட்டப்பெற்ற சிறிய கிணறு ஒன்றில் வெள்ளிப்புராண ஏடுகள் (51 தகடுகளும் 16 தகடுகளும் கொண்டவை) கண்டெடுக்கப்பட்டன. இந்தக்கிணறும் திருக்கேதீச்சரத்திற் காணப்பட்ட கிணறுகளும் அமைப்பில் ஒத்திருக்கின்றன. இந்த அரிய கண்டுபிடிப்பின் பயனாக இப்பகுதியில் ஆதிகாலத்தில் திராவிட இனம் வாழ்ந்ததென்பதை அறிய முடிகின்றது.

மகததேசத்துப் புத்த சமயிகள் விஜய இளவரசன் காலத்தில் இலங்கையில் தஞ்சம் புகுந்தனர் என்று யாழ்ப்பாணத்தில் பரம்பரை வழக்காகக் கூறப்படுகின்றது. அப்போது தமிழ்ச் சைவசமயத்தவர்கள் மாதோட்டத்திலும் குதிரைமலைப் பகுதியிலும் வாழ்ந்து வந்தனர். எனவே விஜயனும் அவனைச்சார்ந்த புத்தசமயத்தவர்களும் தெற்கே புத்தளத்திற்கு அருகேயுள்ள தம்மன நுவர என்ற இடத்தில் நகரொன்றை அமைத்தனர். அத்துறைமுகம் அக்காலத்தில் கல்யாணத் துறைமுகம் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. ஏனெனில் விஜய இளவரசன் குவேனியை இங்குதான் மணந்தான் போலும்.................... முதன் முதலில் இலங்கையில் குடியேறியோர் தென் இந்தியர்கள் என்பதும் திராவிட நாகரிகம் விஜயன் இலங்கைக்கு வருவதன்முன்னரே இங்கு இருந்து வந்தது என்பதும் வடமாகாணப்புதை பொருள் ஆராய்ச்சியின் பயனாய்த் தெரிய வருகின்றது. எனவே இலங்கையின் வரலாறு முதலில் வடபகுதியில் தோன்றிப் பின்னர் படிப்படியாகத் தென்பகுதிக்குச் சென்றது என்று கூறுவதற்கு யாதொரு ஐயமுமில்லை.

## வன்னியர்கள்:

வன்னியர்கள் பண்டைக்காலத்தில் தென் இந்தியாவில் வாழ்ந்து வந்த அக்கினி குலத்தைச் சேர்ந்த ஆரியர் அல்லாத வகுப்பினர் ஆவர். அவர்கள் மறத்தொழில் புரியும் மாவீரர்கள் பரம்பரையில் தோன்றியவர்கள்; அரச பரம்பரையைச் சார்ந்தவர்கள்; அவர்களைத் தென் இந்திய இராசபுத்திரர்கள் (Rajputs) என்றும் கூறலாம்.

வன்னியர்கள் இலங்கைக்கு வந்தமை குறித்துப் பலகாரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவதாக

இலங்கையின் அரசைக் கைப்பற்ற எண்ணி இங்கு கொண்டு வந்த படைகளில் அல்லது இலங்கையின் மேல் படையெடுத்து வந்த இளவரசர்கள் அல்லது தலைவர்களினது தமிழ்ப்படை வீரர்களின் எஞ்சிய பகுதியினரே வன்னியராக இருக்கலாம். இரண்டாவதாக வைபவ மாலை கூறும் காரணத்தைச் சொல்லலாம்: "பாண்டு அரசன் ஆட்சிக்காலத்தில் சுமார் கி. பி. 436 இல் இந்தியாவிலிருந்து இங்கு வந்த குளக்கோட்டன் என்ற தலைவன் கோயில்கள் பலவற்றைச் சீர்திருத்தி அமைத்தான். அப்போது இலங்கையரசன் அவனுக்கு எதிராகப் படை ஒன்றினை அனுப்பினான். ஆனால் பின்னர் அவன் அரசனோடு நல்லெண்ண உடன்படிக்கை ஒன்றினைச் செய்து கொண்டு கோயில்கள் பலவற்றைத் திருத்தினான். மேலும் அக்கோயில்களுக்குப் பெருந்தொகை நிலங்களை மானியமாகக் கொடுத்துதவினான். வன்னியர்கள் பலரை இந்தியாவின் கரையோரப்பகுதிகளில் இருந்து வரவழைத்துக் கோயில் நிலங்களைப் பண்படுத்திப் பயிரிட்டு கோவிலின் நன்மைக்காகப் பாடுபடுமாறு பணித்தான். இவ்வாறு பாண்டி நாட்டிலிருந்து ஐம்பத்தொன்பது குடிகள் இங்கு வந்து சேர்ந்தன. நாளடைவில் அக்குடிகள் பெருகி மக்கள் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. வன்னியர்களின் ஏழு தலைவர்களைத் தேர்ந்து அவர்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு பகுதிக்கும் முழு உரிமையோடு அதிகாரம் செய்ய உரிமை அளிக்கப்பட்டது." இத்தலைவர்களின் வழித்தோன்றல்கள் தொடர்ந்து தங்களது தொழிலைச் செய்து வந்தமையால் அவர்கள் ஆண்டு வந்த நிலப்பரப்பு வன்னி என்ற பெயரைப் பெற்றது. இந்நிலப்பரப்பில் வாழ்ந்து வந்த மக்கள் வன்னியர் என்று அழைக்கப்பட்டனர். இதனைக் கோணேசர் கல்வெட்டு, மேலும் உறுதிப்படுத்துன்றது. ஆராய்ச்சி நூலாக அமையாவிட்டாலும் வையாபாடல் வன்னி நாட்டில் அமைதியாகக் குடியேற்றியிருந்த தென் இந்திய இனங்களைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றது.

"வன்னிநாடு நுவரக்கலாவிய மாவட்டத்தையும் தன்னகத்தடக்கிய பெரு நிலப்பரப்பு" என்று சிங்கள வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இதனை 'மாவன்னி' என்றும் கூறப்பட்டுள்ளது. பிற்பட்ட காலத்தில் வன்னியர் என்ற பெயர் சிங்கள அல்லது வேட்டுவ அல்லது முக்குவத் தலைவர்களின் சிறப்புப் பட்டங்களாகக் கொள்ளப்பட்டது. வேளாளர்கள் சிறு ஊரிற்குத் தலைவர்களான போது அவர்கள் வன்னியர் என்று அழைக்கப்பட்டனர். வன்னி நாட்டு இளவரசிகளை 'நாச்சியார்' என்ற சிறப்பு பெயரால் அழைத்தனர். இது நாயக்கர் என்ற ஆண்பாற் சொல்லுக்கு எதிரான பெண்பாற் சொல்லான 'நாயக்கியார்' என்ற சொல்லின் திரியாகும்.

வன்னியர்கள் இங்கு வந்து குடியேறி வாழ்ந்தமைக்குப் பல விளக்கங்களைத் தரினும் சிங்கள வரலாற்று நூல்களிலே குறிக்கப்படும் உத்தரகோசம் என்ற நிலப்பகுதியில் வன்னியர்கள் மிகப்பழமையான காலத்திலிருந்தே வாழ்ந்து வருபவர்கள் என்று கூறுவதற்கு எவ்வித தடையும் கூறவியலாது.

### வன்னிநாட்டுத் தெய்வங்கள் :

இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் ஐயனாரை (ஐயனா – சிங்களம்) ஒரு காட்டுத் தெய்வமாகக் காட்டு வழியிற் செல்லுவோருக்குப் பாதுகாப்பை அளிக்கும் தெய்வமாகக் கருதி வழிபடப்படுகின்றது. இத்தெய்வம் குளக்கரைகளிலிருந்து குளங்களைப் பேணிக் காக்கும், பயிர்ச் செய்கை நடைபெறும் போதும், மக்கள் நோய்வாய்ப்பட்டு வருந்தும் போதும், மழை வளங்குன்றும் போதும் மக்கள் ஐயனாருக்கு விழா வெடுத்து வழிபடுவர். குளம் நிரம்பித் தண்ணீர் கரைபுரண்டோடும்போது சிங்களவர்களில் முதியோர் ஒன்று திரண்டு அக்கிராமத்து ஐயனாருக்கு 'முட்டிமங்கலம்' என்ற விழாவை நடாத்தி வருவது இன்றும் வழக்கில் உண்டு.

இத் தெய்வ வணக்கம் தென் இந்தியாவிலிருந்து மிகப் பழங்காலத்திலேயே இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. இத்தெய்வத்தின் முழுப்பெயர் 'கையனார்' என்பதாகும். ஏனெனில் இவர் விஷ்ணுவின் கையில் நின்றும் வெளிவந்தாராம். திருவாங்கூரில் இத் தெய்வம் 'அய்யப்பன்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. இத் தெய்வத்தின் சின்னம் இடையர்களின் தடியாகும். இவரின் இருப்பிடம் மேற்குப் படித்துறையாகும்.

வன்னி நாட்டின் பல பகுதிகளில் இத் தெய்வத்திற்குரிய கோயில்கள் காணப்படுகின்றன. முன்னர் கூறியது போல் யாழ்ப்பாணத்திற்கும் மன்னாருக்குமிடையில் ஐயனார் கோயில் ஒன்று இருக்கின்றது. குதிரையும், யானையும் இத்தெய்வத்தின் வாகனங்களாம். மாதம்பையிற் காணப்படும் ஐயனார் கோயில் ஒன்றில், இத்தெய்வத்தின் வாகனமான குதிரை மிகவும் புகழ்பெற்று விளங்குகின்றது.

இலங்கையில் அமைக்கப்பட்ட மிகப்பழமையான புத்தகோயில்களில் இஸ்ருமுனியா கற்கோயிலும் ஒன்றாகும். விகாரையாக மாற்றப்படுவதற்கு முன்னர் இது ஒரு தேவாலயமாக இருந்தது. அரசதோரணையில் அமர்ந்திருக்கும் ஒருவரின் புடைப்பகழ்வுச்சித்திரம் (Rolief) ஒன்று இங்குள்ள கற்பாறையில் காணப்படுகின்றது. இந்த உருவத்தைப் போர்வீரன் ஒருவன் என்று சிலர் கூறினாலும், அமைப்பில் எல்லா விதத்தாலும் ஐயனாரையே அது ஒத்திருக்கின்றது. இந்தச் சிலைகள் எல்லாம் உயர்ந்த முழந்தாளில் முழங்கையை வைத்து வீற்றிருக்கும் பாவனையில் அமைந்துள்ளன. இந்துக்களின் உயர்ந்த தெய்வங்களின் தலையை அலங்கரிக்கும் கூம்புவடிவமைந்த 'கிரீடம்' இத்தெய்வச் சிலைகளில் காணப்பெறாமை இங்கு குறிப்பிடத்தக்கதொன்று. இப்புடைப்பகழ்வுச் சித்திரத்தில் குதிரையும், கையில் வளைந்த தடியும், அருகே ஐயனாரின் வாகனமாகிய யானைக் கூட்டங்களும் காட்டப்பட்டுள்ளன. கீழே மற்றொரு கல்லில் காணப்படும் இடது கையிலே மலரேந்திய மங்கையின் உருவம் இவரது தேவியாய் இருக்கலாம் என்று ஊகிக்க வேண்டியுள்ளது. இவையெல்லாம் சேர்த்துக் காட்டப்பட்டுள்ளது ஐயனாரின் திருவுருவேயன்றிப் போர் வீரன் ஒருவரின் உருவம் அன்று.

மலபார் மக்களிடத்து மலிந்திருந்த நாகவணக்கம் (Serpent Cult) இலங்கையிலும் பரவியது. பண்டைய நாகர்கள் இதற்குக் கோயில் அமைத்து வணங்கி வந்தனர். ஐந்து தலை நாகத்திற்கு அமைக்கப்பட்ட கோவிலின் சிதைவுகள் மதவுவைத்த குளத்திற்கும் குருத்தூர்க் குளத்திற்கும் இடையில் காணப்படுகின்றது. வன்னியின் பல பகுதிகளிலிருந்தும் புத்தூரில் நடைபெறும் நாகதம்பிரான் திருவிழாவிற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆண்டு தோறும் செல்வர்.

இலங்கையின் காவல் தெய்வமாகிய கண்ணகி வணக்கம் அல்லது பத்தினி வணக்கம், அது தோன்றிய இந்தியாவிலும் பார்க்க இலங்கையில் மிகவும் சிறப்புற்றுத் திகழ்கின்றது. இத்தெய்வம் சின்னம்மை பெரியம்மை போன்ற தொற்று நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கின்றது. தொடக்கத்திலிருந்தே பத்தினி ஒரு இந்துத் தெய்வமாக இருப்பினும் சிங்கள பௌத்த மக்கள் பலருள்ளும் இன்று பரவியுள்ளது.

வற்றாப்பளையிலுள்ள பழைமைவாய்ந்த கண்ணகி கோவிலுக்கு ஆண்டுதோறும் தீவின் தமிழ்பேசும் பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கோர் இன்றும் செல்கின்றனர். இன்னொரு பிரபலமான கண்ணகி கோயில் குஞ்சுப் பரந்தனில் இருக்கின்றது.

போர்த்துக்கேயர் வருவதற்கு முன்னர் மடுவில் கண்ணகிக்குக் கோயில் ஒன்று இருந்ததாகப் பரம்பரையாகக் கூறி வரப்படுகின்றது. அவ்வாறு கொண்டாடப்பட்டு வந்த கண்ணகி வணக்கம் இந்துக்களிடையேயும் பரவி இருக்கின்றமைக்கு இப்பகுதியிலிந்து வந்த நெடுகாலக் கண்ணகி வணக்கமே வித்திட்டதெனலாம். ஒரு தாய்த்தெய்வ வணக்கமே மற்றொருதாய்த் தெய்வ வணக்கத்திற்கு இடமளித்தது போலும்! இந்தப் பழமையான கூற்றை ஆதரிக்கும் வகையில் திரு. ஈவேர்ஸ் என்பார், தமது 'வடமத்திய மாகாணக் கைநூலில்' பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "மடுவிலிருக்கும் தூயமேரி மாதாவின் திருக்கோயில் புத்த சமயத்தினராலும், அனேக தமிழ் யாத்திரிகர்களாலும் பத்தினி அம்மன் கோயில் என்றே வழிபடப்பட்டு வருகிறது"

கண்ணகி வணக்கத்தோடு சேர்ந்து ஏழு கன்னிகள் (நாச்சிமார்கள்) வணக்கமும் வன்னி நாட்டில் மிகுந்திருந்தது. இவ்வணக்கம் முதலில் தென் இந்தியாவில் தோன்றிப் பின்னர் இலங்கையில் தமிழ் பேசும் பகுதிகளிற் பரவலாயிற்று. புதுக்குடியிருப்புக்கும் ஒட்டுச்சுட்டானுக்கும் இடையிலுள்ள மன்னாக்கண்டல் (Mannakandal) என்னும் இடத்தில் இத்தேவிகளின் கோயில்கள் உடைந்து சிதைந்து கிடப்பதைக் காணலாம்.

விநாயகரை வேளாண்மைக்குக் காவற்றெய்வமாகப் பயிர்தொழில் செய்யும் வேளாளர் கருதி வழிபட்டனர். வன்னியின் எல்லாப்பகுதிகளிலும் இத்தெய்வத்தின் அழிந்துபோன கோயில்களைக் காணலாம். ஆத்மிக வளர்ச்சியிலும் பார்க்கச் செல்வப் பெருக்கை மனத்திற் கொண்டு சிங்களவர் பிள்ளையாரை வணங்குகின்றனர். சில காலத்துக்கு முன் அனுராதபுரியிலுள்ள அரசமரத்திற்கு எதிரில் ஒரு கணேசர் சிலை இருந்து வந்தது. இக்கணேசருக்கு இந்துக்கள் செய்வது போல், புத்த மதத்தினர் பாற்சோறு படைத்துப் பணிந்து வந்தனர். இவர் அனுராதபுரத்தையும் அரசமரத்தையும் பாதுகாக்கும் தேவகாவலன் என்றே எண்ணப்பட்டார்.

சிவனுக்குரிய பழைய தலங்கள் மன்னாருக்கணித்தே திருக்கேதீச்சரமும், ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரமும், குதிரைமலைக்கருகேயுள்ள அசுவகிரியும் ஆவனவாம். தென் இந்தியக் கல்வெட்டொன்றின்படி திருவிராமேஸ்வரமுடைய மகாதேவன் கோவில் என்ற பெயருடைய மற்றொரு சிவன் கோயில் மாதோட்டத்தில் இருந்ததாக அறியக்கிடக்கின்றது. உருத்திரபுரமும் வவுனிக்குளத்திற்கு அண்மையிலுள்ள கோயிற்காடும் கற்சிலைமடுவும் ஏனைய முக்கிய சிவஸ்தவங்களாம். கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட சிவன்கோயில் ஒன்று முன் கூறியதுபோல் செட்டிக்குளத்தில் இருந்தது.

பழைய அனுராதபுரத்திலும் சிவவணக்கம் இருந்தது; தேவநம்பியதீசன் அனுராதபுரியின் எல்லையை வரையறுக்கும்போது அவன் பிராமணன் ஒருவனுக்குச் சொந்தமான கோயில் ஒன்றைக் கடந்து போக வேண்டியிருந்தது. 1893 இல் அனுராதபுரியில் நடந்த புதைபொருளாராய்ச்சி, அப்பழம் நகரில் சிவன்கோயில் ஒன்று இருந்ததாகத் தெளிவுறுத்திற்று. ஜேத்தவனராமாவிற்கும் விஜயராம மடத்திற்கும் இடையில் இந்து ஆலயங்கள் பலவும் அவற்றைச் சார்ந்த கட்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இரு சிவன் கோயில்களில் கருங்கல்லினால் செய்யப்பெற்ற இரண்டு சிவலிங்கங்கள் அவைகளுக்குரிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டன. "மேஜர் போர்ப்ஸ்" என்பார் அனுராதபுரத்தை 1828 இல் பார்வையிட்ட பின், காடில்லாமல் இருக்கும் ஒரேயொருபகுதி மகாவிகாரையின் முன்னுள்ள பகுதியாம். அப்பகுதியில் ஒரு சதுரத்தில் நிழல்தரும் மரம் ஒன்று நிற்கின்றது. பதினான்கு அடி உயரமுள்ள தூணொன்றின் அருகில், ஒரு அச்சில் சுழலும் கருங்கற்காளை ஒன்று உண்டு. இவையனைத்தும் இங்கே ஒரு சிவன் கோயில் இருந்ததென்பதைக் காட்டுகின்றது. இக்கற்றூண் எல்லாச் சைவக் கோயில்களிலும் நந்தியின் அருகில் காணப்படும் கொடித்தம்பமாக இருக்கலாம்"

இத்தெய்வங்களோடு வைரவரையும், விஷ்ணுவையும் காளியையும் வன்னியர் வணங்கி வந்தனர். பெரிய காளி கோயில் ஒன்று அனுராதபுரத்தில் இருந்தது.

இவ்வாறு பண்டைக்காலத்திலிருந்தே இலங்கை மக்களிடையே எப்படித் தென்இந்தியப் பண்பாடு மேலோங்கி இருந்தது என்பதைக் காணலாம். ஆயிரமாண்டுகளுக்கு மேலாக வன்னி நாட்டை ஆண்டவர்களும், தமிழர்களின் பெருமைக்கும் பண்பாட்டிற்கும் பாத்திரர்களுமான வன்னியர்களின் வரலாறின்றி ஈழத் தமிழர் வரலாறு என்றும் முற்றுப்பெறாது.

*சி. எஸ். நவரத்தினம் அவர்கள் "வன்னியும் வன்னியரும்" எனும் பெயரில்*
*ஆங்கிலத்திலெழுதிய நூலிருந்து எடுக்கப்பட்டது. திருக்கேதீச்சரம் சைவ மாநாட்டு மலர் – 1960.*

*20. குழவி தளர்நடை காண்டல் இனிது.*

# கவி மாலை

காலை ஒன்று விடிந்திட
கொடி மலர்கள் மலர்ந்திட
வண்டுகள் யாவும் பறந்திட
வெண்புறாக்கள் வந்து குவிந்திடும்
சித்தியப்பன் முன் இருந்து கருத்தோடு
வழிகாட்டிப் புது வழி நடாத்த
அறியாமை இருள் அகற்றி ஞானக்
கல்வி புகட்டிடக் கேந்திரமாய் அமைந்து
பண்பான அதிபர், பரிவான ஆசிரியர் பலர் கொண்டு
ஒழுக்கத்தினை, பண்பாட்டினை நிதம் வாரித்தந்து,
பண்பாட்டுப் புகழ் பொறித்து,
நாடக நாட்டிய முத்திரை பதித்து,
மும்மதத்தவரை முதுகினில் சுமந்து,
நகரில் உயர் சித்தி பல படைத்துச்
சிரம் நிமிர்த்து தடம் மாறாது
எண்திசை யாவும் புகழுடன் நடை போடும்
நாமகள், பிறை அல்லா கல்வாரியேசு
குடிகொண்டு ஆளும் கலையகம் இது.
பாலகர் பல கண்டு சாதனை பல கண்டு
பல்கலைக் கழகம் பலர் அனுப்பி.
வானவன்மாதவேச்சரம் காணப்
பெருமையில் மார்புதட்டி மாடி எழுந்து
பெருநிலம் அறியக் கரம் காட்டும்
சித்தி விநாயகர் இந்துக்கல்லூரிநால் பத்து ஆண்டு
நிறைவு பெற்று நாநிலத்தில் பெயர் பதித்து
இந்நாளைக் கவி மாலை சூட்டி
நாமும் சிரம் தாழ்த்தி வணங்கிடுவோம்.

**ஆறுமுகம் ஆனந்தராஜா,**
*13ஆம் ஆண்டு கலைப்பிரிவு.*

# 2000 ஆம் ஆண்டளவில் புதிய கைத்தொழில்மய நாடு (NIC) என்ற நிலையை அடையும் சாத்தியம் இலங்கைக்கு உண்டா?

இலங்கை போன்ற வளர்முக நாடுகள் முன்னுதாரணமாகக் கொண்டு பின்பற்றக்கூடிய பொருளாதார நலப்பாடுகளைக் கடந்த இரண்டு தசாப்தங்களாக ஆசியப் பிராந்தியத்தின் கிழக்கு மூலையிற் காணப்பட்ட குறிப்பிட்ட சில நாடுகள் கொண்டுள்ளன. அந்நாடுகளையே ''புதிய கைத் தொழில் மய நாடுகள்" அல்லது கிழக்காசியாவின் ''பொருளாதாரப் புலிகள்" எனப் பொருளியல் வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர்.

★ புதிய கைத்தொழில் மய நாடுகள் கொண்டிருக்க வேண்டிய பண்புகள்:-

வளர்முக நாடுகளிற் பொருளாதார வளர்ச்சியுடன் பின்வரும் பண்புகளையும் கொண்டுள்ள நாடுகளே புதிய கைத்தொழில் மய நாடுகளாக இதில் உள்ளடக்கப்படும். அவையாவன:

1. தலா வருமானம் 2000 U.S. க்கு சமனாகவோ அல்லது அதற்கு மேற்பட்டதாகவோ இருத்தல் வேண்டும்.
2. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 20% க்கும் அதிகமானவை கைத்தொழிற் பொருட்கள் உற்பத்தியின் பங்களிப்பாக இருத்தல் வேண்டும்.
3. மொத்த ஏற்றுமதியிற் கைத்தொழிற் பொருட்களின் உற்பத்திகளின் பங்கு 20% க்கு அதிகமாக இருத்தல்.
4. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முதலீட்டு வீதம் 30ரூ க்கும் அதிகமாக இருத்தல்.
5. வருட சராசரி பொருளாதார வளர்ச்சி 8% - 10% க்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
6. வேலையின்மை வீதம் 5% க்கும் குறைவாக இருத்தல் வேண்டும்.

★ தற்போது புதிய கைத்தொழில் மய நாடுகளாக மாறியவை.

மேற்கூறிய பண்புகளின் அடிப்படையில் பின்வரும் நாடுகள் NIC நாடுகளாக இணைக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

தென்கொரியா, கொங்கொங், சிங்கப்பூர், தாய்வான், மலேசியா, இஸ்ரேல், கிரீஸ், ஸ்பெயின், ஆஜென்ரீனா, போர்த்துக்கல், என்பனவாகும்.

இவற்றுள் தென்கொரியா, கொங்கொங், சிங்கப்பூர், தாய்வான் ஆகிய நாடுகள் கிழக்காசியாவின் ''நான்கு பொருளாதாரப் புலிகள் அல்லது ''நால்வர் குழு" என வர்ணிக்கப்படுகின்றன.

ஐரோப்பாவில் வளர்ச்சியடைந்த கைத்தொழில் மய நாடுகள் 6 தசாப்த காலத்தில் அடைந்த பொருளாதார வளர்ச்சியை இந்த சூஇஊ நாடுகள் 2 தசாப்தங்களில் அதாவது மிகக் குறுகிய காலத்தில் எய்தின. இதனையே ''ஆசியாவின் அற்புதங்கள்" எனப் பொருளியல் அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

★ புதிய கைத்தொழில் மய நாடாக மாறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள்.

1. வர்த்தகக் கட்டுப்பாடுகள் அற்ற முறையில் திறந்த பொருளாதார கொள்கையைப் பின்பற்றல்.
2. தாராளமான வர்த்தகக் கொள்கையினைப் பின்பற்றுதல்.
3. ஏற்றுமதிக் கட்டமைப்பினை விவசாயப் பங்களிப்பில் இருந்து கைத்தொழில் துறைக்கு மாற்றுதல்.
4. நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

5. உள்நாட்டு நிதிச்சந்தையை விரிவுபடுத்தல்.
6. ஏற்றுமதி நோக்கிய முதலீடுகளை மேற்கொள்ளுதல்.
7. ஏற்றுமதி ஊக்குவிப்புக் கிராமங்களை அமைத்தல்.
8. கீழ்க் கட்டுமான வசதிகளை விருத்தி செய்தல்.
9. பொதுத்துறைச் சொத்துக்களை மக்கள் மயப்படுத்தல். அல்லது தனியார் மயப்படுத்தல்,
10. உள்நாட்டு அல்லது வெளிநாட்டுச் சந்தையை நோக்கிய பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

★ **புதிய கைத்தொழில் மய நாடு எனும் அந்தஸ்தினைப் பெறுவதன் முக்கியத்துவம்**

இன்று மூன்றாம் மண்டல நாடுகளாகக் காணப்படும் நாடுகள் பெறுமளவான பொருளாதார இன்னல்களுக்கு முகம் கொடுத்த வண்ணம் இருக்கின்றன. சர்வதேச தங்கியிருப்புப் கொள்கை எனும் வலைக்குள் சிக்கித்தவிக்கும் உலக நாடுகளுள் இம்மூன்றாம் உலக நாடுகள் (வளர்முக நாடுகள்) முன்னணியிற் காணப்படுகின்றன. இதற்கான காரணங்கள் வருமாறு:

இன்று வளர்முக நாடுகளிற் காணப்படும் அதிகரித்த சனத்தொகை வளர்ச்சி, வேலையின்மைத் தாக்கம், தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் சென்மதி நிலுவைப் பற்றாக்குறை, அதிகரித்த பணவீக்கம், தொடர்ச்சியான வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை, அரசியல் இஸ்திரமின்மை, உள்நாட்டு இனக்கலவரங்கள், ஆகக்குறைந்த மட்ட பொருளாதார வளர்ச்சி போன்ற காரணங்களால் நாட்டின் அபிவிருத்தியை வேமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டியிருப்பதால் ''புதிய கைத்தொழில் மய நாடு" என்ற நவீன கொள்கை, குறிப்பாக ஆசிய நாடுகளில் பெரும் முக்கியத்துவம் பெற்று வருகிறது.

★ **2000 ஆம் ஆண்டளவில் புதிய கைத்தொழில் மய நாடு எனும் அந்தஸ்தினை அடைவதற்கு இலங்கை மேற் கொண்டுவரும் நடவடிக்கைகள்:**

1. 1948 இல் இலங்கையில் இருந்து ஸ்ரேலிங் பவுண் நாணயம் வெளியேற்றப்பட்டு ரூபாய் நாணய முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
2. 1950 களில் எக்கலையில் முதலாவது கைத்தொழிற் பேட்டை உருவாகியது. அதைத் தொடர்ந்து இன்றுவரை இலங்கையில் 5 சர்வதேச தரம் வாய்ந்த கைத்தொழிற் பேட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
3. 1950 இல் நாட்டின் தாய் வங்கியான இலங்கை மத்திய வங்கி உருவாக்கப்பட்டது.
4. 1951 இல் முதலாவது கைத்தொழில் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.
5. 1960 இல் இறக்குமதி முதலீட்டுக் கைத்தொழிற் கொள்கை கொண்டு வரப்பட்டது.
6. 1977 நவம்பரிற் கொண்டுவரப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை அமுல் செய்யப்பட்டது.
7. 1989 இல் தனியார் மயமாக்கல் கொள்கை அமுல் செய்யப்பட்டமை மற்றொரு முன்னேற்றகரமான நடவடிக்கையாக உள்ளது.

இக்கொள்கைகள் பல்வேறு எதிர்புக்களின் மத்தியிலும் இன்றுவரை அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. அண்மையிற் தபாற் திணைக்களத்தினைத் தனியார் மயமாக்க உத்தேசிக் கப்பட்டுள்ளது.

இலங்கையிற் பல்வேறு சீர்திருத்த பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் அரசியல் ஸ்திரமின்மையாலும் 16 வருடகால உள்நாட்டு இனப்பூசல்களாலும் 2000 ஆண்டளவில் புதிய கைத்தொழில்மய நாடு, அதாவது பொருளாதார வேங்கையாக மாறுவதற்குத் தேவையான தகுதியினை அடைவதில் பல்வேறு வரையறைகளை இலங்கையானது எதிர் நோக்கி நிற்கின்றது.

செல்வன். சிவப்பிரகாசம் சிவகரன்
*1998 வணிகப்பிரிவு.*

# "ஐயாவும் அப்பாவும்"

இருபதாம் நூற்றாண்டு முற்பகுதியில் மன்னார் நகரில் சைவ சமயத்தவர்கள் வாழ்ந்தாலும் – ஒரு சித்தி விநாயகர் கோயில் இருந்தாலும் – அநேகமாக ஒருவரும் திருநீறு பூசிக் கொண்டு தெருவில் போவதில்லை. திருநீறணியாத கிறீஸ்தவர்களும் முஸ்லீம்களும் செறிந்து வாழ்ந்ததால் திருநீறு பூசுவது அநாகரிகம் என்ற நினைப்பு.

இப்படியான காலகட்டத்தில் ஒரு சிவந்த மேனியுடைய நெடிய நடுத்தர வயது மனிதர் நெற்றி நிறைந்த திருநீற்றுப் பூச்சுடன் கையில் ஒரு பையும் கொண்டு அடிக்கடி வீதியில் உலா வருவார். இவர் பார்ப்பவர்களுக்கு விநோத மனிதராகக் காணப்பட்டார்.

இவருக்குப் பெற்றார் இட்ட பெயர் செல்லையா. ஆனால் ஊரார் "சாம்பல் கங்காணி" என்றே அழைப்பார்கள். "திருநீறு இவர்களுக்குச் சாம்பலாகத் தெரிகிறது; அவர்கள் அறிந்தது அவ்வளவு தான்" என்று சொல்லி அவர் அதைப் பொருட்படுத்துவதேயில்லை.

எல்லோருடனும் குழந்தைப்பிள்ளை போலப் பணிவுடனும் அன்புடனும் பழகுவார். "சாம்பல் கங்காணி" என்றால் தெரியாதார் இல்லை. கையிலிருக்கும் பை உப்புக்குளம் சித்தி விநாயகருக்குப் பிடி அரிசி சேர்க்கும் பை. அவரது வாழ்க்கையின் இலட்சியத் தொண்டு அதுதான். உண்மையுணர்ந்தோர் அவரைச் "செல்லையா அப்பா" என்றே மதிப்பாக அழைப்பர்.

1959இல் மன்னார் சித்தி விநாயகர் கோயிலுக்குப் பக்கத்தில் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி கட்டப்பட்டது. அப்போது இவருக்கு வயது எழுபதிருக்கும். சுறுசுறுப்புக்குக் குறைவேயில்லை. கல்லூரிக்கும் இவர் காவலரானார். கல்லூரிக்கு வேலியில்லை; காரணம் கள்வரும் இல்லைக் களவும் இல்லை; விட்ட பொருள் விட்ட இடத்தில் இருக்கும். (கழுதை தின்னும் பொருள் மட்டும் புறநீங்கல்)

அங்கு குளிநீருக்கு குளங்கள் உண்டு. ஆனால் குடிநீர் மருந்தினும் அரிது. பகிரங்க வீதியோரமுள்ள குழாயில் காலை ஒரு மணி நேரமும் மாலை ஒரு மணி நேரமும் மட்டும் குடிநீர் வரும். நீர் பிடிக்க வந்தோர் வரிசையில் நின்று குடத்தில் ஏந்திக் கொண்டு போய் தண்ணீர்த் தொட்டியில் நிரப்ப வேண்டும். இந்த ஒழுங்கில் காவலர் செல்லையா அப்பா நீர் நிறைத்து மாணவர்களின் தாகம் தீர்க்க வேண்டும். நோயோ நொடியோ கடமை தவறவே மாட்டார். "ஒழுங்காக வேலைக்கு வராவிட்டால் ஆச்சி பேசுவா" என்பார். (எழுபது வயது குழந்தையின் ஆச்சிக்கு வயது என்ன இருக்கும்).

மாதம் அறுபது நேரம் தண்ணீர் பிடிக்கும் செல்லையா அப்பாவுக்குச் சம்பளம் ஐம்பது ரூபா. அவர் சொல்வார் "மன்னார் வீதிகளில் இவ்வளவு பிள்ளைகளும் நெற்றி நிறையத் திருநீறு பூசிக்கொண்டு செல்கிறார்களே. இதைப் பார்த்தாலே போதும், சம்பளம் எதற்கு" என்பார்.

கல்லூரி அதிபர் ச. வீரசிங்கம் அவர்கள் கட்டையானவர். நல்ல உடற்கட்டு உள்ளவர். காவலர் செல்லையா அப்பா நெட்டையானவர்; ஒல்லியான உடலுடையவர். இருவரும் ஒருவருக்கொருவர் அளவிடற்கரிய மரியாதையும் அன்பும் உடையவர்கள்.

அறுபது வயது அதிபர் இவரை "அப்பா" என்பர். எழுபது வயது காவலர் அவரை "ஐயா" என்பர். அதனால் நாமெல்லோரும் "அப்பா" என்றும் "ஐயா" என்றும் பயபக்தியாக அழைப்போம்.

"ஐயா" கல்லூரியில்தான் குடியிருந்தார். அப்பா அவருக்கு வேண்டும் உதவிகள் செய்வார்.

1960 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் நாள். திருக்கேதீஸ்வரத்தில் சென்னை சைவ சித்தாந்த மகா சமாசத்தின் "சைவ சித்தாந்த மாநாடு" நடைபெறுகிறது. காலையில் ஐயாவையும் அழைத்துக்கொண்டு அங்கு போவதற்காக நண்பர்கள் சிலரும் நானும் போகிறோம். அப்பா சொன்னார் "தேத்தண்ணி போடுறன் குடிச்சிட்டுப் போங்கோ" என்று. நண்பர்கள்

பஸ்சுக்கு நேரமாகிறது என அவசரப்படுத்தவே ஐயா சொன்னார் "நீங்கள் போங்கோ தம்பி நான் அடுத்த பஸ்ஸில் வருகிறேன்" என்று. நாங்கள் போய் விட்டோம்.

காலை 10 மணி இருக்கும், மாநாட்டு நிகழ்ச்சிகளில் மெய்மறந்து இருக்கிறேன். என்னை ஒருவர் அவசரமாக வெளியில் வருமாறு அழைக்கிறார். "ஐயாவுக்குச் சத்தியெடுக்குது; சுகமில்லையாம். உங்களை உடனே கூட்டி வரட்டாம்" என்கிறார். வந்த காரில் விரைகிறேன்.

கல்லூரி அறை திறந்த படி கிடக்கு, உள்ளே......... அப்பா குற்புறக் கிடக்கிறார். உடல் விறைத்துக் கிடக்கு. கடைவாயால் தேநீர் வடிந்திருக்கு, அதில் மொய்த்த எறும்புகள் இறந்திருக்கு. ஐயா எங்கேயென்று அங்கலாய்க்கிறேன். ஆஸ்பத்திரியில் என்கிறார்கள். அங்கு விரைகிறேன். ஐயா அறிவற்றுக்கிடக்கிறார். D. M. O. வைத்திலிங்கம் அவர்கள் என்னையும் கூட்டிக்கொண்டு பாடசாலைக்கு வருகிறார். அங்கு A. S. P. ஆறுமுகம் தலைமையில் பொலிசாரும் வந்து விடுகிறார்கள்.

தேநீர்ப் பாத்திரங்கள், ஐயா குடித்த மீதித் தேநீர் எல்லாம் இருக்கு; சீனிப் போத்தல் மட்டும் இல்லை. எல்லாம் கொண்டு போய் இரசாயனப் பரிசோதனை நடக்கிறது. தேநீரில் நஞ்சு கலக்கப்பட்டிருப்பது உறுதியாகிறது. ஐயாவுக்கு அந்த நஞ்சுக்கு எதிர் மருந்து கொடுக்கப்படுகிறது.

அப்பா போய் விட்டார்; ஐயாவின் உயிருக்கு இரந்து அன்றிரவு முழுவதும் ஆஸ்பத்திரியில் விழித்திருக்கின்றோம். 1961 ஆம் ஆண்டு பிறக்கும் ஆலய மணியோசை கேட்கிறது. சற்று நேரத்தில் "அப்பா எங்கே" என்ற கேள்வியுடன் ஐயா கண் விழிக்கிறார். ஐயா தப்பி விட்டார். அப்பா...........? நாங்கள் மௌனமாய் நிற்கிறோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஐயாவின் மக்கள் தர்மசங்கரியும் ஆனந்த சங்கரியும் கார் கொண்டு வந்து விட்டார்கள். மறுநாள் ஐயா அவர்களுடன் போகுமுன் அப்பாவிற்கு இறுதி அஞ்சலி செய்கிறார். "தம்பி! நான் சுகமாக்கிக் கொண்டு வரும் வரை பாடசாலையைக் குழம்ப விடாதீர்கள்" என்று எங்களை உறுதிப்படுத்திச் செல்கிறார்.

அப்பாவுக்கு ஆசிரியர்களும், மாணவர்களும் அஞ்சலி செய்து நன்றிக் கடன் செலுத்தி இறுதி யாத்திரைக்கு வழியனுப்பி வைத்து மீள்கிறோம். அப்போது பாடிய அஞ்சலிப் பாடலில் இப்போதும் மனப்பதிவில் இருப்பது இது.

*"எப்பாலும் போற்றும் இனியனெம் செல்லையா*
*அப்பா உனைப்பிரிந்தே ஆற்றேம் நாம் – இப்பாரில்*
*தண்ணீர்த் தவிப்பகற்றும் தர்மசீலனே எம்மப்பா*
*உண்ணீரோ கூற்றாயிற்றுமக்கு"*

பாடசாலையை அரசாங்கத்துக்குக் கொடுப்பது சம்பந்தமான கருத்துவேறுபாடு காரணமாகவே நஞ்சூட்டப்பட்டதென்றும் சந்தேக நபர்களைச் சொன்னால் தண்டனை வழங்க முடியுமெனப் பொலிசார் கூறப் "பாடசாலையை நடத்திக் காட்டுவதுதான் அவர்களுக்குரிய சரியான தண்டனை" எனக் கூறி ஐயா கல்லூரியை உறுதியுடன் வழி நடத்தினார்.

அப்பாவும் ஐயாவும் ஆன்மார்த்தமாகக் கல்லூரியின் இன்றைய உயர்நிலை கண்டு ஆசி வழங்கி ஆனந்தம் கொள்வர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ.

சைவப்புலவர் சு. செல்லத்துரை
*(முன்னாள் ஆசிரியர் 1960–1968)*
*ஓய்வு பெற்ற அதிபர் தரம் I*
*இளவாலை*

# நான் கூண்டில் அடைபட்ட ஒரு கிளியானால் .............

நான் கூண்டில் அடைபட்ட ஒரு கிளியானால்........... என்று சிந்திக்கும் போது, சிந்திக்கும் சுதந்திரம் உட்பட சகல சுதந்திரங்களும் பறிக்கப்பட்டுவிட்ட ஒரு உணர்வையே நான் அடைகின்றேன். அவ்வாறு கூண்டில் அடைக்கப்பட்டால் என் விருப்பம் போல் எங்கும் பறந்து திரியும் என் சுதந்திரம் முடக்கப்பட்டுவிடும். விரும்பிய பழங்களை விரும்பிய நேரத்தில் உண்டு மகிழும் என் உரிமை தடுக்கப்பட்டு விடும். என் இனத்தோடும், கிளையோடும் உல்லாசமாக மிளற்றி உறவாடும் வாய்ப்புப் பறிக்கப்பட்டுவிடும்.

அவர்களாகப் பார்த்து ஏதாவது கொடுத்தால் அதுதான் என் உணவாக முடியும். அவர்களாகப் பார்த்து ஏதாவது பேசினால் அதுதான் பேசுவதற்கு எனக்கு அளிக்கப்படும் சுதந்திரமாக முடியும். அவர்கள் அனுமதித்தால் தான் உள்ளே வரும் காற்றைக் கூட நான் சுவாசிக்க முடியும்.

இவற்றினை எல்லாம் எண்ணிப் பார்க்கும் போது எண்ணங்கள், சிந்தனைகள், வாழ்க்கை இவை எல்லாமே பறிக்கப்பட்டு, முடக்கப்பட்ட பின்பும் உயிர் வாழும் வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா?........... என்ற உணர்வுதான் ஏற்படுகின்றது.

பழங்களைக் கொத்துவதற்காகவே, படைக்கப்பட்ட என் சொண்டுகளுக்கு மட்டும் போதிய வலுவிருக்குமானால், இந்தக் கூண்டைக்கூடக் கொத்தி, குதறித்தள்ளி விட்டு............... அடிமை வாழ்வை உதறித் தள்ளி விட்டு, சுதந்திரமாய்ப் பறந்திருக்க மாட்டேனா?......... என்ன செய்வது என்னை ஆண்டவன் இப்படிப் படைத்து விட்டானே...........

ஆக்கம் : மா. சரண்ராஜ்
*தரம் 7 B*

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

# எனது பொழுது போக்கு

எனது பொழுது போக்கு கதைப் புத்தகங்கள் வாசிப்பது. கதைகளைக் கேட்பதில் எனக்கு முதல் ஆசையை ஏற்படுத்தியவர் என் ஆச்சி, (அம்மாவின் அன்னை) படிக்கவே தொடங்காத சின்னஞ்சிறு வயதில் இரவெல்லாம் ஆச்சிக்குப் பக்கத்தில் படுத்தபடி கதை கேட்பது என் வழக்கம். ஆச்சியும் ஒரு ஊரிலே ஒரு ராசா என்று தொடங்கி அலுக்காமல் கதை சொல்லுவார்.

பாலர் வகுப்பில் எங்கள் ஆசிரியையாய் இருந்த என் அம்மாவும் அழகாகக் கதை சொல்லுவார். அவரும் எனது கதைப்பித்தை வளர்த்தார். என் மாமா ஒரு எழுத்தாளர், நான் இரண்டாம் வகுப்பிலே தட்டுத் தடங்கலில்லாமல் வாசிப்பதை அவர் கண்டார். என்னை ஊக்குவிக்க அவர் பாலர் கதைப் புத்தகங்கள் பலவற்றை வாங்கித் தந்தார்.

எங்கள் பாடசாலையில் சிறுவர்களுக்கென்றே நூல் நிலையப் பிரிவு ஒன்று இருக்கிறது. அங்கு புத்தங்கள் இரவல் எடுக்கவும் முடியும். அங்கு அதிகமாகப் புத்தகங்களை இரவல் எடுப்பது நான்தான். பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்து உணவு உண்டதும் கதைப் புத்தகத்தோடு இருந்தால் உலகையே மறந்து விடுவேன்.

சில வேளைகளில் வாசித்து இடை நடுவில் இருந்தால் அதை வாசித்த பிறகுதான் பாடங்களில் கவனம் செலுத்துவேன். அப்பா என் செயலைப் பார்த்து ஏசுவார். முதலில் படிப்பு, பிறகுதான் கதை வாசிப்பது, என்பது அவர் இட்ட சட்டம், நியாயமானதுதான். இப்பொழுதெல்லாம் ஓய்வு நேரம் பொழுது போக்கத்தான் கதைப் புத்தகங்களை வாசிக்கின்றேன். கதை வாசிப்பதால் என் கற்பனை வளர்கிறது. எழுத்து நடையும் திருந்தி வளர்கிறது.

ஆக்கம் : செல்வி அ. வைதேகி
*தரம் 6 B*

# கல்வி தரும் ஒழுக்கம்

கடவுள் அன்பைக் கண்ணாய்க் கவர
களங்கம் இன்றிக் கற்றுத் தெளிய
கண்களாய்த் திகழும் கல்வி - என்
கடவுள் அருளும் கல்வி.

அறியும் அறிவை அறிவாய் அறியும்
அன்புக் கல்வி - வையகம்
அன்பை அணைக்கும் யாவரும்
கல்விப் பயிர் வானம்.

கள்ளங் கபடமற்ற கல்வி இரு
கண்களும் எங்கள் கல்வி
கல்லைக் கனிய வைக்கும் கல்வி - அது
கருணை நிறைந்த மக்கள் கல்வி

உள்ளம் முழுதும் ஊக்கம் வேண்டும்
உவமை போன்று கல்வியைக் கற்க.
ஊக்கமுடன் கல்வியைக் கற்றால்
உன் காலடியில் உலகம்.

அன்பின் கல்வியை அன்பால் அறிவாய்
அறிவின் கல்வியை முயற்சியாய் அறிவாய்
அமுதுக் கல்வியை பெறுவாய் தேனிசைத் தென்றலாய் - பின்
ஆனந்தக் கல்வியை அடைவாய் என்றும்

அறிவைப் புகட்டிடும் ஆசான் தாள் பணிதல்
அன்பு மாணவரின் ஒழுக்கச் செயல்
ஆசானின் ஆசியைப் பெறுதல்
அன்பின் கல்விக்குக் கடமையே.

*ஆக்கம் :-*
பா ரகுநாதன்
*தரம் 11 ஏ*

# இதிகாசங்களும் அவை கூறும் சமய மரபுகளும்

திரு. செ. றெக்ஸ் அருள் நேசன்

ஸ்மிருதி இலக்கிய வடிவங்களுள் இதிகாசமும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இந்துமத வரலாற்றிலே வேத உபநிடதக் காலப்பகுதிகளை அடுத்தே இதிகாசக் காலப்பகுதி முக்கிய இடம் பெறுகிறது. வேத உபநிடதங்களிலே காணப்பட்ட சமய மரபுகளும், தத்துவ விளக்கங்களும் கல்விஞானம் உள்ளவர்களுக்கே விளங்கக்கூடிய வகையிலே அமைந்திருந்தன. ஆனால் சாதாரண பாமர மக்களும் அதனை விளங்கி அறியக்கூடிய வகையிலே இவ்விதிகாச புராணங்கள் அமைந்திருந்தன. இதனாலேயே சாதாரண பாமர மக்களும் இந்து சமய அறினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் எழுச்சி பெற்றவையே இவ்விதிகாச புராணங்கள் எனக் கருதிக் கொள்ளப்படுகின்றது. இதனாலே தான் இந்துமத வரலாற்றிலே ஒரு திருப்புமுனையாக இவ்விதிகாசங்கள் அமைந்திருக்கின்றன.

இதிகாசம் என்பது இதி + கா + அஸ என்ற சொற்களின் கூட்டுச் சேர்க்கையாலேயே அமைந் திருக்கின்றது. இக்கருத்தினை நாம் உற்று நோக்கும் போது இது இப்படி முன் இருந்தது எனக் கொள்ளப்படுகின்றது. எனவே தான் இவ்விதிகாசங்கள் மிகப் புராதன கதைகளைக் கூறுவதெனப் பொருளுணர ப்படுகின்றது. இந்துமத தத்துவங்களைப் பாமர மக்களும் அறிந்து கொள்ளும் நோக்குடன் வீரர்களின் வாழ்க்கை வரலாறுகளின் மூலமாக இந்துமத அறிவினை மக்களுக்கு வழங்கியமையினாலேயே இதனை வீர காவியம் என அழைக்கின்றனர். இதிகாசங்களிலே வருகின்ற பல கதைகளைக் கொண்டே வேதத்தில் பல மந்திரங்களிற்குப் பொருள் கொள்ளப்படுகின்றது. இதனாலேயே இவ்விதிகாசங்களைப் பிராமண காலத்து இதிகாச வேதம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

பண்டைய காலத்து அரசர்களது வரலாறுகள் யாவும் பாட்டில் அமைக்கப்பட்டு சூதர், மாகதர் என்போரினால் வேள்விகள் நடைபெறும் போது பாடப்பட்டமையினாலேயே இதனை அக்கியானங்கள் எனவும் அழைக்கின்றனர். இவ்வாறு எழிச்சி பெற்ற இதிகாச வடிவங்களே இராமாயணம், மகாபாரதம் எனும் இரு இதிகாசங்களுமாகும். இராமாயணமானது குருவம்சத்திற் தோன்றிய இராமன் வரலாற்றின் விளக்கும் முகமாக ஏறக்குறைய 25000 சுலோகங்களை உள்ளடக்க மகாபாரதமோ ஒரு லட்சம் சுலோகங்களைக் கொண்ட குருவம்சக் கதையைக் கூறுவதாக அமைந்துள்ளது. முன்னையது வால்மீகியால் இயற்றப்பட பின்னையது வியாச முனிவரால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இவ்விதிகாசங்கள் பிரதிபலிக்கும் வழிபாட்டு முறையானது பல தெய்வக் கொள்கைகளை உள்ளடக்கியதாக அமைந்திருக்கின்றன. வேதங்களில் கூறப்பட்ட தெய்வங்களே இங்கு காணப்பட்டாலும் வேதங்களுட் கூறப்பட்ட சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய தெய்வங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இராமாயணதிற் சிவ வழிபாடு பற்றிய கருத்துக்கள் நிறைவாகக் காணப்பட்டிருக்கின்றன. இராமன் சிவ வழிபாடு உடையவனாகக் காணப்படுகின்றான். என்றும் குறிப்பிடப்பட்டிருக்கும் அதே நேரம் இராவணன் சென்ற இடம் எல்லாம் சிவலிங்கம் வைத்து வழிபட்டான் என்று அந்த இலிங்கத்தை 108 திருநாமங்களால் அர்ச்சித்து வழிபட்டுச் சாமகானம் பாடிச் சங்கரன் வாள் பெற்றான் என்றும் கூறப்படுகின்றது. இராமன், கோசலை போன்றோர் சிவ வழிபாட்டை மேற் கொண்டிருந்தார்கள் என உத்தர காண்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு இடம் பெற்றிருப்பதால் இந்து மரபினை இவ்விதிகாசங்கள் பேணிப்பாதுகாத்து வருகின்றன என்ற கருத்துத் தெளிவாகின்றது.

இராமாயணத்திலே இராமன் ஒரு இலட்சிய வீரனாகவும் அறத்தைக் காப்பவனாகவும் அமைந்திருக்கின்றான். இந்துசமயம் போற்றுகின்ற அறம், பொருள், இன்பம், வீடு எனும் புருடார்த்தக் கோட்பாட்டை விளக்குபவனாக இராமன் திகழ்கிறான். இத்தகைய அறவழி செல்லும் இராமன் எத்தனையோ துன்பங்களைச் சந்தித்தாலும் இறுதியில் இன்பத்தையே அனுபவிப்பவனாகவும் விஷ்ணுவினுடைய ஒரு அவதாரமாகவும் அமைந் திருப்பதனாலேயே இராமாயணத்தில் அவதாரக் கருத்துக்களும் முக்கிய இடம் பெற்றிருக்கின்றன.

உத்தர காண்டம், யுத்த காண்டம் போன்ற பகுதிகளில் இராமனை வழிபடுவோர் சுவர்க்கத்தை அடைவர் என்றும்

குறிப்பிடப்பட்டிருப்பது போன்ற கருத்துக்கள் வைஷ்ணவ வரவை விளக்குவதாக அமைந்திருக்கின்றன. இவ்விராமாயண காவிய நாயகி சீதையின் மூலம் சக்தி வணக்கம் முக்கியத்துவப்படுத்தப்பட்டிருக்கிறது. பாலகாண்டத்தில் உமை வணக்கம் பற்றிய கருத்தும் முக்கிய இடம் பெறுகின்றது. சீதை கங்கையை வழிபட்டாள் என்பதன் மூலம் நதி வணக்க மரபு இடம் பெற்றிருப்பது இந்து சமயக் கருத்தை வற்புறுத்துவதாகவே அமைந்திருக்கின்றது.

இந்து சமயம் போதிக்கின்ற அற ஒழுக்கங்களில் பிரகிருதி மார்க்கமும் ஒன்றாகும். உலகியல் வாழ்க்கையில் ஈடுபட்டுக் கொண்டே அற ஒழுக்கங்களை எவ்வாறு கடைப்பிடிப்பது என்பதை இராமன், சீதை போன்ற இராமாயணப் பாத்திரங்கள் வழிப்படுத்தி நிற்க, நட்பின் பெருமையைக் குகனுடைய வாழ்க்கை பிரதிபலிக்கின்றது. இவை யாவும் இல்லற வாழ்க்கையுடன் கூடிய உயர்ந்த அற ஒழுக்கங்களைக் கூறுவனவாய் அமைந்திருக்கின்றன. இவ் இந்து சமயத்தில் அன்பு மார்க்கமும், தொண்டு மார்க்கமும் முக்கிய இடம் பெற்றிருக்கின்றன. இதன்படி உயர்ந்த பேற்றைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதை விளக்கும் முகமாக அனுமானும் இலக்குமணனும் அமைந்திருக்கின்றனர். இவ்வாறே பாச உணர்விற்கு ஓர் பரதனும், செய்ந்நன்றி அறிதல் எனும் அறத்தினை வழிப்படுத்துபவனாகக் கும்பகர்ணனும் அமைய உயர்ந்த பல பண்புகள் இருந்தும் அறமல்லாத மறவழி செல்பவன் அழிந்து போகின்றான் என்பதற்கு இராவணனது வாழ்க்கையும் ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றன. இவ்வாறு இந்துமத தர்மங்களையும், தத்துவங்களையும் வெளிப்படுத்தும் வகையிலே இராமாயணமாகிய இதிகாசம் முக்கிய இடம் பெறுகின்ற.

இதிகாசங்களில் மற்றோர் வடிவமான மகாபாரதம் குரு வம்சக் கதை கூறுவதாக 100000 சுலோகங்களைக் கொண்டு அமைந்திருக்கின்றது. இவ்வாறு இது அமைந்திருப்பதால் அக்காலத்தில் இடம் பெற்ற சமய மரபுகளையும், அறவழிப் போதனைகளையும் நிறைவாக உள்ளடக்கி இருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு யதார்த்த சமூகத்தின் ஊடாகவும், அவர்களிடையே காணப்படும் உறவு முறைகளால் ஏற்படும் உட்பூசல்களை மையமாக வைத்து சாபமிடுதல், ஆசி வழங்குதல், சினத்தை அடக்குதல், குரு தட்சணை வழங்கல், நோன்புகள் இருந்து இறையருள் பெறல் போன்ற இந்து சமய மரபுகளை வெளிப்படுத்தும் வகையில் இம்மகாபாரதம் இடம் பெற்றிருக்கின்றது. சிவ வழிபாட்டு மரபு நிறைவாகவே பேணப்பட்டு வந்தது என்பதற்குச் சாதகமான முறையில் சகஸ்ர நாமங்களினாலே சிவனை வணங்கப் பட்டிருந்தமைக்கான குறிப்புக்கள் கிடைத்திருப்பதும் சிறந்த ஓர் ஆதாரமாக அமைகின்றது. மேலும், சிவனது கழுத்திலும், கரங்களிலும் பாம்பு அணிந்திருப்பதும், நீலகண்டத்தை உடையவன் சிவன் என்று காட்சி அளிப்பதும் இடபக்கொடி, திரிசூலம் போன்றவற்றைத் தாங்கியிருப்பது போன்ற கருத்துக்கள் உருவ வழிபாட்டு முறை ஆரம்ப காலத்திற் பேணப்பட்டு இருந்தது என்பதை மகாபாரதம் குறிப்பிட்டு இருப்பதும் இந்து சமயம் நிறைவாகப் பேணப்பட்டிருக்கின்றது என்பதையும் தெளிவுபடுத்தும் ஆதாரங்களாக அமைந்திருக்கின்றன.

இந்துசமய மரபுகளை வெளிப்படுத்தும் மகாபாரதமானது இந்து தத்துவங்களை வெளிப்படுத்தும் வழிகளிலும் முதன்மை மிக்கதாகவும் அமைந்திருக்கின்றது. பசு வணக்கம், நதி வணக்கம் போன்றனவும் பாரதத்திற் பேணப்பட்டிருக்கின்றன என்பதை நாம் தெளிவாக அறிய முடிகின்றது.

மேற்கூறிய கருத்துக்கள் யாவற்றையும் உள்ளடக்கி ஒரு சிறந்த இலக்கிய வடிவமாக இவ்விதிகாச புராணங்கள் அமைந்து காணப்படுகின்றன என்பதனைத் தெளிவாகவும், விளக்கமாகவும் நாம் அறியக்கூடிய வகையிலே அமைந்திருக்கின்றன.

*"மரத்திற்கு நாம் நீர் ஊற்றுகின்றோம்; மரம் தானே தளிர்த்து வளரவேண்டும். அதுபோல மாணவருக்கு ஆசிரியன் கல்வி சொல்லிக் கொடுக்க முடியும்; கல்வி மாணவருக்குள் இருந்து வளர வேண்டும்.*

- சுவாமி விவேகானந்தர் -

# நாவலர் பெருமான் காட்டிய சைவசமய வாழ்வு முறை

குமாரசாமி சோமசுந்தரம்.
*ஆலோசகர், தேசிய கல்வி நிறுவனம்.*

சமயம் என்பது ஒருபாதை – ஒரு போதை – ஒரு போர்வை. அவரவர் பார்வையைப் பொறுத்துச், சமயத்திற்கு அவ்வாறு வியாக்கியானம் தரப்படுகின்றது. சமயத்தின் வரலாற்றைக் கூர்ந்து கவனிப்பின் இம் மூன்று விதங்களிலும் சமயம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை தெரிய வரும். சமயத்தைப் போதைக்குரிய தொன்றாக்கி, மாந்தி, மதவெறி பிடித்து மயங்கினவர்கள் சிலர். சமயத்தைப் போர்வையாக்கி, அதனுள் மறைந்து நின்று கொண்டு, சமுதாயத்திற்கு அல்லவை புரிந்தோர் பலர். சமயம் ஒரு பாதை, ஒரு வாழ்க்கை நெறி. வையத்துள் வாழ்வாங்கு வாழ அது வழி காட்டுகின்றது என்ற உணர்வில்லாமல், சமயத்தைச் சம்பிரதாயமாக்கி வாழ்ந்தோர் மிகப்பலர். பத்தொன்பதாம் நூற்றாண்டில், இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சைவத் தமிழ் மக்களைப் பெரும்பாலும் மேற்கூறிய ஏதாவது ஒரு வகையினுள் அடக்கி விடலாம். நாவலர் தோன்றி வாழ்ந்து பணியாற்றிய காலமாகிய பத்தொன்பதாம் நூற்றாண்டு அத்தகைய சமயப் பின்னணியையும், சூழலையும் கொண்டிருந்தது.

நமது சைவசமயம், சைவ ஆசாரம், பண்பாடு, கலாசாரம், சைவமரபுக் கல்வி முதலியன அக்கால கட்டத்தில் நைந்து நலிந்து நலமிழந்திருந்தமைக்கு அந்நிய ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் ஆதிக்கம், அவர்களின் செல்வாக்கினைப் பெற்றிருந்த பிற சமயக் குழுவினரின் பல்வேறு நடவடிக்கைகள் என்பனவற்றைப் பொதுவாகக், காரணங்களாகக் கூறுவர். அவை புறக்காரணிகள் மட்டுமே. அகக் காரணிகள் இன்றிப் புறக்காரணிகளால் மாத்திரம், பாரிய தீங்குகளை விளைவிக்க முடியாது. சைவத் தமிழ் மக்கள், சைவத்தை ஒரு போர்வையாக்கிக் கொண்டமை ; சைவம் வேறு, வாழ்வு வேறு என்ற ஒரு நிலைப்பாட்டினைப் பெற்றிருந்தமை ; சமயம் ஒரு சம்பிரதாயம் என்று கருதியமை ; சமயத்தைப் போதை ஆக்கியமை ஆகிய அகக்காரணிகள், பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமயம் பழுதுபட்டுத் தாழ்நிலை அடைந்தமைக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்தன. நாவலர் இந்நிலைமையை நன்கு உணர்ந்து தெளிந்திருந்தார். பிழை எங்கே என்பதைக் கண்டறிந்து பரிகாரம் தேடும் முயற்சிகளை மேற்கொண்டார்.

நாவலர் உத்தம சைவ சமயி. தம் வாழ்க்கையை மாசுபடியாமல், குற்றம் தீண்டாமல், கண்ணுங் கருத்துமாயிருந்து, காலந்தோறும் பாதுகாத்துக் கொண்டிருப்பவர்கள் உத்தம சமயிகள். ஏனையோரும் தத்தம் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி, நல்ல வண்ணம் வாழ்வதற்குச் சமயநெறி காட்டி, வழிப்படுத்துபவர்கள் அவர்கள். சைவநெறி நீதியை ஆதாரமாகக் கொண்டுள்ளது. "மேன்மை கொள் சைவநீதி" என்று போற்றப்படுகிறது. நாவலர் சைவநீதியை உபாசித்தவர் ; சாதனை செய்தவர் ; நீதிக்குத் தம்மை அர்ப்பணித்தவர். நாவலர் பெருமான் காட்டும் சைவ சமய வாழ்வு முறை, நீதியின் பாற்பட்டது ஆகும்.

சமயம், மனிதர்கள், கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுவதற்கு வழிகாட்டுகின்றது.

*"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது.*
*நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்"*

இது நாவலர் வாக்கியம்.

மனிதப் பிறவியெடுத்ததன் பயனை எய்துதற்குச் சமயம் நெறிப்படுத்துகிறது. சமய வாழ்வின் ஓர் இன்றியமையாத அம்சம் இதுவாகும். அது மட்டும் தான் சமயத்தின் பணி. அன்று, சமயம், மனிதர்களைச், சிறந்த மனிதர்களாக்கி படிப்படியாகத் தெய்வீக நிலைக்கு இட்டுச் செல்கின்றது. சமய ஒழுக்கங்களை, விழுமியங்களை, பண்புகளை மனிதர்கள் அறிந்து, அவற்றை வாழ்விற் கடைப்பிடித்தல் சமய வாழ்வின் மற்றொரு பிரதான அம்சமாகும். அதுவே சமயத்தின் உயிர் நாடியுமாகும்.

சைவசமய வாழ்வு முறையினைத் தந்த நாவலர், அத்தகைய ஒரு வாழ்வில், ஆன்மிகமும் உலகியலும் இணைய வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். ஆன்மிகம் கலக்காத உலகியல் பயனற்றது மட்டுமன்று, ஆபத்தானதும் கூட என்னும் நிலைப்பாடு அவருடையது.

சைவ சமயத்தைப் போர்வையாகக் கொண்டு, அதனுள் மறைந்திருந்து கொண்டு, சமுதாயத் தீங்குகளை விளைவித்தவர்களுக் கெதிராகவே நாவலரின் கண்டனக் கணைகள் தொடுக்கப்பட்டன. பிரபுக்கள், கோயில் எசமானர்கள், மற்றும் சமூகத்தின் பெரும்புள்ளிகள் பலரும் அவர்களுள் அடங்குவர். அவ் வேடதாரிகளின் போலி வாழ்க்கையினாலேயே சைவம் பிறசமயத்தவரின் ஏளனத்திற்கு இலக்காயிற்று என்பர்.

சமயமானது மனிதனின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும் என்று நாவலர் கொண்டார். வாழ்க்கைத் தரம் என்றதும் பொருளாதார அடிப்படையில் சிந்திப்பது இயல்பு. உண்மையான வாழ்க்கைத் தரம் பண்புசார் ரீதியாக வளர்ச்சி பெறவேண்டும். ஒழுக்கம், அறிவு, ஆன்மிகம், பண்பாடு, விழுமியம் ஆகியவற்றை உள்ளடக்கிய அகவளர்ச்சி ஏற்படும் போதுதான், மனித வாழ்க்கைத்தரம் உயர்வு பெறுகின்றது. சமய வாழ்வு முறை ஒன்றினை அனுசரித்து வாழும் போதே இத்தகைய வாழ்க்கைத் தர உயர்வினை அடைய முடிகிறது. இந்த வாழ்க்கையில் நாவலர் பெருமான் காட்டிய சமய வாழ்வு முறை, வாழ்க்கையின் தரத்தை உயர்த்துவதாக அமைகின்றது.

சைவசமய வாழ்வு முறையில், முதலில் கடவுளில் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பது நாவலரின் உறுதியான நிலைப்பாடு ஆகும். "இந்தச் சரீரம் உள்ள பொழுதே இதனது நிலையாமையை அறிந்து பெருங்கருணைக் கடலாகிய கடவுளை வழிபட்டு உய்ய வேண்டும்" என்கிறார் நாவலர்.

கடவுளால் அருளிச் செய்யப்பட்ட வேதம், ஆகமம், என்னும் முதனூல்களில் விதிக்கப்பட்டவைகளெல்லாம் புண்ணியங்கள் ; விலக்கப்பட்டவையெல்லாம் பாவங்கள். புண்ணியங்கள் நன்மை பயப்பன ; பாவங்கள் தீமை விளைவிப்பன. சமய வாழ்வு முறையில், புண்ணியங்கள் செய்வதற்கு மட்டுமே இடம் உண்டு ; பாவங்கள் விலக்கப்பட வேண்டியன.

கடவுளால் விரும்பப்படுபவைகளாவன : இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாகும். ''கடவுளால் வெறுக்கப்படுபவைகளாவன : கொலை, புலாலுண்ணல், களவு, கள்ளுண்ணல், வியபிசாரம், பொய், செய்ந்நன்றி மறத்தல் முதலிய தீமைகளாம்.'' நாவலர் பெருமான், நான்காம் பாலபாடத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் :

கடவுள் நம்பிக்கை கொண்ட நாம், கடவுளுக்கு எவை விருப்பமோ. அவற்றை நம் வாழ்வில் மேற்கொள்ள வேண்டும். கடவுள் வெறுப்பவற்றை நாம் தள்ளி வைக்க வேண்டும். அப்போதுதான் நம் வாழ்வு சமய வாழ்வாக அமையும் என்பது நாவலர் கருத்து.

சமய வாழ்வு முறையில், கடவுள் வழிபாடு முதன்மை பெறுகின்றது என்று கூறும் நாவலர் பெருமான், அது எவ்வாறு அமைய வேண்டுமென்பதைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

கடவுளுக்குச் செய்யும் வழிபாடுகளாவன ; அவரை மனதாலே தியானித்தலும் வாக்கினாலே துதித்தலும் ; கைகளினாலே பூசித்தலும் ; கால்களினாலே வலம் வருதலும் ; தலையினாலே வணங்குதலும் ; செவிகளினாலே அவருடைய புகழைக் கேட்டலும் கண்களினாலே அவருடைய திருமேனியைத் தரிசித்தலுமாம்". இத்தகைய வழிபாட்டு முறை, மனிதர்கள் ஒவ்வொருவராலும் கடைப்பிடிக்கப்படக் கூடியதே. பணமோ, பொருளோ இல்லையே, அதனால் கடவுள் வழிபாடு செய்ய முடிய வில்லையே என்று எவரும் அங்கலாய்க்கத் தேவையில்லை.

நாவலர் காட்டிய சைவசமய வாழ்வு முறை, எல்லோர்க்கும் உரியது ; எல்லோராலும் மேற்கொள்ளப்படக் கூடியது என்பதிலேயே அதன் சிறப்பும் பெருமையும் உள்ளது. செய்ய இயலாதவற்றைச் சொல்வதால் பயன் ஏதும் ஏற்படாது என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

இவற்றைச் செய்யுங்கள் இவற்றைச் செய்யாதீர்கள் என்று மக்களுக்கு அறிவுறுத்தும் பாணியில் நாவலர் தாம் எழுதிய நூல்களில் ஆங்காங்கு குறிப்பிட்டுள்ளார். செய்ய வேண்டியவற்றைச் செய்வதால் ஏற்படும் நற்பயன்களையும் ; செய்யத்தகாதனவற்றைச் செய்வதால் தமக்கும் பிறர்க்கும் ஏற்படும் தீங்குகளையும் தெளிவாகத் தந்துள்ளார். மக்கள் அவற்றை இனங்கண்டு செய்வது வாய்ப்பாக உளது.

கடவுளை நிந்தித்தல் ; கடவுளை வழிபடு முறைமையைப் போதிக்கும் குருவை நிந்தித்தல் ; கடவுளின் மெய்யடியாரை

நிந்தித்தல், வேதாகமங்களை நிந்தித்தல்; இந் நிந்தனைகளைக் கேட்டல்; தேவாலயத்திற்கும் மடாலயத்திற்கும் உரிய திரவியங்களை அபகரித்தல்; தேவாலயம், திருநந்தவனம் ; திருக்குளம் முதலியவற்றிற்கு அழிவு செய்தல் என்பன ஈசுரத்துரோகம் என்று நாவலர் குறிப்பிட்டுள்ளார். அவை விலக்கப்பட வேண்டியவை.

சைவ நெறி ஆனது அன்பு நெறி, அருள் நெறி, நீதி நெறி, ஒழுக்க நெறி, பண்பாட்டு நெறி, அறிவு நெறி, அறநெறி என்று நாவலர் கொள்வர்.

கடவுளில் உண்மை அன்பு கொண்டவர்கள், பக்தி உடையவர்கள், கடவுளின் படைப்புக்களான அனைத்துச் சீவராசிகளிலும் அன்பு, ஆர்வம், கரிசனை பூண்டு ஒழுகுதல் வேண்டும். எவ்வுயிர்க்கும் தீங்கு செய்தலோ இடையூறாக இருத்தலோ சமய வாழ்வு ஆகாது. சமய வாழ்வு ஆனது கடவுள் வழிபாட்டினை வற்புறுத்துவதோடு, அன்பும் அறனும் கொண்ட நல்லொழுக்கம் நிறைந்த சமூக வாழ்வையும் வலியுறுத்துகிறது. சமய வாழ்வு வேறு, சமூக வாழ்வு வேறு என்று கொள்ளல் ஆகாது. சமய வாழ்வையும் சமூக வாழ்வையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும் பண்பினை நாவலர் கொண்டிருந்தார்.

மனிதரின் சமூக வாழ்வினை அல்லல்படுத்தும் கொலை, புலாலுண்ணல், கள்ளுண்ணல், களவு, வியபிசாரம், பொய், சூது, அழுக்காறு, கோபம், செய்ந்நன்றி மறத்தல் முதலியன முற்றாக இடம் பெறாத வாழ்வினையே சமய வாழ்வு என நாவலர் பெருமான் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

"கொலையில்லாத ஞானமே ஞானம் ; கொலையில்லாத தவமே தவம் ; கொலையில்லாத தருமமே தருமம் ; கொலையில்லாத செல்வமே செல்வம்", என்பது நாவலர் வாக்கு.

*"பிறவுயிரைக் கொல்லுதல் போலத் தன்னுயிரைக் கொல்லுதலும் பெருங் கொடும் பாவம் என்பதும் அவருடைய கருத்து"*

புலாலூண்ணல் சைவத்திற்கு விரோதமானது. புலாலைப் புசித்துக் கொண்டும் கொலைபுரிந்து கொண்டும் பிறரை இம்சித்தும் வாழும் வாழ்வு சமய வாழ்வு ஆகாது. இத்தகையோர் தாம் உயிர்களிடத்து அன்புடையோம், அருளுடையோம், கரிசனையுடையோம் என்பதும் ; ஏன் சைவசமயிகள் என்று கூறுவதும் கூட, நடிப்பாக அமையுமே தவிர உண்மையாகாது.

"கள்ளு, அபின் கஞ்சா முதலியவை அறிவை மயக்கும் பொருள்கள், அவைகளை உண்பவர் அறிவையும் நல்லொழுக்கத்தையும் இழந்து தீயொழுக்கத்தையே அடைவர்".

"களவாவது பிறருடைமையாய் இருக்கும் பொருளை அவரிடமிருந்து வஞ்சித்துக் கொள்ளுதல்."

"வியபிசாரமாவது காமமயக்கத்தினாலே தன் மனையாளல்லாத மற்றைய பெண்களை விரும்புதல்"

*"பொய்யாவது உள்ளதை இல்லதாகவும்*
*இல்லதை உள்ளதாகவும் சொல்லல்".*

மேற்கூறியவை நாவலர் பெருமானின் கருத்துக்கள் அவை மானுடம் தழுவியவை.

பெரியோரைப் பேணல் ; தான தருமங்கள் செய்தல் ; நலிந்தோரை ஓம்புதல் ; வித்தியாதானம் செய்தல் ; தாய், தந்தை சுற்றத்தினரைப் பாதுகாத்தல் முதலிய சமூக விழுமியங்கள், சமய வாழ்வில் முக்கிய இடம் பெறுகின்றன. இதனால் சமூகத்தின் உறுதி, ஒழுங்கு, கட்டுப்பாடு என்பன பேணப்படுகின்றன. அமைதி, சாந்தி, நிம்மதி என்பன சமூகங்களில் நிலவ அவை துணையாகின்றன. தற்காலத்தில் சாந்தி, சமாதானம், அமைதி என்பனவற்றின் சீர்கரைவுக்கு சமூக விழுமியங்கள் வாழ்வில் பேணப்படாமையே முக்கிய காரணமாகின்றது.

சமயம் ஒருபாதை என்ற வகையில் நாவலர் பெருமான் காட்டிய சைவ சமய வாழ்வு முறை, நடைமுறைக் கேற்றதாகவும், பயனுள்ளதாகவும் அமைந்துள்ளது. மனிதர்கள் வாழ்வில் சகல நலன்களையும் அடைய வேண்டு என்னும் விழுமிய குறிக்கோள் எய்தப்படுவதற்கு, நாவலர் பெருமான் காட்டிய சைவ சமய வாழ்வு முறை பெரிதும் உதவும் என்பது உறுதி.

நன்றி : இந்து மாமன்றம்

*26. காலை இருமுது மக்களைக் கண்டு எழுதல் இனிது.*

# இந்து மாமன்றத்தின் குருகுலப் பணி

எம். ஆர். ராஜ்மோகன்
*செயலாளர் – மாமன்ற சமய விவகார, விழாக்கள், குருகுலம் குழு*
*பொதுச் செயலாளர் – சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம்*

*"தேவாலயம் தோறும் வித்தியாசாலை தாபித்து அதிலே பிள்ளைகளுக்குக் கருவி நூல்களையும் வேதம் ஆகமம் முதலிய நூல்களையும் கிரமப்படியே கற்பித்தல் வேண்டும். கற்ற பிள்ளைகளைப் பரீக்ஷித்து அவர்களுக்குள்ளே அதி சமர்த்தர்களாயும் நல்லொழுக்கமும் பக்தியும் உடையவர்களாயும் உள்ளவர்களையே தேவாலயத்துக்கு ஆசாரியர் முதலாயினோராக நியமித்தல் வேண்டும்.* இது ஆறுமுகநாவலர் பெருமானின் திருவாக்கும் இலட்சியமுமாகும். 1955 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டு இன்று 40 ஆண்டுகளுக்கு மேல் ஈழத் திருநாட்டின் தலைசிறந்த இந்து ஸ்தாபனமாகத் திகழும் எமது அகில இலங்கை இந்து மாமன்றம் நாவலர் பெருமானின் மேற்கண்ட இலட்சியத்தை ஆரம்பகாலத்திலிருந்தே தலையாய நோக்காகக் கொண்டு செயற்பட்டு வந்துள்ளது.

ஐம்பதுகளில் பல்வேறு சைவ அன்பர்கள் சுன்னாகத்திலும், யாழ்ப்பாணத்திலும் , புங்குடுதீவிலும் அர்ச்சகர் பாடசாலைகளைத் தாபித்து நடத்தி வந்தார்கள். இவை யாவும் காலகதியில் மாணவர்கள் தொகை சுருங்கச் சுருங்கத் தொழிற்படாது நின்று விட்டன. இவற்றை ஆராய்ந்து அறிந்தபின். சீரான குருகுலக்கல்வி, அமைதியும், புனிதமும் நிறைந்த ஆலயத்தின் அண்மையில் அமைவது பொருத்தமானதென மாமன்றம் அறிந்து கொண்டது. இளமைப் பருவத்திலேயே உள்ளத்தை ஒருவழிப்படுத்தவும் உலக விவகாரங்களில் மனதைச் செலுத்தாமல் கல்வியிலேயே கருத்தைச் செலுத்தவும் அமைதியான சூழ்நிலை, தெய்வீகச் சுற்றாடல் வேண்டுமெனவும் மாமன்றம் ஆலோசித்து மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கேயமைந்துள்ள திருக்கேதீச்சரமே "சிவானந்த குருகுலம்" ஸ்தாபிப்பதற்கு மிகமிகப் பொருத்தமானதெனத் தீர்மானிக்கப்பட்டது.

1961 ஆம் ஆண்டில் குருகுலம் தாபிப்பதற்கு வேண்டிய நிலத்தைத் திருக்கேதீச்சரத் திருப்பணிசபையார் ஒழுங்கு செய்து கொடுத்தனர். இக்காலகட்டத்தில் இந்து மாமன்றத்தின் தலைவராயும் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவராயும் இருந்து தொண்டாற்றிய சைவப் பெரியார் சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியின் பயனாக ஜுலை 1961 இல் ரூ 30,000/– செலவிற் சிவானந்த குருகுலமானது கட்டிட வசதிகளும் தளபாடம் மற்றும் இந்து சமய கலாசார முறைப்படி வாழக்கூடிய விடுதிகளும் கொண்டதாக அமைக்கப்பட்டது.

சிவானந்த குருகுலத் திறப்பு விழா பிலவ வருடம் தைமாதம் 13ம் திகதி (26.1.1962) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது. இத்தாபனத்திற்குச் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் முகாமைக்காரராகவும் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் அவர்கள் பிரதம குருவாகவும் சிவஸ்ரீ கி. நாராயண சாஸ்திரிகள் அவர்கள் உப பிரதம குருவாகவும் உயர் திரு. கொக்குவில் த. குமாரசாமிப் புலவர் அவர்கள் தமிழ்ப் பயிற்சி ஆசிரியராகவும் சுன்னாகம் திரு. த. சிவலிங்கம் அவர்கள் காரியதரிசியாகவும் கடமையாற்றினர். ஆரம்பத்தில் சுமார் 12 மாணவர்கள் குருகுலத்தில் கல்வி கற்றனர். இக் குருகுலத்தின் மாணவர்களுக்குக் கல்வி, உணவு, உடை, தங்குமிடம் யாவும் இலவசமாகவே கொடுக்கப்பட்டன. மாணவரொருவருக்கு வருடம் ஒன்றிற்கு ரூ. 600 அளவில் செலவாகியது. மாமன்றத்தின் வேண்டுகோளையடுத்து இந்து சமய ஆலோசனைச் சபை வருடாந்தம் ரூ. 1,000 மட்டும் கொடுத்துதவியது.

சிவானந்த குருகுலத்திற் பிராமணப் பிள்ளைகளுக்கு 5 வருடப் பயிற்சியும் பின்னர் கோயில்களில் இருவருடப் பயிற்சியுமாக 7 வருடத்தின் பின்னர் அவர்களிலே தகுதி வாய்ந்தவர்களுக்கு ஆசாரிய அபிடேகம் செய்யப்படுவதாகவும் நிர்ணயிக் கப்பட்டிருந்தது. எனினும் 1965 ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் வகுப்புகள் நிறுத்தப்பட்டன. பின்னர் 1966ஆம் வருட ஆரம்பத்தில் புனருத்தாரண வேலைகள் செய்யப்பட்டு வகுப்புகள் நடைபெற்றன. மாமன்றத்தின் தொடர்ந்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்த அரசாங்கம் 1967 ஆம் ஆண்டிலிருந்து இந் நன் முயற்சிக்கு ரூ. 2,400, நிதி உதவியாக வருடாந்தம் வழங்கி வரலாயிற்று.

இவ்வாண்டில் தொடர்ந்து குருகுலக்கல்வியைச் சிறப்பாகக் கற்பிப்பதற்கு இந்தியாவிலிருந்து ஒரு தகுதிவாய்ந்த வேதாகம ஆசிரியரை அழைப்பித்து குருகுலத்தில் நியமிப்பதற்கும் பிராமணப்பிள்ளைகளையும் சைவப் பிள்ளைகளையும் இரு வகுப்பாக நடத்த நியமிப்பதற்கும் மாமன்றம் நடிவடிக்கைகளை எடுத்தது. இதே காலகட்டத்திற் கொழும்பு ஆலயங்களின் தர்மகர்த்தாக்களை அழைத்து மாமன்றம் 1968 ஆம் ஆண்டு பெப்ரவரியில் நடத்திய கூட்டத்தில் குருகுலத்திலிருந்து பட்டம் பெறும் குருமார்களையே இக் கோயில்களில் இனிமேல் பூசகர்களாக நியமிப்பதெனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது இவ்வாறிருக்க 1970 ஆம் ஆண்டளவில் அளவெட்டி அழகொல்லைப் பிள்ளையார் கோயில் சைவ மடத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அரும்பெரும் முயற்சியால் சைவக் குருக்கள் பயிற்சி நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதுமேலும் விஸ்தரிக்கப்பட்டு வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலடியிலும் பண்டத்தரிப்பிலும் நடத்தப் பெற்றது. இங்கு 1971 ஆம் ஆண்டளவிற் சுமார் 30 சைவப் பிள்ளைகள் பயிற்சி பெற்று வந்ததாக அறிக்கைகளால் அறியக்கிடக்கின்றது.

28. 1. 1972 இல் அழகொல்லைப் பிள்ளையார், ஆலயத்திற்கு அருகாமையில், அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் முதல் முறையாக அகில இலங்கை இந்து மாமன்றக் குரு குலப் பயிற்சி நிலையத்தில் பயிற்றுவிக்கப்பட்ட எட்டு மாணவர்களுக்கு ஆசாரிய அபிஷேகம் நடைபெற்றது. இவர்களுக்குச் சைவக் குருகுலப் பயிற்சி அளித்த பிரதம குருவான உயர்திரு. செ. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் இவ் அபிஷேகத்தைச் செய்து வைத்தார். பின்னர் யாழ்ப்பாணத்திற் சைவக் குருமார் பயிற்சி நிலையமொன்று யாழ். வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு அருகாமையில் 1972 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது.

இதே சமயம் திருக்கேதீச்சரத்தில் இயங்கி வந்த சிவானந்த குருகுலத்திற் பிள்ளைகள் தொகை குறைந்து கொண்டு போனதால் 1973 ஆம் ஆண்டளவில் மூடப்பட நேர்ந்தது துர்பாக்கிய சம்பவமாகும். இவ்வாறு குருகுலம் மூடப்பட்டதால் மனம்வருந்திய சைவ அன்பர்கள் பலர் கூடி ஆலோசித்துச், சிவாசாரியர்களாகப் பயிற்சி பெறும் மாணவர்களையும் அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் ஆசிரியர்களையும் யாழ் மற்றும் பல்வேறு பிரதேசங்களிலிருந்து திருக்கேதீச்சரத்துக்குக் கொண்டு சென்று சிவானந்த குருகுலத்தை நடத்துவதை விட, இருசாராரும் அதிகமாக இருக்கும் யாழ்ப்பாணத்திலேயே சிவானந்த குருகுலத்தை நடத்தலாம் என மாமன்றத்திற்கு ஆலோசனை தெரிவித்தனர். இவ் ஆலோசனையை ஏற்றுக் கொண்ட பின் சிவானந்த குருகுலத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கென அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆதரவுடன் பரிபாலன சபை ஒன்று 1974 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு இச் சிவானந்த குருகுலப் பரிபாலன சபை இந்த இறை சேவையைப் பொறுப்பேற்றுக் கொண்டது.

ஆரம்பத்தில் வண்ணை வரதராஜப் பெருமாள் கோவிலிலும், அடுத்து வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்திலும், இடையிற் பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் மண்டபத்திலும் பின்னர் நல்லை ஆதினத்தின் ஒரு கட்டிடத்திலும் வகுப்புகள் ஆரம்ப காலத்தில் நடத்தப்பட்டு வந்தன. ஆரம்ப வருடங்களில் 40க்கு மேற்பட்ட மாணவர்கள் இக் கல்வி நிலையத்தில் கற்று வந்தனர். யாழ் சிவானந்த குருகுலத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா யாழ் நல்லை ஞானசம்பந்தர் ஆதினத்தில் 2.8.1975 அன்று கோலாகலமாக நடைபெற்றது. இரண்டாவது ஆண்டு விழா 24.7.1976 இல் நடைபெற்றது.

1976 இல் திரு. பேரம்பலச் செட்டியார் சுப்பிரமணியச் செட்டியார் அவர்களாற் குருகுலப் பாடசாலைக் கட்டிடம் அமைப்பதற்காக யாழ் கடைச்சாமி ஒழுங்கை 33/1 இலக்கமுடைய காணியில் 3. 3/4 பரப்பு நிலம் நன்கொடையாக அளிக்கப்பட்டது. இக் காலகட்டத்திற் சுமார் 64 மாணவர்கள் குருகுலத்தில் பயின்று வந்தனர். அத்துடன் கல்வி நிலையத்தின் பாடங்களுக்கு மேலதிகமாகச் செயன்முறைப்பயிற்சி என்ற முறையில் மாணர்கள் பல்வேறு கோவில் உற்சவங்கள் கும்பாபிஷேகங்கள் போன்றவற்றிற் கலந்து கொண்டு சாதனைப் பயிற்சி பெறும் வாய்ப்பும் பெற்றார்கள். மேலும் சைவ அன்பர்கள் பலர் செய்த பெருமுயற்சியின் பயனாகக் குருகுலத்திற்கெனப் பெறப்பட்ட காணியில் கட்டிடமொன்றைக் கட்டுவதற்கென வைபவ ரீதியாக அடிக்கல் நாட்டுவிழா 1977 ஏப்பிரல் மாதம் 3 ஆம் திகதி அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதே காலகட்டத்தில் குருகுல நிர்வாகத்தைத் திறமையாக நடத்துமுகமாகச் சிவானந்த குருகுல பரிபாலன சபை தனியான ஸ்தாபனமாகக் கருதப்பட்டு மாமன்றத்தின் அங்கத்துவ நிறுவனங்களில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத்துடன் சிவானந்த குருகுலப் பரிபாலன சபை அங்கீகரிக்கப்பட்ட அறநிலையமொன்றாக நிதி அமைச்சரினால் 11. 10. 1977 அன்று பிரகடனப்படுத்தப்பட்டது. எனினும், தொடர்ந்தும் மாமன்றத்தின் மூலம் பெறும் உதவித் தொகை மூலமே குருகுலம் தொடர்ந்தும் நடக்கலாயிற்று. இவ்விபரம் 77 – 78 குருகுல பரிபாலனசபை கணக் கறிக்கையில் மாமன்ற உதவித் தொகை ரூ. 10,980/– என்றும் இதர வரவுகள் ரூ. 834/– என்றும் பதிவு செய்யப்பட்டிருப்பதிலிருந்து அறியக் கூடியதாகவிருக்கிறது.

சிவானந்த குருகுலத்திற்கான கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டுத் திறப்பு விழாவானது சரியாக இற்றைக்கு 15 வருடத்திற்கு முன்பு மாமன்றத் தலைமைக்கட்டிடத் திறப்பு விழா நடக்கும் இதே சித்திரை மாதத்தில், 9. 5. 1981 சனிக்கிழமையன்று நடைபெற்றது. அதிசயிக்கத்தக்க ஒற்றுமையென்பது எனது அபிப்பிராயமாகும். *இத் திறப்பு விழா அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவரின் தலைமையில் நடைபெற்றது இதன் சிறப்பம்சமாகும்.*

குருகுலம் தொடர்ந்து இறையருளாலும் சைவ அன்பர்களின் பேராதரவினாலும் சிறப்பாக வளர்ந்து வந்தது. 82 – 84 காலப்பகுதியில் பிரம்மஸ்ரீ இ. சதாசிவசர்மா அவர்களும் பிரம்மஸ்ரீ என். சிவராம கிருஷ்ண சாஸ்திரிகளும் கல்வி கற்பித்தனர். தொடர்ந்து வந்த வருடங்களில் வகுப்புகள் விரிவுபடுத்தப்பட்டுத் தினசரி வகுப்புகளாகவும் வார இறுதி வகுப்புகளாகவும் நடைபெற்றன. தினசரி விரிவுரைகள் இரண்டு பிரிவுகளாகவும் வார இறுதி விரிவுரைகள் மூன்று பிரிவுகளாகவும் வகுக்கப்பட்டிருந்தன. மொத்தம் 43 மாணவர்கள் 1986 – 87 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கல்விகற்று வந்தனர். பாடத்திட்டங்கள் பேராசிரியர் சிவஸ்ரீ க. கைலாசநாதக் குருக்களினதும் குருகுல வித்துவ சபையினதும் ஆலோசனைக்கமைய அமைக்கப்பட்டன. வகுப்புக்கள், பிரவேச வகுப்பு, அர்ச்சகாசாரியர் வகுப்பு, ஸ்நபனாசாரியர் வகுப்பு, உத்ஸவாசாரியார் வகுப்பு எனத் தரம்பிரிக்கப்பட்டு வேதம், ஆகமம், சமஸ்கிருத பாஷை, திருமுறை பொது அறிவு, சைவசித்தாந்தம், தமிழ்ப்பாசை, சதனா பாடம், மகோற்சவ பத்ததிகள், சமஸ்கிருத இலக்கணம், புராணபடனம், சிற்பசித்திரக் கலைகள், சமஸ்கிருத இலக்கியம் முதலியன வெவ்வேறு தரங்களுக்கான பாடல்களாகக் கற்பிக்கப்பட்டு ஒரு பூரணமான கல்வியினைப் பெறும் வாய்ப்பை மாணவர்கள் பெற்றுக் கொள்ள வாய்ப்பேற்படுத்தப்பட்டது.

இதே காலகட்டத்தில் அரசாங்கத்திலிருந்து குருகுலங்களைப் பராமரிப்பதற்கென இந்து மாமன்றத்திற்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை 1986 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டது. முயற்சிகள் பல செய்தும் அவையனைத்தும் கிணற்றிற் போட்ட கல் போலாகின. ஆயினும் மாமன்றம் முடிந்த அளவில் தொடர்ந்தும் சிவானந்த குருகுலத்திற்கான உதவிகளைச் செய்து வந்தது. ஆயினும் தொடர்ந்து வந்த வருடங்களில் நாட்டு நிலைமைகள் தலைகீழாக மாறத் தொடங்கியதிலிருந்து குருகுலத்தைச் சீராக நடத்த முடியாத நிலைக்கு மாமன்றமும் சிவானந்த குருகுல பரிபாலனசபையும் தள்ளப்பட்டன.

தொடர்ந்து வந்த பிரச்சினைகளினாற் சிவானந்த குருகுலத்திற்கும் மாமன்றத்திற்கும் இருந்து வந்த தொடர்புகளும் சீரற்றுப் போய் முற்றாய்த் துண்டிக்கப்பட்டன. மீண்டும் பல அன்பர்கள் மேற்கொண்ட முயற்சியினாற் சிவானந்த குருகுலத்திற்கான உதவியைத் தொடர்ந்து வழங்க முயற்சிகள் 1988 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. உதவிகள் மீண்டும் தொடர்ந்தன. இவ்வேளை இந்து குருமார் பயிற்சி நிதியம் ஒன்று மாமன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்டு ஆரம்பத் தொகையாக ரூ. 100,000/– நிரந்தர வைப்பிலிடப்பட்டது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிரதான நோக்கங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு விடயங்களிற் பின்வரும் இரு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. இந்து தர்ம அறிவையும் சாதனையையும் விருத்தி செய்தல்

2. இந்து சமய அர்ச்சகர்களுக்கு வேதாகம தத்துவ சாத்திர அறிவும் பயிற்சியும் அளிக்கும் பொருட்டு சமய சாத்திரக் கல்லூரி நிறுவுதல்.

மேற்கண்ட பிரதான நோக்கங்களின் அடிப்படையில் சமய விவகாரங்கள், விழாக்கள், குருகுலக் குழுவின் பணிகள் என மாமன்ற அமைப்பு விதிகளில் குறிப்பிடப்பட்ட வகையில் குருகுலம் சம்பந்தப்பட்ட பகுதியை ஒருமுறை பார்ப்போம்.

i) யாழ்ப்பாணத்திலுள்ள சிவானந்த குருகுல முகாமைத்துவ சபையுடனான கலந்தாலோசனையுடன் குருகுலத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

ii) பேரவை தீர்மானிக்கின்ற முறையில் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் குருகுலங்களைத் தாபித்து அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

iii) குருகுலங்கள் முகாமை செய்யப்படுதலையும் குருகுலங்களிற் பயிற்சிகள் வழங்கப்படுவதையும் மொத்தத்தில் மேற்பார்வை செய்தல்.

iv) குருகுலங்களின் கணக்குகளைப் பரிசீலனை செய்தலும் மாமன்றத்தினால் குருகுலங்களுக்கு அனுப்பப்படும் பணங்கள் குருகுலங்களின் அதிகபட்ச நன்மைக்குப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தலும்.

குருகுலக் குழுவிடம் மாமன்றம் சுமத்தியிருக்கும் இப்பாரிய பணியின் அடிப்படையில் நாட்டின் நாலா பகுதிகளிலும் குருகுலங்களை அமைத்து இச் சிவசேவையைச் சிறப்புறச் செய்ய வேண்டும் என்ற உத்வேகத்துடன் செயற்பட்டு வருகிறோம். இதுகாறும் நாம் பராமரித்து வந்த குருகுலங்களிற் பயின்றோர் எமது நாட்டில் மட்டுமன்றிக், கடல்கடந்து சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து, மொரீசியஸ், கனடா போன்ற தேசங்களிலும் சிவாசாரியர்களாகச் செயலாற்றி வருகிறார்கள் என்பதை அறியும் போது மனம் பெருமிதமடைகிறது. எனினும் எம் தாய்த்திருநாட்டின் நிலை சாணேற முழம் சறுக்கும் நிலையிலிருந்து படுபாதாளத்தில் தலைகீழாக வீழ்ந்து கொண்டிருக்கும் பயங்கர காலகட்டத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறது. இந்நிலையில் உடனடிச் சமூகப்பணிகளிலேயே மாமன்றம் தனது முழுக்கவனத்தையும் செலுத்தி வருவதாற் குருகுலப் பணிகளை உடனடியாகத் தொடரும் வாய்ப்புகள் அரிதாகவே இருக்கிறது. எவ்வாறேனும் இந்துக் குருமார் பயிற்சி நிதியமும் குருகுலத்திற்கென வருடாந்தம் மாமன்றம் ஒதுக்கி வரும் ரூ. 12,000/– உம் தொடர்ந்து வைப்பிலிடப்பட்டுள்ளன. மாமன்றக் கட்டிடம் பூர்த்தி யடைந்திருக்கும் இப் பொன்னாளில் வருங்காலம் வளமாகி எமது சயப்பணிகள் மேலும் தொடர எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சி நிற்கிறோம்.

*நன்றி : இந்து மாமன்றம் கொழும்பு*

# சாரணீயம்



இருப்பவர்கள் இடமிருந்து வலம் :

சோ. ஜெயரூபன், த. தவசீலன், ம. ரவீந்திரன் *(சாரணப் பொறுப்பாசிரியர்)* ஆ. ஐ. தயானந்தராஜா *(சிரேஷ்ட அதிபர்)* ச. கண்முகலிங்கம் (கனிஷ்ட அதிபர்) செ. விஜயன் *(கனிஷ்ட பிரதி அதிபர்)*, இர. அஜித்திரன் *(சாரணர் அணித்தலைவர்)*, இர. நிஷாந்தன்.

நிற்பவர்கள் இடமிருந்து வலம்:

த. நிரோஜ், ஸ்ரீ. பிரவீன், சோ. கேதீசன், சோ. கெங்காதரன், நா. ரஜீவ் சுதர்சன், கே. மோகனன், சி. ஷோமச்சந்திரன், ச. ரவீந்திரன், நே. கௌரீஸ்வரன், அ. சிவரூபன், சோ. சாரூபன், ந. சிவசுந்தரரூபன்.

# பாண்டு இசைக் குழுவினர்




இருப்பவர்கள் இடமிருந்து வலம்:

எம் ரமணன், எஸ். கெங்காதரன், பி. பிரதீபன், எஸ். றெக்ஸ் அருள்நேசன், *அதிபர் (சிரேஷ்ட), அதிபர் (கனிஷ்ட)*, எஸ். அமுதலக்ஸ்மி, ஆர் சுஜித்ரன், ஆர். நிஷாந்தன், எஸ். ஜெயரூபன்.

நிற்பவர்கள்:

கே. சுபலக்ஸ்மி, எப். றொபினா, எஸ். நிர்சாந்தினி, எம். மதுவந்தி, எம் அனந்தா சுகிர்தவதி, எஸ். சசிகலா, கே. விஜயலக்ஸ்மி, எஸ். நித்தியரூபா, எஸ். சிவஜனனி, ஆர். தர்ஷினி.


# எமது கல்லூரியிலிருந்து இதுவரை பல்கலைக்கழக அனுமதி பெற்றுச் சென்ற மாணவர்கள் 1994 - 1997



கார்த்திகேசு கணேசலிங்கம்
*எமது கல்லூரி மூலம் 1994 இல் பல்கலைக்கழகம்(கலைப்பிரிவு) சென்ற முதலாவது மாணவன்*



செல்வி இராமலிங்கம் ஜெயக்குமாரி
1995 முகாமைத்துவம்



செல்வி வேலுச்சாமி ஜமேலாதேவி
*1995 வணிகம்*



செல்வன் கனகசபாபதி கௌரீசன்
*1996 – வணிகப்பிரிவு, 4A எடுத்து மாவட்டத்தில் முதலாவது சாதனை*



கதிரமலை ஜெயகாந்தன்
*1996 – முகாமைத்துவம்*



கதிரமலை துளசிகுமாரி
*1996 – கலைப்பிரிவு*



லோகநாதன் மகாசித்ரா
*1996 – கலைப்பிரிவு*



தர்மலிங்கம் அனுஷா
*1997 – வணிகம்*



இராஜகோபால் சௌந்தரகலா
*கலைப்பிரிவு*

## 1998 (க. பொ. உ/த) ல் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட இருப்பவர்கள்



சிவப்பிரகாசம் சிவகரன்
*வணிகப்பிரிவு,*
*1ம் இடம், மன்னார் மாவட்டம்*



ஸ்ரீஸ்காந்தா பிரதீபா
*வணிகப்பிரிவு,*
*2ம் இடம், மன்னார் மாவட்டம்*



மரியதாஸ் கொன்செப்ரா தயாநிதி
*வணிகப்பிரிவு,*



இராசநாயகம் இதயதாஸ்
*வணிகப்பிரிவு,*



முருகேசு மாதவி
*வணிகப்பிரிவு,*



வில்வராசா தர்ஷினி
*வணிகப்பிரிவு,*




இராமசாமி சித்திராதேவி
*வணிகப்பிரிவு,*



சந்தியோகு
*கலைப்பிரிவு*



அலன்டீனா
*கலைப்பிரிவு*



செல்லத்துரை ஜெகனேந்திரன்
*கலைப்பிரிவு*



தர்மகுலசிங்கம் பிரதீபா
*கலைப்பிரிவு*

# மழலைகள் பயிலகம்



பழைய மாணவர் சங்கத்தினால் நிர்வகிக்கப்படும் மழலைகள் பயிலகத்தின் மழலைகளுடன் ஆசிரியர்கள்

# கலார்ப்பனா - நாட்டிய நாடகக் கலைஞர்கள்




1998 ல் பேசாலை முருகன் கோயில் கட்டட நிதிக்காக கலார்ப்பனா நாட்டியப்பள்ளி மாணவர்களினால் மேடையேற்றப்பட்ட சாகுந்தலம் நாட்டிய நாடகத்தில் பங்கேற்ற மாணவர்களுடன் இயக்குனர் திருமதி ப. ஸ்ரீஸ்காந்தா அவர்கள் காணப்படுகின்றனர்.

# மாதா பிதா குரு தெய்வ வழிபாடு



1988 ல் கல்லூரியின் க. பொ. த. சாதாரண மாணவர்களுக்கு ஆசி வழங்கும் மாதா, பிதா, குரு தெய்வம் வழிபாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட திருமதி S. சிவநாதன் (மாவட்ட முகாமையாளர் தேசிய வீடமைப்பு அதிகாரசபை) அவர்களும் அவரின் பாரியாரும் கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் மாணவர்களும் ஆகியோர் காணப்படுகின்றனர்.



1999 ல் நடைபெற்ற வாருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் தசைநார் பயிற்சியின் இறுதி நிகழ்வில் கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் திரு. S. றெக்ஸ் அருள்நேசன் தீ வளையத்தினுள் பாயும் நிகழ்வு



1997ல் கல்லூரியில் சாரணர் இயக்கத்துகான இளம்பாத சின்னம் சூட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபைப் பொறியியலாளர் திரு. S.மதியாபரணம் அவர்கள் பாசறைக்கு விஜயம் செய்யும் நிகழ்வு. அருகில் கட்டடத் திணைக்கள முன்னாள் பொறியியலாளர் A. தயானந்தன், கல்லூரி அதிபர், பிரதி அதிபர் ஆகியோர் காணப்படுகின்றார்கள்.



26. 06. 96 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட மாணவர் விடுதியில் கல்விப் பணிப்பாளர் விடுதிப் பதிவேட்டில் ஒரு மாணவனைப் பதிவு செய்து விடுதியில் அனுமதிக்கும் நிகழ்வு. அருகில் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. S. M. குரூஸ் அவர்களும் மேலதிக அரசாங்க அதிபர் திரு. V. விஸ்வலிங்கம் அவர்களும் காணப்படுகின்றனர்.



1994ல் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அருட் தந்தை சேவியர் குரூஸ் அவர்களும், கல்லூரியின் பதில் அதிபர் திரு. M. குணரட்னம் அவர்களும், சிரேஷ்ட ஆசிரியர் L. M. தர்மதாஸ் அவர்களும், கல்லூரி ஆசிரியர்களும் காணப்படுகின்றனர்



Welcome Song At English Day Celebration

# சிறுவர் நாடக சிந்தனைகள்

- திரு. க. இ. கமலநாதன் - ஆசிரியர்

"கல்வியின் மையம் மாணவனே" என்ற கருத்தை முன்வைத்து 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கல்வியியல் அறிஞர் ரூசோ ஆவர். ஆசிரியர் மையக் கல்வி முறையைக் கடந்து மாணவர் மையக் கல்வி யுகத்தில் வாழ்கின்ற நாம் ஆரம்ப வகுப்புக்களிலேயே அதிகம் அக்கறை செலுத்த வேண்டும். சிறு பராயத்தில் ஆளுமையை விருத்தி செய்து அடிப்படைத் தகைமைகளைப் பெற்று, மேல் வகுப்புக்களிலும் மேன்மையுற்று இச்சமூகத்துக்கு வேண்டிய நற்பிரசைகளை உருவாக்குவதே இன்றைய கல்வி முறையின் தலையாய நோக்கமாகும்.

ஆரம்பக் கல்வி மாணவர்களின் பாட அலகுகளை முன் எடுத்துச் செல்வதில் சிறுவர் நாடகங்கள் பெரிதும் துணை புரிகின்றன. மாணவர்க்கு கல்வியில் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் ஆக்கத்திறனோடு கூடிய சிந்தனைத் திறனையும் வளர்ப்பவை சிறுவர் நாடகங்களே. இன்று ஈழத்து தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்தவரை சிறுவர் நாடகத்தின் தந்தை எனச் சிறப்பித்து கூறக் கூடியவர் திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களாவார். யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளராகிய இவர் 1978 இல் யாழ் நாடக அரங்கக் கல்லூரியை ஸ்தாபித்து தலை சிறந்த பல கலைஞர்களும் பல கலா மன்ற அரங்க செயற்பாடுகளும் பல அரங்கவியல் விரிவுரையாளர்களும் உருவாக உறுதுணையாக இருந்ததோடு நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர் நாடகங்களை ஆக்கியும், ஆற்றுகைப் படுத்தியும் வருகின்றார். நன் மாணாக்கர்களை உருவாக்க வல்ல ஆசிரியர்களின் "நாடகத்திற் கூடான கற்பித்தல்" திறனை விருத்தி செய்ய இன்றும் பாலாலி, கோப்பாய், ஆகிய பயிற்சிக் கலாசாலைகளில் நாடகப் பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி வருகின்றார். இவ்விடத்தில் சிறுவர் நாடக முயற்சிகளில் உழைத்து வரும் கலாநிதி, சி. மௌனகுரு, திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் பணிகளும் போற்றுதற் குரியதே.

சிறுவர் நாடகத்தை சிறுவர்களுக்காக சிறுவர் நடித்தல், சிறுவர்களுக்காக பெரியவர் நடித்தல் என இரு வேறுபடுத்தலாம். சிறுவர்களுக்காகவே தம்மைப் பாவனை செய்து நடிப்பது இன்றியமையாதது. இங்கு நாடகத்தைப் பார்க்கின்ற சிறுவர் இன்புறுவது மட்டும் அன்றி நடிக்கின்ற சிறுவர்களும் மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டும். இங்குதான் இயல்பும் சுவையும் சிறந்த கற்பனையும் இருக்கும். பொதுவாகப் பட்டறை நாடகங்களை விட போட்டி நாடகங்களிலேயே நாம் அதிக கவனம் செலுத்துகின்றோம். போட்டி நாடகத் தன்மையினை உள்ளடக்கி அதற்கூடாக வகுப்பறை நாடகங்களை விருத்தி செய்யலாம்.

சிறுவர் நாடகங்களுக்குக் கதைப் பொருத்தப்பாடு மிக முக்கியமானதாகும். வீட்டுச் சூழலில் தினமும் காணுகின்ற நாய், பூனை, பசு, சேவல், காகம் போன்றவை தொடர்பாக கதையம்சத்தைத் தெரிந்தெடுப்பதன் மூலம் தெரிந்ததிலிருந்து தெரியாத ஒன்றை அறிமுகப்படுத்துவதோடு கருத்தூன்றி அவதானிக்கும் திறனையும் வளர்த்துக் கொள்ளலாம். ஆயினும் புராண இதிகாசக் கதைகளை சிறுவர்களைக் கொண்டு நடிப்பித்து அதுவே சிறுவர் நாடகம் என தப்பர்த்தம் செய்து கொள்வதை இன்றும் கூடக் காணக்கூடியதாக உள்ளது. பூனையையும், சேவலையும் சூழலில் காணும் குழந்தை அவற்றின் நடையையும், சத்தமிடும் போது ஏற்படும் அங்க அசைவுகளையும் கண்டுணர்ந்து அதுவாக மாறி நடிக்கும் போது மாணவன் அடையும் மகிழ்ச்சிக்கும் திருப்திக்கும் எல்லையில்லை, கர்ணன், குந்தி, இராமன், சீதை, பரதன், கைகேயி என்னும் இதிகாச பாத்திரங்கள் அவர்கள் பருவத்திற்கு அப்பாற்பட்டவை. அனுவபத்திற்குட்படாதவை வெறுமனே ஒப்புவிப்பாகவும் ஆசிரியர் வலிந்து காட்டிக் கொடுக்கும் அங்க அசையுகளுமே இருப்பது காணக் கூடியதாக உள்ளது. போட்டிக்காக நடாத்தப்பட்ட சிறுவர்கள் நாடகம் ஒன்றிலே நாரதர் சிறுவனுக்கு மாம்பழம் கொடுக்கும் காட்சியில், மாம்பழத்தைக் கையில் பெற்றுக் கொண்ட சிறுவனாகத் தோன்றிய மாணவன், மாம்பழத்தையும் சபையோரையும் அடிக்கடி பார்த்துக் கொண்டு செய்வதறியாது திகைத்து வசனப் பிழை அதாவது வசனங்களை மறந்து மேடையின் ஓரத்தில் நின்றுமுறைத்துப் பார்த்துக் கொண்டிருந்த நெறிப்படுத்திய ஆசிரியரைக் கண்டு கண் கலங்கி, அழுது கலவரப்பட்டு திரையிறங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. காரணம் தென்மராட்சியிலேயே தேடிப் பிடித்து முற்றிப் பழுத்த மூக்கைத் துழைக்கும் கறுத்தக் கொழும்பான் மாம்பழம், சிறுவர் அல்லவா? தனது இந்த நேரடி

அனுபவத்தை எம்முடன் பகிர்ந்து கொண்டவர் திரு. குழந்தை, ம. சண்முகலிங்கம் அவர்கள் தான்.

பாடல் பயிற்சிகள் தொடங்கும் போது ஆசிரியர் மாணவர் நிலைக்கு இறங்கி ஆடிப்பாடி மகிழ்ச்சிப்படுத்தி தானும் மகிழ்ந்து அவர்களை ஒரு சுதந்திரமான நிலைக்குக் கொண்டுவருதல் அவசியம். ஒரு சிறு கட்டுப்பாடு கூட அவனின் திறன்கள் வெளிவராமல் முடங்கிவிட ஏதுவாகி விடும். "ஆடும் வீடும்" "குளம்கரை" "கள்ளன் பொலிஸ்" "கந்தையாண்ணை சொல்லுகிறார்" போன்ற அரங்க விளையாடல்களை அகற்றி திறந்த மனநிலையையும், பயமற்ற சூழலையும் உருவாக்க வேண்டும். சிறுவர்களே எனினும் விளையாடும் போதோ நடிக்கும் போதோ ஏற்படும் அனுபவ உணர்வுகளைக் கலந்துரையாடல் மூலம் எடுத்துக் கூற வாய்ப்பளிக்க வேண்டும்" மாணவர்களுடன் ஆசிரியர் வட்டவடிவில்" ஒருவர் முகம் ஒருவர் பார்க்கக் கூடியதாக சமமாகத் தரைமீது உட்கார்ந்து கலந்துரையாடிக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது நம்பிக்கையையும் எண்ணிய இலக்கையும் அடைய வாய்ப்பான சூழலையும் உருவாக்கும்" என்பது ஈழத்தின் ஈடிணையற்ற அரங்க ஆற்றுகையாளரும் யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளருமான கலாநிதி, க. சிதம்பரநாதன் அவர்களின் கூற்றாகும்.

சிறுவர்கள் கற்பனை வளமிக்கவர்களாகவும், இரசிப்புத்தன்மை கொண்டவர்களாகவும் சிறுவர் நாடகத்தில் ஒப்பனை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகும் வர்ணங்களைப் பயன்படுத்தி அவர்கள் ஏற்கும் பாத்திர வடிவமைப்பைக் கொண்டு வரலாம் அது அவர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். உடையமைப்பினூடாக பாத்திர உருவை முழுமையாகக் கொண்டுவர வேண்டுமென்பதில்லை உதாரணமாக சேவலைப் போல வரும் மாணவனுக்கு இறகுளை ஒட்டியோ, நிறத்துணிகளை வெட்டியோ அமைக்க வேண்டு மென்பதில்லை, முகத்தில் பூசப்பட்ட வர்ணமும் அந்த நிறத்திற்கேற்ற ஆடையும் சேவலைப் போல் வெட்டி வெட்டி நடக்கும் நடையும் அதன் பாத்திரப் படைப்பைத் துல்லியமாக வெளிப்படுத்தி விடும்.

தடித்த கடதாசியில் உருவ அமைப்பைக் கீறி முகத்தை மறைத்து மாணவனை நடிக்க விடுதல் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. ஏனெனில் குரல் வெளிப்பாடும், உச்சரிப்பும், முகபாவனையும் இங்கு மறைபொருளாய் அடைத்து வைக்கப்பட்ட தொன்றாக ஆகிவிடும். இது மாணவனின் ஆளுமையைக் குறைப்பதோடு அவனைத் துன்பப்படுத்தும் செயலாகவும் மாறி விடுகின்றது. 1997 இல் பெருநிலப் பரப்பில் நடை பெற்ற ஒரு போட்டி நிகழ்வின் போது குரங்குக்கு நடித்த மாணவனுக்கு செய்யப்பட்டிருந்த ஒப்பனையை நினைக்கும் போது வேதனை தரக்கூடியதாய் உள்ளது. அம் மாணவனை அன்று காலை ஒன்பது மணிக்கே தொண்ணூறு வீதம் நிர்வாணமாக்கி, உடம்பெல்லாம் பசை பூசி ஏதோ ஒரு வகைத் தும்புகளை எல்லாம் ஒட்டி உருமாற்றி மாலை நான்கு மணிபோல் நாடகம் தொடங்கும் வரை நின்ற கோலம் அம்மாணவனைப் பொறுத்தவரை ஒரு சித்திரவதை தான், சக மாணவர்கள், கச்சானும் ஐஸ்கிறீமும் என ஓடித்திரிய அசையக் கூட முடியாத நிலையில் நின்ற அம்மாணவனின் நிலை அதாவது உள்ளத்தாக்கம் எவ்வாறு பாதிக் கப்பட்டிருக்கும்.

சிறுவர் நாடகம் ஆடலும் பாடலும் விரவி வரும் ஒரு விளையாட்டாகவே இருப்பது சிறுவர்களுக்குப் பிடித்தமானதாய் இருக்கும். மிருகங்களாய் நடிக்கும் நாடகத்தில் அம்மிருகங்களிற் சில பார்வையாளர் பக்கம் இறங்கிச் சென்று அவர்களுடனும் உரையாடலாம் துரத்திப் பிடித்துப் பார்வையாளர்களுக் கூடாக ஓடியாடி நகைச்சுவை அம்சங்களையும் வெளிப்படுத்தலாம். பார்வையாளரூடாக ஓட பார்வையாளராக அமர்ந்திருக்கும் சிறுவர்களே அக்கள்வனைப் பிடிக்க உதவக்கூடும். இது எல்லோரும் கலந்து மகிழ்ந்த ஒரு விளையாட்டாகவும் அமையும் இது அனுபவ உண்மை.

எத்தகைய நாடகமெனினும் உச்சரிப்புக்கள் உறுதியானதாய் இருக்க வேண்டும் பார்வையாளரைச் சென்றடைய வேண்டும். அங்க அசைவுகள் மிகைப்பட்டு பெரிதாக காட்டப்பட வேண்டும் சிறுவர் நாடகங்களிற் கூடாக அறப் போதனைகளைத் திணிக்கக் கூடாது என்பது சிறுவர் நாடகத்தை ஆய்ந்து தெளிந்து அறிஞர் கருத்து. மேலோட்டமாகக் கருத்துக்கள் தெளிந்திருக்க வேண்டுமே ஒளிய திணிப்பதாக அமையக் கூடாது.

சிறுவர் நாடகங்கள் இசைக்கேற்ப அசையும் திறனையும் உற்று நோக்கும் பண்பையும் கற்பனை வளத்தையும், சமூக இசைவாக்கத்தையும், தன்னம் பிக்கையையும், பேச்சுப் பயிற்சியினையும், நினைவாற்றலையும், சுயமுனைப்பாற்றலையும் சுறுசுறுப்பையும், கொடுத்து கற்றற் செயற் பாட்டை இலகுவாக்கி, கல்வியின் இலக்கை அடையக் காரணமாய் அமைகின்றது என்பது மறுக்கமுடியாத, மறைக்கப்பட முடியாத உண்மையாகும் எனினும் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்படும் தமிழ் மொழித்திறன் போட்டியில் கல்வி அமைச்சு நாடகங்களுக்கு இடமளிக்கப்படாமை இன்னும் கேள்விக் குறியாகவே உள்ளது.

*– நன்றி –*

# ஆறுமுக நாவலரும் சைவப் பணிகளும்

- திருமதி கலா சிவகுமாரவேலு -
*உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிமனை, மன்னார்*

"வீறு பெற்ற இந்து சீர்திருத்தக்காரர்"

- சேர் பொன். இராமநாதன்-

"மறை திகழ் பிரணவ மன்ன
முறை திகழ் ஆறுமுக நாவலன்"

- ஸ்ரீலஸ்ரீ சங்கர பண்டிதர்-

அந்நியரான ஆங்கிலேயர் ஆதிக்கத்தால் சைவம் என்னும் ஒளிர் வானில் இருள் மேகங்கள் சூழ்ந்து, சைவத்தின் மகிமை குன்றத் தொடங்கிய கால கட்டத்தில் முக்கண்ணன் அனுப்பிய நல்லமுதே ஆறுமுகம், ஈராறு தோளும் ஒராறு முகமும் கொண்டு அன்று ஆறுமுகக் கடவுள் சூரனை சங்கரித்து தேவர்களுக்கு வாழ்வளித்துக் காத்தது போன்று சைவத்தையும் தமிழையும் காக்க நல்லை நகரில் வந்தவதரித்த நல் முத்தே ஆறுமுக நாவலர்.

"நாயனார் நாற்குரவர் நாவலர் தென் ஞாலமிசை
மேயினார் ஈசனருண்மேல்".

என்று பாடுகின்றார் சி. வை. தாமோதரம்பிள்ளை. நாயன்மார் சமயகுரவர் போலவே ஈசன் திருவருளினால் நமக்குக் கிடைத்தவர் நாவலர் பெருமான் என்பது இதன் பொருளாகும்.

யாழ்ப்பாணத்து நல்லூரிலே செல்வாக்குள்ள சைவ வேளாளர் குடும்பத்தில் கந்தப்பிள்ளை, சிவகாமியம்மை ஆகிய இருவருக்கும் மகனாக அவதரித்தவர் ஆறுமுகநாவலர். ஆன்மாக்களின் அறியாமை நோயைத் தீர்க்கும் முகமாகவே நமக்கு உபகரிக்க வந்தவர், பிறந்தவர். அவர் உபகாரம் மனக் கவலையை மாற்றும் மருந்து.

நாவலர் பெருமான் தமிழ் மக்களுக்கும் சைவ மக்களுக்கும் வழங்கிய அறிவுரைகளுமோ அளப்பெரியன, சைவ சமயத்தின் பெருமையைக் கூறும்போது எச் சமயத்தையும் நிந்திக்காத ஒரு சமயம் இருந்தால் அது சைவ சமயமேயாம். எல்லாச் சமயத்திலும் இருப்பது நீதிதான் என்று சொல்லும் சமயம் சைவசமயம். ஒவ்வொருவரும் தத்தம் சமயத்தை அறிந்து அச்சமய நெறி வழி ஒழுகுவதே முறையென்று சொல்லும் சமயம் சைவ சமயம். ஒருவனை அவன் தன் சமய நெறியில் ஒழுகவிடாது தடுப்பதை சைவ சமயம் ஒப்புக் கொள்வதில்லை என மேன்மை கொள் சைவ நீதியின் பெருமையை உணரச் செய்தார்.

இவ் விசித்திர உலகை ஒரு சக்தி நடத்துகின்றது. அந்தச் சக்தி அருட்சக்தி. அது தடையில்லா ஞானமாகும். அந்த ஞான மயமான சக்தியை நாம் அணுத்துணையாயினும் எட்டக் கூடியதாய் அந்தச் சக்திக்கு ஒரு வடிவம் இருக்குமேயானால் அந்த வடிவம் மாசில்லா நீதியேயாம். நீதி என்ற தமிழ் வார்த்தையில் அடங்காத தருமம் இல்லை. சத்தியம், அகிம்சை, இரக்கம், பொறை, அடக்கம் முதலிய தருமங்கள் எல்லாம் இதில் அடங்கும். அந்நீதியின் கையில்தான் உலகம் என்ற ஏகாதிபத்தியத்தின் கயிறு இருக்கின்றது. அந்நீதியை மறந்து, அதன் கருத்தறியாமல் ஒரு கருமம் நாம் செய்வோமானால் அதற்கு வீண் செயல் என்று பெயர். மாபெரும் தத்துவத்தை சைவ உலகினுக்கு வழங்கியவர் நாவலர் பெருமான்.

இந்நீதி நெறியிலேயே தம் வாழ்க்கைப் பாதையை வகுத்துக் கொண்டவர் நாவலர். மகாத்மா காந்தி சத்தியத்தையும் அகிம்சையையும் கடைப்பிடித்தது போல நாவலர் சைவ நீதியைக் கடைப்பிடித்தவர். அவரது நீதியை பரசமயிகள்கூடப் பாராட்டினர். உண்மையில் நாவலரை எதிர்த்தவர்கள் சைவ சமயிகளே. நீதியை எங்கே கண்டாலும் அதனைப் பாராட்ட நாவலர் தவறியதில்லை. 'ஒரு சமயம்' என்று சிவஞான சித்தியாராலும், செப்பரிய என்று தாயுமானவராலும் பாராட்டப்படும், சைவ சமய நீதி நெறியில் தம்மை அர்ப்பணித்த நாவலரின் நீதியைக் கண்டு பார்சிவல் பாதிரியாரே அடிபணிந்தார். பைபிளை நல்ல தமிழில் பெயர்த்துக் கொடுக்க நாவலர் தயங்கவில்லை; ஆனால் நீதியை விலக்கிச் செய்யும் மத மாற்றத்திற்கு நாவலர் பெரு நெருப்பு.

எமது சமயம் வைதிக சமயம். வைதிகம் வேத நெறி, சைவம் சிவநெறி அதாவது அருள் நெறி. வேத நெறியின்வழி வருவது சைவநெறி. "வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க" என்று போற்றிப் பாடப்படுவது இதனாலாகும். எனவே வேத நெறி உலக நெறி சைவ நெறி சத்திநிபாத நெறி. இந்நெறி நின்று வாழும் சத்திநிபாதங்கள் எச் சாதியாலும் பாதிக்கப்படாதவர்கள். ஒரு சூத்திரன் சத்திநிபாதன் ஆனால் அவனிடம் பிராமணன் பாடங் கேட்கலாம் என்பது நாவலரின் கூற்றாகும்.

நமக்குப் பிறவியிலேயே சாதிப் புத்தி இருக்கின்றது. சிலரை நம்மில் குறைந்தவர்கள் என்று இகழுகின்றோம். சிலரை நம்மில் உயர்ந்தவர்கள் என்று எரிச்சற்படுகின்றோம். இந்தப் புத்தி போக வேண்டும். இது எப்படிப் போக வேண்டும் என்பதை வைதிக சமயங்கள் எடுத்துக்காட்டி, சாதியாற் சம்பவிக்கும் இடர்களைப் போக்கி விடும் அவை நீங்கின் வைதிகன் சைவன் ஆகின்றான், அவனுக்குச் சாதியில்லை,

அவன் இனிச் சமயச் சாதிமான். சரியைச் சாதி, யோகச் சாதி, ஞானச் சாதி எனச், சமயச் சாதி மாத்திரமே வகுக்கப்படும். எனவே சிவனை வழிபடுகின்றவர்களும் விபூதி தரிப்பவர்களும் ஒழுக்கம் உள்ளவர்களுமான பஞ்சமர்கள், ஒழுக்கங்கெட்ட பிராமணர்களிலும் புறச் சமயத்தவர்களிலும் மேலானவர்கள் என்பது நாவலர் பெருமான் கருத்தாகும். சாதியாகிய வியாதி நீங்கிய சமயமே நாவலர் சமயம். எந்த உயிருக்கும் உயிர் நிலைக்கும் வழி செய்யும் சமயமே நாவலர் கண்ட சமயம். இதனையே சகல சைவ சமயிகளும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே நாவலர் பெருமானின் பெரு விருப்பமாகும்.

சைவ சமயத்தையம் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய தமிழையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேரவாவினால், தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்ததுடன் "நிலையில்லா என் சரீரம் உள்ளபோதே என் கருத்து நிறைவேறுமோ, நிறைவேறாதோ என்ற கவலை என்னை இரவும் பகலும் வருத்துகிறது. எனது குறிக்கோளை நான் எடுத்த தேகம் விழுமுன் நிறைவேற்றி அருளும்" எனத் திருவருளை உளமார வேண்டி நின்றவர் நாவலர் பெருமான்.

நாவலரின் சமயப் பணிகளுள் முதன்மை பெறுவது ஐந்தாண்டுத் திட்டம் ஆகும். அத்திட்டப்படி ஐந்த வருடம் பயிற்சி பெற்று, வருடம் தோறும் இருபது பேர் சமயப் பிரசாரகர்களாயும். கற்று வல்ல உபாத்தியாயர்களாயும் வெளியேறுவர். அவர்கள் மறுமைக்கும் இம்மைக்கும் வழி காட்டிகளாய் அமைவர். இத்திட்டத்தினைத் தமது இருபத்திரண்டாம் வயதில் ஆரம்பித்து, மூன்று வருடத்தில் சைவப் பிரசாரகர்களையும் கற்று வல்ல உபாத்தியாயர்களையும் உற்பத்தி செய்து 1848 இல் நடைமுறைக்குக் கொண்டு வந்தார். இத்திட்டத்தின் வழி வந்த மாணவப் பரம்பரை எமது நாட்டிலும் தமிழ் நாட்டிலும் பெருஞ்சேவை ஆற்றி இருக்கின்றது. பிற்காலத்தில் தோன்றிய சைவத் தாபனங்கள் அனைத்திற்கும் வழி காட்டியவர் நாவலர் பெருமான் எனக் கூறின் மிகையாகாது.

பதின்மூன்றாம் வயதிலேயே சிவபெருமானை நோக்கிச் சைவ சமயம் குன்றுதலைப் பற்றி ஒரு வெண்பா பாடியதுடன், பார்சிவல் என்னும் கிறிஸ்தவப் பாதிரியாருக்குப் பண்டிதராக இருக்கும் போதே கருவி நூல்களையும் சமய நூல்களையும் பிள்ளைகளுக்குக் கற்பித்தால் அவர்களால் உலகிற்குப் பயன் பெரிதும் சித்திக்கும், சைவம் மறுமலர்ச்சி பெறும் என்றெண்ணி விசுவாவசு வருடம் தை மாதம் (1846) தொடக்கம் இராத்திரியிலும் காலையிலும் வேதனம் பெறாது, இலவசமாகக் கற்பிக்கத் தொடங்கினார். அப்பொழுது நாவலர் பெருமானுக்கு வயது இருபத்து மூன்றாகும். அத்துடன் இளைஞர், முதியவர், ஆண்கள், பெண்கள் யாவருக்கும் பயன்படும் வண்ணம் பிலவங்க வருடம் (1847 ஆம் ஆண்டு) மார்கழி மாதம் தொடக்கம் சுக்கிர வாரந்தோறும் இராத்திரி காலங்களில் வண்ணார் பண்ணைச் சிவன் கோயில் வசந்த மண்டபதில் சைவப் பிரசங்கஞ் செய்து வந்தார். அவரது சைவப் பிரசங்கம் பற்றி உவெஸ்லியன் மிஷன் 1855 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "றிர்போட்" என்ற புத்தகத்தில் 20 ஆம் பக்கத்திலும், பாதிரிமார் எழுதிய புத்தகத்தில் பலவாறும் பாராட்டியுள்ளனர். 1848 ஆம் ஆண்டு கீலக வருடம் ஆகஸ்ட் மாதம் வண்ணார்பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலையைத் தாபித்தார். இவ்வாண்டு செப்ரெம்பர் மாதத்தில் தம் வாழ் நாள் முழுவதையும் சைவ சமய விருத்தி, தமிழ் விருத்திக்கே அர்ப்பணிக்கும் நோக்குடன் தமது பண்டிதர் உத்தியோகத்தையே பரித்தியாகம் செய்துவிட்டார். 1849 ஆம் ஆண்டு சௌமிய வருடம் தமது இருப்தேழாம் வயதில் தமிழ் நாடு முழுவதும் திக்கு விஜயம் செய்து, தமிழறிவிலும், சைவசித்தாந்த அறிவிலும், ஒழுக்கங்களிலும் சிறந்து விளங்கித் தமிழுக்கும் சைவத்திற்கும் நெடுங்காலமாக உறை விடமாயிருந்த, திருக்கைலாச பரம்பரைத் திருவாடு துறையாதீனத்தை அடைந்து அங்கு எழுந்தருளியிருந்த உபசந்நிதானங்களாலும் வித்துவான்களாலும் முன் எவரும் பெறாத உபசாரங்களையும் 'நாவலர்' என்னும் பட்டத்தையும் பெற்றார். நாவல.ர் ஆன நாள் தொடக்கம் தமிழகத் தமிழுக்கும்,சைவத்திற்கும் நாவலருக்கே முதன்மை அளித்து வந்தது. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, "கற்றுணர் புலவர் உட்களிக்கும், முற்றுணர் ஆறுமுக நாவலன்" என் நாவலரைப் போற்றினார். 1864 இல் நாவலர் சிதம்பர, தில்லையம்பல நடராசரைத் தரிசித்து அங்கும் ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலை தாபித்து, தில்லை வாழ் அந்தணரின் சிறுவர்களும் பிறரும் அங்கே கல்வி பயின்றனர்.

சைவ சமய மறுமலர்ச்சிக்காவும் தமிழ் மொழி விருத்திக்காகவும் அவர் செய்த கைங்கரியங்களும் நூல் வடிவல் வெளி வந்துள்ளன. 1ம், 2ம். 4ஆம் பால பாடங்கள், திருவிளையாடற் புரான வசனம். பெரிய புரான வசனம், இலக்கண வினா விடை, இலக்கணச் சுருக்கம், நன்னூற் காண்டிகை, நன்னூல் விருத்தி, இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பியப் பாயிர முதற் சூத்திர விருத்தி, பிரயோக விவேகம், சேனா வரையம், தருக்க சங்கிரகம், 1ஆம், 2ஆம் சைவ வினா விடை, நித்திய கருமவிதி, சிவாலய தரிசன விதி, புட்பவிதி, சிதம்பர மான்மியம், சைவ சமய நெறியுரை, கோயிற் புராண உரை, திரு முருகாற்றுப்படைஉரை, ஆகியன எழுதினார். சிவஞான போதச் சிற்றுரை, பதினோராந் திருமுறை, திருவாசகம், அகத்தியர் தேவாரத் திரட்டு ஆகிய நூல்களை அச்சிற் பதித்து நூல் வடிவம் கொடுத்தார்.

பாரதம், சேது புராணம், திருக்குறள், பரிமேலழகர் உரை, திருக்கோவையார் உரை ஆகிய பதிப்புக்கள் நூல்

வடிவம் பெற்று வெளிவர அருஞ்சேவை ஆற்றினார். சைவ தூஷண பரிகாரம், சுப்பிர போதம், மித்தியாவாதம் நிரசனம் முதலிய கண்டன நூல்கள் எழுதினார். மேலும் சமூக அரசியல் பிரச்சினைகளில் ஈடுபட்டுக் கொண்டு காலந்தோறும் வெளியிட்ட கட்டுரைகள், கண்டனங்கள் சில நாவலர் பிரபந்தம் என்ற பெயரில் வெளி வந்துள்ளது.

19ஆம் நூற்றாண்டின் மத்தியில் சைவம் தழைக்க வந்தவதரித்த வள்ளலார் ஆறுமுக நாவலர் இதயத்தில் திருக்கேதீச்சர எண்ணமும் கருக்கொண்டது. "யாழ்பாணச் சமய நிலை" என்ற துண்டுப் புத்தகத்தின் இறுதிப் பந்தியில் சைவ மக்களை நோக்கி "சைவ சமயிகளே தேவாரம் பெற்ற சிவத்தலங்கள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருகோணமலை சம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றிருக்கிறது. மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்துக்கு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றுஞ் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. அப்பாடல் பெற்ற தலம் இன்று அழிந்து காடாகக் கிடக்கிறதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகா ஸ்தலத்தைச் சிறிதும் நினையாது இருப்பது என்னவோ! இவ்விலங்கையில் உள்ள விபூதி தாரிகள் எல்லாரும் சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்து விடும். இதை நீங்கள் எல்லோரும் சிந்தித்து இத்திருப்பணியை நிறை வேற்றுவீர்களாயின் அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அனுக்கிரகம் செய்வார் எனக் கூறிச் சைவர்களை ஊக்கப்படுத்தினார்.

"மன்னாருக்குச் சமீபத்தில் உள்ள மாதோட்டத்திலே திருக்கேதீஸ்வரம் என்னும் தேன் பொந்து ஒன்று உளது; அங்கு மருந்து ஒன்று மறைந் திருக்கிறது, அதனைச் சென்றடையுங்கள்" என்று எங்கள் நாவலர் பெருமான் அன்று சைவ உலகிற்கு விடுத்த விஞ்ஞாபனத்தினால் சைவ உலகு விளித்துக் கொண்டது. அதன் பயனாக வரலாற்று ஆய்வுகளுக்கு அப்பாற்பட்ட தொன்மைச் சிறப்புமிக்க எங்கள் திருக்கேதீஸ்வர ஆலயம் மீண்டும் புத்துயிர் பெற்றது.

"சைவசமயத்தை வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளைச் செய்வாரில்லையே! இதற்கு யாது செய்யலாம்? சைவ சமய விருத்தியின் அதீத பேராசையை, அதனை முடித்தற்குச் சிறிதும் சக்தியில்லாத எனக்குத் தந்தருளிய சிவ பெருமான் சித்தியுடைய மற்றையோருக்குக் கொடுத் தாரில்லையே! என்று இரவும் பகலும் பெரும் கவலை கொண்டார் நாவலர். அன்று அவர் கொண்ட சோகம் இன்றும் தொடராது இருக்க நாம் சைவத்தை, ஆருயிர் போன்ற அவ் அமுதத்தை கண்போல் காத்து அந்நெறியில் வாழ்வோம்.

*கந்தவேள் செய்தவம் போறகாணுந் தவமுமவன்*
*மைந்தனாம் நாவலன் போல் மைந்தர்களும் – செந்தமிழ்*
*வல்லவர் களன்னவன் போல் வந்திடுவ தும்முலகில்*
*இல்லை இல்லை இல்லை இனி.*

## காரணம் யார்?

பெருந்தொகையினரான உழைப்பாளி மக்கள் விரல்விட்டு எண்ணக் கூடிய ஒருசில சோம்பேறிகளுக்குக் கீழ்ப்படிந்து விடுகிறார்கள்; அவர்களுடைய உழைப்பும் அவர்களுடைய வாழக்கையும் இச் சோம்பேறிகளின் கைக்குள் அடங்கிக் கிடக்கின்றன....இந்த நிலை, முக்கியமாக இந்தியாவிலே மிக்க வினோதமாயிருக்கிறது. ஏனெனில், ஒப்பற்ற உடல்வலியும் அறிவின் திறனும் ஒருங்கே படைத்தவர்களான மக்கள், இருபது கோடிக்கு மேற்பட்ட தொகையினர் வாழ்கிறார்கள். ஆனால் , இவர்கள் அறிவு ஒழுக்கத்திலே தங்களுக்கு முற்றிலும் புறம்பானவர்களும் சமயவொழுக்கத்திலே தங்களிலும் மிகமிகத் தாழ்ந்தவர்களுமான ஒரு சிறு கூட்டத்தாரின் பிடியிலே அகப்பட்டு விழிக்கிறார்கள்.

வியாபாரஞ் செய்ய வந்த ஒரு கம்பனிக்காரர்கள் இருபதுகோடித் தொகையினரான மக்களை அடிமைப்படுத்தினார்கள். மூடநம்பிக்கை சிறிதுமில்லாத ஒரு மனிதனிடம் இதைச் சொல்லிப் பாருங்கள்; இச்சொற்களின் பொருள் என்ன என்பதை அவன் உணரமாட்டான். முப்பதாயிரம்பேர் பெரிய வஸ்தாத்துக்கள் அல்ல, பலங்குறைந்த சாமான்ய மக்கள் வீரமும் அறிவும் ஆற்றலும் சுதந்திரவேட்கையும் மிக்கவர்களான இருபதுகோடி மக்களை அடக்கிப் பணியவைத்துவிட்டார்கள் என்றால் இதற்குப் பொருள் என்ன? முப்பதாயிரம், இருபதுகோடி அடிமைப்படுத்தியது ஆங்கிலேயரல்ல; இந்தியர் தம்மைத்தாமே அடிமைப் படுத்திக் கொண்டார்கள் என்பது விளங்கவில்லையா?

- ரோல்ஸ்ரோய்

# இங்கையிற் சைவமும் அதன் தொன்மையும் மன்னார் மாவட்டத்தின் சைவசமய பாரம்பரியங்களும் சைவக் கோயில்களும்

திரு. செ. சி. இராம கிருஷ்ணன்
*தலைவர்,*
*(மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கம்)*

உலகம் முழுவதும் உயர் சிறப்புடைய சைவத் தலங்கள் அமைந்திருக்கின்றதை நாம் காண்கின்றோம். குறிப்பாகத் தமிழர் வாழும் இடமெல்லாம் சைவக் கோயில்கள் அமைக்கப்பட்டு தொன்மையும் தனித்துவமும் கொண்ட சைவ பாரம்பரியங்கள் பேணப்பட்டு வருகின்றன. செழிப்பு மிகுந்த செந்தமிழ் மலிந்த ஈழத் திருநாடாம் இலங்கையில் உயர்நிலையின் பின்னணியாகச் செழுமையானதொரு சைவ பாரம்பரியம் ஒளிர்கின்றது.

ஈழத்துச் சைவ பாரம்பரியத்தின் தொன்மையைப் பின்வரும் ஆதாரங்களில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது. அவை கர்ணபரம்பரைக் கதைகள், யாதீகக் கதைகள் (மகா–பாரதம், இராமாயணம்), தென்னிந்திய இலக்கியங்கள் (தேவாரங்கள்), இலங்கையில் எழுச்சி பெற்ற இலக்கியங்கள் (மகாவம்சம், தீபவம்சம், யாழ்ப்பாண வைபவ மாலை), கல்வெட்டுச் சான்றுகள், தொல்பொருள்ச் சான்றுகள், அழிந்தும் அழியாத நிலையில் காணப்படும் கட்டடச் சான்றுகள் என்பனவாகும். இவற்றினை ஆதாரமாகக் கொண்டு ஈழத்தின் சைவ பாரம்பரியத்தினை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து சைவ மதம் எனவும் வரலாற்றுக் காலத்து சைவ மதம் எனவும் இரண்டாக வகைப்படுத்தி நோக்கலாம்.

வரலாற்றுக்கு முற்பட்டகால சைவ மதத்தினை நோக்கின் இலங்கையை ஆண்ட இராவணன் ஒரு சிவபக்தன் எனவும், அவனுக்குச் சிவபெருமான் பாதுகாப்புக் கருதி வாளினைப் பரிசாக வழங்கியதாகவும், அவன் சிவலிங்கத்தினை தாயத்தாக அணிந்தான் எனவும், அவனும் அவனது தாயாரும் திரு க்கோணேஸ்வர தலத்தினைத் தரிசித்தார்கள் எனவும், இராவணன் தனது தாயின் அந்தியேட்டிக் கிரியைக்காக கன்னியாய் வெந்நீர் ஊற்றை வெட்டினான் எனவும் , ஒரு பொழுது இராமன் இராவணனைக் கொன்றபோது இராமனுக்கு பிரமகத்தி தோஷம் பீடிக்க அவன் திருக்கேதீச்சர தலத்தினைத் தரிசித்து அங்குள்ள புண்ணிய தீர்த்தமாகிய பாலாவியில் நீராடி அத்தோஷம் நீங்கப் பெற பொன்னாலும் வெள்ளியாலும் சிவலிங்கங்களைப் பிரதிஸ்டை செய்து மீண்டான் எனவும் கர்ணபரம்பரைக் கதை கூறுகின்றது.

இலங்கையின் தொன்மை நூலாகிய மகாவம்சத்தின் குறிப்பின்படி இயக்கர், நாகர், வேடர் என்னும் மூன்று சாதியினர் ஆட்சிபுரிந்து வந்தனர் எனவும், இவர்கள் இயற்கை வழிபாடு, நாகவழிபாடு, இலிங்க வழிபாடு ஆகியவற்றை வழிபட்டமையில் இருந்து இலங்கையின் பூர்வீகக் குடிகளான இவர்கள் சைவ சமயத்தவர்கள் என்பதை அறிய முடிகிறது.

மகாவம்சக் கருத்தின்படி இலங்கைக்கு வருகை தந்த விஜயனும் அவனுடைய எழுநூறு தோழர்களுள் "உபதிஸ்ஷ" என்னும் பிராமணனும் ஈழத்தின் சிவத் தலங்களாகிய திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், முன்னேஸ்வரம், தொண்டேஸ்வரம் போன்ற தலங்களை வழிபட்டனர் எனவும் மகாவம்சம் கூறுகின்றது.

யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூலினை நோக்கின் இலங்கையில் விஜயன் வாழ்ந்த காலத்துக்கு முன்னரே வடக்கே நகுலேச்சரமும், கிழக்கே திருக்கோணேச்சரமும், தெற்கே தெவிநுவரையில் சந்திரசேகரஈச்சரமும், மேற்கே திருக் கேதீச்சரமும் முன்னேச்சரமும் சிறந்து விளங்கிய ஈழத்தின் புராதன சிவத் தலங்களாகும். இதனை நோக்கின் ஈழத்தின் நாற்திசைகளிலும் விஜயன் வருகைக்கு முன்னரே சைவ சமயம் பரவி இருந்ததினை அறியக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையின் நாலந்தா, பொம்பரிப்பு, கந்தரோடை முதலிய பிரதேசங்களில் பெறப்பட்ட சேவல் சின்னங்கள், செடில்கள், வேல்கள், ஏனைய சைவ சமயம் சார்ந்த இலட்சினைகள் கண்டெடுக்கப்பட்டதில் இருந்து தொன்மைக் காலத்தில் இருந்தே ஈழத்தில் சைவ மதம் பரவலாகச் சிறப்புற்று விளங்கியதினை ''பரணவிதான'' என்ற தொல்பொருள் ஆய்வாளர் கூறுகின்றார்.

இலங்கையில் ஆட்சி செய்த மன்னர்கள் "மூத்தசிவ", ''முகாசிவ'' போன்ற பெயர்களைக் கொண்டிருந்தனர் என்பதில் இருந்தும் ஈழத்தில் சைவத்தின் தொன்மையைக் காணக் கூடியதாக உள்ளது.

வரலாற்றுக் காலத்தில் இலங்கையில் சைவ மதத்தினை நோக்கின் அவற்றினை இரண்டு காலங்களாக வகுத்து அறிய முடிகின்றது. அவையாவன: இலங்கையில் பல்லவர் காலம் (அநுராதபுரக் காலம்), இலங்கையில் சோழர் காலம் (பொலன்னறுவைக் காலம்) என்பனவாகும்.

அநுராதபுரக் காலத்தினை நோக்கின் இலங்கையை ஆட்சி செய்த பல்லவர்கள் தமது பாணியில் ஆலயங்களை அமைத்தனர். இதற்கு ஆதாரமாக நாலந்தா என்ற இடத்தில் நூற்றுக்கு மேற்பட்ட ஆலயங்கள் கட்டபட்டமை, அத்துடன் இக்காலத்தின் இலங்கையின் புராதன சிவத் தலங்களாகிய திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் போன்ற ஆலயங்கள் சம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் தேவாரங்களில் இருந்து இவை அக்காலத்து பாடல் பெற்ற தலங்களாகக் காணப்படுகின்றன.

பொலன்னறுவைக் காலத்தினை நோக்கின் அக்காலத்தில் இலங்கையை ஆண்ட சோழ மன்னான இராஜேந்திர சோழன் தனது தாயின் நினைவாக "வானவன் மாதேவி ஈஸ்வரமுடையார் சிவன் கோயில்" என்ற சிவத்தலத்தினையும், அதனுடன் சேர்த்து பத்துச் சிவாலயங்களையும், நான்கு விஸ்ணு ஆலயங்களையும் கட்டுவித்தான். அத்தோடு இம் மன்னர்கள் திருக் கேதீச் சரத்தினை முதன் முதலிலே கோபுரவடிவமாகக் கட்டி ராஜராஜசோழனால் குடமுழுக்குச் செய்யப்பட்டதோடு இத்தலம் அக்காலத்தில் "ராஜராஜேஸ்வர மகாதேவன் கோயில்" எனச் சிறப்பிக்கப்பட்டது. இவ்வாறு ஈழத்துச் சைவ சமயமானது வரலாற்றுக் காலத்திலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும் சிறப்படைந்ததில் இருந்து இங்கு வாழ்ந்த மக்கள் சைவ சமயத்தைத் சார்ந்தவர்கள் என அறியமுடிகின்றது.

இவ்வாறான ஈழத் திருநாட்டின் வடபால் செல்வம் மலிந்து வளங்கள் நிறைந்து காணப்படுகின்ற மன்னார் மாவட்டத்திலும் சைவ மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் உண்டு.

இன்றைய மன்னாரப் பிரதேசம் இலங்கையின் வரலாற்றின் ஆரம்ப காலப்பகுதியிலே மிக அபிவிருத்தியடைந்த பிரதேசங்களில் ஒன்றாகும். இப் பிரதேசம் விவசாயத்துறையில் நன்கு வளர்ச்சியடைந்திருந்தது. இப் பகுதியில் மாதோட்டம் என்ற பெரிய துறைமுகப்பட்டினம் இருந்து. இதன் வழியாகவே பல்வேறு நாடுகளுடன் இலங்கை வர்த்தகம் செய்து வந்தது. இம் மாதோட்ட நன்நகரில் சைவ நாயன்மார்களால் பாடல் பெற்ற புராதன சிவத்தலமாகிய திருக்கேதீச்சர ஆலயம் இருப்பதே இம் மாவட்டத்தில் சைவ மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பதற்குச் சான்றாகும். குறிப்பாக சோழ மன்னர்கள் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் மாதோட்டம், திருக்கேதீச்சரம் ஆகிய இரண்டினதும் நிலை மிக உச்ச மடைமந்துள்ளது. இக் காலத்தில் இப் பகுதியை "இரா ஜராஜேஸ்வரம்" என்றும் அழைத்தனர். இன்றும் கூட "மாளிகைத் திடல்" (மாளிகைகள் நிறைந்த உயர்ந்தவிடம்), "பாப்பா மோட்டை" (அந்தணர்களுக்குரிய இடங்கள்) "கோயிற்குளம்" (கோயில் நிலத்துக்கு நீர்ப்பாச்சும் குளம்) என்ற பெயருடன் சில ஊர்கள் திருக்கேதீச்சரத்தைச் சுற்றி இருப்பதை நாம் காணலாம். இவ்வாறாக மன்னார் மாவட்டத்திற் போர்த்துக்கேயர் காலடி எடுத்து வைக்கும்வரை சைவ மக்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தனர்.

மன்னாரப் பகுதியில் வந்திறங்கிய போர்த்துக்கேயர் இங்குள்ள மக்களைத் தமது மதத்திற்கு மாற்றினர். அந் நேரத்தில் இப்பகுதி யாழ்ப்பாண மன்னனின் ஆட்சிக்கு உட்பட்டதாக இருந்தது. மதமாற்றத்தை அறிந்த மன்னன் இவற்றைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்தோடு மதம் மாறிய அறுநூறு பேர்களை கொன்று ஒழிந்தான். மதம் மாற்றப்பட்ட அவனது மகன் கூட இதற்கு விதி விலக்காகவில்லை. இதன் பின்னர் 1560 ஆம் ஆண்டு போர்த்துகேயப் படைகள் கொச்சியிலிருந்து இங்கு வந்து கொடுமை நிறைந்த ஒரு போரை நடத்தினர். சைவ மதத்தில் நம்பிக்கையுள்ளோர் பலர் போர்த்துக்கேயரின் பீரங்கிகளுக்கு இரையாயினர். இந்தப் போரின் மூலம் போர்த்துக்கேயர் மன்னார்த் தீவையும் 8,000 குருசேடோஸ் தொகைப் பணத்தையும் தமதுரிமையாக்கிக் கொண்டனர். இதன் காரணமாக மேலும் மன்னார்த் தீவில் வாழ்ந்த மக்கள் போர்த்துக்கேயரால் மதமாற்றம் செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து திருக்கேச்சரம் கொள்ளையடிக்கப்பட்டது. இவ்வாலயத்தை இடித்து அதன் கற்கள் மூலம் மன்னார்க் கோட்டைத் துறைமுகத்தை போர்த்துக்கேயர் கட்டினர். இக் கொடுமைகளைப் பார்த்துச் சினங்கொண்ட மக்கள் தடுத்து நிறுத்த எடுத்த முயற்சிகள் யாவும் படுகொலையில் முடிந்தது. திருக்கேதீச்சரத்தின் வீழ்ச்சியோடு ஈழத்தமிழரின் ஆட்சியும் அழிந்தது. அதுவரை சுதந்திரமாக வாழ்ந்த மக்கள் தமது ஆட்சியை இழந்து அடிமைகளாயினர்.

தொடர்ந்தும் போர்த்துக்கேயரின் பின் இங்கு ஆட்சி செய்த ஒல்லாந்தர், ஆங்கிலேயரினால் சைவசமயம் சீரழிக்கப்பட்டும் ஆலயங்கள் அழிக்கப்பட்டும் வந்துள்ளன. அவர்கள் எமது வளங்களை எடுப்திலும் தமது மதத்தைப் பரப்புவதிலும் கூடிய ஆர்வம் காட்டினர். தற்சமயம் நடந்து கொண்டிருக்கும் இனக் கலவரம் காரணமாகச் சைவமதம் தொடர்ந்தும் இன்னலுக்குள்ளாகின்றது. இனக்கலவரம் காரணமாக அநாதைகளாக்கப்பட்ட சைவ மக்கள் பலர் தொடர்ந்தும் மதமாற்றத்துக்குள்ளாக்கப்பட்டனர். பல சைவக் கோயில்கள் அழிக்கப்பட்டுள்ளன. மக்களின் இடப்பெயர்வு காரணமாகப் பல கோயில்கள் பராமரிக்கப்படாது அழிந்தும் கைவிடப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படுகின்ற மன்னார் மாவட்டத்தில் எமது பாரம்பரியத்தினை விளக்குமுகமாக எத்தனையோ சைவ ஆலயங்கள் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. அவ்வாறான ஆலயங்களின் சிறப்புக்களை நோக்குவோம்.

### திருக்கேதீஸ்வரம் - மாந்தை

மன்னார் நகரில் இருந்து ஏறத்தாள 9 கிலோ மீற்றர் தூரத்தில் மன்னார்–பூநகரி சாலையில் இவ்வாலயம் அமைந்துள்ளது. பழமை வாய்ந்த இவ்வாலயம் சம்பந்தர், சுந்தரர் ஆகிய ஞானச் செல்வர்களினால் பாடப்பெற்ற இத்தல வரலாற்றினை "தட்சிண கைலாய மாண்மியம்" சிறப்பாகக் கூறுகின்றது. "இத் தலத்திற்கு இணையான புண்ணிய தலம் முன்னுண்டானதும் இல்லை இனியுண்டாவதுமில்லை" எனக் கூறும் புராணத்தின் வாயிலாகவும் பிற மரபுக் கதைகளின் வாயிலாகவும் ஆலயத்தின் தொன்மைச் சிறப்புக்கள் பேசப்படுகின்றன. மாசி மாதத்து மகா சிவராத்திரி என்றதும் இன்று திருக்கேதீஸ்வரமே நினைவிற்கு வருகிறது. நான்கு யாமங்கள் நடக்கும் பூசையும், பல்லாயிரக்கணக்கான அடியார்கள் பாவம் வினையறுக்கும் பாலாவியில் நீராடி எமையாளும் பரமசிவனை வணங்கும் கோலமும் என்றும்

அருள் சுரக்கும் கண்கொள்ளாக் காட்சியாகும். இப்போது அண்மைக்கால இராணுவ நடவடிக்கையால் கோயில் மடங்கள் சிதைவடைந்து நித்திய பூசை வழிபாடுகளின்றி இருக்கிறது. சில விசேட காலங்களில் மட்டும் பூசை நடைபெறுவதுண்டு.

### முத்துமாரி அம்மன் கோயில் - தலைமன்னார்

இவ்வாலயம் மிகவும் பழமை வாய்ந்தது. திருக்கேதீஸ்வர ஆலயத்துடன் மிகவும் தொடர்புடையதாகவே இருந்து வருகிறது. திருக்கேதீச்சரத்துக்குத் தலைமன்னாரூடாக வரும் பக்த அடியார்கள் இவ்வாலயத்தைத் தரிசித்து நின்று வருவது வழக்கம். மதவாச்சி – மன்னார் – தலைமன்னார் சாலையின் 114 கிலோ மீற்றரில் தலைமன்னார் கிராமத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. வருடாவருடம் இவ்வாலயத்தில் விழாக்கள் நடைபெற்று வருவதோடு இவ்வாலயம் இவ்வூர் மக்களால் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

### ஸ்ரீ செல்வ முத்துமாரி அம்மன் கோயில்- நானாட்டான்

நானாட்டான் மோட்டக்கடையில் அமைந்துள்ள இவ் அம்மன் ஆலயம் ஆரம்பத்தில் வெள்ளாளகட்டிலுள்ள பிள்ளையார் கோவிலுடன் சேர்ந்திருந்தது. கிட்டத்தட்ட 75 ஆண்டுகளுக்கு முன்பதாக வெள்ளாளகட்டிலிருந்து அம்மன் சிலை எடுத்து வரப்பட்டு இவ்வாலயம் கட்டப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் சிறிதாக இருந்த ஆலயம் புனரமைக்கப்பட்டு வருடாவருடம் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. இங்கு நிரந்தரமாக அந்தணர் இருந்து மூன்று நேரப் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

### சித்தி விநாயகர் ஆலயம் - உப்புக்குளம்

மன்னார் நகரில் அமைந்துள்ள மிகவும் பிரசித்தி வாய்ந்த இவ்வாலயம் மன்னார் – பள்ளிமுனை வீதியில் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ளது. மிகவும் பழமைவாய்ந்த இவ்வாலயம் 1913 ஆம் ஆண்டிலிருந்து 1946 ஆம் ஆண்டு வரை குமரையா முத்துக்குமாரு என்பவரால் பரிபாலித்து வரப்பட்டது. இதன் பின்னர் மூவர் கொண்ட நிர்வாக சபையால் நிர்வாகிக்கப்படுகிறது. திருவிழாக்களும் விசேட பூசைகளும் இவ்வாலயத்தில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

### இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம் - திருவானைக் கூடம்

இவ்வாலயம் மன்னார், உப்புக்குளம் சித்தி விநாயகர் ஆலயத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது. இவ்வாலயம் சித்தி விநாயகர் ஆலயத்தினைப் போன்றே பரிபாலிக்கப்படுகின்றது.

### அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்- பாலம்பிட்டி

இவ் ஆலயம் பண்டார வன்னியன் காலத்து புராதன ஆலயமாகும். வன்னிப் பகுதியைச் சார்ந்த பாலம்பிட்டி என்னும் கிராமத்தில் இவ் ஆலயம் அமைந்துள்ளது. இறுதியாக 1991 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டு ஆகம முறைப்படி திருவிழாக்கள், மூன்று வேளை பூசைகள் என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

### ஸ்ரீ பாலமுருகன் ஆலயம் - மன்னார் ஆதார வைத்தியசாலை

இவ் ஆலயம் மன்னார் ஆதார வைத்தியசாலையில் அமைந்துள்ளது. வைத்தியசாலை வாசலின் முற்பக்கத்தில் நோயாளிகளினாலும், சைவ சேவையாளர்களினாலும் ஆரம்பத்தில் ஒரு சூலம் வைத்து வணங்கப்பட்டு வந்தது. பின்னர் 1982 ஆம் ஆண்டளவில் முருகப் பெருமானை இவ்வாலயத்தில் வைத்து நிரந்தரமாக ஒரு கோயில் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது வைத்தியசாலையில் உள்ளோராலும் அதன் சுற்றாடலில் வாழ்கின்ற சைவ மக்களினாலும் இவ்வாலயம் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றது. தினந்தோறும் பூசைகளும் விஷேட திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன.

### ஸ்ரீ சுப்பிரமணிய ஆலயம் - பேசாலை

இவ்வாலயம் மன்னார்–தலைமன்னார் வீதியின் 102 ஆவது கிலோமீற்றரில் அமைந்துள்ளது. இவ்வாலயம் திரு. பூபாலசிங்கம் என்னும் பெருமகனார் மனமுவந்து அளித்த காணியில் கிட்டத்தட்ட 22 வருடங்களுக்கு முன்பாக அமைக்கப்பட்டது. இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் திருமுருகனின் பாத அடி ஆலயத்தின் உட்பகுதியில் பதிந்து காணப்படுகின்றது. இது இவ்வாலயத்தின் தனிச் சிறப்பாகும். இப் பகுதியில் உள்ள சைவமக்கள் வருடாவருடம் திருவிழாக்களை நடத்தி இவ் ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்றனர்.

### காந்தாரி அம்மன் கோயில் - படப்படி, தலைமன்னார்

இவ்வாலயம் நிரந்தர கட்டடத்தால் அமைக்கப்பட்டு இப்பகுதி வாழ் மக்களினால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியிலிருந்து தலைமன்னார் கிராமத்திற்குச் செல்லும் வீதியில் கிட்டத்தட்ட 01 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

### பாவிலுப்பட்டான்கட்டிக் குடியிருப்பு - பிள்ளையார் கோயில்

1996 ஆம் ஆண்டு அரசினால் உருவாக்கப்பட்ட எழுச்சிக் கிராமமாகிய பாவிலுப்பட்டான்கட்டிக்குடியிருப்பு கிராமத்தில் அமைந்துள்ளது. இக்கோயில் நிரந்தர கட்டடத்தால் அமைக் கப்பட்டுள்ளது.

### காட்டாஸ்பத்திரி அம்மன் கோயில்

இக்கோயில் காட்டாஸ்பத்திரி கிராமத்தில் ஓர் நிரந்தர கட்டிடத்தில் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தை இங்கு வாழும் சைவ மக்கள் நன்கு பரிபாலித்து வருகின்றனர்.

### சின்னக்கரிசல் பிள்ளையார் கோயில்

மிகவும் பழமை வாய்ந்த இவ்வாலயம் தற்சமயம் திருத்த வேலைகள் செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளது. இப் பகுதியிலுள்ள சைவ மக்கள் பிற மதங்களைத் தழுவியதனால் புராதன ஆலயமான இவ் ஆலயம் சிறப்பாக வளரமுடியாது இருக்கின்றது.

### அம்மன் கோயில் - ஐந்தாம்கட்டை

மதவாச்சி – மன்னார் – தலைமன்னார் வீதியில் 93வது கிலோ மீற்றரில் (5ம் கட்டையில்) உள்ள சைவ மக்கள் வாழும் பகுதியில் இக்கோயில் அமைந்துள்ளது. இவ்வாலயம் ஒரு சிறியளவில் அமைக்கப்பட்டு இவ்வூர் மக்களால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

### செந்தூர் முருகன் ஆலயம் - தோட்டக்காடு, எழுத்தூர், மன்னார்

இவ்வூர் மக்களினால் ஒரு சிறிய அளவில் இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டு இம் மக்களினால் பரி பாலிக்கப்பட்டு வருகின்றது. தற்போது ஒரு நேரப்பூசை மட்டுமே நடந்து வருகின்றது.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - எழுத்தூர்

மன்னார் – தாழ்வுபாடு வீதியில் 2வது கிலோமீற்றரில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் 60 ஆண்டு களுக்கு முன்பே தனி ஒருவரினால் வழிப் போக்கர்கள் வணங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது இவ்வாலயத்தைச் சுற்றிப் பல சைவ மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இவ்வாலயத்தை ஒரு நிரந்தர கட்டடத்தில் அமைத்து சிறப்பாகப் பரிபாலித்து வருகின்றனர்.

### அம்மன் ஆலயம் - சௌத்பார் (காட்டம்மன் ஆலயம்)

ஆதி பராசக்தி அம்மை ஒரு பக்தருக்கு கனவில் தோன்றி கூறியமைக்கிணங்க அந்தப் பக்தரினால் மன்னார் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் இவ் ஆலயம் கட்டப்பட்டது. 1950ம் ஆண்டளவில் இவ்வாலயத்தை நிரந்தரமாகக் கட்டி சுற்றியுள்ள கிராம மக்கள் அனைவரும் வணங்கி வருகின்றனர்.

### வேல்முருகன் ஆலயம் - சாந்திபுரம், மன்னார்

1964ம் ஆண்டில் கதிர்காமத்தில் இருந்து எடுத்துவரப்பட்ட வேல் இங்கு வைக்கப்பட்டு ஒரு நிரந்தரக் கட்டிடத்தில் இவ்வாலயம் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

### ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயம் - சௌத்பார்

மன்னார் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் 1966ம் ஆண்டு தற்காலிக கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆலயம் தற்பொழுது நிரந்தரக் கட்டிடமாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தினை ஊர் மக்கள் சிறப்பாகப் பரிபாலித்து வருகின்றனர்.

### ஸ்ரீ முருகன் ஆலயம் - கீரி

மன்னார் – தாழ்வுபாடு வீதியில் அமைந்துள்ள கீரிக் கிராமத்தின் பிரதான வீதியிலிருந்து பிரிந்து செல்லும் முருகன் கோவில் வீதியில் சன சமூக நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ளது. 1984ம் ஆண்டு முருகன் படமும் வேலும் வைத்து தற்காலிகக் கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம் தற்போது கல்லினால் கட்டப் பட்டு வேலைகள் முடியாத நிலையில் உள்ளது. இவ் ஆலயத்தினை ஊர் மக்கள் சிறப்பாகப் பரிபாலித்து வருகின்றனர்.

### அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலயம் - எழுத்தூர்

மன்னார் தாழ்வுபாடு வீதியில் முதலாவது கிலோமீற்றரில் இருந்து பெரிய கமத்துக் காணி 100 வீட்டுத்திட்டப் பகுதிக்குச் செல்லும் வீதியில் ஏறத்தாழ 150 மீற்றர் தூரத்தில் இக் கோயில் அமைந்துள்ளது. 1970ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நிரந்தரக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயம் எழுத்தூர் மக்களால் நன்கு பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

### ஆலடிப் பிள்ளையார் கோயில்

மன்னார் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலக வளவினுள் காணப்படும் ஆலமர நிழலில் பொது வேலைப் பகுதி ஊழியர்களினால் கிட்டத்தட்ட 75 ஆண்டுகளுக்கு முன்பாகப் பிள்ளையாரை வைத்து வணங்கப்பட்டு வந்தது. பின்னர் நிரந்தர கட்டிடம் அமைத்து அலுவலக ஊழியர்களினாலும் பொது மக்களினாலும் வழிபடப்பட்டு வருகின்றது.

### முருகன் ஆலயம் - பறப்பாங்கண்டல்

மதவாச்சி – மன்னார் வீதியின் 69வது கிலோ மீற்றரில் வீதியோரமாக இக்கோயில் அமைந்துள்ளது. மக்கள் இடம் பெயர்ந்த காரணத்தால் இக்கோயில் பரா மரிக்கப்படாதுள்ளது. ஆலய கட்டிடத்தின் சில பகுதிகள் உடைந்தும் உள்ளன.

### முருகன் கோயில் - முள்ளிப்பள்ளம்

மன்னார் – மதவாச்சி நெடுஞ்சாலையில் இருந்து திருக்கேதீஸ்வரம் திரும்பும் முள்ளிக்குளம் சந்தியில் ஒரு சிறிய அளவிலான கட்டிடத்தில் வேல் ஒன்று வைத்து அப்பாதையால் செல்வோர் வழிபட்டு வந்தனர். தற்சமயம் உரிய பராமரிப்பு இல்லாது உடைந்து காணப்படுகின்றது.

### திருமுருகன் ஆலயம் - சிறுநாவற்குளம்

மன்னார் – மதவாச்சி பிரதான பாதையிலிருந்து திருக்கேதீஸ்வரம் செல்லும் திருக்கேதீஸ்வர வீதியில் பிரதான சாலையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இக்கோயில் ஒரு நிரந்தர கட்டிடத்தில் ஆகம முறைப்படி அமைந்துள்ளது. இப் பகுதியில் வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்த காரணத்தால் இவ்வாலயம் பரிபாலிக்கப் படாதுள்ளது.

### முனியப்பர் கோயில் - மாந்தை

மன்னார் – பூநகரி நெடுஞ்சாலையில் 6வது மைலில் திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியில் ஒரு மரத்தின் கீழ் சிறிய அளவில் இக்கோயில் அமைந்துள்ளது. பழமை வாய்ந்த இக் கோயிலில் பொங்கல், பூசைகள் நடைபெற்று வந்தன. தற்சமயம் இப்பகுதியில் மக்கள் இல்லாத காரணத்தால் பரிபாலிக்கப்படாதுள்ளது.

### அம்மன் கோயில் - கள்ளிக்கட்டைக்காடு

இவ்வாலயம் கள்ளிக்கட்டைக்காடு என்னும் கிராமத்தில் மதவாச்சி – மன்னார் வீதியில் 74வது கிலோமீற்றர் கல்லுக்கு அருகாமையில் அமைந்துள்ளது. கிட்டத்தட்ட 75 வருடங்களுக்கு முன்னர் செங்கல்லால் கட்டப்பட்ட இவ்வாலயம் தற்சமயம் உடைந்துள்ளது.

### அம்மன் கோயில் - உயிலங்குளம்

உயிலங்குளத்தில் இருந்து நானாட்டான் செல்லும் சந்தியில் சிறிய அளவிலான கட்டிடத்தில் அமைந்துள்ள இவ்வாலயம், இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்த காரணத்தால் பராமரிப்பற்ற நிலையில் உள்ளது.

### அம்மன் கோயில் - வண்ணா மோட்டை

உயிலங்குளத்தில் இருந்து ஆட்காட்டி வெளிக்குச் செல்லும் சந்தியில் அமைந்துள்ள இவ்வாலயம், இப்பகுதியில் மக்கள் எவரும் மீளக் குடியமர்த்தப்படாத காரணத்தால் ஆதரிக்கப்படாதுள்ளது.

### அனுமார் கோயில் - வண்ணாமோட்டை

இவ்வாலயம் மதவாச்சி – மன்னார் வீதியின் 70வது கிலோமீற்றரில் அமைந்துள்ளது. 1988ம் ஆண்டளவில் இப்பகுதியில் இந்திய அமைதிப் படையினர் இருந்தபோது அவர்களினால் இவ்வாலயம் அமைக்கப்பட்டது.

### மாரியம்மன் ஆலயம் - தாராபுரம்

இவ்வாலயம் தாராபுரம் டாங்கியடியில் அமைந் துள்ளது. இதனை 1945 ம் ஆண்டுக்கு முன்பாகவே எமது முன்னோர்கள் வழிபட்டு வந்துள்ளனர். 1988ம் ஆண்டு சீமெந்தினால் கட்டிடம் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இவ்வாலயத்தை இவ்வூர் மக்கள் நன்கு பரிபாலித்து வருகின்றனர்.

### சிவன் கோயில் - சாவற்கட்டு, மன்னார்

இவ்வாலயம் மன்னார் கட்டிடப் பொருள் அலுவ லகத்திற்கு முன்பாக மன்னார் – தலைமன்னார் வீதியில் அமைந்துள்ளது. 1988ம் ஆண்டளவில் இந்திய சமாதானப் படையினர் இப்பகுதியில் இருந்த பொழுது அவர்களினால் இவ்வாலயம் கட்டப்பட்டது.

### ஞானவைரவர், திருமுருகன் ஆலயம்- பெரியகடை

மன்னார் பட்டினத்தில் உதவிப் பொலிஸ் அதியட்சகர் அலுவலகத்துக்கு அருகாமையில் இவ்வாலயம் அமைந் துள்ளது. பூசைகளும் விழாக்களும் இங்கு ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன.

### இத்தியடி சித்திவிநாயகர் ஆலயம் - சின்னப் பண்டிவிரிச்சான்

இவ்வாலயம் 1960ம் ஆண்டளவில் சின்னப்பண்டி விரிச்சான் கிராமத்திலுள்ள சைவக் குடும்பங்களினால் ஆதரிக்கப்பட்டு 1975ம் ஆண்டு ஆலயத்துக்கு மூல ஸ்தானத்தினை நிறுவி மாசி மாதம் 9ம் திகதி விநாயகர் சிலை வைக்கப்பட்டது. பின்னர் 1981ம் ஆண்டு ஆவணித் திங்கள் 19ஆம் திகதி கும்பாவிஷேகமும், அலங்கார உற்சவமும் நடத்தப்பட்டு தற்போது நல்ல முறையில் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

### சித்தி விநாயகர் ஆலயம் - பூம்புகார்

இவ்வாலயம் பெரிய பண்டிவிரிச்சான், பூம்புகார் என்னும் இடத்தில் வாழ்கின்ற மக்களினால் ஆதரிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாலயத்தில் வவுனியாவிலுள்ள இந்து இளைஞர் மன்றத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட விநாயகர் சிலையை வைத்தே வணங்கப்படுகின்றது. இங்கு தினமும் பூசை நடைபெறுகின்றது.

### ஸ்ரீ முருகன் ஆலயம் - தச்சணாமருதமடு

இவ்வாலயம் தச்சணாமருதமடு, பாலம்பிட்டியில் அமைந்துள்ளது. இது 1957ம் ஆண்டில் இவ்வூர் மக்களினால் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டு பின் 1983ம் ஆண்டு ஸ்ரீ முருகன் ஆலயம் எனப் பெயரிட்டு முருகன் சிலை வைக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றது. இங்கு விசேட தினங்களில் பூசைகள் நடைபெறுகின்றன.

### மாணிக்க விநாயகர் ஆலயம் - வைரவப் புளியங்குளம்

இவ்வாலயம் வைரவப் புளியங்குளத்தில் அமைந் துள்ளது. இது பல வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டு இப்பகுதி மக்களால் பரிபாலிக்கப்படுகின்றது.

### ஐயனார் கோயில் - பாலம்பிட்டி

இவ்வாலயம் பாலம்பிட்டியில் 1875ம் ஆண்டு அமைக்கப்பட்டதாகும். இவ்வாலயத்தில் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. இங்கு வார பூசை நடைபெறுகின்றது.

### பட்டிவழிப் பிள்ளையார் கோயில்- பாலம்பிட்டி

இவ்வாலயம் பாலம்பிட்டியில் 1875ம் ஆண்டு அமைக்கப்பட்டதாகும். இங்கு வார பூசை நடைபெறுகின்றது.

### மருதடிப்பிள்ளையார் - பாலம்பிட்டி

இவ்வாலயம் பாலம்பிட்டியிலுள்ள பறங்கிக் குளக் கட்டுக்கு அருகில் மருத மரத்தின் கீழ் சிறிய சீமெந்துக்

கட்டிடத்தினால் முன்னோர்களினால் அமைக்கப்பட்டுள்ளது. விதைப்பு, அறுவடை காலங்களில் பூசை நடைபெறுகின்றது.

### சித்தி விநாயகர் ஆலயம் - பாலம்பிட்டி

இவ்வாலயம் பாலம்பிட்டியில் 1855 ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. வாரத்தில் இரு தினங்கள் பூசை நடைபெறுகின்றது. இங்கு மயில், சூரன், எலி போன்ற வாகனங்கள் உண்டு. இவை 50 வருடங்களுக்கு முற்பட்டவையாகும். இவ்வாலயம் சுண்ணாம்புச் சாந்தினால் கட்டப்பட்டுள்ளது.

### பிள்ளையார் கோயில் - முள்ளிக்குளம்

இவ்வாலயம் முள்ளிக்குளத்தில் 1970ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு தினமும் ஒரு வேளை பூசை நடைபெறுகின்றது. அறுவடை காலங்களில் சிறப்புப்பூசை நடைபெறுகின்றது.

### குதிரைவிட்டான் பிள்ளையார் கோயில்- முள்ளிக்குளம்

இவ்வாலயம் முள்ளிக்குள வீதியில் 1930ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு தினமும் ஒரு வேளை பூசை நடைபெறுகின்றது. இவ்வாலயம் கால்நடை வளர்ப்போரால் மிகவும் நம்பிக்கையுடன் வழிபடப்படுகின்றது.

### நாகதம்பிரான் கோயில் - கங்காணிக்குளம்

கங்காணிக்குளம் என்னுமிடத்தில் 1990ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு ஒரு நேரப்பூசை நடை பெறுகின்றது.

### சிவன் ஆலயம் - இரணை இலுப்பைக்குளம்

இவ்வாலயம் இரணை இலுப்பைக்குளம் என்னு மிடத்தில் 1916ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு இரு வேளைப் பூசை நடைபெறுகின்றது.

### சித்தி விநாயகர் ஆலயம் - பெரிய பண்டி விரிச்சான்

இவ்வாலயம் பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் 1956ம் ஆண்டில் குடியேற்றத்திட்டத்தின் கீழ் உரு வாக்கப்பட்ட கிராமத்தில் சில பெரியவர்களால் ஸ்தாபிக்கப் பட்டது. இங்கு விநாயகர், முருகன், நாபூஷணி அம்மன் போன்ற விக்கிரங்கள் வழிபாட்டுக்காக உள்ளன. இங்கு தினமும் இரண்டு காலப் பூசை நடைபெற்று வருகின்றது.

### பெரியவில்லடிப் பிள்ளையார் - பெரிய வில்லடி

இவ்வாலயம் மடுவிலிருந்து பரப்புக் கடந்தான் செல்லும் வழியில் 4வது மைல் கல்லுக்கு அருகாமையில் பாதை ஒரத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயம் தனி ஒருவரால் 1955ம் ஆண்டில் மரநிழலில் ஒரு சிலை வைத்து வணங்கப்பட்டது. 1994ம் ஆண்டு கருங்கல்லினால் சிலை செதுக்கி விக்கிரகம் பிரதிஸ்டை செய்யப்பட்டு மண் சுவர் வைத்து ஒட்டினால் வேயப்பட்ட கட்டிடம் அமைத்து வைக்கப்பட்டது. இங்கு விசேட தினங்களில்தான் பூசைகள் நடைபெறுகின்றன.

### முனியப்பர் கோயில் - தச்சணாமருதமடு

இவ்வாலயம் தச்சணாமருதமடு 2ம் கட்டை பாலம் பிட்டியில் 1970ம் ஆண்டு தனிநபர்களால் சூலம் வைத்து வணங்கப்பட்டது. தற்போது ஒழுங்காக கட்டிடம் அமைத்து விசேட தினங்களில் பூசை நடைபெறுகின்றது.

### விநாயகர் ஆலயம் - தட்சணாமருதமடு

இவ்வாலயம் தட்சணாமருதமடு குளக்கரையில் 1990ம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்களினால் கல்லினாலான விக்கிரகம் வைத்து வழிபடப்பட்டு வந்தது. தற்போது சிறிய மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு செவ்வாய், வெள்ளி தினங்களில் பூசை நடைபெறுகின்றது.

### பால விநாயகர் ஆலயம் - தட்சணா மருதமடு

இவ்வாலயம் தட்சணாமருதமடு, பாலம்பிட்டியில் அமைந்துள்ளது. இது 1951ஆம் ஆண்டு விவசாய நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டது. தொடர்ந்து இவ்வாலயம் 1981ம் ஆண்டு சிறு கூடாரம் அமைக்கப்பட்டு பராமரித்து வரப்பட்டது. அதன் பின்னர் 1992ம் ஆண்டு விநாயகர் விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டு அவ்வூர் மக்களினால் வழிபடப்பட்டு வருகின்றது.

### சக்தி கணபதி ஆலயம் - விளாத்திக்குளம்

இவ்வாலயம் விளாத்திக்குளம் என்னுமிடத்தில் 1970ம் ஆண்டில் இருந்து வழிபடப்பட்டு வருகின்றது. இவ்வாலயத்தில் விதைப்பு, அறுவடை காலத்தில் மட்டுமே பூசை நடைபெறும்.

### உத்திரமாகாளி கோயில் - தட்சணாமருதமடு

இவ்வாலயம் தட்சணாமருதமடு முகாம் வீதியில் அமைந்துள்ளது. இது 1972ம் ஆண்டில் இப்பகுதி மக்களினால் அமைக்கப்பட்டது. இங்கு வைகாசி விசாகப் பொங்கல் வெகு விமர்சையாக வருடாவருடம் கொண் டாடப்படுகின்றது.

### பத்திரகாளி கோயில் - ஆவரங்குளம்

இவ்வாலயம் ஆவரங்குளம் என்னுமிடத்தில் 1916ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பருவகாலப் பூசை நடை பெறுகின்றது. மிகவும் பூர்விகமான இக்கோயில் இவ்வூர் மக்களினால் ஆதரிக்கப்பட்டு வருகின்றது.

### அம்மன்கோயில் - இரணைஇலுப்பைக் குளம்

இவ்வாலயம் இரணைஇலுப்பைக் குளத்தில் 1930ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு ஒரு நேரப் பூசை நடைபெறுகின்றது.

### பிள்ளையார் ஆலயம் - இரணை இலுப் பைக்குளம்

இவ்வாலயம் இரணைஇலுப்பைக் குளத்தில் 1916ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு வேளைப் பூசை நடைபெறுகின்றது.

### அம்மன் கோயில் - மண்கிண்டி

இவ்வாலயம் மண்கிண்டி என்னுமிடத்தில் 1916ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு ஒரு வேளைப் பூசை நடைபெறுகின்றது.

### முருகன் ஆலயம் - கல்மடு

இவ்வாலயம் கல்மடு என்னுமிடத்தில் 1958ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு ஒரு நேரப் பூசை நடை பெறுகின்றது.

### வீரபத்திரர் ஆலயம் - வவுனியன் பெரிய குளம்

இவ்வாலயம் வவுனியன் பெரியகுளம் என்னுமிடத்தில் 1983ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு நேரப்பூசை நடைபெறுகின்றது.

### வீரபத்திரர் ஆலயம் - வவுனியன் பெரிய குளம்

இவ்வாலயம் வவுனியன் பெரியகுளம் என்னுமிடத்தில் 1916ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு ஒரு நேரப்பூசை நடைபெறுகின்றது.

### பிள்ளையார் கோயில் - விளாத்திக்குளம்

இவ்வாலயம் விளாத்திக்குளம் என்னுமிடத்தில் 1916ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு ஒரு நேரப் பூசை நடைபெறுகின்றது.

### அம்மன் கோயில் - விளாத்திக்குளம்

இவ்வாலயம் விளாத்திக்குளம் என்னுமிடத்தில் 1930ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு மகாசிவராத்திரி வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இங்கு ஒரு நேரப் பூசை நடைபெறுகின்றது.

### முருகன் ஆலயம் - பாசாங்குளம்

இவ்வாலயம் பாசாங்குளம் என்னுமிடத்தில் 1916ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு ஒரு நேரப் பூசை நடைபெறுகின்றது.

### அம்மன் கோயில் - அணைக்கல்லுப் போட் டாரகுளம்

இவ்வாலயம் அணைக்கல்லுப் போட்டகுளம் என்னும் இடத்தில் 1971ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு நேரப் பூசை நடைபெறுகின்றது. இங்கு மாத்தளையில் இருந்து அநேக மக்கள் வந்து குடியேறினார்கள். இவர்கள் இவ்வாலயத்தினை மாத்தளை முத்துமாரி அம்மன் கோயிலாகவே கருதி வழிபடுகின்றனர்.

### முருகன் ஆலயம் - சின்னவலையன் கட்டு

இவ்வாலயம் சின்னவலயன் கட்டு என்னுத்தில் 1930ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தைச் சூழ வயல்கள் காணப்படுகின்றன. இங்கு ஒரு நேரப் பூசை நடைபெறுகின்றது.

### முத்துமாரி அம்மன் கோயில் - கட்டுக்கரை

ஏறத்தாள 1920ம் ஆண்டளவில் கட்டுக்கரைக்குளக் கட்டிலுள்ள ஆலமரத்தடியில் பிள்ளையார் கோயில் ஒன்று அமைத்து அப்பகுதி மக்கள் வழிபட்டு வந்தனர். பின்னர் 1958ம் ஆண்டில் குளக்கட்டைப் புனரமைக்கும் பொழுது இந்தியாவிலிருந்து அம்மன் விக்கிரகம் ஒன்று எடுத்து வந்து இந்திய சிற்பமுறையில் ஒரு அம்மன் ஆலயம் அமைக்கப்பட்டு சைவ மக்களால் வழிபட்டு வரப்பட்டது. இவ்வாலயம் மதவாச்சி – மன்னார் வீதியின் 66வது கிலோமீற்றரில் அமைந்துள்ளது. தற்சமயம் இப்பகுதியில் இராணுவம் இருப்பதால் நாளாந்தம் பூசைகள் நடத்தி வழிபட முடியாதுள்ளது.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் - செம்மண்தீவு

மதவாச்சி – மன்னார் வீதியின் 63வது கிலோ மீற்றரில் கிட்டத்தட்ட 40 வருடங்களுக்கு முன்பாக ஒரு வயோதிபரினால் இவ்வாலயம் சிறியளவில் அமைக்கப்பட்டது. விவசாயம் செய்யும் இப்பகுதி மக்கள் இவ்வாலயத்தில் மிகவும் நம்பிக்கை வைத்துள்ள காரணத்தால் 1984ம் ஆண்டளவில் ஒரு நிரந்தரமான கட்டிடம் அமைத்து இவ்வாலயத்தை வெகு சிறப்பாக ஆதரித்து வந்தனர். தற்சமயம் நடந்து கொண்டிருக்கும் யுத்த நிலை காரணமாக இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இதனால் கோயில் பராமரிக்கப்படாதுள்ளது.

### விநாயகர் ஆலயம் - செம்மண்தீவு

இவ்வாலயம் மதவாச்சி – மன்னார் வீதியின் 63வது கிலோமீற்றரில் ஒரு ஆலமரத்தடியில் அமைந்துள்ளது. இப்பகுதி வாழ் சைவ மக்களினால் இந்த ஆலயத்தைப் புனரமைப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### முருகன் கோயில் - முருங்கன்

இக்கோயில் முருங்கன் பகுதியில் ஒரு சிறப்புமிக்க கோயிலாக அப்பகுதி மக்களால் ஆதரிக்கப்பட்டு வரு கின்றது. முருங்கன் சந்தை, பஸ் தரிப்பு நிலையங்களுக்கு அருகாமையில் ஒரு நிரந்தர கட்டிடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது.

### வைரவர் ஆலயம் - முருங்கன் சந்தி

முருங்கன் – சிலாவத்துறைச் சந்தியில், வீதியருகில் உள்ள ஒரு ஆலமரத்தின் அடியில் சூலம் வைத்து சிறிய அளவில் வைரவர் கோவில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை வர்த்தகர்கள், போக்குவரத்துச் செய்பவர்கள் ஆதரித்து வருகின்றனர்.

### அம்மன் கோயில் - முருங்கன்

முருங்கன் சந்தியிலிருந்து மதவாச்சிப் பக்கமாகக் கிட்டத்தட்ட 150 மீற்றர் தூரத்தில் நிரந்தர கட்டிடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. மட் பாத்திரங்கள், சிலைகள்

இப்பகுதியில் செய்யப்பட்டு வருகின்றது. இம் மக்களினால் இவ் ஆலயம் நன்கு புனரமைக்கப்பட்டு சிறப்பாக நடந்து வந்துள்ளது. தற்சமயம் இப்பகுதியில் மக்களை மீளக் குடியமர்த்தாதபடியால் பூசைகள் நடைபெறாதுள்ளது.

## வைரவர் ஆலயம் - கற்கடந்தகுளம்

மதவாச்சி – மன்னார் சாலையில் 59வது கிலோ மீற்றரில் ஒரு சிறு கட்டிடத்தில் வைரவர் ஆலயம் உள்ளது. இப்பகுதியில் இராணுவம் மாத்திரம் இருப்பதால் இந்தக் கோவில் ஆதரிக்கப்படாது வெறும் கட்டிடமாக மாத்திரம் உள்ளது.

## பிள்ளையார் ஆலயம் - கட்டையடம்பன்

1977ம் ஆண்டு இப்பகுதியில் குடியேறிய மக்களினால் பிள்ளையார் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டது. இங்கு பூசைகள், பொங்கல் முதலியன சிறப்பாக நடந்து வந்தன. பின்னர் 1990ம் ஆண்டு நடைபெற்ற கலவரத்தினால் இங்குள்ள மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்துள்ளனர். இம் மக்கள் மீளக் குடியமர்த்தப் படாமையினால் இக் கோயில் உடைந்த நிலையில் இருக்கிறது.

## முருகன் ஆலயம் - கட்டையடம்பன்

இவ்வாலயமும் மேற்குறிப்பிட்ட பிள்ளையார் ஆலயம் போன்றதே. ஒரு சிறிய அளவில் பிள்ளையார் கோயிலுக்கு எதிராக, மதவாச்சி – மன்னார் வீதியின் 53வது கிலோ மீற்றரில் அமைந்துள்ள ஆலயம் உடைந்தும், அழிக்கப்பட்டும் காணப்படுகின்றது.

## பிள்ளையார் கோயில் - கட்டையடம்பன்

கட்டையடம்பன் பாலத்துக்கு அருகாமையில் கட்டுக்கரைக் குளத்துக்கு வரும் தண்ணீர் வாய்க்காலுக்குப் பக்கத்தில் ஒரு மரத்தின் அடியில் விக்கிரகம் வைத்து வணங்கி வந்த இந்தக் கோயில், 1980ம் ஆண்டளவில் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரம் வைத்து மூலஸ்தானம் கட்டப்பட்டு ஒழுங்காகப் பூசைகள் நடத்தப்பட்டு வந்தது. இப்பகுதியில் மக்கள் மீளக் குடியேறாத பொழுதும், இங்கு தங்கியிருக்கும் பாதுகாப்புப் படையினரால் இவ்வாலயம் சுத்தமாக வைத்துப் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

## சனீஸ்வரன் கோயில் - கட்டையடம்பன்

மிகவும் பிரசித்தி பெற்ற இக்கோயில் கட்டையடம்பன் பாலத்துக்கு அருகாமையில், அருவியாற்றுக்குச் செல்லும் பாதையில் அமைந்துள்ளது. முக்கியமாக புரட்டாதி மாதத்து சனி விரத காலத்தில் ஏராளமான சைவ மக்கள் இங்கு வந்து எள் எண்ணெய் எரித்து வணங்குவது வழக்கம். கிட்டத்தட்ட 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த இக்கோயில் தற்போது மக்கள் சென்றுவர முடியாத பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கிறது.

## பிள்ளையார் கோயில் - சிறுக்கண்டல்

முருங்கன் – சிலாவத்துறை வீதியில் சிறுக்கண்டல் கிராமத்தில் அமைந்துள்ள இக் கோயில் 1975ம் ஆண்டு புனரமைக்கப்பட்டு ஒழுங்காகப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. நிரந்தரமான கட்டிடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது.

## அம்மன் கோயில் - சிறுக்கண்டல்

விவசாயிகளைக் கொண்ட சிறுக்கண்டல் கிராமத்தில் வயல்களின் நடுவே இந்த அம்மன் கோயில் கட்டப்பட்டுள்ளது. முக்கியமான விழாக்கள், நெல் அறுவடை காலங்களில் பொங்கல், திருவிழாக்கள் என்பன நடைபெறும். கிட்டத்தட்ட 100 வருடங்களுக்கு மேற்பட்ட இவ் ஆலயத்தில் ஒழுங்காக பூசைகள் நடைபெற்று வருகின்றன.

## அம்மன் கோயில் - பரிகாரிகண்டல்

1937ம் ஆண்டளவில் ஒரு நிரந்தர கட்டிடத்தில் இவ் ஆலயம் அமைக்கப்பட்டு இவ்வூர் மக்களினால் நாளாந்த பூசைகள் நடத்தி சிறப்பாகப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

## வைரவர் கோயில் - ஆண்டா செட்டித்தெரு

முருங்கன் – நானாட்டன் வீதியில் 4ம் கட்டையில் ஒரு சிறு கட்டிடத்தில் அமைந்துள்ள இந்தக் கோயில் இவ்வூர் சைவ மக்களினால் ஆதரிக்கப்பட்டு வருகின்றது.

## பிள்ளையார் கோயில் - வெள்ளாளகட்டு

மிகவும் பழமை வாய்ந்த கிட்டத்தட்ட 150 வருடங்களுக்கு மேலாக இருந்த இவ்வாலயம் தற்சமயம் உடைந்து போன நிலையில் உள்ளது. இக் கோயில் நானாட்டன் பகுதியிலுள்ள வெள்ளாளகட்டு என்னும் இடத்தில் உள்ளது.

## அம்மன் கோயில் - சிலாவத்துறை

மிகவும் பழமை வாய்ந்த இக்கோயில் சிலாவத் துறையில் முத்துக்குளிக்கும் காலம் தொட்டு இருந்து வருகிறது. இக் கோயில் சுண்ணாம்புக் கற்களினால் ஆன நிரந்தரக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டு சிறப்பாக ஆதரித்து வரப்பட்டது. இப் பகுதியில் வாழ்ந்த சைவ மக்களினால் நித்திய பூசைகள், திருவிழாக்கள் நடத்தப்பட்டு வந்தன. தற்சமயம் இங்கு மக்கள் எவரும் மீளக் குடியமர்த்தப் படாதபடியால் கவனிப்பாரற்று உடைந்த நிலையில் இவ்வாலயம் காணப்படுகின்றது.

அம்மன் கோவில் - அரிப்பு

அரிப்பு கிராமத்தில் அமைந்திருக்கும் இவ்வாலயம் சிலாவத்துறை நானாட்டான் வீதிகள் சந்திக்கும் இடத்துக்கு அருகாமையில் உள்ளது. மிகவும் பழமையான இந்த அம்மன் கோயில், சுண்ணாம்புக் கற்களினாலான ஒரு நிரந்தரக் கட்டிடத்தில் அமைந்துள்ளது. சைவ சமய மக்கள் வாழ்ந்த இப் பகுதியில் தற்சமயம் சைவ மதத்தவர் யாரும் இல்லாத படியால் எவராலும் கவனிக்கப்படாது காணப்படுகின்றது. கடைசியாக திரு. கந்தையா, அவரது மகள் கனகம்மா ஆகியவர்கள் இக் கோயிலைப் பராமரித்து வந்தனர்.

பிள்ளையார் கோவில் - மடு றோட்

மடுறோட் புகையிரத நிலையத்திலிருந்து கிட்டத்தட்ட நூறு யார் தூரத்தில் புத்த விகாரைக்கு எதிர்ப்பக்கமாக பிரதான சாலையில் இக் கோவில் அமைந்திருந்தது. தற்சமயம் இப்பகுதியில் எல்லாக் கட்டிடங்களும் அழிக்கப்பட்டு உள்ளதால் இக்கோவிலும் இருந்த இடம் தெரியாது அழிக்கப்பட்டுள்ளது.

கஜமுகன் ஆலயம் - சிறுக்கண்டல்

சிறுக்கண்டல் கிராமத்தில் ஓர் நிரந்தர கட்டிடத்தில் அமைந்துள்ள இவ்வாலயம், 1968 ஆம் ஆண்டு திரு. தம்பையா தம்பி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு தினமும் காலை நேரப் பூசையும், வெள்ளிக்கிழமை மற்றும் விசேட தினங்களில் பொங்கல், அபிசேக ஆராதனை என்பவையும் நடத்தப்பட்டு இப்பகுதி வாழ் சைவ மக்களினால் சிறப்பாக பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

கற்பகப் பிள்ளையார் கோவில் - கடற்கரைப்பிட்டி, விடத்தல் தீவு

இவ்வாலயம் விடத்தல்தீவிலுள்ள கடற்கரைப்பிட்டி என்னுமிடத்தில் ஒரு நிரந்தரக் கட்டிடத்தில் அமைந்துள்ளது. வாணிபத் தொழிலில் ஈடுபட்ட திரு. ஆறுமுகம் என்பவர் கடல் பிரயாணம் செய்து கொண்டு வரும்போது திடீரென ஏற்பட்ட புயலாலும், கடல் கொந்தளிப்பாலும் கஷ்டப்பட்டபோது விநாயகப் பெருமானைத் துதித்து அவரும் அவருடன் சென்றோரும் எதுவித கஷ்டமுமின்றிக் கரைசேர்ந்தனர். அவராலேயே இக்கோயில் 1922 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு தற்போது ஒரு வேளைப் பூசை நடைபெற்று வருகின்றது.

கற்பக விநாயகர் கோவில் - கள்ளியடி

இவ்வாலயம் கள்ளியடி கிராமத்தில் 1648 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது இவ்வாலயம் பூரணப் படுத்தப்படாத நிரந்தரக் கட்டிடத்தால் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு வேளைப் பூசை நடைபெற்று வருகின்றது. இவ்வூர் மக்களினால் நன்கு பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

முத்துமாரி அம்பாள் கோவில் - இலுப்பைக் கடவை

இலுப்பைக் கடவை, சுட்டபிட்டி என்னுமிடத்தில் 1650 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இவ்வாலயம், 1850 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயம் பூரணப்படுத்தப்படாத சீமெந்துக் கட்டிடத்தில் இப்போது உள்ளது. தற்போது தினமும் ஒரு வேளைப் பூசை நடைபெறுகின்றது.

பிள்ளையார் கோவில் - பிள்ளையார் பிட்டி, அடம்பன்

அடம்பன் கிராமத்திலுள்ள பிள்ளையார் பிட்டி என்னுமிடத்தில் அமைந்துள்ள இவ்வாலயத்தில் வெள்ளி, செவ்வாய் ஆகிய கிழமைகளில் பூசை நடைபெற்று வருகின்றது. சீமெந்தால் கட்டப்பட்ட சிறிய கட்டத்தில் அமைந்துள்ளது.

பிள்ளையார் கோவில் - பெரியமடு

பெரியமடு கிழக்கில் ஒரு மரத்தின் கீழ் அமைந்துள்ள இவ்வாலயம் 1960 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது ஒரு வேளைப் பூசை நடைபெற்று வருகின்றது.

சித்தி விநாயகர் ஆலயம் - பெரியமடு

பெரியமடு மேற்கில் ஒரு நிரந்தரக் கட்டிடத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் 1960ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு தினமும் இரண்டு வேளைப் பூசை நடைபெறுகின்றது.

அம்மன் கோவில் - காயாநகர் பெரியமடு

காயாநகர் என்னுமிடத்தில் தற்காலிக கொட்டகை ஒன்றில் அமைந்துள்ள இவ்வாலயம் 1995 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு ஒரு காலப் பூசை நடைபெறுகின்றது.

அம்மன் கோவில் - காயாநகர்

காயாநகர் பெரியமடு என்னுமிடத்தில் ஓர் தற்காலிகக் கொட்டகையில் அமைந்துள்ள இவ்வாலயம் 1977ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வூர் மக்களினால் இரண்டு வேளைப் பூசை நடத்தி சிறப்பாக வழிபடப்பட்டு வருகின்றது.

மாவடி வைரவர் ஆலயம் - பள்ளமடு

பள்ளமடுவில் ஒரு மரத்தின் கீழ் அமைந்துள்ள இவ்வாலயம் 1920 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கே விசேட தினங்களில் பூசை நடைபெறும்.

ஐயனார் கோவில் - வெள்ளாங்குளம் (வடக்கு)

வெள்ளாக்குளம் பகுதியில் ஒரு நிரந்தரக் கட்டிடத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் 1942 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு விசேட தினங்களில் மட்டும் பூசை நடைபெறுகின்றது.

நாச்சிமார் (அம்மன்) கோவில் - வெள்ளாங்குளம்

வெள்ளாங்குளத்தில் உள்ள அடம்பன் குளத்தின் குளக்கட்டு அருகில் கொட்டகை எதுவுமின்றி அமைந்துள்ள இவ்வாலயத்தில் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் பூசை நடைபெறுகின்றது.

**சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் - வெள்ளாங்குளம்**

வெள்ளாங்குளம் நாச்சிமார் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள இவ்வாலயத்தின் கட்டிடம் இடிந்து சேதமுற்று பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. இவ்வூர் மக்களினால் ஒரு காலப் பூசை நடத்தப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றது.

**ஐயனார் கோவில் - வெள்ளாங்குளம் (தெற்கு)**

மன்னார் – சங்குப்பிட்டி பிரதான வீதியின் அருகாமையில் சுண்ணாம்புக் கட்டிடத்தால் அமைந்துள்ள இவ்வாலயத்தில் அவ்வூர் மக்களினால் ஒரு காலப் பூசை நடத்தப்பட்டு வழிபடப்படுகின்றது.

**வைரவர் கோவில் - வெள்ளாங்குளம் (தெற்கு)**

வெள்ளாங்குளம் தெற்கு வட்டாரத்தில் கொட்டகை எதுவுமின்றி அமைந்துள்ள இவ்வாலயத்தில் விசேட தினங்களில் மட்டும் ஒரு காலப் பூசை நடைபெறுகின்றது.

**முனியப்பர் கோவில் - வெள்ளாங்குளம் (வடக்கு)**

வெள்ளாங்குளம் வடக்கு வட்டாரத்தில் கொட்டகை எதுவுமின்றி அமைந்துள்ள இவ்வாலயம் 1938 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு விசேட தினங்களில் மட்டும் ஒரு வேளைப் பூசை நடைபெறுகின்றது.

**முருகன் கோவில் - வெள்ளாங்குளம் வடக்கு**

வெள்ளாங்குளம் வடக்கு வட்டாரத்தில், வெள்ளாங்குளம் – மாங்குளம் வீதிக்கு அருகாமையில் ஓர் நிரந்தரக் கட்டிடத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் 1987 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு வெள்ளிக்கிழமைகளில் மட்டும் ஒரு காலப் பூசை நடைபெறுகின்றது.

**வைரவர் கோவில் - வெள்ளாங்குளம் வடக்கு**

வெள்ளாங்குளம் வடக்கு வட்டாரத்தில் கொட்டகை எதுவுமின்றி அமைந்துள்ள இவ்வாலயத்தில் விசேட தினங்களில் மட்டும் ஒரு காலப் பூசை நடைபெறுகின்றது.

**பிள்ளையார் கோவில் - மூன்றாம்பிட்டி**

மிகவும் பழமைவாய்ந்த இவ்வாலயம் மூன்றாம்பிட்டி என்னுமிடத்தில் ஓர் நிரந்தரக் கட்டிடத்தில் அமைந்துள்ளது. இங்கு தினமும் பூசை நடைபெறுகின்றது. இவ்வூர் மக்களினால் இவ்வாலயம் நன்கு பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

**முருகன் கோவில் - பாலியாறு**

பாலியாறு பகுதியில் சீமெந்தினால் கட்டப்பட்டு ஓலையினால் வேயப்பட்டுள்ள கட்டிடத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் மிகவும் பழமைவாய்ந்ததாகும். இங்கு ஒவ்வொரு நாளும் பூசை நடைபெறுகின்றது.

**கற்பகப் பிள்ளையார் ஆலயம் - கோவில்குளம்**

கோவில்குளம் கிராமத்தில் அமைந்துள்ள மிகவும் பழமைவாய்ந்த இவ்வாலயம் 1965 ஆம் ஆண்டு புனர்ஸ்தாபனம் செய்யப்பட்டு கும்பாபிசேகம் நடைபெற்றது. சீமெந்தாலான இவ்வாலயக் கட்டிடத்தின் வெளிமண்டபப் பகுதி திருத்தப்பட வேண்டியுள்ளது. இங்கு தினமும் பூசை நடைபெறுகின்றது.

**நொங்குவெட்டி ஐயனார் கோவில் - கோவில்குளம்**

கோவில்குளம் கிராமத்தில் அமைந்துள்ள மிகவும் பழமைவாய்ந்த இவ்வாலயம் முன்பு ஓர் தற்காலிகக் கொட்டகையில் அமைந்திருந்தது. அப்போது பொங்கல் பூசையும் நேர்த்திப் பூசைகளும் நடைபெற்று வந்தன. ஆலய பரிபாலன சபை அமைக்கப்பட்ட பின் இவ்வாலயம் சீமெந்தாலான ஓர் நிரந்தரக் கட்டித்தில் அமைக்கப்பட்டு தற்போது நித்திய பூசையும், விசேட தினங்களில் விசேட பூசையும், நேர்த்திப் பூசைகளும் நடைபெற்று வருகின்றது. அத்துடன் ஆலயக் கட்டிடத்தில் சில திருத்தங்களும் காணப்படுகின்றது.

**சித்தி விநாயகர் ஆலயம் - புதுக்குளம்**

புதுக்குளம் என்னுமிடத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் தனியொருவரால் கட்டப்பட்டு 1962 ஆம் ஆண்டு கும்பாபிசேகம் செய்யப்பட்டது. தற்போது ஆலய பரிபாலன சபையின் நிர்வாகத்தின் கீழ் ஆலய புனர்நிர்மாண வேலைகள் நடைபெற்று புதுப் பொலிவுடன் விளங்கும் இவ்வாலயத்தில் தினமும் பூசை நடைபெற்று வருகின்றது.

**வைரவர் பிள்ளையார் ஆலயம் - சவிரிக்குளம்**

சவிரிக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள மிகப் பழமை வாய்ந்த தனியொருவரால் ஸ்தாபிக்கப்பட்டு பரம்பரை பரம்பரையாக ஆதரிக்கப்பட்டு வருகின்றது. முன்னர் தற்காலிகக் கொட்டகையில் அமைந்திருந்த இவ்வாலயம், தற்போது இதனை ஆதரித்து வரும் திரு. சீ. சிவனேசன் என்பவரின் அயராத முயற்சியினாலும் வேறு சிலரின் உதவியாலும் ஒரு சிறு கட்டிடமாகக் கட்டப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றது. இங்கு வெள்ளிக் கிழமைகளிலும் விசேட தினங்களிலும் பூசை நடைபெறுகின்றது.

**காளி கோவில் - ஆத்திமோட்டை**

ஆத்திமோட்டை என்னுமிடத்தில் ஓர் மரத்தின் கீழ் கொட்டகை எதுவுமின்றி அமைந்துள்ள இவ்வாலயம் 1930 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. மாதத்தில் ஒரு முறை பூசை நடைபெறுகின்றது. ஆலய பரிபாலன சபையால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

**கற்பக விநாயகர் ஆலயம் - ஆத்திமோட்டை**

ஆத்திமோட்டை கிராமத்தில் ஓர் நிரந்தரக் கட்டிடத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் 1935 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு தினமும் பூசை நடைபெறுகின்றது. ஆலய பரிபாலன சபையால் பரிபாலிக்கப்படுகின்றது.

**ஐயனார் ஆலயம் - ஆத்திமோட்டை**

ஆத்திமோட்டை என்னுமிடத்தில் சீமெந்தால் கட்டப்பட்டு தகரத்தாலான கூரையையுடைய கட்டிடத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் 1935 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. ஆலய பரிபாலன சபையால் பரிபாலிக்கப்பட்டுவரும் இவ்வாலயத்தில் மாதத்தில் ஒரு தடவை பூசை நடைபெறுகின்றது.

### பிள்ளையார் ஆலயம் - கூராய்

கூராய் கிராமத்தில் தற்காலிக கொட்டகையில் அமைந்துள்ள இவ்வாலயம் 1971 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறுகின்றது.

### பிள்ளையார் ஆலயம் - சீதுவிநாயகர் குளம்

சீதுவிநாயகர் குளம் என்னுமிடத்தில் ஓர் தற்காலிக கொட்டகையில் அமைந்துள்ள இவ்வாலயம் 1960 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு வாரத்தில் இரண்டு தடவை பூசை நடைபெறுகின்றது.

### சித்தி விநாயகர் ஆலயம் - இலுப்பைக் கடவை

மிகவும் பழமை வாய்ந்த இவ்வாலயம் இலுப்பைக்கடவை கிராமத்தில் ஓர் தற்காலிகக் கொட்டகையில் அமைந்துள்ளது. இங்கு வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறுகின்றது.

### அம்மன் கோவில் - இலுப்பைக்கடவை

இலுப்பைக்கடவையில் ஓர் தற்காலிகக் கொட்டகையில் அமைந்துள்ள இவ்வாலயம் 1995 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறுகின்றது.

### முனீஸ்வரர் ஆலயம் - இலுப்பைக்கடவை

மிகவும் பழமை வாய்ந்த இவ்வாலயம் இலுப்பைக்கடவை என்னுமிடத்தில் ஓர் தற்காலிகக் கொட்டகையில் அமைந்துள்ளது. இங்கு செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பூசை நடை பெறுகின்றது.

### பாலமுருகன் கோவில் - இலுப்பைக்கடவை

இலுப்பைக்கடவை கிராமத்தில் ஓர் தற்காலிகக் கொட்டகையில் அமைந்துள்ள இவ்வாலயம் 1985 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறுகின்றது.

### சித்தி விநாயகர் கோயில் - வட்டக்கண்டல்

வட்டக்கண்டல் என்னுமிடத்தில் அமைந்துள்ள பழமை வாய்ந்த இவ்வாலயம் 1966ஆம் ஆண்டளவில் ஓர் நிரந்தரக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டு, தற்போது ஆலய பரிபாலன சபையினால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இங்கு இரண்டு காலப் பூசை நடைபெற்று வருகின்றது.

### விநாயகப் பிள்ளையார் கோவில் - இத்திக்கண்டல்

இத்திக்கண்டல் என்னும் இடத்தில் ஓர் பூரணப் படுத்தப்படாத நிரந்தரக் கட்டிடத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் 1980 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. ஆலய பரிபாலன சபையால் பரிபாலிக்கப்பட்டு வரும் இவ்வாலயத்தில் வருடத்தில் ஒரு முறை உற்சவம் நடைபெறுகின்றது.

மன்னார் மாவட்டத்திலுள்ள சைவ ஆலயங்களை நோக்கு மிடத்து, இங்கு சைவமக்கள் எல்லாப் பகுதிகளிலும் பரந்து வாழ்கின்றதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. தேசிய மட்டத்தில் புகழ்பெற்ற சிவத்தலமாகிய திருக்கேதீஸ்வரமும் மற்றும் பிரசித்தி பெற்ற முருகன், விநாயகர் ஆலயங்களைத் தவிர அம்மன் கோவில்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. முல்லை, மருதம், நெய்தல் நிலங்களை உள்ளடக்கிய இப்பிரதேசத்தில் பெரும்பான்மையாக வாழ்பவர்கள் விவசாயிகள். விவசாயத்துக்கும் கல்விக்குமுரிய தெய்மாகக் கருதப்படும் விநாயகர் ஆலயங்கள் ஆகம முறைப்படி அமைந்த கோவில்களிலும், சிறிய கொட்டில்கள், குளக்கட்டுகள் மற்றும் மரநிழலிலும் விநாயகர் வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றதை நாம் காண்கின்றோம்.

கந்தபுரான கலாசாரமாகக் கருதப்படும் முருக வழிபாடு இங்கு குறைவாகக் காணப்பட்டாலும் பிரசித்திபெற்ற முருகன் கோவில்கள் பேசாலை, முருங்கன், இலுப்பைக்கடவை, வெள்ளாங்குளம், மன்னார் பட்டினம் போன்ற இடங்களில் இருக்கின்றன.

வெப்பு நோய்களைத் தடுப்பதும், யாத்திரிகர்களுக்கு வழிகாட்டியுமாக இருந்து இடர்களைத் தீர்க்கும் தெய்வமாக அம்மன் வழிபாட்டு முறை இம்மாவட்டத்தில் ஆழமாகப் பதிந்திருக்கின்றது. இங்கு முத்துமாரி அம்மன், கண்ணகி அம்மன், பத்தினித் தெய்வம் போன்ற பல ரூபங்களில் அம்மன் வழிபாடு நடைபெறுவதை நாம் காண்கின்றோம்.

இவற்றைவிட ஐயனார், நாகதம்பிரான் ஆலயங்களும் இந்திய அமைதிப் படையினரால் அமைக்கப்பட்ட அனுமான் கோவில்களும் இம்மாவட்டத்தில் உள்ளன.

மன்னார் மாவட்ட சைவக் கோவில்களை நாம் பார்க்குமிடத்து ஆகம முறையில் அமைக்கப்பட்ட பெருந் தெய்வங்களைவிட சிறு தெய்வ வழிபாடு மக்கள் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடையதாகவும், அவற்றில் மக்கள் நம்பிக்கையுடையவர்களாகவும் தெரிகின்றது. முக்கியமாக விவசாயம் செய்யும் மக்கள் நெல் அறுவடையின் பின்னர் தத்தமது பகுதியிலுள்ள சிறு கோவில்களில் பொங்கல் பொங்கி, மடைபோட்டு வணங்குகின்றார்கள். வழிபாட்டு முறைகள், அவர்களது வாழ்க்கை முறைகள், இலட்சியங்கள், தேவைகள், மனப்பாங்குகளுக்கு ஏற்புடையதாக அமைந்துள்ளதையும் நாம் இங்கு கவனிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆதியும் அந்தமும் இல்லாத சைவ சமயமானது எல்லாவிதப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து என்றும் அழியாது சகல மட்டத்தினர்க்கும் பயன்தரக் கூடிய வகையில் கலை, கலாசார, பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாத்து எமது நாட்டில் மிகவும் தொன்மையுடன் இருப்பதையிட்டு நாம் அனைவரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்".

**உசாத்துணை நூல்கள்:**

திருக்கேதீச்சர ஆலயமும் மாந்தைத் துறைமுகமும்
சேர் கந்தையா வைத்தியநாதன். பக்கம் 160, 161.

*குறிப்பு:*

*மன்னார் மாவட்டத்திலுள்ள சைவ ஆலயங்கள் தொடர்பாக இயன்றளவு விபரங்கள் தொகுக்கப் பட்டிருந்தாலும், ஏதும் ஆலய விபரங்கள் தவற விடப்பட்டிருக்குமாயின் அன்பர்கள் எமக்கு அறியத்தரும் பட்சத்தில் எதிர்காலத்தில் பூரணப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்.*

# நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும்

| | | |
|---|---|---|
| கம்பராமாயணம் | – | கம்பர் |
| மகாபாரதம் | – | வேதவியாசர் |
| ஆசிய ஜோதி | – | தேசிக விநாயகம்பிள்ளை |
| பெரிய புராணம் | – | சேக்கிழார் |
| சீறாப்புராணம் | – | உமறுப்புலவர் |
| கந்தபுராணம் | – | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| அரிச்சந்திர புராணம் | – | வீரை ஆசுகவிராயர் |
| நைடதம் | – | அதி வீரராம பாண்டியன் |
| முகியதீன் புராணம் | – | பதுறுதீன் புலவர் |
| இராமாயணம் | – | வால்மீகீ, வசிட்டர், போதாயனர் – துளசிதாசர் |
| நளவெண்பா | – | புகழேந்திப் புலவர் |
| சிலப்பதிகாரம் | – | இளங்கோவடிகள் |
| மணிமேகலை | – | மதுரைக் கூலவாணிகன், சீழ்த்தலைச் சாத்தனார் |
| யாழ்நூல் | – | விபுலானந்த அடிகள் |
| கீதாஞ்சலி | – | இரவீந்திரநாத் தாகூர் |
| சூழாமணி | – | தோழாமொழித் தேவர் |
| மேகதூதம் | – | கவி காளிதாசர் |
| குண்டல கேசி | – | நாதகுத்தனார் |
| சீவக சிந்தாமணி | – | திருத்தக்கதேவர் |
| சாகுந்தலம் | – | கவிகாளிதாசர் |
| திருக்குறள் | – | திருவள்ளுவர் |
| ஆசாரக் கோவை | – | பெருவாயின் முள்ளியார், - சங்கம் மருவிய காலநூல் |
| ஆசாரக் கோவை | – | அப்துல் மஜித் புலவர் |

ஆக்கம் : த. பிரதீபா
*தரம் 13 (கலைப் பிரிவு)*

கற் குங்கால் கசடறக் கற்றல் வேண்டும். ''கசடறக் கற்றலாவது : விபரீத ஐயங்களை நீக்கி மெய்ப்பொருளை நல்லோர் பலருடனும் பலகாலும் பயிலல் என்பர் பரிமேலழகர். விபரீதமாவது : ஒன்றனை மற்றொன்றாக மாறுபடக்கொள்ளல்; கயிற்றை இருளிற் பாம்பெனக் கொள்வதுபோல, ஐயமாவது : ஒன்றனை அதுவோ மற்றொன்றோ எனத் துணியமாட்டாது நிற்றல். இப்பியைக் கண்டு இது இப்பியோ வெள்ளியோ எனத் துணியமாட்டாது நிற்றல் போல. இவ் விபரீத ஐயங்களை நீங்கினாற்றான் மெய்பொருள் தோன்றும். அம் மெய்ப்பொருளையும் நல்லோர் பலருடனும் சேர்ந்து பழகுதல் வேண்டும். அதுவும் பலகாலும் பழகுதல் வேண்டும். ''வைத்ததொரு கல்வி மனப் பழக்கம் என்பது இங்கு நினைக்கத்தக்கது.

- இலக்கண வித்தகர் இ. நமசிவாயம் -

# ஈழத்தமிழரின் நாட்டியத் தனித்துவங்கள் நோக்கிய ஒரு தேடல்

- திரு. து. ராமதாஸ் -

ஈழத் தமிழர் தமக்கென சில கலைகளையும் ஆடல்சார் அழகியற் கலைகளையும் பேணி வருகின்றனர். சமூக மானுட வியல் அணுகு முறைகளையும், நாட்டார் வழக்கியற் கையளிப்பினையும் பின்புலமாகக் கொண்டு ஈழத் தமிழரின் நடனத் தனித்துவங்களை நோக்கிய ஆய்வை முன்னெடுக்க வேண்டியுள்ளது. பரதரின் அரிய இப்பரதக் கலை தனக்கென அடிப்படைக் கட்டமைப்பு ஒன்றினைக் கொண்டுள்ளது. மோடிமைப்பட்ட உலகில் நவீனத்துவம் வளர வளர நவீனத்துவ சிந்தனை யோட்டத்தின் அடியாக மேற்கிளம்பும் சில அழகியல் முனைப்புச் சிந்தனைகள் பரதத்தின் அடிப்படை அம்சங்களை மாற்றியுள்ளது. மாற்றுவதில் தவறில்லை. எனினும் இவ் வசைவியக்கத்தின் அடிப்படைப் பண்புகள் மாறக் கூடாது என்பதே அதிகமான நாட்டியாசான்களின் கருத்தாகும்.

ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இத்தனித்துவம் வலிந்து பேணப்படுகின்றது. ஈழத்தில் தமிழர் வாழும் பல பகுதிகளில் கூத்து வண்ணார், கூத்துச் சுப்பர், கூத்து மாதவர், கூத்துப் பெருமாள், கூத்துக் கந்தர், கூத்து நாகர், கூத்து வேலர் என்றவாறு மிகவும் பரந்த அளவிலான பெயர் வழக்குகள் நாட்டிய மரபுகளில் காணப்படுகின்றன.

மனிதனின் தொழிற்பாடுகள், விலங்குகளின் அசைவுகள், காற்று, மழை, போன்ற இயற்கைச் சலனங்கள் என்றவாறு மிகப் பரந்த எண்ணக்கரு விளக்கம் ஈழத்துப் பாரம்பரியத்திலே கூத்துக்கு வழங்கப்பட்டது. "அனைத்தும் கூத்து" என்ற தொடர் இதற்கு எடுத்துக் காட்டாக அமைந்தது. இவ்வாறான கருத்து பண்டைய கிரேக்கத்திலும் நிலவியது "உலகம் அனைத்தும் நடனம் ஆகும்"

என்று எடுத்தாளப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர் மரபிலே கூத்து என்பது ஒத்திசைவு மேவிய தனியான அசைவுகளுடன் தொடர்பு கொண்டிருக்கும் பொழுது ஆட்டம் என அழைக்கப்பட்டது. குறியீடுகளுடன் சம்மந்தப்பட்டிருக்கும் பொழுது "சாடையாட்டம்" என்று குறிப்பிடப்பட்டது. கால் அசைவுகளின்றி திண்ணையில் இருந்தவாறே சாடையாட்டத்தை நிகழ்த்திக் காட்டும் மரபு நிலவியது. இட அசைவுகள் ஏற்படாது, அதாவது புடை பெயராது இருந்து நிகழ்த்தும் ஆட்டமாகச் சாடையாட்டம் அமைந்தது.

ஈழத்தமிழரின் கூத்து மரபில் "விடுதலை" என்ற பண்பும் காணப்பட்டது. இசை ஒருவிதமான ஒத்திசைவில் நிகழ, கூத்து வேறொரு வித ஒத்திசைவில் ஆடப் பெறுவது "விடு நிலை ஆட்டம்" எனப்படும். இப்பண்பு கிரேக்க நாட்டுக் கூத்துக்களிலும் காணப்படுதல் சுட்டிக் காட்டப்படத்தக்கது.

ஈழத் தமிழரின் நடன மரபு உடற் கூறுகளின் ஆய்வு. சித்த மருத்துவம் என்பவற்றுடன் இணைந்த ஒரு கலை வடிவமாக முகிழ்ந்தெழுந்தது. தசை நார்கள், மூட்டுக்கள், நரம்பு மண்டலம் என்வற்றுடன் இணைந்த வகையில் "இசைவு" "வசைவு" என்ற இரண்டு பெரும் முனைகளுக்கு, இடைப்பட்ட வீச்சுக்களை நடனம் கொண்டிருந்தது. உடலமைவுகள் வாயிலாக இயக்கச் சமநிலையை ஏற்படுத்தும் வகையினை "இசைவு" என்றும் சமநிலையைக் குறைத்தல் "வசைவு" என்றும் குறிப்பிடப்பட்டது. சமநிலை நோக்கிய அசைவுகளும் சமநிலையைக் குறைக்கும் அசைவுகளும் மாறிமாறி இடம் பெறுதல் "வன்னம்" எனப்பட்டது. இதனையே பரத நாட்டியத்தில் பதவர்ணம் என்கின்றோம்.

நிலம், நீர், தீ, காற்று, வானம் என்ற ஐம்பூதங்களையும் பாவனை செய்யும் கூத்துக்கள் ஈழத் தமிழர் மரபிற் காணப்பட்டன. கண் வளைவாலும் உடல் அசைவுகளாலும் நீர், தீ, காற்று ஆகிய முப்பொருளையும் விளக்கும் நடனங்கள் "ஒளி எழுப்பி" என்ற வாறு கூக்குரலிடும் நடனங்களாக அமைந்தன. நடனம் பற்றிய மானுடவியல் ஆய்வுகள் ஒலி எழுப்பி நடனங்கள் உலகெங்கும் உள்ள தொல் குடியினரின் இடத்துக் காணப்படும் பொதுப் பண்பு என்பதை சுட்டிக் காட்டுக்கின்றன. பருவ காலங்களை பாவனை செய்யும் நடனங்களும் வழக்கில் இருந்தன. இவை "பாளையாட்டங்கள்" எனப்பட்டன.

விலங்குகள், பறவைகள் முதலியவற்றுடன் மனித வாழ்வு இணைந்திருந்ததினால் ஈழத் தமிழரின் நடனங்களிலே இவையும் இணைந்திருந்தன, மன

வெழிச்சங்களை வெளிப்படுத்தும் பொருட்டு விலங்குகளுக்கும் பறவைகளும் நடனம் ஆடும் என்ற நம்பிக்கை நிலவியது. இவ்வகையில் மானாட்டம், மயிலாட்டம், பாம்பாட்டம், மீன் ஆட்டம், கொம்பனாட்டம், குரங்காட்டம், குதிரையாட்டம் என்பன குறிப்பிடத்தக்கன. கிழ விலங்குகள் தொடர்பான பாவனை நடனங்கள் நகைச் சுவைத்தூண் கையாளப்படுகின்றது. இவ்வகை ஆட்டங்களில் முகமூடிகளும் எடுத்தாளப்பட்டன, குரங்காட்டமும் நகைச் சுவைகளுக்கு எடுத்தாளப்பட்டது. ஆடுபவர் யாரென்று அறியாதிருக்க முகமூடிகள் உதவின. பௌத்தர்களிடையேயும் இத்தகு பாவனை நடனங்கள் இருந்திருக்கின்றன. கஜ வண்ணம், சிங்க வண்ணம் முதலியவை மேற்படி நடனங்களின் வாயிலாகவே தோற்றம் பெற்றன என நாடகப் பேராசிரியரான சரத் சந்திரா அவர்கள் குறிப்பிடுகின்றார்.

பானை, குடம், சுளகு, கூடை, தானியங்கள் போன்ற பொருட்களை ஏந்தி ஆடும் நடனம், "பண்டக் கூத்து" எனப்பட்டது. இதைவிட கம்பு, வேல், சூலம், வாள், அம்பு முதலியவற்றினை ஏந்தி ஆடும் மரபும் ஈழத்து மக்கள் மத்தியில் நிலவி வந்துள்ளது.

மேற்படி ஒரு சிறந்த செழிமையான நடனப் பாரம்பரியம் ஒன்று ஈழத்தில் வெகு காலமாகவே நிலவி வந்துள்ளது, இவ்வாறு பரந்து அகன்ற ஒரு நடன பாரம்பரியத்தின் மீது தான் பரத நாட்டியம் என்ற "முகிழ்ப்பு நடனம்" தோற்றமெடுத்தது. ஆழ்ந்த மரபிலிருந்து முழைத்தெழுந்த வடிவமாகப் பரத நாட்டியம் விளங்குவதால் அது "முகிழ்ப்பு நடனம்" என்றும் குறிப்பிடப்பட்டது. மனித உடலே, நடனவெளிப்பாட்டுக்குரிய கருவியாதலால் சமூக உறுப்பினர் அனைவரும் பங்குபற்றக் கூடிய உற்சாகம் இக்கலையின் சிறப்புப் பரிமாணம். தமிழர்களது நடன மரபிலே ஆடல் ஆற்றுகை நான்கு பிரிவுகளாக வளர்ச்சியடைந்துள்ளது.

1. உறுப்பாடல் : அதாவது உறுப்புக்களின் அசைவுகளினால் மேற்கொள்ளப்படும் ஆற்றுகையை இது குறித்து நிற்கிறது. இம்மரபு பின்னர் பரத நாட்டியத்தில் "ஆங்ககம்" என்று சுட்டப்பட்டது.
2. சொல்லாடல் : இலக்கிய மொழிநிலை உபயோகத்தைக் கொண்ட உடல் ஆற்றுகையைச் சொல்லாடல் குறித்து நிற்கிறது. பரத நாட்டியத்தில் இது "வாசிங்கம்" எனப்பட்டது.
3. அணியாடல் : கருத்துப் புலப்பாட்டுக்குப் பொருத்தமான ஆடை, அணிகலன்கள் முதலியவற்றைச் சூடிய உடல் சார் ஆற்றுகையாக இது அமைந்தது. இது "ஆஹார்ய அபினயம்" எனப்பட்டது.
4. மெய்ப்பாடு : மன வெழுச்சிகளையும் மன வெழுச்சிக்குரிய உடலியக்கப் பண்புகளையும் காட்டும் இவ்வகை நடன ஆற்றுகை பரத நாட்டியத்தில் "ஸாத்வீகம்" எனப்பட்டது.

உறுப்புக்களில் தலைக்கு முதன்மையிடம் வழங்கப் பெற்றது. நிமிர் நிலை, சரி நிலை, கவிழ் நிலை, சுற்று நிலை, அசை நிலை என்றவாறு கலையின் அசைவுகள் வாயிலாக நாட்டியம் ஆடப்பட்டது. கலையை முதன்மைப்படுத்தும் ஆட்டம் "சூடாமணி" என அழைப்பட்டது. எமது நாட்டிய மரபில் இவ்வாறு தலையோடு தொடர்புபட்டதாக பல சொற்கள் நாட்டார் வழக்கில் பயன்படுத்தப்பட்டமைக்குச் சான்றுகள் உண்டு. ஸ்ரீ நந்திகேச்வரர் எழுப்பியிருக்கும் அபிநய தர்ப்பணத்திலும், தத்திலகோ ஹலீயம், நாகார்ச்ஜுரீயம் முதலிய பரத சாஸ்திரங்களிலும் பேசப்பட்டிருக்கும் சிரோ பேதங்களையே நம்மவரும் கையாண்டிருக்கின்றனர். இவர்கள் சிரோ பேதங்களை ஒன்பது வகையாகக் கொள்கின்றனர்:

| | | |
|---|---|---|
| ஸமம் | – | அசைவற்ற நிலை |
| உத்வாஹிதம் | – | மேலே நிமிர்த்திய நிலை |
| அதோமுகம் | – | குனிந்த நிலை |
| துதம் | – | வலமும் இடமும் திரும்புதல் |
| கம்பிதம் | – | மேலும் கீழும் அசைத்தல் |
| பராவிருத்தம் | – | அலட்சிய நிலை |
| உட்சிப்தம் | – | ஒரு பக்கம் உயர்த்தும் நிலை |
| பரிவாஹிதம் | – | மென்மையாக இரு பக்கமும் அசைத்தல். |

உறுப்புக்கள் நிலைப்பட்ட ஆற்றுகையில் "கைய சைவினை" சிறப்பிடம் பெறும். தனித்து ஒரு கையினால் மட்டும் ஆற்றுகை செய்தல் தனிக்கை, தவக்கை, ஒற்றைமடி என்று குறிப்பிடப்பட்டது. இரு கைகளையும் இணைத்த தொடர்பு முறைக் கோர்வை, சேர்மடி, பிடிகை என்றவாறு அழைக்கப்பட்டது. சென்நெறி மரபான பரத நாட்டிய மரபில் இணையாது நிற்கும் கை "அஸம்யுத ஹஸ்த்தம்" எனவும் சேர்க்கப்பட்டகை "ஸம்யுத ஹஸ்தம்" எனவும் குறிப்பிடப்படும்.

உழைப்பிலும் உற்பத்திச் செயன் முறைகளிலும் கைகள் முக்கியத்துவம் பெற்றன. "கையே தலை" என்ற தொடரும் இதன் முக்கியத்துதை உணர்த்தும், இந்தக் கைவினைவின் வளர்ச்சியை சாதிப் பாகுபாட்டுடன் இணைக்கின்ற ஒரு மரபும் ஈழத்தில் நிலவியது. இதனையே செந்நெறி மரபில் "ஜாதி ஹிஸ்தீதங்கள்" என்று குறிப்பிடப்படுன்றன. இரண்டு கைகளாலும் சிகர ஹஸ்தம் பிடித்தலும் வலது கட்டைக்கைவிரல்

பூணூலைக் குறித்துக் காட்டுதலும் பிராமணர்களைக் குறித்துக் காட்டுவதற்குரிய சில குறியீடுகளாகும். அவ்வாறே வைசியர், ஷத்திரியர், சூத்திரர் முதலியோரைக் குறித்துக் காட்டக்கூடிய குறியீடுகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஈழத்து மரபிலே தோன்றி வளர்ந்த வடமோடி, தென்மோடி ஆகிய கூத்து வகைகளுக்கு பண்டக்கூத்தும் மல்லுக் கூத்தும் பின்புலமாக அமைந்திருக்கலாம். இவை பற்றி மேலும் ஆய்வுத் தேடலை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

ஈழத்துக் கூத்து மரபினைப் பரத நாட்டித்தோடு தொடர்புபடுத்தி நோக்கினால் இரண்டுக்குமிடையில் ஒற்றுமைகள் இருப்பது புலனாகும். நூற்றி ஐம்பது வருடங்களுக்கு முன் தஞ்சைப் பெரிய கோயில் ஆஸ்தான நட்டுவனார்களான சின்னையா, பொன்னையா, வடிவேலு சகோதரர்களால் வடிவமைக்கப்பட்ட பரத நாட்டியக் கல்லூரி அமைப்பினை நாம் நாட்டுக் கூத்துடன் இணைத்துப் பார்க்கலாம். அடிப்படையில் சில பண்புகள் ஒன்றிப்போவதை ஈண்டு காணக்கூடியதாக இருக்கின்றது அலாரிப்பு பரதத்தில் முதலிடம் வகிக்கின்றது. இதனைக் கூத்தில் வரும் பாத்திரங்களின் வரவினை ஒப்பிடலாம். கூத்தில் பிடிக்கப்படும் திரையின் பின்னால் இருந்து தன் முகத்தை மாத்திரம் சபையோருக்குக் காட்டி வரவு விருத்தம் பாடி, முகத்தைப் பக்கவாட்டுக்கு அசைப்பதை நாம் அட்டமியுடன் தொடர்புபடுத்தலாம். கூத்தில், பாத்திரங்களின் தலையசைப்பு அலாரிப்பில் அட்டமி போன்றதே. கூத்தில் வரும் பாத்திரத்தின் வரவு தாளக் கட்டினையும் ஆட்ட முறையினையும் நாம் ஜதீஸ் வரத்துடன் ஒப்பிடலாம். வரவுத் தாளக் கட்டுக்களில் சொற்களும் ஜதிகளும் ஒன்றி வருகின்றன. ஜதீஸ்வரத்தில் தீர்மானங்களும் (ஜதி) ஸ்வரங்களும் ஒன்றி வருகின்றன. ஜதீஸ்வரம் போலக் கூத்திலும் சொற்களும் ஜதிகளும் இணைவது இதற்குப் புதுப் பொலிவு தருகின்றன. அடுத்து ஸப்தம், வர்ணம், என்ற இரண்டிலும் அபினயமும், ஜதிகளும், பாடல்களும் இடம் பெறுகின்றன. கூத்தின் வரவுத் தருவிலும் ஜதிகளும் பாடல்களுமே இடம் பெறுகின்றன. மார்க்க அமைப்பில் அடுத்து பதம், கீர்த்தனை என்பன இடம் பெறுகின்றன. கூத்தில் வரும் பாத்திரங்களில் தர்க்கத்தரு, தனி மொழிகள் என்பன பதம் கீர்த்தனம் என்பவற்றை ஒத்தனவே. கூத்தில் கர்க்கத்தருவும், தனி மொழிகளும் இடம் பெறுகின்றன. அத்துடன் பரதத்தில் வரும் கீர்த்தனை போல பாடல் அமிசங்கள் நிறைந்து ஜதிகள் குறைந்து காணப்படுகின்றது. ஆனால் அடிப்படையான ஆடல்களும் தாளம் தீர்த்தலும் பரதத்தில் வரும் பதம், கீர்த்தனை போலவே அமைந்திருக்கும். பதம், கீர்த்தனையில் நாடக அமிசங்கள் நிறைய உள்ளன. தர்க்கத்தரு, தனி மொழிகளில்தான் நாடகத்தின் உயிர் நாடி அமைந்துள்ளது. அவற்றால்தான் நாடகம் வளர்ந்து செல்கின்றது. கூத்தின் இறுதியில் பாத்திரம் மேடையை விட்டுச் செல்லும்போது ஆடப்படும் காலமேற்றுதல் என அழைக்கப்படும் ஆட்டம் தில்லானாவை ஒத்திருக்கின்றது. பரத நாட்டியத்தில் இவ்வாட்டக் கோலம் சுத்த நிருத்தமாகக் காணப்படுகின்றது. கூத்திலும் இது சுத்த நிருத்தமாகவே காணப்டுகின்றது. கச்சேரியின் இறுதியில் ஸ்லோகம், மங்களம் பாடுதல் இடம் பெறும். இதனைக் கூத்தில் வாழிபாடுதலும், தொட்டுக் கும்பிடுதலும் உணர்த்தும் மேற் போந்த அடி நிலை ஒப்புமையைக் கீழ் வரும் அட்டவணை காட்டுகின்றது:

| கூத்து | பரதம் |
|---|---|
| 1. வரவு விருத்தம் – திரைச் சேலையின் பின் முகத்தைப் பல பக்கங்களுக்கும் திருப்புதல் | அலாரிப்பு |
| 2. வரவுத் தாளக் கட்டு | ஜதீஸ்வரம் |
| 3. ஆட்டத் தருவும் தாளங்களும் | ஸப்தம், வர்ணம் |
| 4. தர்க்கத்தரு | பதம் |
| 5. காலமேற்றுதல் | தில்லானா |
| 6. வாழி பாடுதல் | ஸ்லோகம் |
| 7. தொட்டுக் கும்பிடல் | மங்களம் |

மேற்படி ஒப்புமையை அடிப்படையாகக் கொண்டு இரண்டும் ஒரு தளத்தில் இருந்து முகிழ்த்தவை என்று கூறவில்லை. ஆனால் நம் தமிழர் வாழிடங்களில் செந்நெறி மயப்பட்ட பரத நாட்டியத்தின் தொல் சீர் வடிவமாக ஏதோ ஒரு வகையில் கூத்து நிலவியிருக்கின்றது. ஆனால் பரத நாட்டியம் முற்றிலும் சமஸ்கிருத மயப்பட்டதே. எது எப்படியிருப்பினும் ஈழத்து நாட்டியத் தனித்துவங்கள் செழிமையானவையே என்று கூறிக் கொள்வதில் பெருமையடைகிறேன்.

# புதிய கல்விச் சீர்திருத்தம்

ம. லியோன் றெவல் - *உதவிக் கல்விப் பணிப்பாளர்*

மாற்றங்கள் எல்லாத் துறைகளிலும் ஏற்படுகின்ற ஒன்றாகும். கல்வித் துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் பல்வேறு கால கட்டங்களில் அவ்வப்போது ஆட்சியில் இருந்த அரசுகள் கல்விக் களத்திற் பல்வேறு சீர்திருத்தங்களை முன்வைத்தன. 1943, 1950, 1962, 1964, 1966, 1972, 1978, 1986 என்னும் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் முக்கியமான வையாகக் காணப்பட்டன. இன்று கல்வித் துறையானது மிகத் தீவிரமான மாற்றத்தை வேண்டி நிற்பதற்குப் பல்வேறு அழுத்தங்கள் காரணமாயின. நாட்டில் அடிக்கடி ஏற்படும் சமூக அமைதியின்மை, இளைஞர் அமைதியின்மை, வேலைவாய்ப்பின்மை, எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய கொள்ளாற்றல் மக்களிடம் இன்மை, தொழிலுலகிற்குப் பொருத்தமில்லாத கல்வித் துறையின் வெளியீடு, மாற்றமுறும் பொருளாதாரத் துறைக்கு ஏற்ற தொழிற்படையின்மை, தகவல் தொழில்நுட்பம், உயர் தொழில்நுட்பம் ஆகிய மாபெரும் புரட்சியுடன் வந்து கொண்டிருக்கும் 21ம் நூற்றாண்டினை எதிர்கொள்ள வேண்டியதன் தேவை ஆகியன முனைப்பான காரணங்களாயின. நடைமுறையில் இருக்கின்ற கல்வி முறை பாட விடயங்களை மனனம் செய்து மரபு முறைப் பரீட்சை வினாக்களுக்கு விடையளிக்கும் ஒரு பொறிமுறைச் செயற்பாட்டிற்கு மாணவர்களை பழக்குவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மாணவர்களிடம் காணப்படும் ஆற்றலை இனங்கண்டு அதனை வளர்த்து, நாட்டின் சமூக பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்றவகையில் அறிவினையும் திறனையும் பிரயோகிக்கும் வகையில் மாணவர்களை உருவாக்க உதவவில்லை.

இவ்வாறான பகைப்புலம் கல்வித் துறை மறுசீரமைக்கப்படவேண்டும் என்பதனை வலியுறுத்தியது. இதன் பேறாகத் தேசிய கல்வி ஆணைக்குழு கல்வியில் மிகப்பெரிய அளவிலான சீர்திருத்தங்களை முன்வைத்தது. சீர்திருத்தங்களை இனங்கண்டு முன்மொழிவதற்கு முன் தேசிய கல்வி ஆணைக்குழு பல்வேறுபட்ட சமூக அங்கத்தவர்களைப் பேட்டி கண்டமை, கருத்துக்களை செவிமடுத்தமை, கல்வித் துறையில் செய்யப்பட்ட ஆய்வு முடிவுகளை நுணுக்கிக் கற்றமை, கல்வி விற்பன்னர்களின் ஆலோசனைகளைப் பெற்றமை, அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரோடு கலந்துரையாடல்களை நடத்தியமை ஆகிய பல்வேறு செயற்பாடுகளைப் பல்வேறு பரிமாணங்களில் செய்ததன் மூலம் பல்வேறு சீர்திருத்தங்கள் முன் மொழியப்பட்டன. இந்த முன் மொழிவுகள் பல்வேறு செயற்திட்டங்களாக, பல்வேறு மட்டங்களில் பல கட்டங்களாக 1998ம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவ்வமுலாக்கச் செயற்பாடுகள் 2003 வரை தொடரும். இச்சீர்திருத்தங்களை கீழ்வரும் வகையில் சுருக்கமாக விளக்கலாம்:

1. 2001ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் கல்வி

5தொடக்கம் 14வரையுள்ள அனைவருக்கும் கல்வி கட்டாயம் ஆக்கப்படுகின்றது. இவ்வயதெல்லைக்குள் உள்ள சிறார்களைப் பாடசாலைக்குள் வரவழைத்துக் கொள்வதற்கான பிரமாணங்கள் விதிக்கப்படவுள்ளன. இதற்குத் தேவையான வரைவுச் சட்ட மூலம் தயாரிக்கப்பட்டு விட்டது. இவர்களைப் பாடசாலைகளுக்குள் கவருவதற்கு ஊக்குவிப்புக்களும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இச் சிறார்களின் பெற்றோர்களும் ஊக்குவிக்கப்பட இருக்கின்றனர்.

சாதாரண பாடசாலைகளுக்கு வரமுடியாத மாணவர்களுக்குச் செயற்பாட்டுப் பாடசாலைகளும் திறந்த பாடசாலைகளும் அமைக்கப்படும். வயதானவர்களின் கல்வி முறைசாராக் கல்விச் செயற்திட்டங்கள் மூலம் பலப்படுத்தப்படும்.

2. ஆரம்பக் கல்வி

தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையுள்ள மாணவர்களின் கல்வியில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இம்மாற்றங்கள் தர ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் அமையும். இங்கு கற்றல், கற்பித்தல் முறைகள் மாற்றப்படுகின்றன. மாணவர்களை மையப்படுத்திய கற்றல் முறைக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. கற்றல் முறையானது மேற்பார்வையுடனான விளையாட்டு, செயல் சார்ந்த கற்றல் முறை மேசை சார்ந்த கற்றல் என அமையும். தரம் 1ல் விளைபாட்டின் ஊடாக கற்றல். செறிவாக்கப்படும். தரம் 5ஐ நோக்கிச் செல்லச் செல்ல இம்முறையின் செறிவு குறைக்கப்பட்டு செயல் சார்ந்த கற்றலும் மேசை சார்ந்த கற்றல் முறையினது செறிவு அதிகரிக்கப்படும். இதற்கு இசைவாகப் பாடத்திட்டம், பாடப் புத்தகங்கள், வேலைப் புத்தகங்கள், ஆசிரியர் கைந்நூல் முதலியன மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன. செயல்முறையை ஊக்குவிக்கத் தேவையான சாதனங்கள், பொருட்கள்,

வளங்கள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. வகுப்பறைகள் இச்செயற்பாட்டிற்கு உகந்ததாக அமையும் வண்ணம் பெருந்தொகைச் செலவில் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன. வகுப்பறைகள் இச்செயற்பாட்டிற்கு உகந்ததாக அமையும் வண்ணம் பெருந்தொகைச் செலவில் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வகுப்பறைகள் தனியறையாக அமைக்கப்படுவதுடன் கற்றலுக்குகந்த கவர்ச்சிகரமான கவின் நிலையைக் கொண்டமையும். ஆரம்பநிலை கற்பித்தலினை பயனுறுதியுள்ளதாக்குவதற்கு அசிரியர் களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வருடம் தரம் 1 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம் 2003 இல் தரம் 5 இல் நிறைவெய்தும்.

### 3. கனிஷ்ட இடைநிலைக் கல்வி

தரம் 6 தொடக்கம் தரம் 9 வரை கனிஷ்ட இடைநிலை எனக் கொள்ளப்படும். இங்கு பாடத்துறை சார்ந்த அறிவுக்கு மேலதிகமாகக் கையாளும் திறமைகளும் வளர்ச்சியுறக் கூடிய வகையில் செயன்முறைக் கற்றலுக்கு ஏற்ற வகையில் கலைத்திட்டங்கள் மறுசீரமைக்கப்படுகின்றன. விஞ்ஞானத்தையும் புதிய தொழில்நுட்பத்தையும் அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கைத் திறன்களைக் கற்பதற்கான செயற்பாட்டறைகள் உருவாக்கப்படவுள்ளன. இதன் மூலம் தொழில் நுட்பத் திறனும் நிர்மாணத் திறனும் அபிவிருத்தி செய்யப்படும். (உணவு உற்பத்தித் திறன், நிர்மாணிக்கும் திறன், தரவுகளை ஒழுங்குபடுத்தும் திறன், நடிப்பு, உடல் வேலைத் திறன், தரிசனத்திறன்) இந் நோக்கங்களுக்கு ஏற்றாற்போல ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சியும், வளங்கள், தொழில்நுட்பச் சாதனங்கள் போன்றனவும் வழங்கப்படவுள்ளன. இதனூடாக மாணவர்கள் தமது உளச்சார்பினையும், ஆற்றலினையும் இனங்கண்டு தமக்கே உரித்தான துறையைத் தெரிந்து கொள்ள முடியும்.

இங்கு கற்றல், கற்பித்தல் செயன்முறை ஆசிரியரினால் திட்டமிடப்பட்டு நடத்தப்படுவதோடு, மாணவனின் தொடர்ச்சியான முன்னேற்றம் கணிப்பீடு செய்யப்படுவதோடு, அதற்கமைய தேவையான குறைநீக்கல் நடவடிக்கைகள் வகுப்பறையிலேயே மேற்கொள்ளுதல், அடைவினை மதிப்பிடுதல் ஆகியன முக்கிய பணிகளாளாகும். எனவே இங்கு பாடசாலை மட்டத் தொடர் கணிப்பீட்டிற்கு தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் மாணவர்களின் விசேட ஆற்றல்கள் இனங் காணப்பட்டு அவைகள் மேலும் விருத்தி செய்யப்படுவதற்குச் சாத்தியங்கள் ஆராயப்படும். இத்தகைய விசேட ஆற்றல்களை க. பொ. த (சா/த), க. பொ. த (உ/த) சான்றிதழ்களில் குறிப்பிடுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

கனிஷ்ட, இடைநிலையின் இறுதியில் 9ஆம் தரத்தில் பொதுப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். ஆனால் இது பாடசாலை விடுகைச் சான்றிதழாக அமையாது. இப்பரீட்சை மாகாண மட்டத்தில் இடம் பெறும் பரீட்சையாக மாற்றமுற்று கட்டாயக் கல்வியின் இறுதியில் வழங்கப்படும் சான்றிதழுக்கு வகைசெய்யும். 9ஆம் தரத்தில் சித்தி பெறுவோர் 10ஆம் தரத்திற்கு அனுப்பப்படுவர். சித்தியைப் பெறாதோர் மீண்டும் அதே வகுப்பில் கற்க அனுமதிக்கப்படுவர்.

### சிரேஷ்ட இடைநிலைக் கல்வி

10ஆம் தரம் தொடக்கம் 11ஆம் தரம் வரை இந்நிலையில் அடங்கும். புதிய கலைத்திட்டத்திற்கு அமையக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் 8 கட்டாய பாடங்களும் 2 விருப்புக்குரிய பாடங்களுமாக எல்லாமாக மொத்தம் 10 பாடங்களுக்கு மாணவர்கள் தோற்றலாம்.

1. சமயம்
2. தாய்மொழி
3. ஆங்கிலம்
4. கணிதம்
5. அழகியற் கல்வி
6. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
7. சமூகக் கல்வியும் வரலாறும்
8. தொழில் நுட்பப்பாடம்

**தொழில் நுட்பப் பாடங்கள்:** விவசாய விஞ்ஞானம், மனைப் பொருளியல், வணிகம், தொழில் நுட்பத்திறன்கள் என்பனவாகும். விருப்புக்குரிய பாடங்களாக வரலாறு, புவியியல், அபிவிருத்திக் கல்வி, இரண்டாம் மொழி சிங்களம்/தமிழ், நவீன மொழிகள்/ தொல்லரு மொழிகள், சுகாதாரமும் உடற்கல்வியும், தொழில்நுட்பப் பாடங்களாக அமைகின்றன.

இங்கு தொழில் நுட்பப் பாடம் கட்டாயமானதாக அமைகின்றது. மாணவர்கள் தமது விருப்பப்படி விருப்புக்குரிய ஒரு பாடமாக மற்றொரு தொழில் நுட்பப் பாடத்திற்குத் தோற்றலாம். இம்மாற்றங்கள் 2001ம் ஆண்டுப் பரீட்சையில் அமுல்நடத்தப்படும். கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரண்டு பாடங்களும் கணிதம் 1, கணிதம் 2 எனவும், விஞ்ஞானம் 1, விஞ்ஞானம் 2 எனவும் வெவ்வேறு வினாத்தாள்களாக அமையும். க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்திபெற கணிதம் 1, விஞ்ஞானம் 1, ஆகிய வினாத்தாள்களுக்குத் தோற்றி சித்தி பெறுதல் போதுமானதாக அமையும். க. பொ. த. (உ/த) வகுப்பில் கணித, விஞ்ஞான துறைகளை தெரிவுசெய்ய விரும்புவோர் முறையே கணிதம் 2, விஞ்ஞானம் 2 வினாத்தாள்களுக்குத் தோற்றி உரிய சித்தியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு

ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கும் ஏற்பாடுகளும் தேவையான வளங்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருகின்றன.

க. பொ. த. உயர் தரம் (கல்லூரி மட்டக் கல்வி)

இது இரு வருடக் கல்வியாக அமையும். இங்கு கலை, வர்த்தகம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்னும் நான்கு துறைகள் அமையும். புதிதாக அமையும் தொழில் நுட்பத்துறையினூடாக விவசாயம், எந்திரவியல், உற்பத்தியியல், சேவைகள் முதலிய களங்களுக்கு வழி அமைக்கப்படும்.

பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் பயில வேண்டிய பாடங்களின் எண்ணிக்கை நான்கிலிருந்து மூன்றாகக் குறைக்கப்படுகின்றது. இதனால் மாணவர்களுக்கான சுமை குறைவடைகின்றது. பாடங்களுக்குரிய பாட வேளையின் அளவு ஒன்பதிலிருந்து பத்தாக அதிகரிக்கப்படுகிறது. சுய கற்றலுக்காகவும் பாடவேளைகள் ஒதுக்கீடு செய்யப் படுகின்றன.

பல்கலைக் கழகத்திற்கு அனுமதி கோருவதாயின் மூன்று பாடங்களுக்குத் தோற்றிக் குறைந்தது 140 புள்ளிகளைப் பெற்றிருப்பதோடு பொதுச் சாதாரணப் பரீட்சை என்னும் உளச்சார்புப் பரீட்சைக்கும் தோற்றித் தேறுதல் வேண்டும். மாணவர்கள் க. பொ. த (உ/த). பரீட்சையில் தோற்றும் பாடங்களில் பெறும்புள்ளிகளின் மொத்தத்தை அடிப்படையாகக் கொண்டே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் முறை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிந் தெடுப்பதற்காகத் தற்போது பொதுச் சாதாரண பரீட்சையைப் (உளச்சார்பு பரீட்சை) புகுத்துவதன் விளைவாக மாற்றப்படவோ பாதிக்கப்படவோ மாட்டாது. மாவட்ட அனுமதிப் பங்கை நிரப்பத் தேவைப்படும் எண்ணிக்கையை ஆக்குவதற்குப் பொதுச் சாதாரண பரீட்சையில் போதிய எண்ணிக்கையான மாணவர்கள் தகுதி பெற்றிராத மாவட்டங்கள் இருக்குமாயின், தேவையான அனுமதிப் பங்கிற்கு இடமளிப்பதற்காகப் பொதுச் சாதாரணப் பரீட்சைக்கான தகுதியாக்கும் புள்ளி குறைக்கப்படும்.

பொதுச் சாதாரண பரீட்சை அறுபது நோக்கவகைப் பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். அது ஒவ்வொன்றும் 5 மாற்று விடைகளைக் கொண்டமையும். மாணவர்களின் பொது விழிப்பு தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல், புரிந்து கொள்ளும் திறன், தொடர்பாடல் ஆற்றல் ஆகியன இவ்வினாத்தாள் மூலம் மதிப்பீடு செய்யப்படும். 2000 ஆண்டில் நடைபெறவுள்ள பரீட்சையில் இம்முறைகள் அறிமுகப்படுத்தப்படும்.

க. பொ. த. உயர் தர மாணவர்களின் மதிப்பீட்டு முறைகளிலும் மாற்றங்கள் இடம் பெறுகின்றன. செயற்திட்டங்கள், ஒப்படைகள், செய்முறைகள் ஆகியன நாளாந்த வகுப்பறை நிகழ்வாக அமையும். விவசாயம், உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல், மனைப் பொருளியல் ஆகிய பாடங்களுக்குச் செய்முறைச் செயற்பாடுகள் கட்டாயமானதாகும். ஏனைய பாடங்களுக்கு ஒப்படைகள் கட்டாயமானதாகும். ஒப்படைகள், செய்முறைகள் ஆகியவற்றிற்கான மதிபீடுகள் தொடர்ச்சியாக வகுப்பறையில் இடம் பெறுவதோடு அதனூடாகப் பெறப்படும், புள்ளிகள் ஆசிரியர் பதிவேட்டினூடாக மாணவர்கள் பதிவுப் புத்தகத்திற்கு எடுத்துச் செல்லப்படும். மாணவர்களின் அனைத்துத் திறனும் மதிப்பீடு செய்யப்பட்டு மாணவர் பதிவுப் புத்தகத்தில் பதியப்படும். கல்லூரி மட்டக் கல்வியை முடித்து வெளியேறும் மாணவனுக்கு இப்பதிவுப் புத்தகமே சட்ட பூர்வமான ஆவணமாகக் கொள்ளப்படும். ஒப்படை, செய்முறை போன்ற செயற்பாடுகளில் 80% ஐப் பூர்த்திசெய்துள்ள மாணவர்களின் விண்ணப்பப் படிவங்கள் மாத்திரமே பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்குக் கருத்தில் கொள்ளப்படும்.

ஆங்கில மொழி

தரம் 1 இலிருந்து ஆங்கிலம் கற்பிப்பதற்கான நடைமுறைகள் அமுலுக்கு வருகின்றன. அது க. பொ. த. (உ/த) வகுப்பு வரை கட்டாயப்படுத்தப்படும். 1999 ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் க. பொ. த. (உ/த) வகுப்பு மாணவர்களுக்கான ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்படவிருக்கிறது. இதற்காக 6 பாட வேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆங்கிலத்தினைக் கற்பிப்பதற்கான விசேட வசதிகளும் ஆசிரியர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றது.

பாடசாலை மறுசீரமைப்பும் மீள்வியூகமும்

கல்விச் சீர்திருத்தங்கள் வெற்றிகரமாக அமுலாக்கப்பட வேண்டுமெனின் பாடசாலைகளின் நிருவாகமும் முகாமைத்துவமும் உயர்ந்த மட்டத்தில் பேணப்படல் வேண்டும். இதற்காக ஆளணி, வளங்கள், பயிற்சிகள், மேற்பார்வை ஆகிய விடயங்களில் பல்வேறு செயற்பாடுகள் இடம் பெறவிருக்கின்றன. எல்லாப் பிரதேசப் பிரிவுகளிலும் குறைந்தது சகல வசதிகளையும் கொண்ட 1 ஏ பி தரத்திலான இரு பாடசாலைகள் ஆவது உருவாக்கப்பட்டுள்ளன. அத்தோடு பாடசாலைகள் மீள்வியூகம் செய்யப்பட்டுக் கனிஷ்ட, பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ளன. தரம் 1 தொடக்கம் தரம் 9 வரையுள்ள பாடசாலைகள் கனிஷ்ட பாடசாலைகளாகவும், 10 தொடக்கம் 13ஆம் தரம் வரையுள்ள பாடசாலைகள் சிரேஷ்ட பாடசாலைகளாகவும் மாற்றம் பெறுகின்றன. இச்

செயற்பாட்டினூடாகப் பல சிறிய பாடசாலைகள் தரமுயர்த்தப்படுகின்றன. சில பெரிய பாடசாலைகள் இரண்டாகப் பிரிவுறுவதனால் அவற்றின் முகாமைத்துவம் இலகுவாக்கப்படுகின்றது. சில மையப் பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுத் தரம் 1 தொடக்கம் தரம் 13 வகுப்பு வரை உள்ள பாடசாலைகளாகத் தரமுயர்வு பெறுகின்றன. இப்பாடசாலைகள் தம்மைச் சூழவுள்ள பாடசாலைகளை வளப்படுத்தும் என நம்பப்படுகின்றது.

பாடசாலை முகாமைத்துவம் தொடர்பாக பாடசாலை நிருவாகிகளுக்குத் தேவையான அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டுப் பாடசாலையின் அபிவிருத்தித் திட்டங்களை அமுலாக்கும் பொறுப்பும் முழுமையாகப் பாடசாலை முகாமைத்துவத்திடமே ஒப்படைக்கப்படும். பாடசாலை சமூக உறவு கட்டி எழுப்பப்பட்டு பாடசாலை அபிவிருத்திச் சபைகளூடாகப் பெற்றோர்களின் பங்களிப்பு அதிகரிக்கப்படும். பாடசாலைகள் தமது விருத்திக்கான தேவையான திட்டமிடலைச் செய்வதோடு வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தும் பொறுப்பினையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். பாடசாலைகளின் வினைத்திறனான முகாமைத்துவத்திற்கு உதவும் தேவையின் பொருட்டே கல்விப் பணிமனைகளின் தலையீடு பாடசாலைகளில் அமையும். அத்தோடு பாடசாலைகள் போதுமான அளவு வளங்களைப் பெறுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்காகவும் கல்விப் பணி மனைகள் பாடசாலைகளில் தலையீடு செய்யலாம்.

ஆசிரியர்களுக்கான செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயன்முறைகள் நிறுவன மயப்படுத்தப்படும். இதனூடாக ஆசிரியர் வருடாந்தம் தான் செய்யும் வேலைகளுக்கான ஒப்பந்தத்தினைப் பாடசாலை முகாமைத்துவத்துடன் செய்து கொள்ளுதல் வேண்டும். வருட முடிவில் இவ்வொப்பந்தப்படி வேலைகள் நடைபெற்றனவா? என்பது மதிப்பீடு செய்யப்பட்டு படியுயர்விற்கான அங்கீகாரம் வழங்கப்படும்.

## கற்றல் வெளியீடுகளுக்கான மதிப்பீடுகள்

பாடசாலை மட்டக் கணிப்பீடு பாடசாலையின் எல்லா மட்டங்களிலும் இடம் பெறும். ஒவ்வொரு பாடத்துடனும் இணைந்த திறன்கள், செய்முறைசார் கற்றல் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காகவே பாடசாலை மட்டக் கணிப்பீடு இடம் பெறுகின்றது. அத்தோடு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பின்னூட்டலை வழங்குவதற்கும் மாணவர்களின் கற்றற் சிரமங்களை இலகுவாக அடையக் காணவும் பாடசாலை மட்டக் கணிப்பீடு உதவுகின்றது. தரம் 1 தொடக்கம் தரம்12 வரை இம்மதிப்பீடு இடம் பெறுகின்றது. ஆரம்ப நிலைகளில் குழு வேலைகளை உற்சாகப்படுத்தவும் மாணவர் மத்தியில் கூட்டுறவை ஏற்படுத்தும் வகையிலும் இந்த மதிப்பீடுகள் இடம் பெறும். கனிஷ்ட இடைநிலையில் பாடவிதான இணைப்பாட விதானச் செயற்பாடுகள் பதிவு செய்யப்படும். சிரேஷ்ட இடைநிலையில் செயற்திட்டங்கள், ஒப்படைகள் இதற்காகப் பயன்படுத்தப்படும்.

## ஆசிரியர் கல்வி

ஆசிரியர்களது கல்வி நிலை உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காக ஆசிரிய கல்விக்கான அதிகாரசபை அமைக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு ஆசிரியர்களின் தரத்தை உறுதி செய்யும். ஆசிரிய நிலையங்கள், ஆசிரிய கல்வி நிறுவகங்கள், கல்விக் கல்லூரிகள் ஆகியன அமைக்கப்பட்டு ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படும். ஆசிரியர் தொழில் சார் பயிற்சி, மீள் பயிற்சி, பாடத்துறையில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களுக்கு வேறு பாடம் தொடர்பான பயிற்சியை வழங்குதல் எனும் அடிப்படையில் பயிற்சிகள் கொடுக்கப்படும். இப்பயிற்சிகளை வினைத் திறமையுள்ளதாக்குவதற்காக ஆசிரிய கல்வியாளர் சேவை உருவாக்கப்பட்டுள்ளது.

## ஏனைய சீர்திருத்தங்கள்

கல்விச் சீர்திருத்தத்தில் மேலும் பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. முன்னாரம்பக் கல்வி, மாணவர்களுக்கான வழிகாட்டல் சேவை, இனங்களிடையே புரிந்துணர்வை வளர்க்கக் கூடிய வகையில் சிங்கள, தமிழ் மொழிகளை முறையே தமிழ், சிங்கள மொழிப் பாடசாலைகளில் அறிமுகம் செய்தல் ஆகிய செயற்பாடுகளும் இடம் பெற்று வருகின்றன.

நாட்டில் பல்வேறு மட்டங்களில் இருந்தும் பல எதிர்ப்புக்கள் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு இருந்த போதிலும், சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இச் சீர்திருத்த நடைமுறையால் ஏற்படும் மாற்றத்தினூடாக 21ஆம் நூற்றாண்டில் எழக்கூடிய மாற்றங்களுடன் கைகோர்த்துச் செல்லவல்ல மாணவ சமூகத்தை உருவாக்கலாம் என்பது கல்விமான்களின் அவாவாகும். அத்தோடு ஆண்டு தோறும் க. பொ. த. பொதுப் பரீட்சைகள் ஊடாகச் சமூகத்துள் பிரவேசிக்கும் பிள்ளைகளுக்கும் ஏனைய பிள்ளைகளுக்கும் வெற்றிகரமாக வாழ்க்கையைக் கொண்டு செல்லத் தேவையான அறிவு, திறன், உளப்பாங்கு விருத்தி ஏற்படும் எனும் நோக்கமும் அடையப் பெறும் என எதிர்பார்க்கலாம்.

**ம. லியோன். றெவல், B. A. (Hons)**
*P.GD.E., P. GD. E. M, S. L. P. S. I*
*உதவிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்)*
*வலயக் கல்விப் பணிமனை*
*மன்னார்*

# 1999 மாவட்ட மட்டத் தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

| ஆண்டு | பிரிவு | நிகழ்ச்சி | போட்டியாளர் பெயர் | இடம் (நிலை) |
|---|---|---|---|---|
| 4, 5 | 01 | தனிநடனம் | S. கஜேந்தினி | 2ம் இடம் |
| 6, 7 | 02 | தனிநடனம் | T. சசிகரன் | 2ம் இடம் |
| 8, 9 | 03 | தனிநடனம் | செல்வி. வீ. சுகன்யா | 1ம் இடம் |
| 10, 11 | 04 | தனிநடனம் | செல்வி கே. உஷாந்தினி | 1ம் இடம் |
| 12, 13 | 05 | தனிநடனம் | செல்வி T. மைத்ரேயி | 1ம் இடம் |
| 6, 7 | 02 | தனிஇசை | செல்வி P. நிரூபனா | 1ம் இடம் |
| 12, 13 | 05 | தனிஇசை | செல்வி A. ஜீவந்தினி | 1ம் இடம் |
| 04, 05 | 01 | பாவோதல் | செல்வன் T. வாமனன் | 1ம் இடம் |
| 10, 11 | 04 | பாவோதல் | செல்வி M. மதுவந்தி | 1ம் இடம் |
| 04, 05 | 01 | பேச்சு | செல்வி V. விஜியதர்ஷிகா | 1ம் இடம் |
| 12, 13 | 05 | கவிதையாக்கம் | செல்வன் A. ஆனந்தராஜா | 1ம் இடம் |
| 04, 05 | 01 | வாசிப்பு | செல்வி B. ஹம்சாயினி | 2ம் இடம் |
| 06, 07 | 02 | வாசிப்பு | செல்வி V. ஜீவிதா | 2ம் இடம் |

**திறந்த போட்டிகள்**

| | |
|---|---|
| நடனம் குழு | 1ம் இடம் |
| விவாதம் | 1ம் இடம் |
| நாட்டிய நாடகம் | 1ம் இடம் |
| நாட்டார் பாடல் | 1ம் இடம் |

## கோட்டமட்டச் சிறுவர் வாரம் 1- 5

| ஆண்டு | | போட்டியாளர் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|---|---|
| ஆண்டு | 1 | செல்வி பா. பாநிதி | பழமொழி கூறுதல் | 1ம் இடம் |
| | | செல்வி பா. பாநிதி | பேச்சு | 3ம் இடம் |
| ஆண்டு | 2 | செல்வி S. நாகதர்ஷினி | பேச்சு | 2ம் இடம் |
| | | செல்வி S. நாகதர்ஷினி | சொல்வதெழுதல் | 2ம் இடம் |
| ஆண்டு | 3 | செல்வி B. சுகிர்தா | English Dictation | 1ம் இடம் |
| | | செல்வி C. சுஜிவினி | English Hand Writing | 3ம் இடம் |
| | | செல்வன் க. சிவசுதன் | திருக்குறள் | 2ம் இடம் |
| | | செல்வி R. பத்மசாளினி | உறுப்பெழுத்து | 1ம் இடம் |
| ஆண்டு | 4 | செல்வி வி. விஜயதர்ஷிகா | பேச்சு | 1ம் இடம் |
| | | செல்வன் T. வாமனன் | திருக்குறள் | 2ம் இடம் |

**திறந்த போட்டி**

| | |
|---|---|
| குழு நடனம் | 1ம் இடம் |
| ஆங்கில நாடகம் | 2ம் இடம் |
| வினோத உடைப் போட்டி செல்வி M. சஜனியா | 1ம் இடம் |

# மாவட்ட மட்ட மெய்வல்லுனர் ( Athletic) பெருவிளையாட்டுகள் (Games) முடிவுகள் - 1999

**மெய்வல்லுனர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 வயது | ஆண்கள் | செல்வன் | M. அல் - அமான் | உயரம் பாய்தல் | 1ம் இடம் |
| 15 வயது | பெண்கள் | செல்வி | M. சிந்துஜா | தட்டெறிதல் | 1ம் இடம் |
| 17 வயது | ஆண்கள் | செல்வன் | M. ரமணன் | 400M | 1ம் இடம் |
| | | செல்வன் | M. ரமணன் | நீளம் பாய்தல் | 1ம் இடம் |
| | | செல்வன் | M. ரமணன் | முப்பாய்ச்சல் | 1ம் இடம் |
| 17 வயது | ஆண்கள் | செல்வன் | V. றூபன் | தடை தாண்டல் | 2ம் இடம் |
| 17 வயது | பெண்கள் | செல்வி | N. விஜியலதா | 100M | 1ம் இடம் |
| | | செல்வி | N. விஜியலதா | 200M | 1ம் இடம் |
| | | செல்வி | N. விஜியலதா | நீளம் பாய்தல் | 3ம் இடம் |
| 19 வயது | பெண்கள் | செல்வி | P. கோகிலா | நீளம் பாய்தல் | 1ம் இடம் |
| | | செல்வி | P கோகிலா | 100M | 2ம் இடம் |
| | | செல்வி | P கோகிலா | 200M | 3ம் இடம் |
| | | செல்வி | S. அஜந்தினி | 400M | 2ம் இடம் |
| | | செல்வி | S. கஜேந்திரராணி | தட்டெறிதல் | 1ம் இடம் |
| | | செல்வி | S. சசிகலா | தடைதாண்டல் (100) | 1ம் இடம் |
| | | செல்வி | S. நிர்ஷாந்தினி | தடை தாண்டல் (100) | 2ம் இடம் |
| 21 வயது | பெண்கள் | செல்வி | K. சந்திரகலா | 1500M | 1ம் இடம் |
| | | செல்வி | K. சந்திரகலா | 800M | 2ம் இடம் |
| | | செல்வி | A. மேரி ஜெனிற்றா | தடை தாண்டல்(100) | 1ம் இடம் |
| | | செல்வி | S. செல்வடார்ளினி | தடை தாண்டல் (100) | 2ம் இடம் |
| | | செல்வி | K. நாகபாலினி | 3000M | 2ம் இடம் |

**அஞ்சல் ஓட்டம் 4 x 100**

| | | |
|---|---|---|
| 21 வயது | பெண்கள் | 2ம் இடம் |
| 17 வயது | பெண்கள் | 1ம் இடம் |
| 19 வயது | பெண்கள் | 1ம் இடம் |
| 15 வயது | ஆண்கள் | 2ம் இடம் |

**அஞ்சல் ஓட்டம் 4 x 400**

| | | |
|---|---|---|
| 17வயது | ஆண்கள் | 2ம் இடம் |
| 21 வயது | ஆண்கள் | 3ம் இடம் |

**சிறந்த வீரன் / வீராங்கனை**

17 வயது Girls Champion (சிறந்த வீராங்கனை)
செல்வி N. விஜியலதா


17 வயது Boys Champion (சிறந்த வீரன்)
செல்வன் M. ரமணன்

**பெரு விளையாட்டுகள் (Games)**

| | |
|---|---|
| எல்லே பெண்கள் | 1ம் இடம் |
| கிறிக்கட் (துடுப்பாட்டம்) | 1ம் இடம் |
| எல்லே ஆண்கள் | 2ம் இடம் |
| 17 வயது பெண்கள் கரப்பந்தாட்டம் | 2ம் இடம் |
| 15 வயது பெண்கள் கரப்பந்தாட்டம் | 2ம் இடம் |
| 19 வயது பெண்கள் வலைப்பந்தாட்டம் | 2ம் இடம் |


# 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

| ஆண்டு | தோற்றியோர் | சித்திபெற்றோர் | வீதம் |
|---|---|---|---|
| 1992 | 08 | 05 | 62.5% |
| 1993 | 12 | 05 | 41.67% |
| 1994 | 15 | 03 | 20% |
| 1995 | 13 | 9 | 69% |
| 1996 | 26 | 10 | 38% |
| 1997 | 30 | 05 | 16.6% |
| 1998 | 36 | 04 | 11% |





# 40 ஆண்டுகளில் கல்லூரியின் மாணவர் தொகை

| ஆண்டு | மாணவர் தொகை |
|---|---|
| 1959 | 160 |
| 1964 | 350 |
| 1969 | 420 |
| 1974 | 450 |
| 1979 | 275 |
| 1984 | 210 |
| 1989 | 550 |
| 1994 | 385 |
| 1996 | 970 |
| 1997 | 1100 |
| 1998 | 1300 |
| 1999 | 1400 |



# க. பொ. த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

| வருடம் | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | நூ வீதம் | க.பொ.த உ/த தகுதியுடையோர் | நூ வீதம் |
|---|---|---|---|---|---|
| 1993 | 20 | 13 | 65 | 10 | 50 |
| 1994 | 24 | 12 | 50 | 10 | 41 |
| 1995 | 20 | 14 | 70 | 10 | 50 |
| 1996 | 48 | 40 | 83 | 36 | 75 |
| 1997 | 58 | 48 | 83 | 40 | 68 |
| 1998 | 91 | 74 | 80 | 67 | 74 |



# க.பொ.த (உ/த) பரீட்சை
# சிறந்த பெறுபேறுகள்
## 1993 – 1998

| ஆண்டு | பாடத் துறை | தோற்றி யோர் | சித்தியடைந் தோர் | பல்கலைக் கழக அனுமதித் தகுதி பெற்றோர் | சிறந்த பெறுபேறு | மாவட்ட நிலை | பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1993 | Arts | 01 | 01 | 01 | B, 2C,S | 28 | Kanagasabai Vasitha |
| 1994 | Arts | 03 | 03 | 03 | 3B, C | 06 | Kankesu Ganesalingam |
| 1995 | Commerce | 03 | 03 | 03 | A, 3B | 02 | Ramalingam Jeyakumari |
| | Arts | 02 | 02 | 02 | 2B, C,S | 11 | Velsamy Srijameladevi |
| | | | | | 4C | 53 | Kathiramalai Thulasikumary |
| | | | | | 4C | 59 | Loganathan Mahachithra |
| 1996 | Commerce | 07 | 06 | 03 | 4A | 01 | Kanagasabapathi Gowreesan |
| | | | | | 4B | 10 | Kathiramalai Jeyakanthan |
| | Arts | 05 | 05 | 05 | A,B,2C | 21 | Loganathan Mahachithra |
| | | | | | A, 3C | 29 | Kathiramalai Thulasikumary |
| 1997 | Commerce | 14 | 14 | 12 | 2A, B,C | 04 | Darmalingam Anusha |
| | | | | | A,B,C,S | 22 | M.J. Mohamad Bathurutheen |
| | Arts | 07 | 06 | 04 | 2B, 2C | 22 | Rajagobal Savundarakala |
| 1998 | Commerce | 18 | 17 | 16 | A,2B,C | 01 | Sivapragasam Sivakaran |
| | | | | | A, 3B | 02 | Sriskantha Pratheeba |
| | | | | | 2B, 2C | 04 | Mariyathas Conupatathayanithi |
| | Arts | 14 | 14 | 14 | A,B,2C | 07 | Santhio Alandeena |
| | | | | | A, 2B,C | 11 | Tharmakulasingam Pratheepa |
| | | | | | 3B, C | 11 | Sellathurai Jeganenthiran |

# மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் ஆரம்பகாலம் முதலாகக் கற்பித்த ஆசிரியர்கள் விபரம்

*1959 ஆம் ஆண்டு முதல்*

திரு. ச. வீரசிங்கம் (அதிபர்)
திருமதி அன்னலட்சுமி ச. மூர்த்தி (அதிபர்)
செல்வி எஸ். மகேஸ்வரி
செல்வி எஸ். தையல்நாயகி
செல்வி ம. நகுலேஸ்வரி
செல்வி எஸ். துரையப்பா
திரு. சு. செல்லத்துரை
திரு. எஸ். சிவசம்பு
திரு. சி. சண்முகவடிவேலு
திரு. சோ. கணேசலிங்கம்
திரு. வி. அரியநாயகம் (அதிபர்)
திரு. எஸ். சிவகுமாரன்
திரு. கே. ஹரிகரன்
திரு. எஸ். நடராசாகுரு
திரு. எஸ். ஆறுமுகம்
திரு. சங்கரப்பிள்ளை
திரு. கா. சுப்பிரமணியம்
திருமதி ம. சித்திரநாதன்
திருமதி ஞா. செல்வகுருநாதன்
திருமதி எஸ். சண்முகநாதன்
திரு. ஜெயவீரசிங்கம்

*1968ம் ஆண்டு தொடக்கம்*

திரு. எஸ். ஆர். சண்முகரத்தினம்
திரு. எஸ். சோதிலிங்கம்
செல்வி பார்வதி ஆறுமுகம்
திரு. எஸ். பாலசுப்பிரமணிம்
திருமதி எஸ். பெஞ்சமின்
திருமதி எம். திருநாவுக்கரசு
திருமதி பி. பத்மினி
திருமதி எஸ். விஸ்ணு
திரு. பாலுபெனடிற்
திருமதி கே. சாந்தி
திருமதி எஸ். மல்லிகா
திருமதி எம். முனாப்
திரு. க. மகேசன் (அதிபர்)

*1985ம் ஆண்டு தொடக்கம்*

திரு. என். ஜெயபாலசிங்கம் (அதிபர்)
திருமதி கே. சிவகுமாரவேலு
திருமதி என். வேதமணி
செல்வி சியாமளா கணேஸ்வரன்
திரு. கே. ரி. கே. தம்பையா
செல்வி ஏ. சாந்தினி

1988ம் ஆண்டு தொடக்கம்

திரு. ஆ. ஐ. தயானந்தராஜா (அதிபர்)
திரு. எம். குணரத்தினம்
திரு. எச். எம். இபுனுசுகூட்
திரு. எஸ். எம். ஏ. காதர்
திருமதி ஐ. சந்திரபாலன்
செல்வி எஸ். எஸ். பரமசிவம்
திரு. எச். எம். காமில் அஸ்ரப்
திரு. பொஸ்கோ குரூஸ்
செல்வி கே. பிரேமலதா
செல்வி ஆர். சிவகுமாரி
திருமதி பி. எம். நூகான்
திருமதி பி. ஆர். பிலிப்புப்பிள்ளை
திரு. அப்துல் ரஷாக் சமூக்
செல்வி ஏ. சித்தி நிஸ்பியா
திரு. ஏ. பொஸ்கோ குரூஸ்
திரு. ஜே. ஐயாத்துரை
திரு. முத்துக்குமார்
திரு. எம். இருதயநாதன்
செல்வி இ. ஜெயகுமாரி
திரு. எல். எம். தர்மதாஸ்
திருமதி எம். எல். எஸ். சொய்சா
திரு. எஸ். பத்மாகரன்
செல்வி. எஸ். சுப்பிரமணியம்
செல்வி கே. சுபத்திரா
செல்வி எஸ். மகிழினி

*1993ம் ஆண்டு தொடக்கம்*

திரு. எஸ். சண்முகலிங்கம்
திருமதி புஸ்பலாதா தனேஸ்வரன்
திருமதி பி. பி. எம். வி. லெம்பேட்
திருமதி எம். ஜே. கே. றெவல்
திருமதி உ. ஆனந்தராஜா
திரு. எஸ். இராஜ்குமார்
திரு. எம். ரவீந்திரன்
செல்வி எஸ். சோதிரூபா
செல்வி கே. சுபத்திரா
செல்வி எஸ். ஆனந்தி
திரு. ஏ. ஈ. இம்மானுவேல் வாஸ் பத்மாகரன்
திருமதி ஏ. செபமாலை
திரு. தேவராஜன் சில்வா
திருமதி எல். எம். ஈ. வதனி
செல்வி ரவீந்தினி
செல்வி நிலாந்தி
செல்வி ஈ. மதுரா பிரியாந்தி
செல்வி எம். கலாவதி

1995ம் ஆண்டு முதல் இன்றுவரையிலான ஆசிரியர்கள்

திரு. ஆர் ஜெயமனோகர்
திருமதி எஸ். பவளநாதன்
திருமதி எம். சுப்பிரமணியம்
திருமதி வை. சண்முகநாதன்
செல்வி என். பாலேஸ்வரி
செல்வி எஸ். சத்தீஸ்வரி
திருமதி எம். எச். சடாச்சரலிங்கம்
திரு. எஸ். சிறிதரன்
திருமதி என். பிரான்சிஸ்
திருமதி டி. ஆர். வலன்ரீனா
செல்வி சுமதி மார்க்
திரு. எல். ஜி. பிறேமகுமாரன்
திரு. கே. ஆர். கமலநாதன்
செல்வி றீற்றா சுதேனி
திருமதி பி. செல்வநாயகம்
திருமதி ஜே. சி. ஜி. டயஸ்
திருமதி எஸ். பி. தேவராஜன்
திருமதி ஏ. எஸ். எஸ். மகவுநிசா
திரு. ரி. ராமதாஸ்
திரு. ஏ. அருளானாந்தம் கொடுதோர்
திருமதி ஏ. கியூ. ஜே. பெர்னாண்டோ
செல்வி ரி. சிந்தாத்துரை
திருமதி சி. ஐ. குரூஸ்

BEST WISHES FOR THE 40TH ANNIVERSARY

CELEBRATIONS OF THE MANNAR

SITHY VINAYAGAR HINDU COLLEGE

*With Best Compliments From:*

Estd . 1948

# K. A. S. MOHAMED & BROS.

Dealers in Building Materials, Hardware, Paint, Timber, Motor Spares, Electrical Goods, Bicycles, House-hold Appliances, Etc. Government Contractors & Suppliers, Authorised Dealer For C. I. C. Paints

**Grand Bazaar**
**Mannar**
**Tel : 023 - 2340**

ASSOCIATE FIRMS:
JOHN DEEN & CO.
ASFAQ TRADERS

Tel : 023-2183

**MAY MANNAR SITHY VINAYAGAR
HINDU COLLEGE BE A MODEL COLLEGE
TO THE COUNTRY**

*With Best Compliments From:*

CTS CTS

# CITY TRANSPORT SERVICE

**Transporters & Commission Agents**

**D1 - 1, Central Road
Colombo - 12
Tel : 345268**

**May the Mannar Sithy Vinayagar Hindu**

**College Produce more and more**

**Intelectuals to the Nation**

***With Best Compliments From:***

# *Iron Stores*

Dealers in Hardware, Paints, Timber, Motorspares, Electrical

Goods, Government Contractors & Distributors

For : **TOBACCO COMPANY LIMITED**

Subsidiary : M/S **THIRUNAVUKARASU & SONS**

(Suppliers of Ice Blocks) Keeri, Mannar

T. P : 023-2108

Grand Bazaar
Mannar
T.P : 023-2309
T.Gram : "Drumbu"

***Residence :***

No. 110, 16th Lane, Off College Street
Kotahena, Colombo - 13
T.P : 433928, 435063

*சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி*
*இத்தரை போற்றும் வித்தகர் பலரை*
*நித்தமும் தந்து நீடுழி வளர்க!*

***With Best Compliments From:***

# நியூ லலிதா ஜுவல்லரி

165, செட்டியார் தெரு
கொழும்பு - 11

*மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி*
*மனித விழுமியம் மாண்புறும் வழியில்*
*கல்வி புகட்டிக் கவின் பெற்றுயர்க!*

**With Best Compliments From:**

# குகன் ஸ்ரோஸ்

**இல. 180, ஆஸ்பத்திரி வீதி**
**யாழ்ப்பாணம்**

மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின்

நாற்பதாண்டு நல்விழாப் பொலிக

*With Best Compliments From:*

# K. சுதாகரன்

இல. 104/37, செட்டியார் தெரு
கொழும்பு – 11

---

**May Sithy Vinayagar of Mannar Shower Blessings for the Success of the 40th Anniversary Celebrations**

*With Best Compliments From:*

# K.P. U. Traders

## Dealers in Pharmaceutical & Grocery

31, Sea Street
Colombo - 11
Tel.337108

மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில்
கல்வியும், கலையும், நல்விளையாட்டும்,
சொல்லரும் ஒழுக்கமும் சுடர் விட்டொளிர்க!

*With Best Compliments From:*


* தரமான புடவைகள்
* றெடிமெட் ஆடைகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்

# ஹைசன்ஸ்

தரமான ஒலிபரப்பு நாடாக்களுக்குச் சிறந்த இடம்

# நந்தினி மியூசிக் சென்ரர்

போட்டோக் கொப்பி, லெமனேற்றிங், வீடியோ
பாதணிகள் மற்றும் கடிகார வகைகள்
பெற்றுக் கொள்ளலாம்

*திருமணம், பூப்புப் புனித நீராட்டு விழா,*
*புதுமனைப் புகுவிழா, பிறந்தநாள் வைபவம்*
*ஏனைய விஷேட வைபவங்கட்கு*
*அதி நவீன மிக்ஸிங் முறையில் வீடியோ*
*வண்ணப்படம் எடுப்பதற்கு*

# நந்தினி வீடியோ

பெரிய கடை — மன்னார்

*மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி*

*கல்விக் கனிதரும் கற்பகச் சோலையாய்ப்*

*பல்துறை வளர்ச்சியில் பாங்காய் மிளிர்க!*

***With Best Compliments From:***

"அகர" முதலஎழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

எம் பெருமான் சித்தி விநாயகன் திருவருள் கொண்டு விளங்கும்
மன்னார் சித்தி விநாகர் இந்துக் கல்லூரி தனது 40 வருட நிறைவு
விழாவினைப் பெருமையுடன் கொண்டாடும் இவ் வேளையில்
இக் கல்லூரி மென்மேலும் வளர்ந்து சிறப்புற,
சித்தி விநாயகனின் நல்லாசி வேண்டி நிற்பதுடன்
எமது உளமார்ந்த வாழ்த்துக்களையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

# செல்வம் பிறதர்ஸ்

பெரிய கடை
மன்னார்

தொலை பேசி இல . 023 – 32196

மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி

நன்மாணாக்கரை நாட்டுக்குதவும்

பொன்னான கல்லூரி புகழுடன் பொலிக

*With Best Compliments From:*

## உங்கள் குழந்தைகளின் நாளைய வாழ்வின் நம்பிக்கை

## ஹற்றன் நஷனல் சேமிப்புச் சீட்டிழுப்பு ஆண்டுக்கு இரு தடவை

### *ஒவ்வொன்றும் ஒரு இலட்சம் ரூபா கொண்ட 30 புலமைப் பரிசில்கள்*

*மன்னார்க்கிளையிற் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு ரூபா 1,500 பெறுமதியான 10 அன்பளிப்புப் பத்திரங்கள்*

*ஒருவர் யூன் 1ஆம் திகதி முதல் அல்லது டிசம்பர் 1ஆம் திகதி முதல் கணக்கில் ரூபா 2,500 க்கு மேற்பட்ட தொகையை வைத்திருந்தால் அவர் மேற்குறிப்பிட்ட பரிசுகளைப் பெறத் தகுதியுடையவராவார்.*

*ரூபா 10,000 க்கு மேற்பட்ட தொகையிருப்பின் 4 கோடிக்கும் அதிக பெறுமதியுள்ள "பத்தும் விமானச்" சீட்டிழுப்பில் பங்கு பெறத் தகுதியுடையவராவர்.*

*வெற்றியோ தோல்வியோ இலாபம் உங்களுக்கே*

# ஹற்றன் நஷனல் வங்கி

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி


இல. 68, பிரதான வீதி, மன்னார்.

தொலை பேசி : 023-32154

சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி சிறப்புற்றோங்குக

*With Best Compliments From:*

# LUXMANAN WINE SHOP



Prop:
**Mrs. Ushadevi Balachandran.**

Hospital Road,
Mannar.

*With Best Compliments From:*

# THATCHA

## International Communication

**IDD, Local Calls, fax, Photo Copy & Laminating etc.**

Fax : 023 - 32149
Phone : 023 - 32217

Prop: **A. C. M. Faseel**

Hospital Road,
Mannar.

*With Best Compliments From:*

# BALACHANDRAN


## LIQUOR RESTAURANT

Prop: **Ushadevi Balachandran**

St. Jude's Street,
Pesalai,
Mannar.

*மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி*
*கல்வி ஒளிபரப்பிக் கவின் பெறவாழி.*

***With Best Compliments From:***



தரமான சிறந்த ஆடைவகைககளை மலிவான
விலையில் பெற

# KURU TEXTILES

## Grand Bazaar
## Mannar

*Proprictor* : T. Kuruparan

*சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி*

*கல்விப் பயிர் வளர்த்துக் கவின் பெற வாழிய*

*With Best Compliments From:*

*விதைகள் உற்பத்தியாளர் நிறுவனம்*

*மன்னார் மாவட்டம்*

# "SPAM"

மாவட்டத்தின் அபிவிருத்திற்கும்

மக்களின் நலனுக்கும்

உழைக்கும் ஒரேயொரு

விவசாய ஸ்தாபனம்

| | | |
|---|---|---|
| அதிக விளைச்சல் தரும் | - | 'ஸ்பாம் விதைநெல்' **(Spam Seed Paddy)** |
| நியாய விலையில் | - | 'ஸ்பாம் அரிசி' |
| தரமான அரிசி | - | **(Spam Rice)** |

முகவர் நிலையங்கள்

1. *மன்னார்*
2. *மணல்குளம்*
3. *ஆள்காட்டிவெளி*

பதிவு இல. 550/08/09

**We Salute to the hard work and duty Consciousness of Principal, Teachers and Past Pupils of the College**

*With Best Compliments From:*

# 999 Gold Jewellery

**Munufacturers Desing Cutter and Whole Sellers of**

**Genuine Gold Jewellery**

**999 கோல்ட் ஜுவல்லரி** **999 ගෝල්ඩ් ජුවලරි**

Pragash Complex
104/9, Sea Street, Colombo - 11
Tel : 072-80129, 074-710242, 324933

# நன்றி

- அல்லும் பகலும் அயராது உழைத்து அவலங்களின் மத்தியிலும் பாடசாலையினைப் பார்த்தோர் புகழும் வண்ணம் வளர்த்து வரும் பெற்றோருக்கும், பழைய மாணவர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும்,

- மிகுந்த அக்கறையுடன் கற்பித்தலையும் இணைக் கலைத் திட்டச் செயற்பாடுகளையும் செவ்வனே செயற்படுத்திவரும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும்,

- பாடசாலையின் புகழைப் பல திசையும் பரிமளிக்கச் செய்யும் மாணவச் செல்வங்களுக்கும்,

- மலர் சிறப்புற அமைவதற்கு விளம்பர அநுசரணை மூலம் உதவிபுரிந்த பெரு மக்களுக்கும்,

- வாழ்த்துச் செய்தி வழங்கி வாழ்த்திய பெரியோருக்கும்,

- மலர் மணம் கமழ ஆக்கங்கள் தந்துதவிய அறிஞர்களுக்கும் மாணவர்களுக்கும்,


- மலர் மலர ஆலோசனைகள் வழங்கி உதவிய பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களுக்கும், முன்னாள் எமது கல்லூரி ஆசிரியர் சைவப் புலவர் சு. செல்லத்துரை அவர்களுக்கும்,

- நிதி சேகரிக்க வழி சமைத்த அன்பர் திரு. கந்தையா ஜெகராஜா, முகாமையாளர் ஹட்டன் நஷனல் வங்கி அவர்களுக்கும்,

- மலர் அழகுடன் மணம் பரப்ப நல் மனதுடன் வழி நடத்திய யுனி ஆட்ஸ் உரிமையாளர் பொ. விமலேந்திரன் அவர்களுக்கும் அவரது ஊழியர்களுக்கும்,

என்றென்றும் எம் மனப்பூர்வமான நன்றி

மலர்க் குழு



**Congratulation for the Steady Progress of**

**the Mannar Sithy Vinayagar Hindu College**

***With Best Compliments From:***

# FRANCIS ENTERPRISES

General Merchants & Commisson Agents

Spare Parts, Bicycle & Parts, Electrical Goods, Hardware,

Cement, Paints, Out-Boat Spare Parts & Shell Gas

***Authorised Dealers for***

## Yanmar Yamaha Suzuki

**AND GENUINE SPARE PARTS ETC.**

Grand Bazaar, Mannar

Tel : 023-2135

[illegible] HINDU COLLEGE
KNOWLEDGE IS POWER

KNOWLEDGE IS POWER

# கல்லூரியின் பன்முகத் தோற்றங்கள்








Printed By: Unie Arts (Pvt) Ltd., Colombo - 13. Tel: 330195